அரசியல் விளக்க வெளியீடு

ஏ. படாலவ்

# புரட்சி பற்றிய லெனினின் தத்துவம்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

Rs. 5-75
MADRAS-98.

மொழிபெயர்ப்பாளர்: நா. தர்மராஜன் எம். ஏ.

Библиотека политических знаний

**Баталов Э.**
ЛЕНИНСКАЯ ТЕОРИЯ РЕВОЛЮЦИИ
*на тамильском языке*

**E. Batalov**

LENIN'S THEORY OF REVOLUTION
*in Tamil*

© Издательство „Прогресс", 1982
© தமிழ் மொழிபெயர்ப்பு,
முன்னேற்றப் பதிப்பகம், 1986

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Б $\frac{0302030000-340}{014(01)-86}$ 344-86

## பொருளடக்கம்

1. மார்க்ஸ், லெனின். இன்றைய கால கட்டம் . . . . . . . . . . . 5
2. சோஷலிஸ்ட் புரட்சி என்ற கருத்து 9
3. புரட்சியின் தத்துவம் . . . . . . 19
4. சமூக வளர்ச்சியும் சோஷலிஸ்ட் புரட்சியும் . . . . . . . . . . . 31
5. புரட்சியின் புறவய நிலைமைகள் . . 43
6. புரட்சிகர நிலைமையைப் பற்றி லெனினுடைய போதனை . . . . 55
7. புரட்சியின் அகவய நிலைமைகள் . . 74
8. ''புரட்சியின் அடிப்படை விதியும்'' புரட்சிகர வன்முறையும் . . . . . 85
9. புரட்சியின் இயக்கு சக்திகள் . . 95
10. பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர முன்னணிப்படை . . . . . . . . 117
11. ஜனநாயகத்துக்கான போராட்டத்திலிருந்து சோஷலிஸ்ட் புரட்சி முடிய . . 126
12. அதிகாரத்தைப் பெறுவதற்கு சமாதான வழிமுறையும் சமாதானமல்லாத வழிமுறையும் . . . . . . . . . 147
13. சோஷலிஸ்ட் புரட்சியும் முதலாளித்துவ அரசும் . . . . . . . . . . 169

14. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் சோஷலிஸ்ட் ஜனநாயகமும் . . . 181
15. சோஷலிஸ்ட் புரட்சியும் உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கும் . . . 201
16. புரட்சியைப் பற்றிய லெனின் தத்துவத்தின் சர்வதேச முக்கியத்துவம் . . 225

# 1. மார்க்ஸ், லெனின். இன்றைய காலகட்டம்

புரட்சியைப் பற்றி லெனினுடைய தத்துவம் சோஷலிஸ்ட் புரட்சி மற்றும் உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கு முழுவதையும் பற்றிய **நவீன விஞ்ஞான ரீதியான** தத்துவமாகும்.

சமூக வளர்ச்சியின் இன்றைய போக்குகள், சமூக உணர்வு நிலைமை மற்றும் பெருந்திரளான மக்கள் இயக்கத்தின் **அனுபவத்தைப்** பற்றிய விஞ்ஞானப் பகுப்பாய்வின் விளைவு இத்தத்து வம் என்பதால் இது **விஞ்ஞான ரீதியானது.** இது புரட்சிகர நிகழ்வுப் போக்குடனும் தொழி லாளி வர்க்கமும் அதன் நேச சக்திகளும் அடைந் துள்ள புரட்சிகர அனுபவத்துடனும் சேர்ந்து வளர்ச்சியடைவதால் **நவீனமானது.** இது புரட்சி கர நிகழ்வுப் போக்கின் இன்றைய நிலைமை யைப் பிரதிபலிக்கிறது, இன்றைய உலகத்துக்கு இதை வெற்றிகரமாகக் கையாள முடியும்.

விஞ்ஞான கம்யூனிசத்தின் மூலவர்களான கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் புரட்சியைப் பற்றிய விஞ்ஞானத் தத்துவத்தின் கோட்பாடுகளை முதலில் வகுத்துக் கூறினார் கள்.

முதலாளித்துவம் பல நாடுகளில் உறுதியான நிலைகளைப் பெற்று, புதிய சமூக அமைப்பின் பொருளாயத முன்நிபந்தனைகள் தோன்றத்

தொடங்கி விட்ட கட்டத்தில் சமூக உற்பத்தி மற்றும் வர்க்கப் போராட்டத்தின் பகுப்பாய்வின் விளைவாக இக்கோட்பாடுகள் வகுக்கப்பட்டன.

சுதந்திரமான போட்டியை அடிப்படையாகக் கொண்டிருந்த முதலாளித்துவம் ஏகபோக முதலாளித்துவமாக வளர்ச்சியடைந்ததும் அதனால் ஏற்பட்ட சமூக-அரசியல் நிகழ்வுப் போக்குகளும் விஞ்ஞான ரீதியான புரட்சித் தத்துவத்தை மேலும் வளர்த்துக் கூறுவதை அவசியமாக்கின, அதாவது பழைய பிரச்சினைகளுக்குப் புதிய அணுகுமுறையையும் புரட்சிகரப் போராட்டத்துடன் பின்னிப் பிணைந்திருந்த புதிய தத்துவப் பிரச்சினைகளை முன்வைப்பதையும் அவசியமாக்கின. லெனினும் அவருடன் இணைந்து செயலாற்றியவர்களும் இக்கடமையை நிறைவேற்றினார்கள். சமூக வளர்ச்சியை ஆராய்ந்து உலகப் புரட்சி இயக்கம் திரட்டியிருந்த அனுபவத்தைப் பொதுமைப்படுத்திய லெனின் சோஷலிஸ்ட் புரட்சியைப் பற்றிய தத்துவத்தின் புதிய அடிப்படைக் கோட்பாடுகளையும் ஏகாதிபத்தியத்தின் கீழ் பாட்டாளியின் வர்க்கப் போராட்டத்தின் அடிப்படை விதிகளையும் வகுத்தளித்தார்.

மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் உள்ளார்ந்த அம்சம் அடுத்தடுத்துத் தொடர்தலும் பரிணாம வளர்ச்சியுமாகும். இவற்றுக்குப் பொருத்தமான வகையில் சோஷலிஸ்ட் புரட்சியைப் பற்றிய தத்துவம் உள்ளிட்ட லெனினுடைய சித்தாந்த பாரம்பரியம் வரலாற்று வளர்ச்சியின் இன்றைய கட்டத்தில் மேலும் விரித்துரைக்கப்பட்டிருக்கிறது. கம்யூனிஸ்ட் இயக்

கத்தின் கூட்டு ஆவணங்கள், சகோதர கம்யூனிஸ்ட் கட்சிகளின் கொள்கை ஆவணங்கள், அவற்றின் தலைவர்கள் எழுதியிருக்கும் கட்டுரைகள் பாட்டாளி வர்க்கப் புரட்சியைப் பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவத்துக்கு மாபெரும் பங்களிப்பாகும்.

ஆகவே புரட்சியைப் பற்றிய லெனின் தத்துவம் பல தலைமுறைகளைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காரர்கள் மற்றும் சோஷலிஸ்ட் இலட்சியத்துக்காகப் போராடிய அனைவருடைய அனுபவத்தின் சத்துச்சாரமாகும்; விஞ்ஞானக் கம்யூனிசத்தின் மாபெரும் தத்துவாசிரியர்கள் மற்றும் அவர்களுடைய எண்ணற்ற சீடர்களின் படைப்பு முயற்சியின் பலனாகும்.

இரண்டாவது அகிலத்தின் *(1889—1919)* தலைவர்களுடனும் — மார்க்சும் எங்கெல்சும் மரணமடைந்த பிறகு அவர்கள் சந்தர்ப்பவாத நிலைகளைப் பின்பற்றினார்கள் — பல்வேறு ரகங்களைச் சேர்ந்த ருஷ்ய சந்தர்ப்பவாதிகளுடனும் லெனினியத்தின் மற்ற எதிரிகளுடனும் முதலாளி வர்க்கத் தத்துவாசிரியர்களுடனும் நடத்திய கூர்மையான சித்தாந்தப் போராட்டத்தில் புரட்சியைப் பற்றிய லெனின் தத்துவம் பிறந்தது. இன்றும் கூட இத்தத்துவம் லெனினியத்தை எல்லாத் தரப்புகளிலிருந்தும் தாக்குகின்ற வலது சந்தர்ப்பவாதிகள், திரோத்ஸ்கிவாதிகள், முதலாளி வர்க்கச் சித்தாந்திகள் ஆகியோரை எதிர்த்து உக்கிரமான போராட்டத்தில் வளர்ச்சி அடைந்து வருகிறது.

புரட்சியைப் பற்றிய லெனின் தத்துவம் எல்

லாக் கண்டங்களிலும் எல்லா நாடுகளிலும் உள்ள பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காரர்களுக்கு வழி காட்டுகின்ற துருவ நட்சத்திரம்; எனினும் அதைச் சரியாக உபயோகிக்க வேண்டும், அதாவது மெய்யான வரலாற்று நிலைமைகளில் ஒரு குறிப்பிட்ட நாட்டில் புரட்சிகர சக்திகளை எதிர் நோக்குகின்ற ஸ்தூலமான நோக்கங்கள், கடமைகளுடன் நெருக்கமான முறையில் அதைக் கருத வேண்டும் என்பது முக்கியம்.

இத்தத்துவத்தின் வளமான உள்ளடக்கத்தை ஒரு புத்தகத்தில் அடக்க முடியாது. இந்தச் சிறிய புத்தகம் இத்தத்துவத்தின் முக்கியமான கோட்பாடுகளை வாசகருக்கு அறிமுகப்படுத்த உத்தேசிக்கிறது, நம் காலத்தின் புரட்சிகர நடைமுறைக்கு விசேஷமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு அவருடைய கவனத்தைத் திருப்புகிறது, உலகத்தை சோஷலிஸ்ட் திசைவழியில் மாற்றியமைக்கின்ற பொதுப் போராட்டத்தில் அவருடைய இடத்தையும் அவருடைய சொந்தப் புரட்சிகர அனுபவத்தையும் புரிந்து கொள்வதற்கு உதவி புரிகிறது, ஏதாவதொரு நாட்டில் புரட்சியின் போக்கில் தோன்றுகின்ற கேள்விகளுக்கு சரியான விடைகளைப் பெறுவதற்கு உதவி செய்கிறது.

வாசகர் மிகவும் அக்கறை கொண்டிருக்கின்ற கேள்விகளுக்கு முன்னரே தயாரிக்கப்பட்ட பதில்களை இப்புத்தகத்தில் பார்க்கக் கூடும் என்று அவர் எதிர்பார்க்கக் கூடாது. மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் உதவியுடன் அவர்தான் இந்த பதில்களைப் பெற வேண்டும். மார்க்ஸ்,

எங்கெல்ஸ் மற்றும் லெனின் எழுதிய கருத்துக் களை நாம் அடிக்கடி மேற்கோள் காட்டுவதை வாசகர் தொல்லையாகக் கருதக் கூடாது. அவை தெளிவும் மேதாவிலாசமும் நிறைந்த கருத்துக்கள் என்ற காரணத்தினால்தான் நாம் அவற்றை மேற்கோள் காட்டுகிறோம்.

## 2. சோஷலிஸ்ட் புரட்சி என்ற கருத்து

சமூக நீதி நிலவுகின்ற சமுதாயம் என்ற முறையில் மக்கள் கம்யூனிசத்தைப் பற்றிப் பல யுகங்களாகக் கனவு கண்டிருக்கிறார்கள்; ஆனால் அத்தகைய சமுதாயத்தை நிர்மாணிப்பதைப் பற்றிய தங்களுடைய கனவுக்கும் சமூகப் புரட்சிக்கும் உள்ள இணைப்பை மார்க்சியம் தோன்றுகின்ற வரையில் அவர்கள் பார்க்கவில்லை. சோஷலிஸ்ட் சமூகத்தை உருவாக்குவதற்குத் திட்டங்களைத் தயாரித்த 19ம் நூற்றாண்டைச் சேர்ந்த மாபெரும் கற்பனாவாதிகள் (சான்-சிமோன், ஃபூரியே, ஓவன் மற்றும் இதரர்கள்) புரட்சி சோஷலிசக் கோட்பாடுகளுக்கு எதிரானது என்று சொல்லி அதை எதிர்த்தார்கள். நவீன காலத்தில் மார்க்சிஸ்ட் அல்லாத சில தத்துவாசிரியர்களும் சோஷலிஸ்ட் திசையில் சமூக மாற்றத்துக்கு வழி என்ற முறையில் புரட்சியைப் பற்றிக் கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறார்கள். தனிச் சொத்துடைமையை அடிப்படையாகக் கொண்ட இன்றைய சமூகக் கட்டமைப்புகளை சீர்திருத்துவதன் மூலம் அல்லது அற

வியல் மற்றும் உணர்வு இதரவற்றை மாற்று வதன் மூலம் சோஷலிசத்தை நிர்மாணிக்க முடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள். அவர் கள் உண்மையாகவே விஷயங்களைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கலாம், அல்லது "எதிர்ப் புரட்சியின் சமூக உத்தரவை" நிறைவேற்று வதற்காக முதலாளி வர்க்கம் மற்றும் சுரண்டு கின்ற இதர வர்க்கத்தினரிடம் கைக்கூலி வாங்கி யவர்களாக இருக்கலாம்.

சமூக வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் **அடிப்படையான மாற்றத்தைக்** கொண்டு வரு கின்ற சமூகப் புரட்சியுடன் சோஷலிஸ்ட் நிர்மா ணத்தை இணைத்து மார்க்சும் எங்கெல்சும் மனிதகுலத்துக்கு மாபெரும் சேவை செய்திருக் கிறார்கள்.

மார்க்ஸ் புரட்சிகளை "வரலாற்றின் ரயில் வண்டிகள்" என்று கூறினார்; ஏனென்றால் அவை மனிதகுலத்தை வரலாற்று ரீதியான ஒரு வளர்ச்சிக் கட்டத்திலிருந்து மற்றொரு கட்டத் துக்கு இட்டுச் சென்று மனித சமூகத்தின் முன் னேற்றத்துக்குப் பாதை அமைக்கின்றன. புரட்சி என்பது சமூக வளர்ச்சியில் எப்பொழுதுமே ஒரு **பாய்ச்சலாக** இருக்கிறது, அதாவது புதியனவற் றுக்கு—புதிய சமூக-அரசியல் மற்றும் பொருளா தார உறவுகள், அமைப்புகள், புதிய கருத்துக் கள், புதிய அறவியல் இதரவற்றுக்கு—மாறுத லாக இருக்கும். புரட்சிகளை **மக்கள்** நிறைவேற்று கிறார்கள்; ஆனால் ஒரு புதிய சமூக அமைப் புக்கு அவசியமான பொருளாயத முன்நிபந்தனை களும் இம்முன்நிபந்தனைகள் புதிய அமைப்பு

களிலும் உறவுகளிலும் ஏற்படுத்தப்படுகின்ற புரட்சியின் புறவய நிலைமைகளும் புறநிலையான சமூக வளர்ச்சிப் போக்கினால், பிரதானமாக, உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியினால் படைக்கப்படுகின்றன (ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் இவை அன்றைக்கிருக்கின்ற உற்பத்தி உறவுகளுடன் மோதுகின்றன). புரட்சிகள் இந்த விஷயத்தில் திடீர்ப்புரட்சிகளிலிருந்து (coup d'états) வேறுபட்டிருக்கின்றன. ஏனென்றால் இவை (சிலர் இவற்றைப் ''புரட்சிகள்'' என்று அழைத்த போதிலும்) இருக்கின்ற சமூக அமைப்பின் பொருளாதார, அரசியல் மற்றும் அறவியல் அடிப்படைகளை மாற்றுவதில்லை (அல்லது மிகவும் குறைந்த அளவுக்குத்தான் தொடுகின்றன).

எல்லாப் புரட்சிகளுமே சில பொதுவான கூறுகளைக் கொண்டிருந்தாலும் சமூக இயல்பு, இயக்கு சக்திகள், நோக்கங்கள், கடமைகள் மற்றும் முடிவாக அவற்றின் தோற்றம், வளர்ச்சியின் ''பாணியில்'' அவை ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன.

17-19ம் நூற்றாண்டுகளில் நடைபெற்ற முதலாளி வர்க்கப் புரட்சிகள் நிலப்பிரபுத்துவத்தை ஒழித்து அதிக முற்போக்கான சமூக அமைப்பு என்ற முறையில் முதலாளித்துவத்தை நிறுவுவதற்கு உதவி செய்தன. எனினும் அவை சுரண்டலை ஒழிப்பதற்கு, வர்க்கமற்ற சமூகத்தை நிறுவுவதற்கு அல்லது அரசு உலர்ந்து உதிர்வதற்கு இட்டுச் செல்லவில்லை (அவற்றின் தன்மை காரணமாக அவ்வாறு இட்டுச் செல்லவும் முடியாது).

அவை சமூக நீதி நிலவுகின்ற சமுதாயத்தையும் ஏற்படுத்தவில்லை.

முதலாளித்துவம் அதன் உயர்ந்த வளர்ச்சிக் கட்டத்துக்குள், இறுதிக் கட்டத்துக்குள்—ஏகாதிபத்தியக் கட்டத்துக்குள்—நுழைகின்ற பொழுது சோஷலிஸ்ட் புரட்சி (அதன் பொதுவான வரலாற்று மட்டத்தில்) நடைபெறுகிறது. இப்புரட்சி முதலாளித்துவ சமூகத்துக்குள் முதிர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்ற சோஷலிசத்தின் பொருளாயத முன்நிபந்தனைகளைப் பயன்படுத்திக் கொள்கிறது. உற்பத்திச் சாதனங்களில் தனியுடைமையை ஒழித்தல், வர்க்க முரணியல்புகளை ஒழித்தல் மற்றும் கம்யூனிசத்தின் முதல் கட்டமாகிய சோஷலிஸ்ட் சமூகத்தை நிர்மாணித்தல் ஆகியவை இப்புரட்சியின் இறுதி இலட்சியங்கள்.

இந்த இலட்சியங்களை அடைய வேண்டுமென்றால் சோஷலிஸ்ட் புரட்சி பழைய அரசை ஒழித்துப் புதிய, சோஷலிஸ்ட் அரசை நிறுவுதல், புதிய சமூக உறவுகளை நிறுவுதல் சோஷலிஸ்ட் நிர்மாணத்தில் உழைக்கும் மக்களை ஈடுபடுத்துதல் மற்றும் இதர பலவகையான (அவற்றைப் பற்றிப் பிறகு எழுதுவோம்) ஸ்தூலமான கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்பது இயற்கையே.

முதலாளி வர்க்கப் புரட்சியின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்திய அதே சக்திகளினால் அல்லது அதே வழிகளினாலும் முறைகளினாலும் இக்கடமைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. சோஷலிஸ்ட் புரட்சி முதலாளி வர்க்கப் புரட்சியிலிருந்து நோக்கங்களிலும் கடமைகளிலும் அதன் தோற்றம் மற்றும் பரிணாம வளர்ச்சியின் பாணி

யிலும் மட்டுமல்லாமல் அதன் இயக்கு சக்திகள், செயல்திட்டம், செயல்முறை ஆகியவற்றிலும் வேறுபட்டிருக்கிறது. பொதுவான விதிகளும், ஒவ்வொரு நாட்டிலும் பிரதேசத்திலும் உள்ள தனிவகையான தேசிய வளர்ச்சியுடன் ஒட்டிய சிறப்பான கூறுகளும் உள்ளன என்பதை 20ம் நூற்றாண்டில் நடைபெற்றுள்ள நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன.

ஒரு புதிய சமூகத்தை நிர்மாணிப்பதில் முடிவடைகின்ற சோஷலிஸ்ட் புரட்சி நெடிய, சிக்கல் நிறைந்த, முரண்பாடான வரலாற்றுக் காலகட்டத்தைக் கொண்டிருக்கிறது. ''சோஷலிஸ்ட் புரட்சி ஏகாதிபத்தியத்துக்கு எதிராக சோஷலிசம் என்ற ஒரே போர்முனையில் நடைபெறுகின்ற ஒற்றைச் சண்டை என்று கற்பனை செய்வது தவறாகும்'' என்று லெனின் எச்சரிக்கை செய்தார். ''இப்புரட்சி கூர்மையான வர்க்கப் போராட்டத்தையும் பல சமூகக் கொந்தளிப்புகளையும் கொண்ட ஒரு முழுச் சகாப்தமாக இருக்கும். மிகவும் அதிக அளவுக்கு வேறுபட்டிருக்கின்ற போர்முனைகளில் பல சண்டைகளின் தொகுதியைச் சந்திக்க வேண்டியிருக்கும்; முதிர்ச்சியடைந்த மற்றும் பழைய உறவுகளைப் பரிபூரணமாக ஒழிக்க வேண்டும் என்று கோருகின்ற மிகவும் அதிகமான அளவுக்கு வேறுபட்டிருக்கின்ற பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்கள் அவற்றில் சம்பந்தப்பட்டிருக்கும்.''*

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, 54ம் தொகுதி, பக்கம் 464 (ருஷ்ய மொழியில்).

முதலாளி வர்க்கம் உழைக்கும் மக்களின் அணியில் பிளவுகளை ஏற்படுத்துவதற்கு, புரட்சியில் ஈடுபடாமல் அவர்களை இழுப்பதற்கு, அவர்களை பயமுறுத்துவதற்குப் பல வழிமுறைகளைப் பயன்படுத்துகிறது. சோஷலிஸ்ட் புரட்சி என்பது ''பைத்தியக்காரத்தனம்'', அங்கே ''பயங்கரமும் அழிவும் ஆட்சி'' புரியும், அது குழப்பத்தை ஏற்படுத்தி கலாசாரத்துக்கும் நாகரிகத்துக்கும் ஆபத்துண்டாக்கும் என்ற கருத்துக்களை மக்களுடைய மனங்களில் ஏற்படுத்தி மிரட்டுவதற்கு அது முயற்சி செய்கிறது.

பழைய சமூகம் அழிக்கப்படுவதும் மாற்றியமைக்கப்படுவதும் புரட்சியின் விளைவு என்பது உண்மையே; அழிவு ஏற்படுகின்ற பொழுது கஷ்டங்கள், துன்பங்கள்—சில சமயங்களில் தியாகங்கள் கூட—எப்பொழுதுமே ஏற்படும் என்பதைச் சொந்த அனுபவத்திலிருந்து நாம் அறிவோம். முதலாளி வர்க்கப் புரட்சியைக் காட்டிலும் அதிகத் தீவிரமான முறையில் சோஷலிஸ்ட் புரட்சி பழைய சமூகத்தை அழிக்கிறது. அதனால்தான் புரட்சியின் போது, குறிப்பாக அதன் ஆரம்பக் கட்டத்தில் அநேகமாக எல்லா சமூகக் குழுக்களும் பல கஷ்டங்களையும் பிரச்சினைகளையும் சந்திக்கின்றன. ''புரட்சிகர இயக்கங்களைத் தொடர்ந்து எப்பொழுதும் தற்காலிகமான குழப்பம், அழிவு மற்றும் கலவரம் தவிர்க்க முடியாதபடி ஏற்படுமென்பது எல்லோரும் அறிந்ததே... சோஷலிஸ்ட் புரட்சியை உடனடியாக மக்களுக்கு முன்னால் சுத்தமான, கச்சிதமான, குறை சொல்ல முடியாத

வடிவத்தில் வைக்க முடியாது என்பது உண்மை''*
என்று லெனின் கூறினார்.

லெனின் வகுத்தளித்த முடிவை சோஷலிஸ்ட் புரட்சிகளின் வரலாறு நிரூபித்திருக்கிறது. அதே சமயத்தில் ''குழப்பம், அழிவு மற்றும் கலவரத்தின்'' அளவும் அவை நீடிக்கும் காலமும் நிலையானவையல்ல என்று நிரூபித்திருக்கிறது. புரட்சியைத் தொடர்ந்து ஏற்படக்கூடிய கஷ்டங்களில் பல சமூக மாற்ற நிகழ்வுப் போக்கிலிருந்து தோன்றவில்லை, அவை எதிர்ப்புரட்சிச் சக்திகளினால் செயற்கையான முறையில் தோற்றுவிக்கப்பட்டு ஆதரிக்கப்படுகின்றன. இந்த விஷயத்தில் புரட்சிகரமான மக்கள் திரளினர், அவர்களுடைய உழைப்புத் திறமைகளும், பொருளாதாரத்தை அறிவு பூர்வமான முறையிலும் செயலுரத்தோடும் இயக்குவதற்குரிய அவர்களுடைய உறுதியும் திறமையும், சோஷலிசம் மனிதனைச் சுரண்டலில் இருந்தும் **கட்டாயமான** உழைப்பிலிருந்தும் விடுதலை செய்கிறதே தவிர அவசியமான உழைப்பிலிருந்து விடுதலை செய்யவில்லை என்ற உணர்வும் தீர்மானகரமான பங்கைக் கொண்டிருக்கின்றன. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிலைமைகள் சாதகமாக இருந்தால், தொழிலாளி வர்க்கம் புரட்சிக்குத் தயாராக இருந்தால் அழிவும் குழப்பமும் ஒப்பீட்டளவில் அற்பமாகவும் குறைந்த காலமே

* V. I. Lenin, "Speech on the Dissolution of the Constituent Assembly Delivered to the All-Russia Central Executive Committee. January 6 (19), 1918", *Collected Works*, Vol. 26, p. 439.

நீடிப்பதாகவும் இருக்கும். உலக சோஷலிஸ்ட் அமைப்பு முதிர்ச்சி அடைகின்ற பொழுது, மற்ற நாடுகளில் சோஷலிஸ்ட் புரட்சியின் மீது அதன் ஆக்கபூர்வமான தாக்கம் (குறிப்பாக, வெற்றியடைந்த பாட்டாளி வர்க்கத்துக்குத் தருகின்ற பொருளாதார, தொழில்நுட்ப மற்றும் இதர உதவியின் மூலம்) அதிகரிக்கின்ற பொழுது புரட்சியைத் தொடர்ந்து ஏற்படுகின்ற குழப்பமும் அழிவும் அவற்றின் காலப் பகுதியும் அளவும் மொத்தமாகக் குறைந்து விடலாம்.

எனினும் குழப்பமும் அழிவும் எவ்வளவு பெரிய அளவில் இருந்தாலும் சோஷலிஸ்ட் புரட்சிக்கு மற்றொரு அம்சம், மிகவும் முக்கியமான அம்சம் இருக்கிறது. அது **படைப்பு** அம்சமாகும். அதை முதலாளி வர்க்கத்தினர் வேண்டுமென்றே புறக்கணிக்கிறார்கள். சோஷலிஸ்ட் புரட்சி பழைய அமைப்பை அழிக்கின்ற பொழுது உண்மையில் புதிய சமூகக் கட்டமைப்புகளுக்கும் புதிய சமூக உறவுகளை உருவாக்குவதற்கும் புதிய ரகத்தைச் சேர்ந்த மனிதனை வளர்ப்பதற்கும் ''தளத்தை'' நிர்மாணிக்கிறது.

சோஷலிசத்தை அடைகின்ற பாதை பெரிய அளவுக்கு வேறுபடலாம்; ஏனென்றால் ஒவ்வொரு நாட்டின் வரலாற்று வளர்ச்சியின் தனிவகையான கூறுகள் அதை நிர்ணயிக்கின்றன. ''எல்லா நாடுகளும் சோஷலிசத்தை வந்தடையும்—இது தவிர்க்க முடியாதது. ஆனால் எல்லா நாடுகளும் ஒரே மாதிரியான வழியில் சோஷலிசத்தை அடையப் போவதில்லை. அவை ஒவ்

வொன்றும் ஜனநாயகத்தின் ஏதாவதொரு வடிவத்துக்கு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஏதாவதொரு ரகத்துக்கு, சமூக வாழ்க்கையின் வெவ்வேறு அம்சங்களின் சோஷலிஸ்ட் மாற்றத்தின் வேக அளவுக்குத் தன்னுடைய சொந்தப் பங்களிப்பாக ஏதாவதொன்றைத் தரும்''* என்று லெனின் எழுதினார். சோஷலிஸ்ட் புரட்சியின் இறுதி இலட்சியமாகிய சோஷலிசம் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமாக இருக்கும், பல்வேறு தேசிய அல்லது பிரதேச சோஷலிச மாதிரிகள் இருக்கும் என்பது இதன் அர்த்தமா?

சோஷலிசம் முதலாளித்துவத்திலிருந்து வேறு விதமான திட்டவட்டமான, வரலாற்று ரீதியாக உருவாக்கப்பட்ட சமூக உறவுகளின் ரகமாகும்; ஆகவே சோஷலிசத்தின் தேசிய ரகங்களை (மாதிரிகளைப்) பற்றிய விவாதம் பயனற்றது. சோஷலிசம் எங்கே நிர்மாணிக்கப்பட்டிருந்தாலும் அதன் நிர்மாணத்தின் தனி வகையான கூறுகள் எப்படியிருந்தபோதிலும் அது சாராம்சத்தில் ஒரே தன்மையைக் கொண்டதே. சோஷலிசத்தின் பல்வேறு மாதிரிகளைப் பற்றிப் பேசுதல் தனி வகையான தேசியக் கூறுகளை உள்ளடக்கி சோஷலிசத்துக்கு மாறுகின்ற ஸ்தூலமான கட்டங்கள் என்ற அர்த்தத்தில் மட்டுமே சாத்தியம். ஆனால் தன்னுடைய வாய்ப்பு வளத்தை முழுமையாக வெளிப்படுத்தி, கம்யூ

* V. I. Lenin, «A Caricature of Marxism and Imperialist Economism», *Collected Works*, Vol. 23, pp. 69—70.



2–518

னிசத்தின் வாயிலில் நிற்கின்ற பூரணமான, மொத்த அமைப்பு என்ற அர்த்தத்தில் சோஷலிசத்துக்கு ஒரே ஒரு விஞ்ஞான மாதிரியே இருக்கிறது.

மறு பக்கத்தில், அந்த மாதிரியை ஈடேற்றுகின்ற வழியில் கட்டங்களாகப் பல சமூகத் தொகுதிகள் இருக்கின்றன. அவை வெவ்வேறு கட்டங்கள் என்பதால் அவற்றை வெவ்வேறு அடுக்கமைப்பு ரகங்கள் (அல்லது நீங்கள் விரும்பினால் மாதிரிகள்) என்று கூற வேண்டும். ஆனால் அவை முறையான, இறுதி வடிவத்தில் உள்ள சோஷலிசத்தின் மாதிரிகள் அல்ல, அவை வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்ற, அதன் சமூக அமைப்பின் கீழ்நிலை வடிவங்களிலிருந்து உயர்நிலை வடிவங்களுக்கு முன்னேறிக் கொண்டிருக்கின்ற, புறநிலையான விதிகளுக்கு ஏற்றவாறு அநேகமாக நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற சோஷலிசத்தின் மாதிரிகளாகும்.

சோஷலிஸ்ட் சமூக அமைப்பு போர்த்துகல் அல்லது பிரான்ஸ், அங்கோலா அல்லது அல்ஜீரியா, பிரேஸில் அல்லது இத்தாலியில் எந்த நாட்டில் நிறுவப்பட்டிருந்தாலும், அதன் தேசிய அல்லது பிரதேசத் தனித்தன்மைகள் எப்படி இருந்தாலும் உற்பத்திச் சாதனங்களின் சமூக உடைமை, திட்டமிட்ட பொருளாதாரம், எதிர்நிலையான வர்க்கங்கள் மற்றும் மனிதனை மனிதன் சுரண்டுதல் இல்லாதிருத்தல், ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய திறமைக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய உழைப்

புக்கு ஏற்ப'' என்ற வினியோகக் கோட்பாடு ஆகிய பொதுக் கூறுகளைக் கொண்டிருக்கும்.

## 3. புரட்சியின் தத்துவம்

புரட்சியைப் பற்றிய லெனின் தத்துவத்தை ஆராய்கின்ற பொழுது மார்க்சிய-லெனினிய மூலவர்கள் கையாண்ட புரட்சிகர நிகழ்வுப் போக்கை ஆராய்கின்ற முறையியலை ஒருவர் புறக்கணிக்க முடியாது. அவர்களுடைய நூல் களில் தத்துவமும் முறையும் பின்னிப் பிணைந் திருக்கின்ற காரணத்தால் தொடர்ச்சியான புரட்சி அல்லது சோஷலிஸ்ட் புரட்சி முதலில் ஒரு நாட்டில் வெற்றியடைகின்ற வாய்ப்பு முதலியவற்றைப் போன்ற தத்துவப் பிரச்சினை களை அவர்கள் எப்படித் தீர்த்தார்கள் என் பதைப் புரிந்து கொள்வதற்கு அவர்கள் பயன் படுத்திய முறையியலைத் தெரிந்து கொள்வது மிக அவசியம். மார்க்சிய முறையியல் ஒரு தத்துவாசிரியருக்கு மட்டுமல்லாமல், எடுக்கப் பட வேண்டிய முடிவு என்ன, அந்த விவகாரத்தை அணுகுவது எப்படி என்ற இரண்டையும் பற்றிச் சிந்திக்க வேண்டிய செய்முறை ஊழியருக்கும் பயனுள்ளதாக இருக்கிறது.

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோர் புரட்சிகர நிகழ்வுப் போக்கைப் பொருள்முதல் வாத நிலைகளிலிருந்து, வரலாற்றுப் பொருள் முதல்வாத உணர்ச்சியில் பகுப்பாய்வு செய்தார் கள். எல்லாவற்றுக்கும் மேலாக, புரட்சி என்பது வரலாற்று வளர்ச்சியின் விளைவு என்று அவர்



2*

கள் கருதினார்கள் என்பது இதன் அர்த்தம். புரட்சியை எப்பொழுதுமே மக்கள் நிறைவேற்றுகிறார்கள் என்பது உண்மையே; ஆனால் அவர்கள் திட்டவட்டமான சந்தர்ப்பங்களில், திட்டவட்டமான பொருளாயத முன்நிபந்தனைகளில், அதாவது புறநிலையாக இருக்கின்ற, உணர்வுக்கு வெளியே மற்றும் அதிலிருந்து சுதந்திரமாக இருக்கின்ற நிலைமைகளில் செயலாற்ற வேண்டும். இந்த சந்தர்ப்பங்களும் முன்நிபந்தனைகளும் புரட்சிக்காரர்களும் காற்று மண்டலத்திலிருந்து தோன்றவில்லை, அநேகமாக நெடுங்காலமாக நடைபெற்று வருகின்ற வரலாற்று வளர்ச்சியில் உருவாக்கப்படுகிறார்கள். நாம் சமூக அமைப்பை நம் புரட்சிகரச் சித்தத்துக்குப் பொருத்தமான முறையில் மாற்றப் போகிறோம் என்றால் நம்முடைய செயல்களை சமூக வளர்ச்சியின் புறநிலையான விதிகளுடன், புறநிலையான சந்தர்ப்பங்கள் மற்றும் முன்நிபந்தனைகளுடன் ஒருங்கிணைக்க வேண்டும். இவ் விதிகளைப் புறக்கணிப்பது—அது குட்டி முதலாளி வர்க்கப் புரட்சிகரவாதம் மற்றும் இடது சந்தர்ப்பவாதத்தின் குறியடையாளம்—சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பேராபத்தாக இருக்கும். அது தோல்வியடைவதற்கும் இட்டுச் செல்லும்.

புரட்சிகர இயக்கத்தின் நோக்கங்களையும் கடமைகளையும் சோஷலிஸ்ட் சமூகத்தின் அமைப்புகளின் ஸ்தூலமான கட்டமைப்பையும் நிர்ணயிக்கின்ற பொழுது மார்க்சியவாதி "சமூகத்தின் ஆகச் சிறந்த அமைப்பைப்" பற்றித் தன்னுடைய அகநிலையான கருத்துக்களைக் காட்

டிலும் சமூக வளர்ச்சியின் உண்மையான போக்கு களிலிருந்தும் மெய்யாகவே இருக்கின்ற சமூக முரண்பாடுகளிலிருந்தும் முன்னேறிச் செல் கிறார். அவர் சமூகத்தின் மீது செயற்கையான திட்டங்களைத் திணிப்பதில்லை; கற்பனாவாதத் திட்டங்கள் எவ்வளவு கவர்ச்சியாகத் தோன்றி னாலும் அவற்றுக்கு உயிர் கொடுக்க முயற்சி செய்வதில்லை. எந்த சமூக இலட்சியங்கள் நிறைவேறுவதற்கு அவசியமான பொருளாயத முன்நிபந்தனைகள் பழைய சமூகத்தில் ஏற் கெனவே முதிர்ச்சி அடைந்திருக்கின்றனவோ அந்த சமூக இலட்சியங்களை மட்டுமே சாதிக் கின்ற நோக்கத்தை அவர் தன்னுடைய போராட் டத்தில் தனக்கு முன்னால் நிறுத்திக் கொள் கிறார். ''தொழிலாளி வர்க்கம் கம்யூனிலிருந்து அதிசயங்களை எதிர்பார்க்கவில்லை. அது par décret du peuple (மக்களின் ஆணையின் படி — ப-ர்.) அமுலாக்குவதற்கு அதனிடம் முன்னரே தயாரிக் கப்பட்ட கற்பனை உலகங்கள் இல்லை. தன் னுடைய சொந்த விடுதலையைச் சாதிப்பதற்கும் இன்றைய சமூகம் அதன் சொந்த பொருளா தார வளர்ச்சியின் காரணத்தால் தடுக்க முடி யாதபடி முன்னேறிக் கொண்டிருக்கின்ற உயர் வடிவத்தை அடைவதற்கும் நெடுங்காலப் போராட்டங்களை, சந்தர்ப்பங்களையும் மனிதர் களையும் மாற்றியமைக்கின்ற தொடர்வரிசை யான வரலாற்று நிகழ்வுப் போக்குகளைத் தான் கடந்து வந்தாக வேண்டும் என்பது அதற்குத் தெரியும். இற்று விழுந்து கொண்டிருக்கின்ற பழைய முதலாளி வர்க்க சமூகம் கருவுற்றிருக்

கின்ற புதிய சமூகக் கூறுகளை விடுதலை செய்வதைத் தவிர தொழிலாளி வர்க்கம் நிறைவேற்ற வேண்டிய இலட்சியங்கள் வேறு இல்லை''* என்று மார்க்ஸ் எழுதினார்.

புரட்சி என்பது வரலாற்று நியதியை மீறுவதல்ல, பழைய சமூக உறவுகளால் கட்டுப்படுத்தப்படுகின்ற ''புதிய சமூகக் கூறுகளை விடுதலை செய்வதே''. புரட்சியைப் பற்றிய மார்க்சிய-லெனினியத் தத்துவமும் மொத்த மார்க்சிய-லெனினிய போதனையும் புரட்சியைப் பற்றிய இந்த அணுகுமுறையைத் தத்துவரீதியில் மெய்ப்பிக்கின்றன. ''கற்பனைப் படைப்பை உருவாக்கும் முயற்சியினை, தெரிந்து கொள்ள முடியாத ஒன்றைப் பற்றிய பயனற்ற ஊகங்களில் இறங்கும் முயற்சியினை மார்க்சிடம் இம்மியும் காண முடியாது. உதாரணமாய் ஒரு புதிய உயிர்வகை குறிப்பிட்ட இந்த வழியில்தான் தோன்றியது, திட்டவட்டமான இந்தத் திசையிலேதான் மாறுதலடைந்து வந்தது என்பது தெரிந்ததும், உயிரியல் விஞ்ஞானி ஒருவர் இந்த உயிர்வகையின் வளர்ச்சியைப் பற்றிய பிரச்சினையை எப்படி ஆராய்வாரோ அதே முறையில்தான் மார்க்ஸ் கம்யூனிசத்தைப் பற்றிய பிரச்சினையை ஆராய்ந்தார்''** என்று

---

* *The General Council of the First International, 1870-1871. Minutes,* Progress Publishers, Moscow, 1967, p. 387.

** வி. இ. லெனின், *தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 6,* முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1980, பக்கம் 131.

லெனின் எழுதினார். லெனின் கடைப் பிடித்த முறைக்கும் இது பொருந்தும். மார்க்சைப் போல லெனினும் புரட்சியின் பால் சுய-விருப்ப, அகநிலையான அணுகுமுறையை எதிர்த்தார்; சமூகப் போக்குகளையும் நிகழ்வுப் போக்குகளையும் முழுச் செறிவாக ஆராய்வதற்கு பதிலாகப் பல விதமான ஊகங்களைச் செய்வதை நிராகரித்தார்.

புரட்சிகர இயக்கத்தில் பங்கெடுப்பவர்களில் (பிரதானமாக, பாட்டாளி வர்க்கத்தைச் சேராத சக்திகளில்) கற்பனாவாதக் கனவுகளும் தத்துவங்களும் விரிவாகப் பரவக் கூடும், புரட்சியை நிறைவேற்றுகின்ற பொழுது இதை ஒருகால் கவனத்தில் கொள்ள வேண்டும் என்ற உண்மையை பாட்டாளி வர்க்கத் தலைவர்கள் நன்றாக அறிந்திருந்தார்கள். புரட்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் கற்பனாவாதக் கருத்துக்கள் புரட்சிகரமான மக்களில் சில பகுதியினருடைய நடவடிக்கையைத் தூண்டும், அவர்கள் வீரம் நிறைந்த சாதனைகளைச் செய்ய உத்வேகமளிக்கும் என்பதை அவர்கள் புரிந்து கொண்டிருந்தார்கள். எனினும் அவர்கள் வரலாற்றுப் பொருள்முதல்வாதக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் பொருந்திய முறையில் விஞ்ஞான சோஷலிசத் தத்துவத்தில், குறிப்பாக புரட்சியைப் பற்றிய தத்துவத்தில் கற்பனாவாதத்தை நுழைப்பதற்குச் செய்த எல்லா முயற்சிகளையும் உறுதியாக நிராகரித்தார்கள். கற்பனை உலகத்தை வாழ்க்கைக்கு மாற்றுகின்ற, அதாவது சமூக-வரலாற்று வளர்ச்சியை செயற்கையான பாதை

யில் இயக்குகின்ற முயற்சிகளினால் புரட்சி தவிர்க்க இயலாதபடி தோல்வி அடையும், தொழிலாளி வர்க்கம் மற்றும் அதன் நேச சக்திகளின் அணியில் பலத்த சேதங்கள் ஏற் படும், அல்லது சோஷலிசத்துக்கும் தொழிலாளி வர்க்கம் போராடிக் கொண்டிருக்கின்ற சமூக இலட்சியங்களுக்கும் சிறிதும் சம்பந்தமில்லாத சமூக மற்றும் அரசியல் அமைப்புகளுக்கு இட மளிக்கும் என்பது அதற்குக் காரணமாகும்.

1960க்களிலும் 1970க்களிலும் இடது-தீவிர வாதத் தத்துவாசிரியர்கள் ''கற்பனை உலகங் களுக்கு முடிவு வந்து விட்டது'' (அதாவது கற்பனை என்று தோன்றக் கூடிய எந்தத் திட் டத்தையும் இப்பொழுது செயல்படுத்த முடி யும்), ''நடக்க முடியாததைக் கோருவதே'' இன்றைய நிலைமைகளில் ''யதார்த்தவாதம்'' என்று கூறிய பொழுது மார்க்சியவாதிகள் அவர் களிடமிருந்து உறுதியாகப் பிரிந்து நின்றதற்குக் காரணம் இதுவே.

இதே காலகட்டத்தில், குறிப்பாக மேற்கு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் (சற்றுச் சிறிய அளவில்) தீவிரமாகச் செயலாற்றிய ''புதிய இடதுசாரியினர்'' மேற்கொண்ட இம் மாதிரியான நடவடிக்கைகள் வரலாற்றை மீறு கின்ற முயற்சிகளின் பயனற்ற தன்மையையும் ஆபத்தையும் நிரூபித்தன.

மார்க்சியத் தத்துவம் அறிவு பூர்வமான தாகவும் யதார்த்தமாகவும் இருப்பதால் மார்க் சியவாதிகள் வீரத்தையும் தியாகத்தையும் எல்லாத் தடைகளையும் மீறி இலட்சியங்களை

நிறைவேற்றுகின்ற உருக்குப் போன்ற சித்தத்தையும் பாராட்டுவதில்லை என்று பொருளல்ல. இக்குணங்கள் உண்மையான புரட்சிக்காரர் ஒவ்வொருவருக்கும் அவசியம், எந்தச் சண்டையிலும் (சோஷலிஸ்ட் புரட்சி என்பது சமூக மற்றும் அரசியல் சண்டை என்பதைத் தவிர வேறொன்றுமல்ல) அவசியம். சில நிலைமைகளில் இக்குணங்கள் ஒரு சண்டையின் முடிவைக் கூட நிர்ணயிக்கும். ஆனால் சாதகமான புற நிலைமைகள் இல்லையென்றால், நிறைவேற்றப்பட வேண்டிய இலட்சியத்துக்குரிய பொருளாயத நிலைமைகள் முதிர்ச்சியடையவில்லை என்றால் மிகவும் வன்மையான சித்தத்தினாலும் மிகவும் கீழ்ப்படியாத உறுதியினாலும் எத்தகைய பலனும் ஏற்படாது.

புரட்சியைப் பற்றிய லெனின் தத்துவத்தின் அடிநிலையான பொருள்முதல்வாதக் கோட்பாடுகள் லெனின் ''புரட்சியின் குறிக்கணிதம்'' என்று கூறிய **இயக்கவியல்** கோட்பாடுகளுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. புரட்சி ஒரு நிகழ்வுப் போக்காக — அதன் கட்டங்கள் ஒன்றையொன்று தகுதிப்படுத்துவதுடன் ஒன்றிலிருந்து மற்றது வளர்ச்சியடைகின்றன — கருதப்படுகிறது என்ற உண்மையில் இத்தத்துவத்தின் இயக்கவியல் தன்மை வெளிப்படுகிறது. புரட்சி இயக்கவியல் நிகழ்வுப் போக்கு என்ற கருத்தை லெனின் மார்க்ஸ் மற்றும் எங்கெல்சிடமிருந்து பெற்றார். இக்கருத்து தொடர்ச்சியான புரட்சித் தத்துவத்தில் (இதைப் பற்றி விரிவாகப் பின்னர் எழுதுவோம்) சிறப்பான வடிவத்தைப் பெற்றது.

இதன் கோட்பாடுகளை மார்க்சும் எங்கெல்சும் வகுத்தளித்தனர், லெனின் அதை ஏகாதிபத்திய சகாப்தத்துக்குத் தகவமைத்துக் கொண்டார்.

புரட்சியைப் பற்றி லெனின் தத்துவம் ஏகாதிபத்தியத்தைப் பற்றிய அகல் விரிவான அமைப்பியல் ஆராய்ச்சியின் விளைவாகும். சிற்சில நாடுகளில் நடைபெற்ற வளர்ச்சிகளை லெனின் தனித்தனியாக ஆராயவில்லை, அவற்றை மற்ற நாடுகளில் நடைபெற்றுக் கொண்டிருந்த நிகழ்ச்சிகளோடு இணைத்து ஆராய்ந்தார். ஏனென்றால் ஒவ்வொரு நாடும் உலக முதலாளித்துவ அமைப்பு என்ற மொத்தத்தில் ஒரு பகுதி, ஒரு "கூறாக" மட்டுமே இருக்கிறது. மார்க்ஸ் எழுதிய மூலதனம் இத்தகைய அமைப்பியல் ஆராய்ச்சிக்கு மூலச் சிறப்பான உதாரணமாகும். முதலாளித்துவத்தை ஒரு சமூக-பொருளாதார அமைப்பு என்ற அடிப்படையில் பகுப்பாய்வு செய்வதற்கு மார்க்ஸ் அமைப்பியல் ஆராய்ச்சி முறையைப் பின்பற்றினார், அதன் மூலம் சோஷலிஸ்ட் புரட்சியின் சர்வதேசத் தன்மையை எடுத்துக்காட்டினார்.

சுதந்திரப் போட்டி முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக வளர்ச்சியடைந்தது நாடுகளுக்கு இடையில் புதிய, அதிகச் சிக்கலான இணைப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது, அவற்றுக்கிடையில் பரஸ்பரச் சார்புநிலையை அதிகப்படுத்தியிருக்கிறது, உலக முதலாளித்துவ அமைப்பை அதிகச் சிக்கலாக்கியிருக்கிறது. 1917 ஜனவரியில் லெனின் பின்வருமாறு எழுதினார்: "மேற்கு ஐரோப்பா

வில் ஒரு அமைப்பு தோன்றி விட்டது (முக்கியம் இது!! இதைப் பற்றிச் சிந்தியுங்கள்! இதை மறக்க வேண்டாம்!! நாம் தனித்தனியான அரசுகளில் மட்டுமல்லாமல் ஒரு வித அரசுகளின் **அமைப்பிலும்** வாழ்ந்து கொண்டிருக்கிறோம்; அராஜகவாதிகள் இதைப் புறக்கணிக்க அனுமதிக்கப்படுவார்கள்; நாம் அராஜகவாதிகள் அல்ல), அரசுகளின் **அமைப்பு**...''* அதே 1917ம் வருடத்தில் லெனின் **யுத்தமும் புரட்சியும்** என்ற பிரசுரத்தில் ஏகாதிபத்திய யுத்தத்தின் காரணங்களையும் தன்மையையும் ஆராய்ந்து பின்வரும் முடிவுக்கு வந்தார்: ''இன்றைய யுத்தம் எதற்காக நடைபெறுகிறது என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் முதலில் மொத்தமாக ஐரோப்பிய வல்லரசுகளின் கொள்கைகளைப் பற்றிப் பொதுவான மதிப்பாய்வு செய்ய வேண்டும். நாம் ஏதாவதொரு உதாரணத்தை, ஏதாவதொரு குறிப்பிட்ட நாட்டை எடுத்துக்கொள்ளக் கூடாது. அதை சமூக நிகழ்வுகளின் சூழலிலிருந்து சுலபமாகப் பிரித்தெடுக்க முடியும். அதனால் பயனில்லை. ஏனென்றால் அதற்கு எதிரான உதாரணத்தையும் அதைப் போலவே சுலபமாக எடுத்துக்காட்ட முடியும். ஐரோப்பிய அரசுகளின் மொத்த அமைப்பின் முழுக் கொள்கையையும் அவற்றின் பொருளாதார மற்றும் அரசியல் இடையுறவுகளோடு நாம் எடுத்துக்கொண்டு

---

* V. I. Lenin, "To Inessa Armand", *Collected Works,* Vol. 35, p. 273.

பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் இன்றைய யுத்தம் இந்த அமைப்பிலிருந்து தொடர்ச்சியாகவும் தவிர்க்க முடியாத விதத்திலும் எப்படி வளர்ச்சியடைந்தது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.''* அதைப் போல சோஷலிஸ்ட் புரட்சி எந்தப் பாதையில், எந்தத் திசையில் வளர்ச்சியடைய முடியும் என்பதைப் புரிந்து கொள்வதற்கு ''மொத்த அமைப்பின் முழுக் கொள்கையையும்.'' சமூக, பொருளாதார உறவுகள் மற்றும் போக்குகளின் மொத்தத்தையும் நாம் ஆராய வேண்டும். லெனின் துல்லியமாக இதைத்தான் செய்தார். சோஷலிஸ்ட் புரட்சி என்பது—தனித்தனியான அரசுகளின் எல்லைகளுக்குள் அல்ல—உலக முதலாளித்துவ அமைப்பின் சுற்றுவட்டத்துக்குள் வளர்ச்சியடைந்து முதிர்ச்சியடைகின்ற நிகழ்வுப் போக்கு என்று அவர் கருதினார். சோஷலிஸ்ட் புரட்சி முதலில் சில நாடுகளில் அல்லது ஒரேயொரு நாட்டில் கூட வெற்றி அடைய முடியும் என்ற முடிவைப் பெறுவதற்கு இக்கருத்து லெனினுக்கு உதவியாக இருந்தது. ருஷ்யாவில் 1917ம் வருடப் புரட்சியின் வளர்ச்சியைப் பற்றி லெனின் 1917 ஆகஸ்ட் மாதத்தில் பின்வருமாறு எழுதினார்: ''மொத்தத்தில் இந்தப் புரட்சியை ஏகாதிபத்திய யுத்தத்தின் காரணமாய் மூளும் சோஷலிசப் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் கோவையில் ஓர் இணைப்பாய் அன்றி வேறு எவ்விதத்திலும் புரிந்து

* V. I. Lenin, *Collected Works*, Vol. 24, p. 401.

கொள்ள முடியாது.''*

புரட்சிகர நிகழ்வுப் போக்கை ஆராய்வதற்கு அமைப்பியல் அணுகுமுறை இந்நூற்றாண்டின் தொடக்கத்தைக் காட்டிலும் இன்று மிகவும் அவசியமாக இருக்கிறது. உலகம் மிகவும் சிறிய பிரதேசமாக மாறி விட்டது; இரண்டு உலக சமூக அமைப்புகளுக்கு இடையிலும் குறிப்பாக அவற்றுக்குள்ளேயும் நாடுகளின் இடையிணைப் பும் இடைச்சார்பும் மிகப் பெரிய அளவுக்கு வளர்ச்சியடைந்து விட்டன; சமூக வாழ்க்கை மிகவும் அதிக அளவுக்கு சர்வதேசமயமாக்கப் பட்டு விட்டது; பொருளாதார ஒருங்கிணைப்பு ஆழமடைந்திருக்கிறது; போக்குவரத்தும் பொது மக்கள் பார்க்கின்ற, படிக்கின்ற சாதனங்களும் பெருகி உலக முழுவதையும் தழுவிக் கொண் டிருக்கின்றன; பன்னாட்டுத் தொழில் நிறுவனங் கள் தோன்றியிருக்கின்றன. புரட்சி (மற்றும் எதிர்ப்புரட்சி) ஏதாவதொரு நாட்டில் குறிப் பிட்ட வடிவங்களில் தோன்றி, வளர்ச்சியடை வதற்கு அவசியமான பொருளாயத முன்நிபந் தனைகளையும் நிலைமைகளையும் பற்றிய பிரச்சினையை ஆராய்கின்ற பொழுது உலக முதலாளித்துவ அமைப்பிலும் உலக சோஷலிச அமைப்பிலும் உள்ளுறையாகவுள்ள முரண்பாடு களையும் போக்குகளையும் இரண்டு அமைப்பு களுக்கு இடையில் சக்திகளின் சமநிலையையும்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதி களில், தொகுதி 6, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1980, பக்கம் 11.

கணக்கிலெடுத்துக் கொள்வது அவசியமாக இருக்கிறது.

குறிப்பிட்ட நாட்டின் உள்முரண்பாடுகளும் நிலைமைகளும் புரட்சிகர நிகழ்வுப் போக்கில் தமது முன்னுரிமையை வெளிநாட்டு முரண்பாடுகளுக்கும் நிலைமைகளுக்கும் விட்டுக் கொடுக்கின்றன என்பது மேலே கூறியதன் பொருளல்ல. முடிவாகப் பார்க்கும் பொழுது அவை முன்பிருந்ததைப் போலவே, அங்கே புரட்சியின் வளர்ச்சியை நிர்ணயிக்கின்றன. ஆனால் இன்றைய நிலைமைகளில் உள்நாட்டு முரண்பாடுகளும் நிலைமைகளும் வெளிநாட்டு முரண்பாடுகளையும் நிலைமைகளையும் அதிகமாகச் சார்ந்திருக்கின்றன, பின்னால் சொல்லப்பட்டதன் முக்கியத்துவமும் அதிகரிக்கிறது.

புரட்சிகரமான நிகழ்வுப் போக்கைப் பற்றி லெனினுடைய பகுப்பாய்வின் **ஸ்தூலமான** தன்மை அதன் மற்றொரு சிறப்பான அம்சமாகும். புரட்சியின் பிரச்சினைகளைப் பற்றி லெனின் எழுதிய புத்தகங்களை நாம் எடுத்துக் கொண்டால் அவற்றில் ''பொதுவான'' வாதங்களை, ''நிரந்தரமான'' உண்மைகளை, எல்லாக் காலங்களுக்கும் எல்லா நாடுகளுக்கும் பொருந்தக் கூடிய திட்டங்களைப் பார்க்க முடியாது. ஸ்தூலமான நிலைமையைப் பற்றிய ஸ்தூலமான பகுப்பாய்வை மட்டுமே நாம் பார்க்க முடியும். ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் நிகழ்வைப் பற்றி முழுநிறைவான, அகல் விரிவான ஆராய்ச்சியையும் நடைமுறையில் அதைச் சோதனை செய்ததன் விளை

வையும் அடிப்படையாகக் கொண்ட பொது மைப்படுத்துதல்களை மட்டுமே நாம் பார்க்க முடியும்.

மார்க்சிய-லெனினியத்துக்கும் பயனீட்டுவாதத் துக்கும் எத்தகைய சம்பந்தமும் கிடையாது. ஆனால் மார்க்சிய-லெனினியத் தத்துவம் (புரட்சி யைப் பற்றிய தத்துவம் உள்பட) செய்முறை யான அவசியத்தினால், புரட்சிகரப் போராட்டத் தின் தேவைகளினால் தோன்றியது. **தத்துவத் துக்கும் செய்முறைக்கும் உள்ள இணைப்பு,** தத்து வத்தை செய்முறையில் பரிசோதித்தல் புரட்சி யைப் பற்றிய லெனின் தத்துவத்தின் அடிப் படையான கோட்பாடுகளில் ஒன்றாக எப்பொழு துமே இருந்து வந்திருக்கின்றன, அப்படியே இருக்கும். ஆகவே ஒரு மார்க்சிய-லெனினிய வாதி பொருளாதாரம், அரசியல் மற்றும் விஞ்ஞானத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களைப் பற்றியும் ஒடுக்குமுறையையும் சுரண்டலையும் எதிர்த்துத் தானாகத் தோன்றுகின்ற மக்களின் போராட்ட வடிவங்களைப் பற்றியும் எப்பொழு தும் கவனத்துடன் இருக்க வேண்டும். ஏனென் றால் அவற்றை ஆராய்வது புரட்சியைப் பற்றிய தத்துவத்தை வளப்படுத்தும், சமூகத்தின் புரட்சி கர மாற்றத்தைத் துரிதப்படுத்த உதவி புரியும்.

## 4. சமூக வளர்ச்சியும் சோஷலிஸ்ட் புரட்சியும்

ஒரு புதிய சமூக அமைப்பு சூன்யத்திலிருந்து தோன்றுவதில்லை, அது பழைய சமூகத்தில்

முதிர்ச்சி அடைகின்ற பொருளாயத பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் கலாசார முன்நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டது. நிலப்பிரபுத்துவம் முதலாளித்துவத்தைத் ''தயாரித்தது'', முதலாளித்துவம் சோஷலிசத்தை (கம்யூனிசத்தை) ''தயாரித்துக் கொண்டிருக்கிறது''. நிலப்பிரபுத்துவ சமூகத்தில் உள்ளுறையாக இருந்த முரண்பாடுகளைத் தீர்த்த பிறகு முதலாளித்துவம் உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையில் புதிய, அதிக ஆழமான முரண்பாடுகளை உருவாக்கியது. முதலாளித்துவ வளர்ச்சியின் குறிப்பிட்ட கட்டத்தில் இந்த முரண்பாடுகள் மோதலாக மாறுகின்றன. இம்மோதலைத் தீர்த்தால்தான் சமூகம் மேலும் வளர்ச்சியடைய முடியும். இம்மோதலைத் தீர்ப்பதற்கு சோஷலிஸ்ட் புரட்சி ஏற்படுகிறது, முதலாளித்துவத்தினால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் உற்பத்தி சக்திகள் வளர்ச்சிக்குப் புதிய வாய்ப்புகளைப் பெறுகின்றன.

சுதந்திரப் போட்டி முதலாளித்துவம் அரசு-ஏகபோக முதலாளித்துவமாக வளர்ச்சியடைவது முதலாளித்துவ சமூகத்திற்குள் சோஷலிசத்தின் பொருளாயத முன்நிபந்தனைகளைப் படைப்பதை நோக்கி ஒரு புதிய காலடி வைத்தலைக் குறிக்கிறது. ''...அரசு-ஏகபோக முதலாளித்துவம் சோஷலிசத்திற்கான முழுமையான பொருளாயதத் தயாரிப்பாகும், சோஷலிசத்தின் நுழைவாயிலாகும், வரலாற்று ஏணியில் ஒரு படியாகும். இந்தப் படிக்கும் சோஷலிசம்

என்றழைக்கப்படும் படிக்கும் இடையே இடைப் பட்ட படிகள் எதுவும் கிடையாது.''* ''ஆனால் சோஷலிசம் தற்காலத்திய முதலாளித்துவத் தின் எல்லா ஜன்னல்களிலிருந்தும் நம்மீது பார்வையை வீசுகிறது. இந்த தற்காலத்திய முதலாளித்துவத்தின் அடிப்படையில் ஒரு முன் னேற்றப் படியாக அமையும் எல்லா முக்கிய மான நடவடிக்கையிலும் சோஷலிசம் நேரடி யாகச் செயலில் உருவரை செய்யப்பட்டுள் ளது''** என்று லெனின் வலியுறுத்தினார்.

இத்''தயாரிப்பு'' எவ்விதமாக வெளிப்படு கிறது? முதலாவதாக, சோஷலிசத்தின் பொருளா தார முன்நிபந்தனைகள் படைக்கப்படுகின்றன. முதலாளித்துவம் உழைப்பின் உற்பத்தித் திற னைத் தீவிரமாக அதிகரிக்கிறது, வலிமை மிக்க உற்பத்திச் சக்திகளை வளர்க்கிறது, தொழில் நுட்பவியலுக்கும் விஞ்ஞானத்துக்கும் தூண்டு தலைக் கொடுக்கிறது. ஏகாதிபத்தியக் கட்டத் தில் அது ''...உற்பத்தியில் மேலும் அதிக ஏகபோகமயமாக்கல் மற்றும் அதன் மீது அரசு கட்டுப்பாட்டுத் திசையிலான... நடவடிக்கை களை...''*** எடுக்கிறது. இந்த நடவடிக்கை களின் உடனடியான நோக்கம் முதலாளி வர்க் கத்தின் ஆதிக்கத்தை பலப்படுத்துவதாகும். ''...ஆனால் உற்பத்தி சாதனங்களிலான தனி

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 5, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1980, பக்கங்கள் 377—378.

** அதே நூல், பக்கம் 378.

*** அதே நூல், பக்கம் 191.



3-518

யார் உடைமை ஒழிக்கப்பட்டு, அரசு அதிகாரம் பாட்டாளி வர்க்கத்திடம் முற்றாக மாற்றி வழங்கப்படுவதோடு இதே நிலைமைகள் சமுதாயத்தைப் புனரமைப்பதற்கான உத்தரவாதமாகும். இந்த மாற்றம் மனிதனை மனிதன் சுரண்டுவதை ஒழிக்கும், எல்லோரின் நல வாழ்வையும் உறுதிப்படுத்தும்.''* இரண்டாவது உலக யுத்தம் முடிவடைந்த பிறகு கழிந்திருக்கும் வருடங்களில் விஞ்ஞான-தொழில்நுட்பவியல் புரட்சியின் கீழ் சோஷலிச மாற்றத்துக்கு முதலாளித்துவத்தின் பொருளாயதத் தயாரிப்பு பெரிய அளவுக்கு அதிகரித்திருக்கிறது என்று நம்பிக்கையுடன் கூற முடியும்.

ஒரு புதிய சமூக அமைப்புக்கு அவசியமான பொருளாயத முன்நிபந்தனைகள் பொருளாதாரத்தில் மட்டுமல்லாமல் சமூக **உறவுகளின்** துறையிலும் முதிர்ச்சியடைகின்றன (சமூக வர்க்கங்கள் குறிப்பாக, தொழிலாளி வர்க்கம் தோன்றி வளர்ச்சி அடைகிறது, அது புதிய சமூகத்தின் நிர்மாணத்தையும் அமைப்பு, நிர்வாகம், செய்தித் தொடர்புப் பணிகளைக் கொண்ட ஸ்தாபனங்களின் அமைப்பையும் கவனிக்கிறது); மற்றும் **கலாசாரத் துறையிலும்** (பொதுக்கல்வி மற்றும் தொழிற் பயிற்சி அமைப்பு, செய்தி, தகவல் பரிமாற்றத்துக்கு ஒரு பொறியமைவு ஏற்படுத்தப்படுதல்); முடிவாக, **அரசியல்** துறையிலும், ஏனென்றால் முதலாளித்துவ சமூகத்தில் நடைபெறுகின்ற தீவிரமான வர்க்கப்

---

* அதே நூல், பக்கம் 192.

போராட்டத்தின் கீழ் சமூகத்தின் புதிய அரசியல் ஸ்தாபன அமைப்பை நோக்கிய முன்னேற்றத்துக்கு அவசியமான ஜனநாயகக் கூறுகள் தோன்றுகின்றன (ஏனென்றால் சோஷலிஸ்ட் ஜனநாயகம் முதலாளித்துவ ஜனநாயகத்தை அழிப்பதில்லை, அதைச் செம்மையாக்குகிறது).

அரசு-ஏகபோக முதலாளித்துவம் சோஷலிசத்துக்குப் ''பொருளாயதத் தயாரிப்பு''—ஆனால் அது இன்னும் சோஷலிசம் அல்ல. நிலப்பிரபுத்துவத்தை அகற்றிய முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசம் வேறுபட்டிருக்கிறது. சோஷலிசம் ஒரு சுரண்டல் வடிவத்துக்கு பதிலாக மற்றொரு வடிவத்தைக் கொண்டு வருவதில்லை. அது எல்லாச் சுரண்டலுக்கும் முடிவு கட்டுகிறது; மார்க்ஸ் கூறியதைப் போல, மனிதகுலத்தின் உண்மையான வரலாற்றைத் தொடங்கி வைக்கிறது. அதனால்தான் முதலாளித்துவ சமூக உறவுகள் அவற்றின் பிரதானமான கூறுகளில் நிலப்பிரபுத்துவத்தின் கீழ் உருவாகியிருந்ததைப் போல சோஷலிஸ்ட் சமூக உறவுகளும் அமைப்புகளும் முதலாளித்துவ சமூகத்துக்குள் உருவாக முடியாது. முதலாளித்துவம் பொருளாயத அடிப்படையை, உற்பத்தியை சமூகமயமாக்குதல், சுரண்டலை ஒழித்தல், கம்யூனிஸ்ட் சமூக அமைப்பில் உள்ளுறையாக இருக்கின்ற மனிதனின் ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் இதரவற்றுக்கு அவசியமான பொருளாயத **முன்நிபந்தனைகளை** மட்டுமே தயாரிக்கிறது. சோஷலிஸ்ட் புரட்சி நடைபெறுவதற்கு இம்முன்நிபந்தனைகள் குறிப்

பிட்ட அளவுக்கு வளர்ச்சியடைந்திருப்பது புற நிலையான அவசியமாகும்.

ஆனால் முதலாளித்துவம் சோஷலிசத்துக்கு முன்நிபந்தனைகளைத் தயாரிப்பதுடன் சில சோஷலிசத் ''துணுக்குகளையும்'' தயாரிக்கிறதா? இத்''துணுக்குகள்'' மென்மேலும் அதிகமாக வளர்ச்சியடைந்து முடிவில் சமூகப் புரட்சியின்றி முதலாளித்துவம் ஒழிக்கப்பட்டு சோஷலிசம் ஏற்படுவதற்கு வழி வகுக்குமா? மார்க்சியவாதிகளும் சந்தர்ப்பவாதிகளும் இப்பிரச்சினையைப் பற்றி நெடுங்காலமாக விவாதித்திருக்கிறார்கள். லெனின் கொள்கையளவில் இப்பிரச்சினைக்குத் தீர்வைக் கூறியிருக்கிறார். முதலாளித்துவத்தின் கீழ் சோஷலிசத்தின் சில ''துணுக்குகள்'' தோன்ற முடியும் என்று அவர் ஒத்துக்கொண்டார், ஆனால் அவை குண ரீதியான பாய்ச்சலுக்கு, முதலாளித்துவம் சோஷலிசமாக ''மாறுவதற்கு'' வழி வகுக்க முடியாது. ''நுகர்வோர் சங்கங்கள் பாட்டாளி வர்க்கத்துக்கு உண்மையான பலமாக, உண்மையான பொருளாதார நிலையை வென்றெடுப்பதாக, சோஷலிசத்தின் மெய்யான துணுக்காக உள்ளன என்று சந்தர்ப்பவாதிகள் வாதிடுகிறார்கள். புரட்சிக்காரர்களாகிய நீங்கள் இயக்கவியல் வளர்ச்சியை, முதலாளித்துவம் சோஷலிசமாகப் பரிணமிப்பதை, முதலாளித்துவத்தின் இதயத்துக்குள் சோஷலிசத்தின் கருக்கள் ஊடுருவுவதை, முதலாளித்துவத்துக்குப் புதிய சோஷலிஸ்ட் உள்ளடக்கத்தைக் கொடுத்து அதை சுத்தப்படுத்துவதைப் புரிந்து கொள்ளவில்லை.

''ஆம், நுகர்வோர் சங்கங்கள் குறிப்பிட்ட அர்த்தத்தில் சோஷலிசத்தின் துணுக்காக இருக்கின்றன என்பதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம் என்று புரட்சிக்காரர்கள் பதிலளிக்கிறார்கள். முதலாவதாக, சோஷலிஸ்ட் சமூகம் திட்டத்தின்படி அமைக்கப்பட்ட, நுகர்வுக்காக உற்பத்தி நடைபெறுகின்ற மாபெரும் நுகர்வோர் சங்கமாகும். இரண்டாவதாக, சக்தி வாய்ந்த, பல்துறையான தொழிலாளி வர்க்க இயக்கம் இல்லாமல் சோஷலிசத்தைச் சாதிக்க முடியாது, நுகர்வோர் சங்கங்கள் தவிர்க்க முடியாத வகையில் இப்பல துறைகளில் ஒன்றாக இருக்கும்... ஆகவே நுகர்வோர் சங்கங்கள் சோஷலிசத்தின் துணுக்காக இருக்கின்றன. வளர்ச்சியின் இயக்கவியல் நிகழ்வுப் போக்கு முதலாளித்துவத்தின் கீழ்கூட புதிய சமூகத்தின் கூறுகளை—பொருளாயத, ஆன்மிகக் கூறுகள் இரண்டையும்—அறிமுகப்படுத்துகிறது. ஆனால் சோஷலிஸ்டுகள் மொத்தத்திலிருந்து பகுதியைப் பிரித்துப் பார்க்க முடிந்தவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் தமது கோஷங்களில் மொத்தத்தைக் கோர வேண்டும், பகுதியை அல்ல.''*

சந்தர்ப்பவாதிகள் முதலாளித்துவத்தின் கீழ் சோஷலிசத்தின் ''துணுக்குகளைப்'' பார்த்ததற்காக லெனின் அவர்களைக் குறை கூற

* V. I. Lenin, "The Latest in Iskra Tactics, or Mock Elections as a New Incentive to an Uprising", *Collected Works*, Vol. 9, pp. 371—372.

வில்லை; இத்தகைய ''துணுக்குகளை'' ஏற் படுத்துவதை நோக்கமாகக் கொண்ட போராட் டத்துக்குத் தொழிலாளர்களைத் திருப்பியதைக் கூட லெனின் குறை கூறவில்லை. ஏனென்றால் இத்''துணுக்குகள்'' தொழிலாளர்களின் நிலை மையை முன்னேற்றுவதற்கு உதவியாக இருக் கும். ''நிலைமை எவ்வளவு மோசமாகிறதோ, அவ்வளவு நல்லது, அது புரட்சியைச் சீக்கிரமாக ஏற்படுத்தும்'' என்ற கோட்பாட்டை மார்க் சியவாதிகள் ஒருபோதும் ஆதரித்ததில்லை. முதலாளித்துவ சமூகத்தில் இந்த சோஷலிசத் ''துணுக்குகளின்'' பாத்திரத்தை சந்தர்ப்பவாதி கள் மிகைப்படுத்தியதற்காக, பகுதியை ஆதரித்து மொத்தத்தை அலட்சியப்படுத்தியதற்காக, இந்தப் பிரச்சினையின் அரசியல் அம்சத்தைப் பற்றி நிஹிலிசத்தைப் பின்பற்றியதற்காக, அதா வது நவீன வலது சந்தர்ப்பவாதிகளின் குறியடையாளமான குற்றங்களுக்காக லெனின் அவர்களைக் குறை கூறினார்.

இப்பொழுது மூலதனத்தை எதிர்க்கின்ற உழைக்கும் மக்களின் கூட்டணி விரிவடைந் திருப்பதால், ''வளர்ச்சியடைந்த ஜனநாயகத் துக்காகப்'' பல நாடுகளில் நடைபெறுகின்ற போராட்டம் சோஷலிசத்துக்கான போராட் டத்துடன் பின்னிப் பிணைந்திருப்பதால், தற் பொழுது உலக சோஷலிசத்தின் ''தாக்கம்'' முதலாளித்துவ உலகத்துக்குள் சில சீர்திருத்தங் களை (புரட்சியைத் தடுப்பதற்காக) செய்யும் படி முதலாளி வர்க்கத்தை நிர்ப்பந்திப்பதால் முதலாளித்துவ சமூகத்தின் ''உடலுக்குள்''

சோஷலிசத் ''துணுக்குகளின்'' எண்ணிக்கையும் அளவும் அதிகரிக்கக் கூடும். ஆனால் அரசியல் அதிகாரம் உழைக்கும் மக்களின் கரங்களுக்கு மாற்றப்படுகின்ற வரை, அதாவது சோஷலிஸ்ட் புரட்சி ஏற்படுகின்ற வரை எவ்விதமான ''துணுக்குகளும்'' தாமாகவே சோஷலிசத்தைக் கொண்டுவர முடியாது. ''முதலாளி வர்க்கத்திடம் அதிகாரம் நீடிக்கின்ற வரை நுகர்வோர் சங்கங்கள் அற்பமான துணுக்குகளாக மட்டுமே இருக்கும். அவை எவ்விதத்திலும் தீவிரமான மாற்றங்களை உத்தரவாதம் செய்ய மாட்டா, எவ்விதத்திலும் தீர்மானகரமான மாற்றங்களைக் கொண்டு வர மாட்டா; சில சமயங்களில் புரட்சிக்கான தீவிரப் போராட்டத்திலிருந்து கவனத்தைத் திருப்புவதைக் கூடச் செய்யும். நுகர்வோர் சங்கங்களில் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் பயிற்சிகள் மிகவும் உபயோகமானவை என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் அதிகாரம் பாட்டாளி வர்க்கத்துக்கு மாற்றப்பட்டால் மட்டுமே இப்பயிற்சிகளுக்கு முழுப் பயன் கிடைக்கும்''* என்று லெனின் எழுதினார். முதலாளித்துவ சமூகத்திற்குள் தோன்றுகின்ற சோஷலிசத் ''துணுக்குகள்'' சோஷலிஸ்ட் சமூக அமைப்பிற்குரிய முன்நிபந்தனைகளின் ஒரு தனிவடிவமாகவே சாராம்சத்தில் இருக்கின்றன; ஆனால் சோஷலிஸ்ட் சமூகத்தைப் புரட்சியின் மூலமாக மட்டுமே அடைய முடியும்.

---

* *Ibid.*, p. 371.

முதலாளித்துவ சமூகத்திற்குள்ளிருக்கின்ற சோஷலிசத் ''துணுக்குகளின்'' எண்ணிக்கை மற்றும் அளவு அதிகரிக்கின்ற பொழுது அவை புரட்சிகரப் பாய்ச்சலின் வடிவத்தையும் கால அளவையும், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாற்றத்தின் தன்மையையும் பாதிக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை. புரட்சிகரக் கட்சி ஒவ்வொரு ஸ்தூலமான நிலைமையையும் நிகழ்வையும் முழு நிறைவாக ஆராய்ந்து அவற்றைக் கணக்கிலெடுத்துக் கொண்டு தன்னுடைய நடவடிக்கைகளை இயக்க வேண்டும். எனினும் பாய்ச்சல் மிகவும் அவசியமே. இதுதான் இந்தப் பிரச்சினையில் மார்க்சிய-லெனினிய அணுகுமுறையின் சாராம்சம், இது முதலாளி வர்க்க சீர்திருத்தவாத அணுகுமுறையிலிருந்து அதிகமாக வேறுபட்டிருக்கிறது.

முதலாளித்துவத்தின் சமமற்ற வளர்ச்சி ஏகாதிபத்தியத்தின் கீழ் தீவிரமடைகிறது; லெனின் எடுத்துக்காட்டியதைப் போல அது தனித்தனி நாடுகளில் உருவாக்கப்படுகின்ற சோஷலிசத்தின் பொருளாயத முன்நிபந்தனைகள் மீது நேரடியான தாக்கத்தைக் கொண்டிருக்கிறது. அவை **காலம்** (சில நாடுகளில் மற்ற நாடுகளைக் காட்டிலும் சீக்கிரமாகவே தோன்றிவிடுகின்றன), **உள்ளடக்கம்** (உதாரணமாக, சில நாடுகளில் பொருளாதார முன்நிபந்தனைகள் படைக்கப்படுகின்றன, மற்றும் சில நாடுகளில் அரசியல் முன்நிபந்தனைகள் தோன்றுகின்றன) ஆகிய இரண்டிலுமே **சமமற்ற முறையில்** உருவாகின்றன. 1917 அக்டோபர் புரட்சி வெற்றியடைந்

தவுடன் லெனின் பின்வருமாறு எழுதினார்: வரலாறு, ''சர்வதேச ஏகாதிபத்தியத்தின் முட்டை ஓட்டுக்குள் எதிர்காலத்திய இரண்டு கோழிக்குஞ்சுகள் இருக்கின்ற மாதிரி ஒன்றுக் கொன்று தொடர்பு இல்லாது அக்கம் பக்கமாக இருந்து கொண்டிருக்கும் சோஷலிசத்தின் இரண்டு பாதிகளை 1918இல் பெற்றெடுத்திருக்கின்ற அள வுக்கு ஒரு வினோதமான போக்கிலே போயுள் ளது. 1918இல் ஜெர்மனியும் ருஷ்யாவும், ஒரு பக்கத்தில், சோஷலிசத்திற்குரிய பொருளாதார, உற்பத்தி ரீதியான, சமுதாய-பொருளாதார நிலைமைகளையும், இன்னொரு பக்கத்தில், அதற்குரிய அரசியல் நிலைமைகளையும் பொரு ளாயத முறையில் நிறைவேற்றம் செய்ததன் எடுப்பான உருவகம் ஆகும்.''*

இத்தகைய சமமற்ற நிலைமை புரட்சி மற்ற நாடுகளைக் காட்டிலும் சில நாடுகளில் முன் னதாகத் தொடங்குவதற்குக் காரணமாக இருப் பது மட்டுமல்லாமல் புரட்சியின் இயக்கியல், வளர்ச்சி விகிதங்கள் மற்றும் அது எழுப்புகின்ற பிரச்சினைகளின் தன்மை ஆகிய கூறுகளையும் தீர்மானிக்கிறது. சில நாடுகளில் புரட்சியை நிறைவேற்றுவதைக் காட்டிலும் அதைத் தொடங்கு வது சுலபமாக இருக்கிறது, வேறு சில நாடு களில் புரட்சியைத் தொடங்குவது மிகவும் கடின மாக இருக்கிறது, அதை வெற்றி பெறும்படிச்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதி களில், தொகுதி 8, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1981, பக்கம் 148.

செய்வது ஒப்பீட்டளவில் சுலபமாக இருக்கிறது. சோஷலிசத்தின் முன்நிபந்தனைகள் சமமற்ற முறையில் வளர்ந்திருப்பதே இதற்குக் காரணம் என்பதை லெனின் அடிக்கடி வலியுறுத்தினார். ''ஐரோப்பாவில் சோஷலிஸ்ட் புரட்சிக்குரிய பொருளாதார முதனிலைகள் பற்றிக் கவனமாகக் கருத்துச் செலுத்தும் எவருக்கும் ஐரோப்பாவில் புரட்சியினைத் தொடங்குவது அளவிட முடியாத வகையில் மிகக் கடினம், நம் நாட்டிலோ அதைத் தொடங்குவது அளவிட முடியாத வகையில் மிகவும் எளிது, ஆனால் அங்குள்ளதை விட இங்கு புரட்சியினைத் தொடர்ந்து நடத்துவது என்பது மிகக் கடினம் என்பது முற்றிலும் தெளிவாக இருந்தது''* என்று லெனின் கூறினார்.

உலக சோஷலிஸ்ட் அமைப்பின் வரலாறு லெனினுடைய முடிவுகள் எவ்வளவு சரியானவை என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறது. வளர்ச்சி மட்டங்கள் வெவ்வேறாக—ஆனால் ஆக உச்சமாக இல்லாத — நாடுகளில் சோஷலிஸ்ட் புரட்சிகள் வெற்றியடைந்திருக்கின்றன. உலக சோஷலிஸ்ட் அமைப்பின் நிலைகள் பலமடைந்து அதன் பொருளாதாரம் வளர்ச்சி அடைகின்ற பொழுது சோஷலிசத்தின் பொருளாதார மற்றும் கலாசார முன்நிபந்தனைகளின் முதிர்ச்சி ஒப்பீட்டளவில் குறைவாக இருக்கின்ற நாடுகளில்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 7, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1981, பக்கம் 222.

சோஷலிஸ்ட் சமூக உறவுகளை அதிக விரைவாக உருவாக்க முடியும் என்பதையும் அது நிரூபித்திருக்கிறது. எனினும் ஏதாவதொரு நாட்டில் புரட்சி முதிர்ச்சியடைவதற்கும் சோஷலிசம் வெற்றிபெறுவதற்கும் அங்கே சோஷலிசத்தின் முன்நிபந்தனைகள் இருப்பது மிகவும் அவசியமாகும்.

## 5. புரட்சியின் புறவய நிலைமைகள்

''புரட்சிகள் உத்தரவுப்படி தயாரிக்கப்படுவதில்லை, அவை ஒரு குறிப்பிட்ட தருணத்தில் நடைபெறும்படிச் செய்ய முடியாது. அவை வரலாற்று வளர்ச்சிப் போக்கில் முதிர்ச்சி அடைகின்றன, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் காரணங்களின் மொத்தத் தொகுதியினாலும் நிர்ணயிக்கப்படுகின்ற தருணத்தில் அவை வெடிக்கின்றன''* என்று லெனின் கூறினார். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், சமூகத்தின் வரலாற்று வளர்ச்சிப் போக்கில் தோன்றுகின்ற **புறவய** மற்றும் **அகவய** நிலைமைகளின் தொகுதி புரட்சிக்கு அவசியம். புறவய நிலைமைகள், அவை அகப்பொருளின் நடவடிக்கையினால் ஏற்படுகின்றன என்ற போதிலும் தனிநபர்கள், கோஷ்டிகள் அல்லது

---

* V. I. Lenin, "Report Delivered at a Moscow Gubernia Conference of Factory Committees. July 23, 1918", *Collected Works,* Vol. 27, p. 547.

வர்க்கங்களின் (இவர்கள் வரலாற்று நிகழ்வுப் போக்கின் அகப்பொருளாக இருக்கின்றன) தாக்கத்துக்கு உட்பட்டவர்கள் அல்ல. புறவய நிலைமைகளுக்கும் அகவய நிலைமைகளுக்கும் இடையில் கறாரான பிரிவினைக் கோடு இல்லை என்பது உண்மையே. ஆனால் அவற்றை எதிர்ப்பது எப்படித் தவறாகுமோ அப்படி அவற்றை இனங்காண்பதும் தவறுதான். இரண்டு போக்குகளும் தீவிரமான அரசியல் தவறுகளைக் குறிக்கின்றன. சோஷலிஸ்ட் புரட்சியின் அகவய நிலைமைகளையும் அதன் வெற்றிக்கு அகவய மற்றும் புறவய நிலைமைகளுக்கு இடையில் எந்த அளவுக்கு இசைவுப் பொருத்தம் இருக்க வேண்டும் என்பவற்றைப் பற்றியும் நாம் பின்னர் எழுதுவோம். இப்பொழுது சோஷலிஸ்ட் புரட்சியின் புறவய நிலைமைகளை எடுத்துக்கொண்டு அவற்றின் உள்ளடக்கத்தையும் கட்டமைப்பையும் ஆராய்வோம்.

இவற்றில் சோஷலிஸ்ட் புரட்சியின் பொருளாயத முன்நிபந்தனைகளுக்கு, அதாவது நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் குறிப்பிட்ட மட்டத்துக்கும் சமூகத்தின் உற்பத்தி சக்திகளின் முதிர்ச்சி மட்டத்துக்கும் முன்னுரிமை தரப்படுகிறது. அந்த மட்டத்தின் அளவு என்ன? இந்தப் பிரச்சினை கம்யூனிஸ்ட் இயக்கத்திற்குள்ளாகவும் அதற்கு வெளியேயும் கூர்மையாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு நாட்டில் பொருளாதார வளர்ச்சி மட்டம் உயர்ந்திருந்தால் அது சோஷலிஸ்ட் புரட்சியின் வெற்றிக்கு மிகவும் சாதகமான நிலைமைகளைப் படைக்கிறது என்பதை லெனின்

கொள்கையளவில் ஏற்றுக்கொண்டார். ஆனால் அந்த வளர்ச்சி மட்டத்துக்கும் சோஷலிஸ்ட் புரட்சி தொடங்குவதற்கும் வெற்றி பெறுவதற்கும் உள்ள வாய்ப்புகளுக்கும் இடையில் நேரடியான இணைப்பு இருப்பதாக லெனின் கருதவில்லை. ஏனென்றால் மொத்த உலக முதலாளித்துவ அமைப்பின் பொருளாதார வளர்ச்சியின் உயர்ந்த மட்டம் புரட்சிகர நிலைமை தோன்றுகின்ற நாட்டின் வளர்ச்சியின் குறைவான ஆரம்ப (அதாவது அந்த சமயத்தில் இருக்கின்ற) மட்டத்தை ஓரளவுக்கு ஈடு செய்கிறது. அதே சமயத்தில் ஒரு நாட்டில் சோஷலிஸ்ட் புரட்சி வெற்றி பெறுவதற்கு அங்கே குறிப்பிட்ட அளவுக்குப் பொருளாதார வளர்ச்சி முற்றிலும் அவசியமானது என்பதை லெனின் வலியுறுத்தினார். ''உலக முதலாளித்துவ அமைப்பின் வீழ்ச்சி ஆகப் பலவீனமான பொருளாதார அமைப்புகளிலிருந்து, ஆகக் குறைவான வளர்ச்சியடைந்த அரசு-முதலாளித்துவ அமைப்பிலிருந்து தொடங்கியது'' என்ற கூற்றுக்குப் பதிலளிக்கின்ற பொழுது லெனின் பின்வருமாறு எழுதினார்: ''சரியல்ல: 'நடுத்தர-பலவீனமானவற்றிலிருந்து'. முத[லாளி]த்துவம் குறிப்பிட்ட வளர்ச்சி மட்டத்தை எட்டியிராவிட்டால் நம்மால் ஒன்றுமே செய்திருக்க முடியாது.''*

இந்தக் குறிப்பிட்ட வளர்ச்சி மட்டத்தின் அளவை லெனின் நிர்ணயிக்கவில்லை. அதைத் துல்லியமாகக் கணக்கிடுவதும் முன்கூட்டியே

---

* *Lenin Miscellany XI*, p. 397.

நிர்ணயிப்பதும் இயலாது, அதைச் செய்ய முயற்சிப்பது புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் கைகளைக் கட்டிப் போட்டு விடும், எல்லாவற்றுக்கும் முக்கியமானது என்னவென்றால் இந்த மட்டம் நிலையானதல்ல, அது முதலாளித்துவத்தின் முதிர்ச்சியையும் உலக சோஷலிசத்தின் வளர்ச்சியையும் பொறுத்திருக்கிறது என்பனவற்றை அவர் உணர்ந்திருக்க வேண்டும்.

குறைவான வளர்ச்சி மட்டத்தைக் கொண்ட ஒரு நாட்டில், குறிப்பாக முதலாளித்துவ உலகத்துக்குள் ஒரு புதிய சமூக அமைப்பைப் படைக்கின்ற பாதையில் செல்கின்ற முதல் நாடாக அது இருக்கும் பொழுது அங்கே சோஷலிசத்தை நிர்மாணிக்க முடியும் என்று லெனின் முடிவு செய்யவில்லை. முடிவாகப் பார்க்கும் பொழுது அதிகமாக வளர்ச்சி அடைந்த உற்பத்தி சக்திகளின் அடிப்படையில் மட்டுமே புதிய ரகத்தைச் சேர்ந்த சமூக உறவுகளை நிறுவ முடியும். ஆனால் முதலில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி அதன் பிறகு சோஷலிஸ்ட் சமூகத்தை நிர்மாணிப்பதற்குத் தேவையான அளவுக்குப் பொருளாதாரத்தை வளர்ப்பது சாத்தியமாக இருந்தது. லெனின் எடுத்துக் காட்டியதைப் போல "...ஒட்டுமொத்தமாய் உலக வரலாற்றின் வளர்ச்சியானது பொது விதிகளுக்கு ஏற்பவே நடைபெறுகிறது என்றாலும், வளர்ச்சியின் குறிப்பிட்ட சில காலகட்டங்களில் இந்த வளர்ச்சி அதன் வடிவத்திலோ, வரிசைக் கிரமத்திலோ சில தனி இயல்புகளை வெளிப்படுத்துவது எவ்வகையிலும் தடுக்கப்பட்டு

விடவில்லை, மாறாக எதிர்பார்க்கக் கூடியதே...''

''சோஷலிசத்தைக் கட்டியமைத்திட குறிப்பிட்ட கலாசார நிலை தேவையெனில் (ஆனால் இந்தக் குறிப்பிட்ட 'கலாசார நிலை' என்னவென்பதை யாராலும் கூற முடியவில்லை, ஏனென்றால் மேற்கு ஐரோப்பிய நாடு ஒவ்வொன்றிலும் இது வெவ்வேறு விதமாய் இருக்கிறது), இந்தக் குறிப்பிட்ட 'கலாசார நிலைக்கு' அவசியமான முன்தேவைகளை ஏன் நாம் புரட்சிகர வழியில் முதற்கண் சாதித்துக் கொள்ள முற்பட்டு, பிற்பாடு தொழிலாளர்கள், விவசாயிகளது அரசாங்கத்தின் துணை கொண்டும் சோவியத் அமைப்பின் துணை கொண்டும் ஏனைய தேசங்களை எட்டிப்பிடிக்கத் தொடங்கக் கூடாது?''*

ஒரு நாட்டைப் பொறுத்தமட்டில் முன்னுரிமைப் பட்டியலில் இம்மாற்றத்தைச் செய்வது ''உலக வரலாற்று வளர்ச்சியின் பொதுவான நெறியை...'' அல்லது ''உலக வரலாற்றின் பொதுவான வளர்ச்சிப் போக்கினுள் ஈர்க்கப்படும், அல்லது ஏற்கெனவே ஈர்க்கப்பட்டுள்ள எல்லா நாடுகளின் அடிப்படை வர்க்கங்களுக்கு இடையிலான அடிப்படை உறவுகளை...''** மாற்றுவதாகாது, ஏனென்றால் உலக முதலாளித்துவ அமைப்பின் சுற்றுவட்டத்துக்குள் அவசிய

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, நான்காம் பாகம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1978, பக்கங்கள் 390, 392 – 393.

** அதே நூல், பக்கம் 392.

மான புறநிலை முன்நிபந்தனைகள் இருப்பது புரட்சியை நிறைவேற்றியிருக்கின்ற அக்குறிப்பிட்ட நாட்டில் அவை இல்லாமலிருப்பதைக் குறைந்த பட்சம் சிறிது காலத்துக்காவது ஈடு செய்து அதிகமாக வளர்ச்சியடைந்த நாடுகளின் அனுபவத்தை இரவலாகப் பெற்றாவது அவற்றை விரைந்து சென்று எட்டுவதை சாத்தியமாக்குகிறது என்று லெனின் எடுத்துக் காட்டுகிறார். ஒரு நாட்டில் சோஷலிஸ்ட் நிர்மாணக் கடமைகளைப் பின்வரும் நிபந்தனையின் பேரில் மட்டுமே தீர்க்க முடியும் என்று லெனின் எழுதினார்: ''இதற்கு (சோஷலிசத்துக்கு மாறுவதற்கு— மொ-ர்.) அவசியமான பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் முன்நிபந்தனைகளை முதலாளித்துவம் போதுமான அளவுக்குப் படைத்திருக்க வேண்டும். பெரிய அளவு இயந்திர உற்பத்தி இல்லாமல், ஓரளவுக்கு வளர்ச்சியடைந்த ரயில்வே, தபால் மற்றும் தந்தி அமைப்பு இல்லாமல், ஓரளவுக்கு வளர்ச்சியடைந்த பொதுக் கல்வி நிறுவன அமைப்பு இல்லாமல் இக்கடமைகளில் ஏதாவதொன்றைக்கூட தேசிய அளவில் முறைப்படியாக நிறைவேற்ற முடியாது. ருஷ்யாவில் இத்தகைய மாற்றத்தின் ஆரம்ப முன்நிபந்தனைகளில் பல உண்மையாகவே இருக்கின்றன. மறுபக்கத்தில், இம்முன்நிபந்தனைகளில் பல நம் நாட்டில் இல்லை, ஆனால் நமக்குப் பக்கத்திலுள்ள, அதிகமான வளர்ச்சியடைந்த நாடுகளின் அனுபவத்திலிருந்து இவற்றை எளிதாக இரவல் பெற்றுக் கொள்ள முடியும். இந்த

நாடுகளை வரலாறும் சர்வதேசத் தொடர்பும் நெடுங் காலத்திலிருந்தே ருஷ்யாவுடன் நெருக்க மான தொடர்பில் வைத்திருக்கின்றன.''*

பொருளாதார வளர்ச்சியின் குறிப்பிட்ட மட்டம் சோஷலிஸ்ட் புரட்சியின் வெற்றிக்கு அவசியமான புறவய நிபந்தனைகளில் ஒன்று தான். லெனின் **நமது புரட்சி** என்ற கட்டுரையில் முதலில் பொருளாதார விஷயங்களைப் பற்றி எழுதிய பிறகு உடனே **கலாசாரப்** பிரச்சினைகளை எடுத்துக்கொள்கிறார் என்பது தற்செயலான தல்ல. ஏனென்றால் சோஷலிஸ்ட் புரட்சியின் வெற்றிக்கு கலாசாரமும் அவசியமான புறவய நிபந்தனையாகும். கலாசாரம் என்று கூறும் பொழுது மக்கள் எழுத, படிக்கத் தெரிந்திருப் பதை—அது சோஷலிசத்தின் வெற்றிக்கு அதி கமான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தா லும்—நாம் குறிப்பிடவில்லை. கலாசாரம் என் பது உற்பத்தி, நிர்வாகம், நுகர்வு இதரவற்றைப் போன்ற சமூக வாழ்க்கையின் பல்வேறு துறை களில் அறிவு மற்றும் செய்திறமையின் கூட்டுத் தொகையாகும். இவற்றில் முந்திய தலைமுறை யினரின் வரலாற்று அனுபவம் திரட்டப்பட் டிருக்கிறது. இவ்விதமான திறமை மற்றும் அறிவைப் பெறுதல் காலத்தை மிச்சப்படுத்தி கலாசாரத் தேர்ச்சி பெற்ற ஒவ்வொரு தலை முறையும் சமூகத்தின் வரலாற்று வளர்ச்சியில்

---

* V. I. Lenin, "Original Version of the Article 'The Immediate Tasks of the Soviet Government'", *Collected Works*, Vol. 42, p. 71.

அடுத்த படியில் ஏறுவதற்கு உதவுகிறது. பொருளாதார முன்நிபந்தனைகளைப் போலவே இங்கும் ஒரு விதத்தில் ஈடு செய்யப்படலாம். மொத்த அமைப்பு சோஷலிஸ்ட் மாற்றங்களை அமுலாக்குவதற்கு அவசியமான கலாசார மட்டத்தை அடைந்திருக்குமானால் சோஷலிஸ்ட் புரட்சியை நிறைவேற்றி ஆனால் கலாசார வளர்ச்சியில் மற்ற நாடுகளுக்குப் பின்னாலிருக்கின்ற ஒரு நாடு அனுபவத்தையும் அறிவையும் வளர்ச்சியடைந்த தொழில்நுட்பவியலைய்யும் மற்ற நாடுகளிலிருந்து (சுதேசி நிபுணர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சியளிப்பது மற்றும் பொருளாதாரத்தில் வெளிநாட்டு நிபுணர்களை வேலைக்கமர்த்துவது உள்பட) இரவல் பெறுவதன் மூலம் ஒப்பீட்டளவில் குறைந்த காலத்தில் இக்குறையை நிறைவு செய்ய முடியும். இப்பொழுது விஞ்ஞான-தொழில்நுட்பவியல் புரட்சி நடைபெற்றுக் கொண்டிருப்பதால் சோஷலிஸ்ட் நிர்மாணத்தில் கலாசாரம் மற்றும் விஞ்ஞானத்தின் பாத்திரம் அதிகரிக்கிறது. விஞ்ஞானம் உடனடியான உற்பத்தி சக்தியாக மாறுகிறது, கலாசாரம் விஞ்ஞான வளர்ச்சியின் முன்நிபந்தனையாகவும் அதன் உட்பகுதியாகவும் ஆகிறது.

சோஷலிஸ்ட் புரட்சியின் மூன்றாவது புறவய் நிபந்தனை சமூகத்தின் திட்டவட்டமான சமூக மற்றும் வர்க்கக் கட்டமைப்பாகும்; இதில் தொழிலாளி வர்க்கம், நகர மற்றும் நாட்டுப்புறக் குட்டி முதலாளி வர்க்கம், அலுவலகப் பணியாளர்கள், அறிவுஜீவிகளைச் சேர்த்துக்

கொள்ள வேண்டும். இவர்களுடன் தொழிலாளி வர்க்கம் அரசியல் கூட்டணிகளை அமைக்க முடியும். சுருக்கமாகச் சொல்வதென்றால், **சோஷலிஸ்ட் புரட்சியின் இயக்கு சக்திகளாக அல்லது அகப்பொருளாக மாறக் கூடிய தகுதியைக் கொண்ட சமூக சக்திகள் இருக்க வேண்டும்.** நாட்டின் மக்கள் தொகையில் தொழிலாளி வர்க்கம் அவசியமாகப் பெரும்பான்மையைக் கொண்டிருக்க வேண்டும் என்று சந்தர்ப்பவாதிகள் கூறுவதுண்டு. ஆனால் இது அவசியமல்ல. ''எந்த முதலாளித்துவ நாட்டிலும் பாட்டாளி வர்க்கத்தின் பலம் மொத்த மக்கள் தொகையில் அதன் அளவு விகிதத்தைக் காட்டிலும் மிகவும் அதிகமாக இருக்கிறது''* என்று லெனின் கூறினார். தொழிலாளி வர்க்கமும் அதனுடன் கூட்டுச் சேரக்கூடிய மற்ற சமூக வர்க்கங்களும் கோஷ்டிகளும் இருப்பது திட்டவட்டமான **உணர்வு நிலையையும் குறிப்பிட்ட அளவுக்கு ஸ்தாபன அமைப்பையும்** முன்னனுமானிக்கிறது என்பதைச் சொல்லத் தேவையில்லை. அவை ஓரளவுக்கு பாட்டாளி வர்க்கக் கட்சி மற்றும் புரட்சிகரத் தத்துவாசிரியர்களின் கருத்துத் திட்டமுடைய நடவடிக்கையின் விளைவு என்ற போதிலும் சோஷலிஸ்ட் புரட்சியின் புறவய நிபந்தனைகள்.

கடைசியாக (ஆனால் சில சமயங்களில் மிக முக்கியமானதாக) புரட்சியின் புறவய நிபந்

---

* V. I. Lenin, "The Constituent Assembly Elections and the Dictatorship of the Proletariat", *Collected Works,* Vol. 30, p. 274.

தனையைக் குறிப்பிடுவோம். இது முதலாளி வர்க்க சமூகத்தின் வர்க்க முரண்பாடுகளின் குறிப்பிட்ட முதிர்ச்சி மட்டத்தையும் வர்க்க சக்திகளின் குறிப் பிட்ட எதிர்நிலையையும் ஏற்படுத்துவதே. இது புரட்சிகர நிலைமையில் நேரடியாக வெளிப்படு கிறது.

முன்னுரிமை முறையை மாற்றுவது ஒரு நாட் டில் சோஷலிசத்தின் பொருளாயத முன்நிபந் தனைகளின் தோற்றத்தைத் துரிதப்படுத்து கிறது; முதலாளித்துவத்திலிருந்து (அல்லது முத லாளித்துவத்துக்கு முந்திய அமைப்பிலிருந்து) சோஷலிசத்துக்கு மாறுகின்ற வேகம், முறைகள் மற்றும் வடிவங்கள் மீது தாக்கம் செலுத்து கிறது என்பதை வரலாறு எடுத்துக்காட்டுகிறது. இருக்கின்ற சாதனங்களையும் செல்வ வளங் களையும் அதிகமாகத் திரட்ட வேண்டும், வெற்றி பெற்ற மக்கள் அதிகமான தியாகங்களையும் முயற்சிகளையும் செய்ய வேண்டும் என்று அது குறிப்பாகக் கோருகிறது. இது கட்டாயமான அவசியம்; முதலாளித்துவ வளர்ச்சியின் சமமற்ற தன்மையினால் இது ஏற்படுகிறது.

இச்சமமற்ற தன்மையினால் சோஷலிஸ்ட் புரட்சியின் புறவய நிலைமைகள் நாட்டுக்கு நாடு ஒரே சீராக இல்லாமல் முதிர்ச்சி அடைகின் றன. இன்று சோஷலிஸ்ட் அல்லாத நாடுகள் புறவயப் பொருளாயத நிலைமைகளின் முதிர்ச் சிக்கு ஏற்றபடி மூன்று முக்கியமான பிரிவுகளில் அடங்கும். முதல் பிரிவில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் இருக்கின்றன (அமெ ரிக்கா, பெரும்பான்மையான மேற்கு ஐரோப்

பிய நாடுகள், ஜப்பான்). இரண்டாவது பிரிவில் நடுத்தர முதலாளித்துவ வளர்ச்சியைக்* கொண்ட நாடுகள் இருக்கின்றன (போர்த்துகல், கிரீஸ் போன்று சில ஐரோப்பிய நாடுகள் மற்றும் பல லத்தீன் அமெரிக்க நாடுகள்). மூன்றாவது பிரிவில் முதலாளித்துவ வளர்ச்சியின் கீழ்நிலையி லுள்ள நாடுகள் — பெரும்பான்மையான ஆசிய-ஆப்பிரிக்க நாடுகள் — இருக்கின்றன. அவற்றில் பல சமீபத்தில் காலனியாதிக்கத்திலிருந்து விடு தலையடைந்தன.

சோஷலிஸ்ட் புரட்சி முதலில் முதல் பிரி விலும், பிறகு இரண்டாவது பிரிவிலும் அதற்கு இன்னும் பிறகு மூன்றாவது பிரிவிலும் ஏற் படும் என்று ஒருவர் கூற முடியுமா? வரலாற்று அனுபவம் ''இல்லை'' என்று பதிலளிக்கிறது. வெவ்வேறு நாடுகள் சோஷலிஸ்ட் பாதையைப் பின்பற்றுகின்ற வரிசைமுறையை (புரட்சியின் ''கால அட்டவணையை'') முற்கூட்டியே அறி

---

* முதலாளித்துவ அமைப்பை — அதன் உள்முரண்பாடுகள் அனைத்துடனும் — நிறுவுவதற்கு முற்றிலும் அவசியமான உற்பத்தி சக்திகளின் குறைந்த பட்ச வளர்ச்சியைக் கொண் டிருக்கும் நாடுகளை லெனின் இப்பிரிவில் வைத்தார். இந்த நாடுகளில் பெரிய மூலதனமும் வர்க்க ஸ்தாபனங்களைக் கொண்ட தொழிலாளி வர்க்கமும் இருக்கின்றன; கிராமாந் திரப் பகுதிகளில் முதலாளித்துவ உறவுகள் சுறுசுறுப்பாக வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றன. இந்த நாடுகளில் பெரும்பான்மையானவற்றில் வர்க்க முதலாளித்துவ ஒடுக்கு முறை முதலாளித்துவத்துக்கு முந்திய எச்சங்களாலும் அந்நிய மூலதன நிர்ப்பந்தத்தின் பல்வேறு வடிவங்களாலும் தீவிரப் படுத்தப்படுகிறது.

விக்க முடியாது. கடந்த காலத்தில் இது எப்படி உண்மையாக இருந்ததோ அதைப் போலவே இன்றும் உண்மையாக இருக்கிறது.

ஆனால் ஒரு நாட்டில் அகவய நிலைமைகள் இருக்குமானால் பொது தேசிய நெருக்கடி தோன்றுவதற்கும் அதில் சோஷலிஸ்ட் புரட்சி வெற்றியடைவதற்கும் அவசியமான புறவய நிலைமைகளின் தொடக்க முதிர்ச்சி மட்டத்தைக் கீழே கொண்டுவருகின்ற போக்கு பொதுவாக இருக்கிறது என்று உறுதியாகச் சொல்ல முடியும். ஒரு நாட்டில் சோஷலிசத்தின் பொருளாயத முன்நிபந்தனைகள் குறைவாக இருந்தால் அவை சீக்கிரமாக, அதிக வன்மையோடு ஈடு செய்யப் படுகின்ற வாய்ப்பு வளர்ச்சியடைந்திருப்பது இதற்கு முக்கியமான காரணம். இந்த வாய்ப்பு சோவியத் யூனியன் தலைமை தாங்குகின்ற உலக சோஷலிச அமைப்பின் உயர்நிலையான முதிர்ச்சி மட்டத்துடன், அதாவது அதன் அரசியல் நிலைகள் மற்றும் பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுட்பவியல் சக்தி பலமடைவதுடன் இணைந்திருக்கிறது. மற்ற நாடுகள் தம்முடைய புரட்சியின் சாதனைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கும் மிகச் சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்ட தொழில்நுட்பவியலை உபயோகிப்பதற்கும் நிபுணர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும் சோஷலிஸ்ட் குடும்பத்தைச் சேர்ந்த நாடுகள் அதிகமான உதவியளிக்கின்ற நிலையில் இப்பொழுது இருக்கின்றன.

## 6. புரட்சிகர நிலைமையைப் பற்றி லெனினுடைய போதனை

லெனின் தன்னுடைய புரட்சிகர-தத்துவ நடவடிக்கைக் காலம் முழுவதிலும் ருஷ்யாவிலும் பிற நாடுகளிலும் புரட்சிகள் நடைபெற்ற வரலாற்று நிலைமைகளை ஆராய்ந்து ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார், புரட்சிகர நிகழ்வுப் போக்கின் பொது விதிகளைத் தேடிக்கொண்டிருந்தார். அதன் விளைவே புரட்சிகர நிலைமையைப் பற்றி அவருடைய போதனை. **இரண்டாவது அகிலத்தின் தகர்வு** என்ற நூலில் இது தொகுத்துரைக்கப்பட்டிருக்கிறது: ''புரட்சிகரச் சூழ்நிலை இல்லையேல் புரட்சி சாத்தியமன்று, அதேபோது புரட்சிகரச் சூழ்நிலை ஒவ்வொன்றும் புரட்சியை எழச் செய்ய வேண்டுமென்பதும் இல்லை—மார்க்சியவாதிக்கு இது மறுக்க முடியாத ஒன்று. பொதுவாகப் பேசுமிடத்து, புரட்சிகரச் சூழ்நிலை என்பதற்கான அறிகுறிகள் யாவை? எந்தத் தவறும் இழைக்கவில்லை என்கிற நிச்சயத்துடன் நாம் பின்வரும் மூன்று பிரதான அறிகுறிகளைக் குறிப்பிடலாம்: (1) ஆளும் வர்க்கங்கள் தமது ஆட்சியை எந்த மாற்றமுமின்றி தொடர்ந்து நடத்திச் செல்வது சாத்தியமற்றதாகுதல்; 'மேல் வர்க்கங்களிடையே' ஏதேனும் ஒரு வடிவத்தில் நெருக்கடி ஏற்பட்டு, ஆளும் வர்க்கத்தினுடைய கொள்கை நெருக்கடிக்கு உள்ளாகி, இதன் விளைவாய் வெடிப்பு உண்டாகி ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடைய அதிருப்தியும் ஆத்திரமும்

இவ்வெடிப்பின் வழியே பீறிட்டெழுதல். புரட்சி நடைபெறுவதற்கு, பழைய வழியில் வாழ 'அடி மட்டத்து வர்க்கங்கள் விரும்பாதது' மட்டும் சாதாரணமாகப் போதாது; பழைய வழியில் வாழ 'மேல் வர்க்கங்களுக்கு முடியாமற் போவதும்' அவசியமாகும். (2) ஒடுக்கப்படும் வர்க்கங்களுடைய துன்பதுயரமும் தேவையும் வழக்கமாக இருப்பதைக் காட்டிலும் அதிகக் கடுமையாகிவிடுதல். (3) மேற்கண்ட காரணங்களின் விளைவாய் மக்கட் பெருந்திரளினரது செயற்பாடு கணிசமாய் அதிகரித்துவிடுதல்; மக்கட் பெருந்திரளினர் 'சமாதான காலத்தில்' தாம் சூறையாடப்படுவதற்கு முறையிடாமலே இடமளிப்பவர்களாயினும், கொந்தளிப்பான காலங்களில், வரலாறு படைக்க வல்ல சுயேச்சைச் செயலில் இறங்கும்படி நெருக்கடி நிலைமைகள் யாவற்றாலும் மற்றும் 'மேல் வர்க்கங்களாலுங்கூட' இழுத்துவிடப்படுகிறார்கள்.''*

இவ்வகுத்துரைத்தல் எழுதப்பட்டு அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலம் முடிந்துவிட்டது; ஆனால் இது இன்னும் அதிகமான அளவுக்குச் செல்தகைமையைக் கொண்டிருக்கிறது. வேறுவார்த்தைகளில் சொல்வதென்றால் நம் காலத்தில் கூட புரட்சிகர நிலைமைக்கு லெனின் குறிப்பிட்ட நிபந்தனைகள் மூன்றுமே அவசியமாக இருக்கின்றன. அவை ஸ்தூலமாக வெளிப்படு

---

* வி. இ. லெனின், இரண்டாவது அகிலத்தின் தகர்வு, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1976, பக்கங்கள் 14 – 15.

கின்ற வடிவங்கள் வேண்டுமென்றால் தற் பொழுது வேறுபடலாம்.

'''மேல் வர்க்கங்களிடையே'... நெருக்கடி'' மற்றும் ''ஆளும் வர்க்கத்தினுடைய கொள்கை யில் நெருக்கடி'' இல்லாமல் இன்று புரட்சிகர நிலைமை தோன்ற முடியுமா? நிச்சயமாக முடி யாது. இத்தகைய நெருக்கடி இல்லாத பொழுது புரட்சியைத் தொடங்கி வெற்றியடைய முயற் சிப்பது வெறும் வீரசாகசமே. கடந்த சில பத் தாண்டுகளில் இது அடிக்கடி நிரூபிக்கப்பட்டிருக் கிறது. '''மேல் வர்க்கங்களின்' நெருக்கடி'', அதாவது நிலைமையைக் கட்டுப்பாட்டில் வைத் திருப்பதற்கும் தமது தலைமையை நீடிப்பதற் கும் முக்கியமாக இந்த நோக்கத்துக்கு அரசின் ஒடுக்குமுறை இயந்திரத்தை உபயோகிப்பதற்கும் அவற்றின் இயலாமை பல்வேறு வடிவங்களை அடையலாம். இவற்றை எப்பொழுதும் முன் னறிய முடியாது. நெருக்கடி வெளிப்படையாக, தெளிவாகப் புலப்படக் கூடியதாக, உணரத் தக்கதாக இருக்கலாம். யுத்தம் நடைபெறுகின்ற நிலைமைகளில் அல்லது இராணுவ சர்வாதி காரத்தின் கீழிருக்கின்ற நிலைமைகளில் இப்படி யிருப்பது வழக்கம். அந்த சர்வாதிகாரத்தின் மரண ஓலம் வெளிப்படையான, ''பகிரங்க மான'' வடிவங்களை அடிக்கடி மேற்கொள் வதுண்டு. மரபுவழிப்பட்ட முதலாளி வர்க்க- ஜனநாயக இயந்திரத்தை அல்லது வெளியே தெரியாமல் மறைக்கப்பட்ட சர்வாதிகாரத் தைப் பயன்படுத்தித் தமது கொள்கையை அமுலாக்குகின்ற '''மேல் வர்க்கங்களின்' நெருக்

கடி'' சில சமயங்களில் தெளிவாகப் புலப்படு வதில்லை, அது ரகசியமான வடிவத்தை மேற் கொள்கிறது. ஆகவே மிருக பலம், பகிரங்க ஒடுக்குமுறைக் கொள்கையின் நெருக்கடியைக் காட்டிலும் இதை இனங்காண்பது மிகக் கடின மானது. ''மேல் வர்க்கங்கள்'' ''பழைய வழி யில் வாழ'' முடியாதிருப்பதை அறிவதற்கு புரட்சிகரமான நுண்ணறிவும் முழுச் செறிவான விஞ்ஞான ஆராய்ச்சியும் அவசியமாக இருக் கின்றன.

முதலாளித்துவம் மாறுகின்ற வரலாற்று நிலை மைக்குத் தன்னைத் தகவமைத்துக் கொள் வதற்கு, ஸ்தூலமான நிலைமைகள் மாறுகின்ற பொழுது ஆதிக்கத்தின் வெவ்வேறு வடிவங் களை — கடுமையான வடிவங்களை (பாசிச சர்வாதிகாரம்) அல்லது ''நயமான'' வடிவங்களை (முதலாளி வர்க்கக் குடியரசு) — பின்பற்றி நெருக் கடி நிலைமைகளைத் தள்ளிப் போடுவதற்கு அல்லது முற்றிலும் தவிர்ப்பதற்கு முயற்சி செய் கிறது. இத்தகைய நெகிழ்ச்சி முதலாளி வர்க்கம் நாளைக் கடத்த உதவலாம், ஆனால் அதன் ஆட்சியை நிரந்தரப்படுத்த உதவாது. ''மேல் வர்க்கங்களின்'' ஆதிக்கத்தின் புதிய வடிவங் களுக்கு **''மாறுகின்ற''** மற்றும் இந்த ஆதிக்கத் தின் புதிய பொறியமைவுகளில் தேர்ச்சி பெறு கின்ற தருணங்கள் சில சமயங்களில் மிகவும் நிலையற்றவையாக, தீவிரமான மாற்றங்களை ஏற்படுத்துபவையாக இருக்கும். இவை நாட்டில் ''வெடிப்பை'' ஏற்படுத்தக் கூடும். லெனின் எழுதியதைப் போல ''ஒடுக்கப்பட்ட வர்க்கங்

களுடைய அதிருப்தியும் ஆத்திரமும்'''* அதன் மூலமாக வெளிவரக் கூடும். இந்த ''வெடிப் புடன்'' சேர்ந்து புரட்சிகர நிலைமையின் மற்ற கூறுகளும் ஏற்படுகின்றனவா, புரட்சிகரமான பெருந்திரளினர் '''மேல் வர்க்கங்களின்' நெருக் கடியைப்'' பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்பது இடத்தையும் காலத்தையும் பற்றிய நிபந்தனைகளைப் பொறுத்திருக்கிறது. எனினும் முதலாளித்துவ சமூகத்தின் இயக்கமும் பரிணா மமும் முன் போலவே இன்றும் ஆளும் வர்க்கத் துக்கு நெருக்கடியான நிலைமைகளை அவசிய மாக ஏற்படுத்துகின்றன.

புரட்சிகர நிலைமையைப் பற்றி லெனின் சுட்டிக்காட்டிய இரண்டாவது அறிகுறி, ''ஒடுக் கப்படும் வர்க்கங்களுடைய துன்பதுயரமும் தேவையும் வழக்கமாக இருப்பதைக் காட்டிலும் அதிகக் கடுமையாகிவிடுதல்''—இதுவும் இன்று வெளிப்பட்டிருக்கிறது. கடந்த சில வருடங் களில் முதலாளி வர்க்க மற்றும் வலது சந்தர்ப்ப வாத சித்தாந்திகளும் தொழில் வளர்ச்சி யடைந்த முதலாளித்துவ நாடுகளில் ''ஒடுக்கப் பட்ட வர்க்கங்களுடைய துன்பதுயரமும் தேவை யும்'' ''மறைந்து விட்டதென்றும்'' குறைந்த பட்சம் உலக முதலாளித்துவ அமைப்பின் குறிப் பிட்ட பிரதேசத்தின் சுற்றுவட்டத்திற்குள் புரட்சி கர நிலைமை தோன்றுவது சாத்தியமல்ல என்றும் அடிக்கடி பேசி வந்திருக்கிறார்கள். வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் சில

* அதே நூல், பக்கம் 14.

வற்றில் மிதவாத முதலாளி வர்க்கம் மக்கள்-நல அரசு என்று சொல்லப்படுவதை (சோஷலிச சக்திகள் வளர்ச்சி அடைந்து கொண்டிருந்த பொழுது முதலாளி வர்க்கத்தின் ஆதிக்கத்தைத் தக்க வைப்பதற்கு இது நல்ல வடிவம் என்பதைத் தவிர வேறொன்றுமல்ல) நிறுவுவதற்காகச் சில சீர்திருத்தங்களைச் செய்ய முயற்சிக்கிறது. அவர்கள் அதை அடிப்படையாகக் கொண்டு இந்த முடிவுகளைச் செய்திருக்கிறார்கள். எனினும் அவர்களுடைய கருத்துக்களை முற்றிலும் மறுக்கின்ற, குறைந்த பட்சம் இரண்டு முக்கியமான சந்தர்ப்பங்களைப் புறக்கணிக்கிறார்கள். முதலாவதாக, லெனின் புரட்சிகர நிலைமைக்கு அறிகுறியாக ''துன்பதுயரம் மற்றும் தேவையின்'' ஏதோ சூக்குமமான, தனிமுதலான மட்டத்தைப் பற்றிப் பேசவில்லை, பெருந்திரளான மக்களுடைய ஸ்தூலமான வாழ்க்கைத் தரத்துடன் ஒப்பிடுகின்ற பொழுது அவை அதிகரிப்பதை, அதாவது தீவிரமடைவதைப் பற்றியே பேசுகிறார். மற்ற நாடுகளுடன், குறிப்பாக வளர்முக நாடுகளுடன் ஒப்பிடுகின்ற பொழுது இந்த மட்டம் உயர்ந்ததாக இருக்கலாம், ஆனால் ஸ்தூலமான வரலாற்று நிலைமைகளின் கீழ் உருவாகிய மக்களின் நடைமுறைத் தேவைகளைப் பொறுத்தமட்டில் குறைந்திருக்கலாம். இந்த நிலைமை தீவிரமடைவது, அதாவது உழைக்கும் மக்களின் உண்மையான தேவைகளுக்கும் அவற்றைத் தீர்க்கின்ற சாத்தியத்துக்கும் இடையிலுள்ள இடைவெளி, ஒரு பக்கத்தில் உழைக்கும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி

செய்கின்ற அளவுக்கும் மறு பக்கத்தில் ஆளும் வர்க்கத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அளவுக்கும் இடையிலுள்ள இடைவெளி (முத லாளித்துவத்தினால் இதை அகற்றவோ அல்லது தடுக்கவோ முடியாது) அதிகரிப்பது புரட்சியை ஏற்படுத்துகின்ற சக்திமிக்க காரணியாக, ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த பெரும்பான்மையான நாடுகளின் அடை யாளமான பெருந்திரளான மக்களின் வாழ்க் கைத் தரத்தின் நிலையான கீழ் மட்டத்தைக் காட்டிலும் அதிகமாகக் கூட இருக்க முடியும்.

இரண்டாவதாக, லெனின் ''துன்பதுயரத் தையும் தேவையையும்'' பற்றிப் பேசினாரே தவிர ''வறுமையைப்'' பற்றிப் பேசவில்லை. வறுமை, அதாவது பொருளாதாரக் கஷ்டங்கள் மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டன என்பது உண்மையே. ஆனால் லெனின் பொருளாதாரக் கஷ்டங்களை வறுமையாக அல்லது புரட்சிகர நிலைமையின் அறிகுறியாக இருக்கின்ற துன்பங் களின் தொகுதியைப் பொருளாதார நிகழ்வாக ஒருபோதும் வகைப்படுத்தவில்லை. ''...செல் வத்தின் வளர்ச்சி எவ்வளவுக்கெவ்வளவு விரை வாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு உழைப் பினுடைய உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியும் அதன் சமுதாயமயமாதலும் முழுமையாயிருக் கும், அவ்வளவுக்கவ்வளவு தொழிலாளியின் வாழ் நிலையும் மேலாக இருக்கும் அல்லது இன்றைய சமுதாயப் பொருளாதார அமைப்பு முறையின் கீழ் அது எவ்வளவு மேலாக இருக்க முடியுமோ

அந்த அளவுக்காயினும் இருக்கும்...''* என்று மார்க்சின் தத்துவம் அங்கீகரிக்கிறது; லெனினும் இதை வலியுறுத்தினார். எனினும் முதலாளித் துவ சமூகத்தில் உடைமை இல்லாத, சுரண் டப்படுகின்ற வர்க்கம், அதுவே ''முதலாளி வர்க்கத்துக்குச் சவக்குழி தோண்டுகின்ற வர்க் கம்'' என்னும் பாட்டாளி வர்க்கத்தின் நிலையை இது தீவிரமாக மாற்றவில்லை. அதன் வாழ்க் கைத் தரத்தில் சிறிதளவு முன்னேற்றம் ஏற் படும் பொழுது உபரி மதிப்பைப் படைப்போன் என்ற முறையில் பாட்டாளி வர்க்கத்தின் வாழ்க்கை மற்றும் செயல்முறையின் புறவய நிலைமைகளில் மாற்றங்களின் விளைவாக ஏற் படுகின்ற புதிய, ஜீவாதாரமான தேவைகளால் அது ''மட்டுப்படுத்தப்படுகிறது''. இத்தேவை கள் பாட்டாளி வர்க்கம் ''முதலாளி வர்க்கத் தன்மையை'' அடைவதை நிரூபிக்கவில்லை. புதிய உழைப்பு நிலைமைகளில் அது வாடிக் கையாக இயங்குகின்ற இயற்கையான, அவசிய மான நிபந்தனையே. வேறு வார்த்தை களில் சொல்வதென்றால், தொழிலாளிக்குப் புதிதாகக் ''கிடைத்திருப்பவை,'' அதாவது வர்க்கப் போராட்டத்தில் முதலாளி வர்க்கத் திடமிருந்து அவன் பறித்திருக்கும் புதிய பொரு ளாதார வசதிகள் பெரும்பாலும் தனிமுதலான அதிகரிப்பு அல்ல, உழைப்பைத் தீவிரப்படுத்து

---

* வி. இ. லெனின், பொருளாதாரத் தன்னுணர்ச்சிவாதம் பற்றிய ஒரு பண்புரை, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1975, பக்கம் 30.

தல், உளவியல் சுமை அதிகரிப்பு, இதரவற்றின் காரணமாக அவனுக்கு நிச்சயமாக ஏற்படுகின்ற இழப்புக்களுக்கு ஒரு வகையான ''நட்ட ஈடே''. உதாரணமாக 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அமெரிக்கத் தொழிலாளிக்குக் கார்வண்டி முக்கியமான நுகர்வுப் பொருளாக இருக்கவில்லை. அவன் பெரும்பாலும் தொழிற் சாலைக்கு அருகிலேயே வசித்தான். ஆனால் இன்று கார்வண்டி அவனுக்கு அவசியமான சாதனமாகி விட்டது. தொழிலாளிகளின் வீடுகள் நகரத்துக்கு வெளியே கட்டப்படுதல், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் புரட்சியினால் தூண்டப்படுகின்ற நகர வளர்ச்சி மற்றும் இதர நிகழ்வுப் போக்குகளின் காரணமாக தொழிலாளி தன்னுடைய வேலையிடத்துக்குப் போய்ச் சேருவதற்குக் கார்வண்டி முதல் தேவையாக இருக்கிறது. சில பத்தாண்டுகளுக்கு முன்பு கார்வண்டி பிரதானமாக முதலாளி வர்க்கத்தின் நுகர்வுப் பொருளாக இருந்தது. ஆனால் இன்று கார்வண்டி வைத்திருப்பதன் மூலம் தொழிலாளி ''முதலாளி வர்க்கத் தன்மையை'' அடையவில்லை. இது இதர சில தேவைகளுக்கும் உண்மையாக இருக்கிறது. இவை ஒரு காலத்தில் ஆளும் வர்க்கத்தின் தனி உரிமையாக இருந்தன. ஆனால் சமூக உற்பத்தி வளர்ச்சியடைந்து தொழிலாளர்களின் தேவைகள் ''உயர்ந்து விட்ட பொழுது'' இவை தம்முடைய முந்திய தன்மையை இழந்து விட்டன, உழைக்கும் மக்களில் சில பகுதியினருடைய தேவைகளில் இவை முக்கியமான பகுதியாகிவிட்டன. இத்தகைய

தேவைகள் தோன்றியிருப்பதும் அவை அநேக மாக முழு அளவில் பூர்த்தி செய்யப்படுவதும் முதலாளித்துவ சமூகத்தில் தொழிலாளி வர்க்கத் தின் உண்மை நிலையை மாற்றவில்லை. ஏனென் றால் அவை முதலாளி வர்க்கத்தின் தேவை களுக்கும் (அவையும் மாறிக் கொண்டிருக்கின் றன, தொழிலாளி வர்க்கத்தின் தேவைகளைக் காட்டிலும் அதிகமான வேகத்தில் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றன) பாட்டாளி வர்க்கத்தின் தேவைகளுக்கும் இடையில் உள்ள இடைவெளியை அகற்றவில்லை. மேலும் இந்த இடைவெளி விரிவடைந்து கொண்டிருக்கிறது. ஆனால் முக்கியமானது என்னவென்றால் பாட் டாளி வர்க்கத்தின் பொருளாதாரத் தேவைகள் பகுதியளவுக்குப் பூர்த்தியடைவது, அந்த வர்க்கம் பொருளாதாரப் போராட்டத்தை நடத்திக் கொண்டே குறிப்பாக, அரசியல் மற்றும் கலா சாரத் துறைகளில் தன் புதிய, ''உயர்வடைந்த'' தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பாடுபடும் படி நிர்ப்பந்திக்கிறது. இத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பாட்டாளி வர்க்கம் நடத்து கின்ற போராட்டம் முதலாளி வர்க்கத்தின் அரசியல் மற்றும் கலாசார ஆதிக்கத்தை அரித் தழிக்கிறது; முன்காலத்தில் அன்றாட உணவுக் காக நடைபெற்ற போராட்டத்தைப் போல இப்போராட்டம் புதிய நிலைமைகளில் வளர்ச்சி யடைந்த முதலாளித்துவ நாடுகளில் மாபெரும் புரட்சிகரமான பாத்திரத்தை வகிக்க முடியும். பொருளாதார உரிமைகளுக்கு—அடிப்படையான பொருளாதாரத் தேவைகளையும் கூட பூர்த்தி

செய்வதற்கு—நடைபெறுகின்ற போராட்டம் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு மட்டுமின்றி வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் உள்ள உழைக்கும் மக்களைச் சேர்ந்த பல பிரிவினருக்கும் கூட ஜீவாதாரமாக இருக்கிறது. பொருளாதாரத் துறையில் முதலாளித்துவத்தை எதிர்நோக்கியிருக்கின்ற பிரச்சினைகளின் விளைவாக, குறைந்த பட்சம் சில நாடுகளில், பூர்த்தி செய்யப்படாத தேவைகள் முதலாளி வர்க்கத்துக்கு எதிராக உழைக்கும் மக்களின் போராட்டத்தைத் தீவிரப்படுத்தி புரட்சிகர நிலைமையை ஊக்குவிப்பது சாத்தியமே.

ஒவ்வொரு புரட்சிக்கு முன்னரும் புரட்சிகர நிலைமை ஏற்படுகிறது. ஒவ்வொரு புரட்சியும் தனித்தன்மையான கூறுகளைக் கொண்டிருந்ததைப் போல ஒவ்வொரு புரட்சிகர நிலைமையும் அதன் தனிப்பண்புகளைக் கொண்டிருக்கிறது. அது உள்நாடு மற்றும் வெளிநாட்டுச் சம்பவங்களின் வெளிப்படையான மற்றும் மறைமுகமான, நேரடியான தாக்கத்தினால் தோன்றுகிறது. எல்லா நாடுகளும் சோஷலிசத்தை நோக்கி முன்னேறும், ஆனால் ஒவ்வொரு நாடும் தன்னுடைய சொந்த வழியில் முன்னேறும் என்று லெனின் கூறிய பொழுது அவர் குறிப்பாக, புரட்சிகர நிலைமைகள் தோன்றுகின்ற முறையைக் குறித்தார். ஒவ்வொரு புரட்சிகர நிலைமையும் முடிவாகப் பார்க்கும் பொழுது ஒரு குறிப்பிட்ட நாட்டின் முரண்பாடுகளின் வளர்ச்சி மற்றும் தீவிரமடைதலின்

விளைவு, அவை அந்த நாட்டுக்கு உரித் தானவை, அந்த சமூகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆழமான மாற்றங்களைப் பிரதிபலிப்பவை. இதுதான் புரட்சிகர நிலை மையின் **அடிப்படையான காரணம்**. ஓரளவுக்கு இதை முன்னரே வெளிப்படுத்த முடியும், பகுத் தாராய முடியும். அதன் **உடனடிக் காரணத்தை** முன்னறிந்து கூற முடியாது அல்லது ஆரூடம் சொல்ல முடியாது. 1920இல் லெனின் பிரிட் டனைப் பற்றிப் பின்வருமாறு எழுதினார்: ''அங்கு மெய்யான பாட்டாளி வர்க்கப் புரட்சி எவ்வளவு சீக்கிரத்தில் மூண்டெழுமென்றும், இன்னமும் உறக்க நிலையிலிருக்கும் மிக விரி வான வெகுஜனங்களைத் தட்டியெழுப்பி ஆர்த் தெழச் செய்து போராட்டத்தில் இறங்க வைப் பதற்கு **எந்த உடனடிக் காரணம்** மிகுதியாகச் செயல்படப் போகிறதென்றும் சொல்வதற் கில்லை—முன்கூட்டியே யாராலும் சொல்ல முடியாது... நாடாளுமன்ற நெருக்கடியாலோ, கடுஞ் சிக்கலாகி மேலும் மேலும் வேதனை யளிப்பதாகித் தீவிரமடைந்து வரும் காலனித் துறை, ஏகாதிபத்திய முரண்பாடுகளிலிருந்து எழும் நெருக்கடியாலோ, அன்றி மூன்றாவ தொரு காரணத்தாலோ 'உடைப்பு' ஏற்பட்டு 'வெள்ளம் பெருக்கெடுக்கத்' தொடங்கலாம்... உதாரணமாய், பிரெஞ்சு முதலாளித்துவக் குடியரசில், சர்வதேசக் கண்ணோட்டத்திலும் தேசியக் கண்ணோட்டத்திலும் இன்று இருப் பதை விட நூறு மடங்கு குறைவான அளவுக்குப் புரட்சிகரமாய் இருந்த ஓர் சூழ்நிலையில்,

பிற்போக்குவாத இராணுவவாதிகளது ஆயிரக் கணக்கான மோசடிகளில் ஒன்றைப் போன்ற 'எதிர்பாராத', 'அற்பக்' காரணம் (டிரைஃபஸ் வழக்கு) மக்களை உள்நாட்டுப் போரின் விளிம்புக்கு இட்டுச் செல்லப் போதுமானதாகி விட்டது என்பதை மறக்கலாகாது!''*

புரட்சிகர நிலைமைக்குரிய அடிப்படையான மற்றும் உடனடியான காரணங்களை ஆராய்கின்ற பொழுது புரட்சிக்காரர்கள் வரலாற்றில் எதிர்பாராமல் ஏற்படுகின்ற திருப்பத்துக்குத் தயாராக இருக்க வேண்டும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடைபெறுகின்ற ஒவ்வொரு சம்பவத்தையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை நாம் பார்க்கிறோம். யுத்தத்தைப் பற்றி விசேஷமாக கவனம் செலுத்த வேண்டும். பல நாடுகளில் புரட்சி யுத்த நிலைமைகளில், குறிப்பாக உலக யுத்த நிலைமைகளில் நடைபெற்றிருக்கின்றது என்பதை சோஷலிஸ்ட் புரட்சிகளின் வரலாறு எடுத்துக்காட்டுகிறது. முதலில் ருஷ்யாவிலும் பிறகு மத்திய ஐரோப்பா மற்றும் தென் கிழக்கு ஐரோப்பாவில் உள்ள சில நாடுகளிலும் இவ்விதமாக நடைபெற்றிருக்கிறது. இடது சந்தர்ப்பவாதிகளும் இடது தீவிரவாதப் போக்கைச் சேர்ந்த குட்டி முதலாளி வர்க்கத் தத்துவாசிரியர்களும் இந்தத் தொடர்பைத் தனிமுதலாக்கி விடு

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி *10*, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, *1981*, பக்கங்கள் *312 — 313*.

கிறார்கள். புரட்சிகர நிலைமை யுத்த நிலைமைகளில் மட்டுமே தோன்றுகிறது, ஆகவே சோஷலிஸ்ட் புரட்சியைக் குறியாகக் கொண்ட தொழிலாளி வர்க்கம் அணு ஆயுதங்களை உபயோகிக்கின்ற உலக யுத்தம் உள்பட எந்த யுத்தத்தையும் தடுக்க முயற்சி செய்யக் கூடாது, அதற்கு மாறாக யுத்தத்தைத் தூண்ட வேண்டும் என்கிறார்கள். உண்மையில் யுத்தத்துக்கும் புரட்சிக்கும் காரண காரியத் தொடர்பு கிடையாது. யுத்தம் புரட்சிகரமான நிலைமையைத் தூண்ட முடியும்; ஏனென்றால் அது ''கீழ் வர்க்கங்களின்'' அதிருப்தியை அதிகப்படுத்துகிறது, ''மேல் வர்க்கங்கள்'' நாட்டை ஆள முடியாமையைத் தீவிரப்படுத்துகிறது. ஒரு குறிப்பிட்ட நாட்டில் சமூக வளர்ச்சியின் முந்திய போக்கு ஏற்கெனவே தயாரித்திருக்கின்ற முரண்பாடுகள் உருவாகின்ற மற்றும் வெளிப்படுகின்ற பாதையில் உள்ள தடைகளை ''அகற்றுவதில்''தான் பிரதானமாக யுத்தத்தின் பாத்திரம் அடங்கியிருக்கிறது. நவீன நிலைமைகளில் பிற்போக்கு சக்திகள் கட்டவிழ்த்து விடுகின்ற ஸ்தல யுத்தம் முடிவில் அவற்றிற்கு எதிராகத் திரும்பி புரட்சிகர நிலைமையைத் தூண்டும் என்பதை ஒருவர் சட்டென்று மறுக்கக் கூடாது. ஆனால் புரட்சிகர நிலைமை சமாதான காலத்திலும் தோன்ற முடியும் என்பதை வரலாறு நிரூபித்திருக்கிறது. அதனால்தான் யுத்தத்துக்கு எதிரான தொழிலாளி வர்க்கப் போராட்டம் புரட்சியின் காரணத்துடன் குறுக்கிடுவதில்லை. மேலும் உலக யுத்தம் முதலாளித்துவத்தின் சமூக முரண்பாடுகளை

மிகவும் அதிகமான அளவுக்குத் தீவிரப்படுத்து கின்ற அதே நேரத்தில், மூன்றாவது உலக யுத்தம்—வெப்ப அணு யுத்தம்—உற்பத்திச் சக்திகளைப் பேரளவில் அழித்து சமூக வாழ்க் கையைச் சீரழிப்பதுடன் பேரளவான உயிரிழப் பை ஏற்படுத்துவதால் மனிதகுலம் அழி வின் விளிம்பிற்குத் தள்ளப்படும் என்பதை நினைவிலிறுத்த வேண்டும். ஆகவே இன்று புரட்சிகர நிலைமையை உலக யுத்தமல்ல, அது **உடனடியாக** ஏற்படக் கூடும் என்ற **அபாயம்** ஏற்படுத்தியிருக்கிறது. மறு பக்கத்தில், சர்வ தேச இராணுவ மோதல்கள் இல்லாத பொழு தும் புரட்சிகர நிலைமை ஏற்பட முடியும்—இதற்கு கியூபா ஒரு உதாரணமாக இருக்கிறது—என்பதைக் கடந்த இருபது அல்லது முப்ப தாண்டுகளில் நடைபெற்ற சம்பவங்கள் நிரூபித் திருக்கின்றன.

புரட்சிகர நிலைமையைத் தோற்றுவிப்பதில் வெளிநாட்டுக் காரணிகளின் பாத்திரம் குறைந்து வருவதாக இதைப் புரிந்து கொள்ளக் கூடாது. அதற்கு மாறாக, சமூக வாழ்க்கை சர்வதேசத் தன்மையை அடைந்திருப்பதாலும் நாடுகளின் இடைச் சார்பு அதிகரித்திருப்பதாலும் வெளி நாட்டு நிலைமைகள் மாபெரும் பாத்திரத்தை வகிக்கத் தொடங்கியிருக்கின்றன. இன்றைய உலகத்தில் சக்திகளின் அணியமைப்பில் சோஷ லிசம், தொழிலாளர் மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களின் பலம் வளர்ச்சியடைந்து வரு கிறது, இது கடந்த காலத்தில் இருந்ததைக் காட்டிலும் புரட்சியின் உள்நாட்டுக் காரணி

களின் வளர்ச்சிக்கு மிகவும் சாதகமான நிலை மைகளை உருவாக்கியிருக்கிறது. இந்த அர்த்தத் தில் வெளிநாட்டுக் காரணிகளின் பாத்திரம் அதிகரிக்கிறது. இன்று ஒரு தீவிரமான சர்வதேச நெருக்கடி ஒரு நாட்டின் உள்நாட்டு முரண்பாடு களைத் தீவிரப்படுத்திவிடுவதால் அங்கே புரட்சி கரமான நிலைமை தோன்ற முடியும். நாம் இங்கே ''புரட்சியை ஏற்றுமதி'' செய்வதைக் குறிப்பிடவில்லை. லெனினும் அவருடைய சீடர் களும் அதை எப்பொழுதும் எதிர்த்தார்கள், இன்றைய உலக கம்யூனிஸ்ட் இயக்கம் அதைத் திட்டவட்டமாக நிராகரிக்கிறது. வெளிநாட்டுச் சக்திகளின் புரட்சிகரமான பாத்திரம் பல வழிகளில் வெளிப்படலாம்: உதாரணம், **எதிர்ப் புரட்சியை ஏற்றுமதி செய்வதைத் தடுப்பது**, அதாவது ஏதாவதொரு நாட்டில் புரட்சிகர நிலைமையை அழிப்பதற்கு அல்லது ஏற்கெனவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற புரட்சியை நசுக்குவதற்கு ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு சக்திகள் முயற்சி செய்யும் பொழுது சமாதானம் மற்றும் சோஷ லிச சக்திகள் அதைத் தடுத்தல்.

இன்று, உலக யுத்தம் உடனடியாக ஏற்படக் கூடும் என்ற ஆபத்து முதலாளித்துவ நாடுகளில் பெருந்திரளான உழைக்கும் மக்களிடம் சுறு சுறுப்பை ஏற்படுத்தக் கூடும், முடிவில் அது புரட்சிகர நிலைமை தோன்றுவதை ஊக்கு விக்கும். மேற்கு நாடுகளில் இன்று எழுந்துள்ள புதிய வாய்ப்புகளை அடிப்படையாகக் கொண்டு இதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். வளர்ச்சி யடைந்த முதலாளித்துவ நாடுகளில் பெரும்

பான்மையானவற்றில் ஆழமான ஜனநாயக மாற்றங்களுக்காக இன்று நடைபெற்றுக் கொண் டிருக்கும் போராட்டம் தன்னளவில் பெருந் திரளான மக்களின் நடவடிக்கைகளைத் தீவிர மாக அதிகப்படுத்துகின்ற நிலைமைகளையும் '''மேல் வர்க்கங்களிடையே'... நெருக்கடியை யும்'' ஏற்படுத்தலாம். எனினும் இந்த வாய்ப்பைத் தனிமுதலாக்கக் கூடாது அல்லது மிகைப்படுத்த வும் கூடாது. சாதகமான சூழ்நிலை இருக்கு மானால் குறிப்பாக வெளிநாட்டு உள்நாட்டு நிலைமைகள் சாதகமான முறையில் இணைந் திருந்தால், தொழிலாளி வர்க்கம் உள்பட பெருந்திரளான மக்கள் நடத்துகின்ற தீவிர மான போராட்டம் புரட்சிகர நிலைமையின் மற்ற அறிகுறிகளைத் தூண்ட முடியும், புரட்சி கர நிலைமையைக் கூட ஏற்படுத்த முடியும்.

இங்கே பொதுவான முறையில் ஒரு கருத் தைக் குறிப்பிட வேண்டும். புரட்சிகர நிலை மையைப் பற்றி லெனின் குறிப்பிட்டிருக்கின்ற அறிகுறிகள் ஒரு தொகுதியாக மட்டுமே செய லாற்ற முடியும். அவை ஒன்றையொன்று தூண்டு கின்றன, எனவே '''மேல் வர்க்கங்க ளிடையே'... நெருக்கடி'' ''அடிமட்டத்து வர்க்கங் களின்'' நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அதிகச் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்தலாம். பரந்த ஜனநாயகக் கூட்டணிகள் இன்றைக் கிருக்கும் அதிகார அமைப்புகளை நொறுக்கி, அவற்றின் அரசியல் அடிப்படையைக் குறுக்கி விட முடியும்.

பெருந்திரளான மக்களின் ஜனநாயக இயக்

கங்களுக்கும் நாடாளுமன்றத்துக்கு வெளியில் தொடர்ச்சியாக இயங்குகின்ற பரந்த எதிரணியை அமைப்பதற்கும் உரிய புறவய நிலைமைகள் எல்லா நாடுகளிலும் இருப்பதாகச் சொல்ல முடியாது என்பது வெளிப்படையாகும். சில நாடுகளில் **ஆயுதந் தாங்கிய போராட்டத்தின்** குறிப்பாக, **கொரில்லா யுத்தத்தின்** விளைவாகப் புரட்சிகர நிலைமை தோன்றலாம். திட்டவட்டமான நிலைமைகளில் கொரில்லா யுத்தம் புரட்சிகர நிலைமை தோன்றுவதையும் அது புரட்சியாக வளர்ச்சியடைவதையும் தீவிரப்படுத்தும் என்பதை கியூபாவின் புரட்சி நிரூபித்தது. ஆனால் புரட்சிகர நிலைமையின் ஆரம்ப அறிகுறிகள் ஏற்கெனவே தோன்றியிருந்தால், ஆயுதப் போராட்டம் என்ற தீப்பொறியில் அநேகமாகச் சீக்கிரமாக நெருப்பாக எரியக்கூடிய பொருள் மக்களிடம் ஏற்கெனவே திரண்டிருந்தால் மட்டுமே முன்னணிப்படையின் ஆயுதந் தாங்கிய போராட்டங்கள் புரட்சிகர நிலைமையின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும். இப்புறவய நிலைமைகள் இல்லையென்றால் தனிப்பட்ட புரட்சிக்காரர்கள் எவ்வளவு வீரத்தோடு போராடினாலும் புரட்சிகர நிலைமையைப் ''படைக்க'' முடியாது, அப்படிப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியடையும்.

சுருக்கமாகச் சொல்வதென்றால் புரட்சிகர அகப்பொருளுடைய சுறுசுறுப்பான நடவடிக்கைகளினால் புரட்சிகர நிலைமை தோன்ற முடியும்; ஆனால் அதை செயற்கையாக உருவாக்க முடியாது. மேலும் ஆயுதங்களின் மூலம்

அல்லது ஏதாவதொரு பலாத்கார வழியின் மூலம் புரட்சிகர நிலைமை தோன்றுவதை ''முடுக்கிவிடுவதற்கு'' செய்யப்படுகின்ற அகால மான முயற்சி எதிர்மறையான விளைவை ஏற் படுத்தி அதை ''தள்ளிப் போடுவதும்'' கூட சாத்தியமே.

புரட்சிகர நிலைமை தன் பங்காக புரட்சிகர மான அகப்பொருளின் உருவாக்கத்தைத் தூண்டு கிறது, பெருந்திரளான மக்களிடம் சுறுசுறுப்பை உண்டாக்குகிறது. 1915ம் வருடத்தின் கோடை காலத்தில் ருஷ்யாவில் தோன்றியிருந்த நிலை மையைப் பற்றி லெனின் பின்வருமாறு எழுதி னார்: ''யுத்தத்தால் தோற்றுவிக்கப்பட்ட புரட்சிகரச் சூழ்நிலை, விரிவடைந்தும் ஆழ மடைந்தும் வரும் இந்தச் சூழ்நிலை, தவிர்க்க வொண்ணாத முறையில் புரட்சிகர உணர்ச்சி களை ஊக்குவித்துச் செல்கிறது. மிகச் சிறந்த, மிகவும் வர்க்க உணர்வு படைத்த பாட்டாளி கள் அனைவரையும் இது பக்குவம் பெறச் செய்து, அவர்களுக்கு அறிவொளி ஊட்டி வரு கிறது. மக்கட் பெருந்திரளினரது மனோபாவத் தில் திடீர் மாற்றம் ஏற்படுவது சாத்தியமென் பது மட்டுமல்ல, மேலும் மேலும் இது எதிர் பார்க்கக் கூடியதாகி வருகிறது. ருஷ்யாவில் 1905ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 'கப்போன் இயக்கம்'° சம்பந்தமாக ஏற்படக் கண்டோமே

---

° 1905 ஜனவரி 9ந் தேதியன்று செண்ட் பீட்டர்ஸ்பர்க்கின் தொழிலாளர்கள் ஜாரைச் சந்தித்து மனுக் கொடுப்பதற்குச் சென்றார்கள். கப்போன் என்ற பாதிரியார் இதற்கு

அதற்கு ஒப்பான ஒரு மாற்றமாக இருக்கக் கூடியது இது. அப்போது ருஷ்யாவில் சில மாதங்களுக்குள், சில சந்தர்ப்பங்களில் சில வாரங்களுக்குள்ளாகவுங்கூட, பிற்பட்ட பாட்டாளி வர்க்கத் திரளினரிடமிருந்து லட்சக் கணக்கானோரைக் கொண்ட சேனை ஒன்று உருப்பெற்று வெளிப்பட்டு, பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர முன்னணிப்படையைப் பின் தொடர்ந்து நடைபோட்டது.''°

ஒரு புரட்சிகர நிலைமை புரட்சியாக வளர்ச்சியடைய வேண்டுமென்றால் பொது தேசிய நெருக்கடி ஏற்பட வேண்டும். புரட்சிக்குரிய புறவய நிலைமைகளும் அகவய நிலைமைகளும் இருக்கும் பொழுதுதான் அது ஏற்படும்—இது ''அடிப்படை விதி''.

## 7. புரட்சியின் அகவய நிலைமைகள்

சோஷலிஸ்ட் புரட்சியின் ''அகவய நிலைமைகள்'' யாவை, அவை கோட்பாட்டளவில் ''புறவய நிலைமைகளிலிருந்து'' எந்த அம்சங்களில் வேறுபடுகின்றன? இக்கேள்விக்குத் தத்துவரீதியான முக்கியத்துவம் மட்டுமின்றி,

---

ஏற்பாடு செய்தார். ஆனால் தொழிலாளர்கள் ஈவிரக்கமில்லாமல் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இச்சம்பவம் ருஷ்யாவில் 1905—1907 புரட்சியைத் தூண்டியது. லெனின் இச்சம்பவங்களைக் குறிப்பிடுகிறார்.

° வி. இ. லெனின், **இரண்டாவது அகிலத்தின் தகர்வு**, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1976, பக்கம் 89.

பரந்த செய்முறை மற்றும் அரசியல் முக்கியத் துவமும் இருக்கிறது. ஏனென்றால் அகவய நிலைமைகள் எப்படிப் புரிந்து கொள்ளப்படு கின்றன என்பது புரட்சிகரப் போராட்டத்தின் செயல்திட்டம் மற்றும் செயல்முறையை விரித் துரைப்பதற்கு முக்கியமானது, அது தொழி லாளி வர்க்கத்தின் முன்னணிப்படையின் நட வடிக்கைகளைப் பெருமளவுக்கு நிர்ணயிக்கிறது.

லெனின் எழுதிய **இரண்டாவது அகிலத்தின் தகர்வு** என்ற நூலில் "...பழைய அரசாங்கத் தைத் தகர்க்கும்படி (அல்லது சீர்குலைக்கும் படி) போதிய அளவுக்குப் பலம்படைத்த புரட்சி கர வெகுஜனச் செயலை மேற்கொள்வதற்குப் புரட்சிகர வர்க்கம் ஆற்றலுடையதாக இருக் கும்படியான ஒரு சூழ்நிலையில் மட்டும்தான்— பழைய அரசாங்கம் 'கவிழ்க்கப்படாத' வரை, நெருக்கடியான காலக்கூறிலுங்கூட அது 'விழுந்து படாமல்' இருந்து கொண்டுதான் இருக்கும்— புரட்சி எழ முடியும்."* என்று எச்சரிக்கை செய்கிறார். இதற்குச் சில வருடங்களுக்குப் பிறகு **"இடதுசாரி" கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு** என்ற நூலில் லெனின் பின்வருமாறு வலியுறுத்துகிறார்: "...புரட்சி நடைபெறு வதற்கு, முதலாவதாக, பெரும்பான்மையான தொழிலாளர்கள் (அல்லது குறைந்தது, வர்க்க உணர்வு கொண்ட, சிந்தனை ஆற்றலுடைய, அரசியல் செயலாற்றல் வாய்ந்த தொழிலாளர் களில் பெரும்பாலோர்) புரட்சி இன்றியமையாத

---

* அதே நூல், பக்கம் 15.

தென்பதை நன்கு உணர்ந்திருப்பதும், புரட்சிக்காக உயிர் விடத் தயாராயிருப்பதும் அவசியமாகும்...''*

புரட்சியின் அகப்பொருள் இருப்பதையோ அல்லது இல்லாதிருப்பதையோ அல்லது தொழிலாளருடைய உணர்வு மற்றும் ஸ்தாபன மட்டத்தைப் பற்றியோ லெனின் பேசவில்லை, அவனுடைய திறமை மற்றும் செயல்துடிப்பைப் பற்றி, போராட்டத்தில் ஈடுபடுகின்ற தீவிரத்தைப் பற்றிப் பேசுகிறார். சோஷலிஸ்ட் புரட்சியின் வெற்றிக்கு ஒருங்கிணைப்பும் உணர்வும் உயர்ந்த மட்டத்தில் இருப்பதும் முன்னணி ஸ்தாபனம் இருப்பதும் மிகவும் அவசியம் (லெனின் இதை அடிக்கடி வலியுறுத்தினார்) என்று குறிப்பிடுவது அவசியமல்ல. ஆனால் இவை அனைத்தும் புறவய நிலைமைகள்—அகவய நிலைமைகள் அல்ல. பெருந்திரளான மக்கள் புரட்சிகர நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குரிய திறமை, தயார்நிலை மற்றும் சித்தத்துடன் அடையாளம் கண்டுகொள்ளப்படக் கூடிய நிலைமைகள் அல்ல. ஒரு வர்க்கத்தின் அல்லது அதன் முன்னணிப்படையின் ஒருங்கிணைப்பு மட்டத்தை அகவய நிலைமை, ''அகவயக் காரணி'' என்று புரிந்துகொள்வது சமூக உணர்வின் சாத்தியங்களை மிகையாக மதிப்பிட்டுப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் வளர்ச்சி

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 10, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1981, பக்கம் 292.

யில் அதன் பாத்திரத்தை மிகைப்படுத்துவதாகும், ஆகவே சமூக உணர்வினால் நியாயப் படுத்த முடியாத நம்பிக்கைகளை அதன் மீது சுமத்துவதாகும்.

மேலே சுட்டிக்காட்டப்பட்ட லெனின் நூல்களில், குறிப்பாக **இரண்டாவது அகிலத்தின் தகர்வு** என்ற நூலில் லெனின் புரட்சிகர நிலைமையின் அறிகுறிகளில் "...மக்கட் பெருந்திரளினரது செயற்பாடு கணிசமாய் அதிகரித்துவிடுதல்..." இவர்கள் "வரலாறு படைக்க வல்ல சுயேச்சைச் செயலில் இறங்கும்படி நெருக்கடி நிலைமைகள் யாவற்றாலும் **மற்றும் 'மேல் வர்க்கங்களாலுங்கூட'** இழுத்துவிடப்படுகிறார்கள்"* என்று குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். "தனிப்பட்ட கோஷ்டிகள், கட்சிகளின் சித்தத்தை மட்டுமின்றி, தனிப் பட்ட வர்க்கங்களின் சித்தத்தையும் சார்ந்திராத இந்த எதார்த்தப் புறநிலை மாறுதல்கள் இல்லாமல், பொதுவாகப் புரட்சி சாத்தியமன்று"** என்று லெனின் விளக்குகிறார். "மக்கள் பெருந்திரளினரது செயற்பாடு... அதிகரிப்பதை" லெனின் அகவய நிகழ்வாகக் கருதவில்லை, புறவய நிகழ்வாகக் கருதுகிறார். இது சரியானதே. ஏனென்றால் அது அகப்பொருளின் சித்தத்தைப் பொறுத்து நடைபெறவில்லை, அகப்பொருள் அதை அறிந்திருந்தாலும் அல்லது அறியாதிருந்தாலும் அது நடைபெறுகிறது.

---

* வி. இ. லெனின், **இரண்டாவது அகிலத்தின் தகர்வு**, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1976, பக்கங்கள் 14 – 15.

** அதே நூல், அதே பக்கங்கள்.

புரட்சிகர நிகழ்வுப் போக்கின் அகப்பொருள் பெருந்திரளான மக்களின் நடவடிக்கையில் இந்த அதிகரிப்பை ஊக்குவிப்பதற்கு, அவர் களுடைய உணர்வை வளர்ப்பதற்கு, முன் னணிப்படையைத் திரட்டிப் பெருந்திரளான மக்களுடன் அதன் உறவுகளை பலப்படுத்து வதற்கு தன் சக்திக்கேற்ற எல்லாவற்றையும் செய்ய முடியும், செய்ய வேண்டும், செய்யக் கடமைப்பட்டிருக்கிறது என்பதில் சந்தேக மில்லை. ஆனால் உணர்வு மட்டமோ அல்லது ஒருங்கிணைப்பு மட்டமோ அல்லது பெருந் திரளான மக்களுடன் மிகவும் நெருக்கமான உறவுகளோ அவற்றின் காரணமாக அகவய நிகழ்வுகளாக மாற்றமடைவதில்லை.

உலகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைப் பதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கை களில் ஈடுபடுவதற்கு அகப்பொருளின் சித்தம், திறமை, தயார்நிலை மற்றும் தொழிலாளி வர்க்கம், அதன் நேச சக்திகளின் ஸ்தாபனம் மற்றும் உணர்வின் மட்டத்தை உயர்த்துவதை, பெருந்திரளான மக்களுக்குத் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரக் கட்சியின் தலைமையை அளிப்பதை அல்லது அத்தகைய கட்சி இல்லா விட்டால் அதை நிறுவுவதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகளும் தம்மளவில் புரட்சி யின் அகவய நிலைமைகளே. இந்த நடவடிக் கைகளின் விளைவுகளைப் பொறுத்த மட்டில், தொழிலாளி வர்க்கத்தின் உணர்வை உயர்த்து தல், முன்னணி ஸ்தாபனத்தை நிறுவி அதன் உறுப்பினர்களின் நடவடிக்கையை அதிகரித்தல்,

இதரவை புரட்சியின் அகவய நிலைமைகள் அல்ல, புறவய நிலைமைகளே. ஹெகல் எழுதிய தர்க்க வியலின் விஞ்ஞானம் என்ற நூலை ஆராய்ந்த பொழுது ''கருத்தியலானது எதார்த்தமாக மாறுவது'' என்று லெனின் சுட்டிக்காட்டினார்.* இது அதற்குத் தகுந்த உதாரணமாகும். நட வடிக்கையில் ஈடுபடுவதற்கு அகப்பொருளின் சித்தம், திறமை மற்றும் தயார்நிலை ஸ்தூல மான நடவடிக்கையில் எடுத்துரைக்கப்படுகின் றன, அந்த நடவடிக்கை திட்டவட்டமான விளைவை ஏற்படுத்துகிறது. அதில் அகப்பொரு ளின் சித்தம் அதன் நடவடிக்கைகளின் பொரு ளாயத நிலைமைகளால் ''தகவமைக்கப்பட்டு'' வடிவம் பெறுகிறது. ஆனால் இந்த விளைவு அகப்பொருளின் உணர்வுக்கும் சித்தத்துக்கும் வெளியே இருப்பதால் அகப்பொருளின் கூடுத லான நடவடிக்கைகளுக்குரிய புறவய நிலைமையா கிறது. அகப்பொருளின் நடவடிக்கைகளை அவற் றின் விளைவுகளுடன் இனங்காணுதல், ''அகவயக் காரணியின்'' முற்றொருமையான கூறுகளாகக் கருதுதல்—அகவயக் காரணிகளை அகப்பொ ருளின் நடவடிக்கைகளின் விளைவுகளாக மட் டுமே குறுக்கிவிடுவதைப் பற்றி இங்கே எதுவும் சொல்ல வேண்டியதில்லை—ஸ்தூலமான நிலை மையைப் பற்றிய ஸ்தூலமான பகுப்பாய்வை,

* ''கருத்தியலானது எதார்த்தமாக மாறுவது என்ற சிந்தனை ஆழமானது; வரலாற்றுக்கு மிகவும் முக்கியமானது'' என்று லெனின் வலியுறுத்தினார். (V. I. Lenin, "Conspectus of Hegel's Book 'The Science of Logic'", *Collected Works,* Vol. 38, p. 114).

போராட்டத்தின் ஆக முக்கியமான திசை வழியை, அதன் ஆக முக்கியமான ''கண்ணியை'' நிர்ணயிப்பதைத் தடுக்கிறது.

மார்க்சியவாதி புரட்சியின் புறவய மற்றும் அகவய நிலைமைகளுக்கு இடையில் பிரிவினைக் கோட்டை ஏன் கறாராக இழுக்க வேண்டும், வரலாற்று நிகழ்வுப் போக்கில் அகவயக் காரணியின் பாத்திரத்தைப் பற்றி ஏன் விசேஷமான கவனம் செலுத்த வேண்டும் என்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. புரட்சிக்காரர்கள் மத்தியில் தன்விருப்பப் போக்குகள் ஏற்படுவதை எதிர்த்துப் போராட வேண்டிய அவசியம் இக்காரணங்களில் ஒன்றாகும். ஒடுக்கப்பட்டிருக்கின்ற பெருந்திரளான மக்கள் இயன்ற அளவுக்கு சீக்கிரத்தில் சுதந்திரத்தை அடைவதற்காகச் செய்யும் முயற்சி, பல புரட்சிக்காரர்களின் உறுதி மற்றும் துணிவினால் பன்முறை பெருக்கப்பட்டு சில சமயங்களில் அகப்பொருளின் சித்தம் மற்றும் உணர்வின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்த வழி வகுக்கிறது. அது புரட்சிகர நடவடிக்கைக்குத் தொழிலாளி வர்க்கத்தின் ஸ்தாபனம், உணர்வு, மற்றும் தயார் நிலை போதிய அளவுக்கு உயர்ந்த மட்டத்தில் இல்லாதிருத்தல் புரட்சிகரமான முன்னணிப் படையின் செயலின் ''தோல்விகளின்'' உடனடியான விளைவு, இன்று கடுமையாகப் பாடுபடுமானால் நாளை புரட்சியை நிறைவேற்றுவது சாத்தியம், ஏனென்றால் புரட்சிக்குரிய முன்நிபந்தனைகள் ஏற்கெனவே உருவாகியிருக்கும் என்ற எண்ணத்தைப் புரட்சிகரமான

பெருந்திரளினர் மத்தியில் (பிரதானமாக, பாட்டாளி வர்க்கம் அல்லாத பகுதியினரிடம்) ஏற்படுத்துகிறது. புரட்சிகரமான வன்முறை, போதனை மற்றும் மறு போதனைக் கொள்கையின் மீது ஆதாரமற்ற நம்பிக்கைகள் வைக்கப்படுகின்றன. அதே சமயத்தில் புதிய சமூகத்தின் பாதையில் புறவயமான தடையாக இருக்கின்ற மரபுகள், தப்பெண்ணங்கள் மற்றும் பழைய ஒழுக்கநெறியின் எச்சங்களின் பழமைவாதப் பாத்திரம் குறைவாக மதிப்பிடப்படுகிறது. ''போதனையைக்'' கடுமையான முயற்சியுடன் நிறைவேற்றுவதன் மூலமாக மட்டுமே இவற்றை அகற்ற முடியாது அல்லது குறைக்க முடியாது.

லெனின் சோஷலிஸ்ட் புரட்சியின் புறவய நிலைமைகளுக்குக் கேடான முறையில் அகவய நிலைமைகளை அதிகமாக வலியுறுத்தினார், அப்படிச் செய்ததன் மூலம் அவர் தன்விருப்பவாதம் மற்றும் அகநிலைவாதத்திற்குள் வழுக்கி விழுந்தார் என்று முதலாளி வர்க்க விமரிசகர்களும் சந்தர்ப்பவாதிகளும் அரை நூற்றாண்டுக் காலத்திற்கும் அதிகமாகவே கூறி வருகிறார்கள்.

ருஷ்யப் புரட்சி மற்றும் ஏகாதிபத்தியத்தின் கீழ் உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் எல்லாக் கட்டங்களிலும் அகப்பொருளின் தீவிரமான பாத்திரத்தையும் புரட்சிகரமான மாற்றங்களை நிறைவேற்றுவதற்கு அகவய நிலைமைகளின் முக்கியத்துவத்தையும் லெனின் வலியுறுத்தினார். அது தொழிலாளி வர்க்கம் மற்றும்

அதன் கட்சி சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பெருந் திரளான மக்களை, உணர்வுபூர்வமாக, கொள்கை பூர்வமாகத் தயாரிக்கும்படி கோரிய சகாப்தத் தின் மெய்யான தேவைகளைப் பிரதிபலித்தது. **கட்சியின் செயல்திட்டத்தைத் திருத்தியமைப்பதைப் பற்றிய ஆவணங்கள்** *(1917 ஏப்ரல் — மே)* என்ற நூலில் உலக முதலாளித்துவத்தின் புரட்சிகர மான வளர்ச்சியின் அனுபவத்தைத் தொகுத்துக் கூறிய லெனின் பின்வருமாறு எழுதினார்: ''பொதுவில் உலக முதலாளித்துவம் அடைந் திருக்கின்ற மிகவும் அதிக வளர்ச்சி மட்டம், ஏக போக முதலாளித்துவம் சுதந்திரமான போட்டி யை அகற்றியிருத்தல், வங்கிகளும் முதலாளித் துவ நிறுவனங்களும் உற்பத்திப் பொருள்களின் உற்பத்தி மற்றும் விநியோக நிகழ்வுப் போக்கை சமூக ரீதியில் ஒழுங்குபடுத்துவதற்குரிய பொறி யமைவைத் தயாரித்திருக்கின்றன என்ற உண்மை, முதலாளித்துவ ஏகபோகங்களின் வளர்ச்சியி னால் ஏற்பட்டிருக்கின்ற வாழ்க்கைச் செலவு அதிகரிப்பும் சிண்டிகேட்டுகளினால் தொழிலாளி வர்க்கம் ஒடுக்கப்படுதல் அதிகரித்திருப்பதும், தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதார மற் றும் அரசியல் போராட்டத்தில் குறுக்கே நிற் கின்ற மாபெரும் தடைகள், ஏகாதிபத்திய யுத்தத்தினால் ஏற்பட்டிருக்கின்ற பயங்கரங் கள், துன்பம், அழிவு மற்றும் மிருகத்தன்மை— இக்காரணிகள் அனைத்தும் முதலாளித்துவ வளர்ச்சியின் இன்றைய கட்டத்தை பாட்டாளி வர்க்க சோஷலிஸ்ட் புரட்சியின் சகாப்தமாக மாற்றுகின்றன.

''அந்த சகாப்தம் உதித்துவிட்டது...

''சோஷலிஸ்ட் புரட்சியின் பொழிப்பாகிய பொருளாதார மற்றும் அரசியல் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஒவ்வொரு வழியிலும் பாட்டாளி வர்க்கத்தைத் தயாரிப்பதைப் புறவய நிலைமைகள் இன்று அவசரக் கடமையாக்கி இருக்கின்றன.''*

ஆனால் லெனின் அகவய நிலைமைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்ற பொழுது புரட்சியின் புறவய நிலைமைகளை ஒருபோதும் கவனிக்கத் தவறவில்லை; லெனின் வகுத்த ''புரட்சியின் விதி'', புரட்சியின் வெற்றிக்குப் புறவய மற்றும் அகவய நிலைமைகளின் ஒற்றுமை மிகவும் அவசியமான முன்நிபந்தனை என்ற விதி இதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

லெனின் புரட்சியின் அகவய நிலைமைகளைப் பற்றிப் பேசுகின்ற பொழுது அகப்பொருளின் சித்தத்தின் பொருளாயதமாக்கப்பட்ட நிலைமைகளை அந்த நிலைமைகளுடன் சேர்க்கவில்லை; அவர் அவற்றைப் புறவய நிலைமைகளுடன் சரியாகவே சேர்த்தார் (மேலே தரப்பட்ட மேற்கோள்கள் இதை நிரூபிக்கும்).

புரட்சியின் அகவய நிலைமைகளைப் பகுத்தாராய்கின்ற பொழுது விஷயத்தைப் புரிந்துகொள்வதற்கு அவசியமான ஒரு கருத்தைக் குறிப்பிடுவது முக்கியமானது. அது சொற்பிர

---

* V. I. Lenin, *Collected Works,* Vol. 24, pp. 459-60.

யோகம் சம்பந்தப்பட்டதே தவிர சாராம்சத தைப் பற்றியதல்ல. ''புரட்சியின் அகவயக் காரணி'' என்ற சொற்றொடர் மார்க்சிய இலக் கியத்தில் பரவலாக உபயோகிக்கப்பட்டு வரு கிறது. அது வெவ்வேறு சூழ்நிலையில் வெவ் வேறு உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கிறது. வழக்கமாக அது சோஷலிஸ்ட் புரட்சியின் அகவய நிலைமைகளை (அதன் கறாரான அர்த்தத்தில்) மட்டுமல்லாமல் குறிப்பிட்ட புற வய நிலைமைகளையும் குறிக்கிறது; அது அகப் பொருளின் நடவடிக்கைகளின் விளைவுகளையும் சில சமயங்களில் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் அகப்பொருளையும் கூட — எல்லாவற்றுக்கும் மேலாக, உழைக்கும் மக்களின் ஸ்தாபனங் களையும் உள்ளடக்கியிருக்கிறது. சோஷலிஸ்ட் புரட்சியைத் தயாரிப்பதிலும் அதை நிறைவேற்று வதிலும் அகப்பொருளின் — ஒரு நபர், ஒரு கோஷ்டி, ஒரு வர்க்கம் அல்லது ஒரு கட்சியின் பாத்திரத்தைப் பொதுமைப்படுத்தப்பட்ட வடி வத்தில் வலியுறுத்துவதற்கும் அதனிடம் இருக்க வேண்டிய உணர்வு, ஸ்தாபனம், ஒற்றுமை, இதர குணங்களைக் குறிப்பிடுவதற்கும் அந்தச் சொற்றொடர் சரியான விதத்திலேயே உப யோகிக்கப்படுகிறது.

எனினும் புரட்சியின் ''அகவய நிலைமை களுக்கும்'' ''அகவயக் காரணிக்கும்'' இடையில் ஒருவர் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும், ''அக வயக் காரணியைப்'' புறவய நிலைமைகளுடன் சேர்த்துக் கருதக் கூடாது.

# 8. ''புரட்சியின் அடிப்படை விதியும்'' புரட்சிகர வன்முறையும்

புறவய மற்றும் அகவய நிலைமைகளின் ஒற்றுமை இருந்தால் மட்டுமே புரட்சி வெற்றியடைய முடியும். புரட்சி வெற்றியடைவதற்கு இவற்றின் ஒற்றுமை எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்பதை லெனின் குறிப்பிடவில்லை. இது தற்செயலானதல்ல. ஏனென்றால் இந்த அளவு நிலையானதல்ல, அதை முன்கூட்டியே தீர்மானிக்க முடியாது. ஒரு தேசிய நெருக்கடி ஒவ்வொரு தடவை முதிர்ச்சி அடைகின்ற பொழுதும் அது புதிய முறையில் வெளிப்படுகிறது, புரட்சி வெற்றி பெறக்கூடிய அளவுக்கு உறுதியான நடவடிக்கையை எடுக்க வேண்டுமா, அப்படியானால், குறிப்பிட்ட எத்தருணத்தில் என்பதை புரட்சிகர முன்னணிப்படைதான் முடிவு செய்ய வேண்டும். புரட்சி ஒரு விஞ்ஞானம் மட்டுமல்ல, அது ஒரு கலை, புரட்சிகரப் போராட்டத்துக்கு வெற்றிகரமாகத் தலைமை தாங்குவதற்கு அதன் விதிகளையும் இயக்கவியலையும் நன்றாக அறிந்திருக்க வேண்டும், நடைமுறை அனுபவமும் உள்ளுணர்வும் இருக்க வேண்டும் என்று லெனின் கூறியது இங்கே பளிச்சென்று ஒளி வீசுகிறது. புரட்சி ஒரு படைப்பு நிகழ்வுப் போக்கு, அதில் தவறு செய்வதும் தோல்வி அடைவதும் சாத்தியம் என்பதை லெனின் தொடர்ச்சியாக வலியுறுத்தினார். மார்க்சும் இதே கருத்தைக் கூறினார்: ''நிச்

சயமாகச் சாதகமான நிலைமைகளில் மட்டுமே போராட்டத்தை மேற்கொள்வது என்றால் உலக வரலாற்றை உருவாக்குவது மிகவும் சுலப மாக இருக்கும்.''* உண்மையான வாழ்க்கையில் சம்பவங்கள் வேறுவிதமாக நடைபெறுகின்றன. ஒரு புரட்சிகரமான நிலைமை பொது தேசிய நெருக்கடியாக வளர்ச்சி அடையுமா அல்லது பாட்டாளி வர்க்கமும் அதன் நேச சக்திகளும் சாதகமான புறவய நிலைமைகளைப் பயன் படுத்தி புரட்சியை வெற்றியடையச் செய்கின்ற அளவுக்குப் போதுமான பலத்தைக் கொண் டிருக்குமா என்பதைப் பற்றி ஒரு புரட்சிக்காரர் ஆரூடம் சொல்ல முடியாது. அவர் முன்னதாக சாத்தியமான எல்லா வாய்ப்புகளையும் மதிப் பிடுவதற்கு முயற்சி செய்யக் கூடாது அல்லது ஒரு புரட்சிகர நெருக்கடியை ஏற்படுத்துகின்ற நம் பிக்கையில் சண்டையில் ஓடி விழ வேண்டும் என் பது இதன் அர்த்தமல்ல. ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காரர் — குட்டி முதலாளி வர்க்கக் கலகக்காரனிடமிருந்து வேறான முறையில் — ஒவ்வொரு விவரத்தையும் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும், சண்டையின் வாய்ப்புகள் அனைத் தையும் நன்றாக மதிப்பிட்டுப் பார்த்து அது தோல்வியில் முடிவடைவது உறுதியென்றால் அதைத் தவிர்ப்பதற்கு முயற்சி செய்ய வேண் டும். ஆனால் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்

---

* Marx to L. Kugelman in Hanover [London] April 17, 1871. In Marx, Engels, *Selected Correspondence*, Progress Publishers, Moscow, 1975, p. 248.

காரர் எப்பொழுதும் தவறுகளே செய்யாமல் எல்லாவற்றையும் துல்லியமாகக் கணக்கிட்டுப் பார்க்க முடியாது. ஆகவே அவர் எதிர்பார்த் ததற்கு முற்றிலும் மாறான விதத்தில் சம்பவங் கள் நடைபெறக் கூடும் என்ற உண்மைக்கு அவர் தயாராக இருக்க வேண்டும்.

சம்பவங்களின் புறநிலையான வளர்ச்சிப் போக்கு வெற்றிக்கு உத்தரவாதத்தைத் தர வில்லையென்றால், அதாவது உரிய காலத்துக்கு முந்திய நடவடிக்கை ஆபத்தை ஏற்படுத்துமென் றால் அல்லது புரட்சிகர சமூகத்தின் புரட்சிகர மான மாற்றத்தைப் பல வருடங்களுக்குப் பின்னால் தள்ளக் கூடும் என்றால் புரட்சிகர வர்க்கம் புரட்சிகர நடவடிக்கையை இயன்ற அளவுக்குத் தவிர்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். 1870ம் வருடத்தின் இலையுதிர் காலத்தில் பிரான்சில் இருந்த நிலைமை இதுவே. **"1870 செப்டெம்பரில்,** கம்யூனுக்கு ஆறு மாதங் **களுக்கு** முன்னர், அகிலத்தின் பிரபலமான அறிக் கையில் மார்க்ஸ் பிரெஞ்சுத் தொழிலாளர்களை நேரடியாக எச்சரித்தார்: புரட்சிகர எழுச்சி **மூர்க்கமான முட்டாள்தனம்."*** வேறு வார்த்தை களில் சொல்வதென்றால் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் அகபொருள் **வரலாற்றின் மீது வன்முறையை** உபயோகிப்பதை, அதை செயற்கை **யாக முன்னே தள்ளும்** முயற்சிகளை, "புரட்சிகரப்

* V. I. Lenin, "Preface to the Russian Translation of Karl Marx's Letters to Dr. Kugelmann", *Collected Works,* Vol. 12, p. 108.

போக்கின் முன்னேற்றத்தை அவசரப்படுத்து வதை, அதை செயற்கை முறையில் நெருக்கடி நிலைக்குக் கொண்டு வருவதை, புரட்சிக்குரிய நிலைமைகள் இல்லாத பொழுது கணப்பொழு தில் ஏற்படும் வேகத்தில் புரட்சியைத் தொடங்கு வதைத்''* தவிர்க்க வேண்டும். வன்முறை ''வர லாற்றின் மருத்துவச்சி''. முக்கியமாகக் ''கரு'' முதிர்ச்சியடைந்திருந்தால்தான் அது எதிர்பார்க் கின்ற விளைவைக் கொடுக்கும், இல்லையென் றால் எதிர்மாறான விளைவும் ஏற்படும். இந்த உண்மையை அங்கீகரிப்பதே மார்க்சிய-லெனி னியத்தைக் குட்டி முதலாளி வர்க்கப் புரட்சி கரவாதத்திலிருந்து வேறுபடுத்தும் முக்கியமான குணாம்சம். இப்போக்கு 1960க்களிலும் 1970க்களிலும் முதலாளித்துவ நாடுகளின் உழைக்கும் மக்களில் சில பகுதியினரிடம் மிகவும் பரவலாகி விட்டது; ஹெ. மார்க்குசே, பி. ஃபா னான், ரெ. டெப்ரே மற்றும் இதர தத்துவ ஞானிகள், சமூகவியலாளர்கள் மற்றும் அரசியல் வாதிகள் எழுதிய நூல்களில் தத்துவரீதியில் வகுத்தளிக்கப்பட்டுள்ளது.

ஆனால் வெகுஜன அதிருப்தி எல்லா எதிர்ப்பு களையும் இடித்துரைத்தல்களையும் மீறிப் பொங்கியெழுந்து இருக்கின்ற அமைப்புக்கு எதி

---

* Karl Marx, Frederick Engels, "[Reviews from the *Neue Rheinische Zeitung. Politisch-ökonomische Revue,* No. 4, April 1850]". In Karl Marx, Frederick Engels, *Collected Works,* Vol. 10, Progress Publishers, Moscow, 1978, p. 318.

ரான சக்திமிக்க இயக்கமாக வெளிப்படுமானால் புரட்சிகர முன்னணிப்படை என்ன செய்ய வேண்டும்? வரலாறு புரட்சிகரமான வர்க்கத்தை ''உடனே'' தடையரண்களுக்குப் போகும்படி— இன்னும் சாதகமான பொருளாயத முன்நிபந் தனைகள் ''வேறு இடங்களில்'' இருக்கின்ற பொழுது — அதிகாரத்தைக் கைப்பற்றும்படி ''நிர்ப்பந்திக்குமானால்'' அந்த வர்க்கம் என்ன செய்ய வேண்டும்? இக்கேள்விகளுக்கு பதிலளிப் பதற்கு நாம் வரலாற்றை—பாரிஸ் கம்யூனையும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நடைபெற்ற புரட்சிகரமான சம்பவங்களையும் திரும்பிப் பார்க்க வேண்டும்.

மார்க்ஸ் 1870 செப்டெம்பரில் பிரெஞ்சுத் தொழிலாளி வர்க்கம் புரட்சி செய்யக் கூடா தென்று எச்சரித்தார். அத்தருணத்தில் ''அது மூர்க்கமான முட்டாள்தனமே'' என்றார். ஆனால் 1871 ஏப்ரலில் அவர் ''பெருந்திர ளான மக்களின் இயக்கத்தைக் கண்ட பொழுது உலக வரலாற்று இயக்கத்தில் முன்னே அடி யெடுத்து வைக்கின்ற மாபெரும் சம்பவங்களில் பங்கெடுக்கின்ற நபரின் கூர்மையான அக்கறை யுடன் அதை கவனித்தார்.''* ''விண்ணைச் சாடிய'' பாரிஸ் கம்யூன்வாதிகளை மார்க்ஸ் ஆதரித்தார், ஏனென்றால் முடிவாகப் பார்க்கும் பொழுது பெருந்திரளான மக்களே புரட்சிகர

* V. I. Lenin, "Preface to the Russian Translation of Karl Marx's Letters to Dr. Kugelmann", *Collected Works,* Vol. 12, p. 109.

வரலாற்றைப் படைக்கிறார்கள், அவர்கள் முன்னே புறப்பட்டிருக்கின்ற நேரத்தில் உறுதி யான நடவடிக்கையிலிருந்து அவர்களைப் பின்னுக்கிழுப்பது புரட்சிக்கு துரோகம் செய் வதாகும். அதற்கு மாறாக, இந்தப் புதிய நிலை மைகளில் வெற்றியடைவதற்கு—அது நடக்க முடியாததாகத் தோன்றினால் கூட—குறைந்த பட்சம், மூலதனத்துக்கு எதிராகப் புதிய த்தாக்கு தல்களைத் தொடுப்பதற்கு, புதிய போராட் டங்களுக்குப் பெருந்திரளான மக்களைத் தயாரிப் பதற்கு எல்லாவற்றையும் செய்ய வேண்டும்.

முதலாளித்துவ எதிர்ப்பு என்று தம்மை அறி வித்துக் கொள்கின்ற எல்லா இயக்கங்களையும், குறிப்பாக, இடது தீவிரவாத கோஷ்டிகளின் இயக்கங்களையும் புரட்சிகர மார்க்சியவாதி ஆதரிக்க வேண்டும் என்பது இதிலிருந்து தொட ருமா? நிச்சயமாக இல்லை. மார்க்சும் எங்கெல் சும் லெனினும் பாரிஸ் கம்யூனை ஆதரித்த பொழுது குணாம்சத்தில் பெருந்திரளான மக் களுடைய இயக்கங்களாக, சமூகக் கட்டமைப் பிலும் கூர்முனையிலும் பாட்டாளி வர்க்கத் தன்மையைக் கொண்டவையாக மட்டுமல்லா மல் போராட்டத்தின் போது ஆளும் வர்க்கத் தின் சர்வாதிகாரத்தை அரித்தழிக்கக் கூடிய நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற் றிய, பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத் தைக் கைப்பற்றுவதற்கு வழிவகுத்த, புரட்சி கர நிகழ்வுப் போக்கை மேலும் ஊக்குவிப் பதற்குரிய பரந்த வாய்ப்புகளை ஏற்படுத்திய இயக்கங்களை ஆதரித்தார்கள். 1960க்களிலும்

1970க்களிலும் இடது தீவிரவாத கோஷ்டி களின் நடவடிக்கைகள் வேறுவிதமானவை. அத் தகைய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பிரான் சிலோ, இத்தாலியிலோ அல்லது வேறு எங் குமோ அந்த சமயத்தில் புரட்சிகர நிலைமை அல்லது புரட்சிக்குரிய அகவய நிலைமைகள் இருக்கவில்லை. தொழிலாளி வர்க்கம் தடை யரண்களுக்குச் செல்ல வேண்டும் என்று கம்யூ னிஸ்டுகள் ஆணையிட வேண்டும் என்று இடது தீவிரவாத கோஷ்டிகளின் தலைவர்கள் வற் புறுத்தினார்கள். அப்படி ஆணையிட்டிருந்தால் அந்த நாடுகளைச் சேர்ந்த தொழிலாளி வர்க் கத்துக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் ஆபத்தான விளைவுகள் ஏற்பட்டிருக்கும் என்று பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சி, இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இதர சில சகோதரக் கட்சிகளின் ஆவணங்கள் சுட்டிக்காட்டின.

புதிய சமூக அமைப்புக்கு அவசியமான பொரு ளாயத முன்நிபந்தனைகளும் புரட்சிக்குரிய நிலைமைகளும் இல்லாதிருக்கின்ற பொழுது, தாம் பிரதிநிதித்துவம் செய்கின்ற வர்க்கத்தின் ஆதிக்கத்தை ஏற்படுத்துகின்ற அளவுக்கு, அந்த ஆதிக்கத்தை உறுதிப்படுத்துகின்ற நடவடிக்கை களை எடுக்கும் அளவுக்கு இயக்கம் முதிர்ச்சி அடையாதிருக்கின்ற பொழுது பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காரர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதை எதிர்த்து எங்கெல்ஸ் எச் சரிக்கை செய்தார். ஆனால் அத்தகைய நிலை மையிலும் போராட்டத்தின் தர்க்கம் அதிகாரத் தைக் கைப்பற்றுவதை அவசியமாக்கக் கூடும்

என்பதை எங்கெல்ஸ் மிகவும் சிறப்பாக அறிந்திருந்தார். அப்படி நடைபெறுமானால் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காரர் அதிகாரத்தை வென்றெடுத்த பிறகு புதிய சமூக அமைப்பை நிறுவுவதற்கு அவசியமான சமூக, அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்களைச் செய்ய முயற்சிக்க வேண்டும்.

1910க்களின் கடைசியில் நடைபெற்றுக் கொண்டிருந்த புரட்சிகர நிகழ்வுப் போக்கைப் பகுப்பாய்வு செய்த லெனின், அந்த சமயத்தில் ருஷ்யாவைக் காட்டிலும் சில ஐரோப்பிய நாடுகளில் சோஷலிசத்துக்குரிய பொருளாயத முன்நிபந்தனைகள் அதிகமான அளவுக்கு முதிர்ச்சி அடைந்திருந்தன என்பதை அடிக்கடி சுட்டிக் காட்டினார். அக்டோபர் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு (குறிப்பாக, **''இடதுசாரி'' கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு** என்ற நூலில்) லெனின் மறுபடியும் கூறினார்: பாட்டாளி வர்க்கப் புரட்சி அண்மையில் ''வளர்ச்சியுற்ற நாடுகளில் ஏதேனும் ஒன்றிலாவது''... வெற்றியடைந்தால் ''...ருஷ்யா முன்மாதிரியாக இருக்கும் நிலை விரைவில் முடிவுற்றுத் திரும்பவும் ('சோவியத்', சோஷலிசப் பொருளில்) பிற்பட்ட நாடாகிவிடக் கூடும்.''* ஆனால் வரலாறு ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுகின்ற வாய்ப்பை ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்துக்குக் கொடுத்ததே தவிர

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 10, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1981, பக்கம் 184.

மேற்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த தொழிலாளி வர்க்கத்திடம் கொடுக்கவில்லை. சில பத்தாண்டுகளுக்குப் பிறகே மற்ற நாடுகள் சோஷலிஸ்ட் பாதையைப் பின்பற்றின (மங்கோலியா மட்டும் இதற்கு விதிவிலக்காக இருந்தது). ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் என்னதான் செய்திருக்க வேண்டும்: அதிகாரத்தைக் கைப்பற்ற மறுத்திருக்க வேண்டுமா அல்லது சிறிது காலம் அதிகாரத்தை வகித்த பிறகு, மற்ற நாடுகள் சோஷலிஸ்ட் பாதையைப் பின்பற்றவில்லை என்பது தெளிவான பிறகு மறுபடியும் அதிகாரத்தை ''ஒப்படைத்துவிடுவதா?'' இக்கேள்விகள் வரலாற்று ரீதியாக மட்டுமின்றி செய்முறையிலும் முறையியலிலும் மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன. அக்டோபர் புரட்சிக்குப் பிறகு லெனின் அடிக்கடி இக்கேள்விகளுக்குத் திரும்பினார். 1918 மே 14ந் தேதியன்று அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி மற்றும் மாஸ்கோ சோவியத்தின் கூட்டுக் கூட்டத்தில் நிகழ்த்திய அறிக்கையில் லெனின் பின்வருமாறு கூறினார்: ''...சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் மற்ற படைப் பிரிவுகளோடு ஒப்பிடும் பொழுது ருஷ்யத் தொழிலாளி வர்க்கத்தின் பலவீனத்தை நாங்கள் மறப்பதில்லை... இந்தப் படைப் பிரிவு சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் ஏனைய படைப் பிரிவுகளை முந்திக் கொண்டு முன்னே சென்றது நமது விருப்பத்தின் காரணமாக அல்ல; வரலாற்றுச் சூழ்நிலைகள், ஜாரிஸ்ட் ஆட்சியின் பாரம்பரியம், ருஷ்ய பூர்ஷ்வாக்களின் தளர்ந்த நிலை ஆகியவையே

அதற்குக் காரணமாகும். நாம் விரும்பியதனால் அது ஏற்படவில்லை; சந்தர்ப்பங்கள் வற்புறுத்தியதனால் அது ஏற்பட்டது. நமது தோழனாகிய சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் வரும் வரை நாம் அங்கே நம்முடைய நிலைகளைக் காத்துக் கொண்டிருக்க வேண்டும். சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் அங்கே வந்து சேரும்; தவிர்க்க முடியாத வகையில் வந்து சேரும்; ஆனால் நாம் எதிர்பார்க்கின்ற அல்லது விரும்புகின்ற வேகத்தைக் காட்டிலும் கணக்கிட முடியாத அளவுக்கு மிக மெதுவாகவே அது வந்து கொண்டிருக்கிறது.''*

ருஷ்யப் புரட்சியின் சாதனைகளைக் காப்பதும் அதை மேலும் வளர்த்துச் செல்வதும் தொழிலாளி வர்க்கமும் கம்யூனிஸ்ட் கட்சியும் ருஷ்ய மக்களினங்களுக்குச் செய்கின்ற கடமையாக மட்டும் லெனின் கருதவில்லை, புரட்சியைத் தொடர்வதும் ருஷ்யாவில் சோஷலிசத்தை நிர்மாணிப்பதும் அசாதாரணமான அளவுக்குக் கடினமாக இருந்தபோதிலும், அதை ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசியக் கடமையாக, உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் பரிணாம வளர்ச்சிக்கு நிபந்தனையாகக் கருதினார்.

இன்று நடுத்தரமான அல்லது பலவீனமான

---

* வி. இ. லெனின், பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம், அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி மற்றும் மாஸ்கோ சோவியத்தினுடைய கூட்டுக் கூட்டத்தில் வெளிநாட்டுக் கொள்கை பற்றிக் கொடுத்த அறிக்கை 1918 மே 14, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1984, பக்கங்கள் 299—300.

வளர்ச்சியைக் கொண்ட நாட்டின் பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு தன்னுடைய சொந்த பலத்தையும் உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஆதரவையும் மட்டு மல்லாமல் சோஷலிஸ்ட் குடும்பத்தின் உதவி யையும் நம்பியிருக்க முடியும். எனினும் ஒரு நாட்டின் கம்யூனிஸ்டுகள் நிலைமையைக் கவன மாக மதிப்பிட வேண்டும், பாட்டாளி வர்க்க இலட்சியத்துக்கு ஆபத்தேற்படுத்தக் கூடிய நடவடிக்கைகளைத் தவிர்க்க வேண்டும்.

## 9. புரட்சியின் இயக்கு சக்திகள்

சோஷலிஸ்ட் புரட்சி **மக்கள் புரட்சியாகும்.** ''மக்களின் மிகவும் அதிகமான பெரும்பான் மையினர்'' நலன்களுக்காக அது நடைபெறுவது மட்டும் இதற்குக் காரணமல்ல, சமூக மாற்றம் என்ற பிரம்மாண்டமான நிகழ்வுப் போக்கில் பெரிய அளவில் அல்லது சிறிய அளவில் சம்பந் தப்பட்டிருக்கின்ற **இதே பெரும்பான்மையினர்** அதை நிறைவேற்றுவதும் அதற்குக் காரண மாகும். 19ம் நூற்றாண்டின் கடைசியில் எங் கெல்ஸ் பின்வருமாறு எழுதினார்: ''அற்பமான, உணர்வு பூர்வமான சிறுபான்மையினர் உணர் வில்லாத பெருந்திரளான மக்களுக்குத் தலைமை தாங்கி திடீர்த்தாக்குதல்கள், புரட்சிகளை நடத்திய காலம் மறைந்து விட்டது. சமூக அமைப்பை முழுமையாக மாற்றுவது என்று வரும் பொழுது அதில் பெருந்திரளான மக்கள்

பங்கெடுக்க வேண்டும், நாம் எதற்காகப் போராடு கிறோம், எதற்காக இரத்தத்தைச் சிந்து கிறோம், வாழ்க்கையை தியாகம் செய்கிறோம் என்பதை அவர்கள் அறிந்திருக்க வேண்டும்.''*

சோஷலிஸ்ட் புரட்சியில் தலைமையான பாத்திரத்தை வகிப்பது, மக்களைத் திரட்டி வழிநடத்துவது, முதலாளி வர்க்க ஆட்சியைத் தூக்கியெறிவதற்கும் புதிய சமூகத்தைப் படைப் பதற்கும் அவர்களை அமைப்பது வெகுஜன சக்திகளில் எந்த சக்தி, சமுக வர்க்கங்களில் எந்த வர்க்கம்? முதலாளித்துவ சமூகத்தின் சமூகக் கட்டமைப்பையும் வளர்ச்சிப் போக்கு களையும் ஆராய்ந்த பிறகு முதலாளி வர்க்கத் தினால் சுரண்டப்படுகின்ற தொழிலாளி வர்க் கம் மட்டுமே, பாட்டாளி வர்க்கம் மட்டுமே இப்பாத்திரத்தை வகிக்க முடியும் என்ற முடி வுக்கு மார்க்சும் எங்கெல்சும் வந்தார்கள். ''இன்று முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து நிற்கும் எல்லா வர்க்கங்களிலும் பாட்டாளி வர்க்கம் மட்டும்தான் மெய்யாகவே புரட்சிகர மான வர்க்கமாகும். நவீனத் தொழிலின் வளர்ச் சிக்கு முன்னால் ஏனைய வர்க்கங்கள் நலிவுற்றுச் சிதைந்து முடிவில் மறைந்து போகின்றன. பாட் டாளி வர்க்கம் மட்டும்தான் நவீனத் தொழி லுக்கே உரித்தான அதன் நேரடி விளைவாய்

* Friedrich Engels, "Einleitung [zu Karl Marx 'Klassenkämpfe in Frankreich 1848 bis 1850' (1895)]". In Marx/Engels, *Werke,* Bd. 22, Dietz Verlag, Berlin, 1963, S. 523.

அமைகிறது'''* என்று கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில் அவர்கள் எழுதினார்கள்.

பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான தன்மை எல்லாவற்றுக்கும் முதலில் அதன் இருத்தலிலிருந்து தோன்றுகிறது, அதாவது முதலாளி வர்க்க சமூக உறவுகளின் அமைப்பில் அது வகிக்கும் இடத்திலிருந்து—அது தன்னுடைய குறைவான வளர்ச்சியின் காரணமாகத் தன் உண்மையான நிலையை அறியாமலிருந்தாலும் அல்லது அரைகுறையாக அறிந்திருந்தாலும் (ஆகவே இந்தப் பொருளில் அது ''தன்னிலை வர்க்கமாகிறது'')—ஏற்படுகிறது.

வரலாற்று அரங்கில் அப்பொழுதுதான் தோன்றிக்கொண்டிருந்த, முதலாளி வர்க்கத்துக்கு எதிரான வர்க்கப் போராட்டத்தில் அனுபவமில்லாதிருந்த பாட்டாளி வர்க்கத்தின் உணர்வுக்கும் இருத்தலுக்குமிடையிலுள்ள இடைவெளியைப் பற்றி மார்க்சும் எங்கெல்சும் பின்வருமாறு எழுதினார்கள்: ''ஏதாவதொரு பாட்டாளி அல்லது மொத்தப் பாட்டாளி வர்க்கமுமே அந்தத் தருணத்தில் எதைத் தன்னுடைய நோக்கமாகக் கருதுகிறது என்பதைப் பற்றிய பிரச்சினையல்ல இது. பாட்டாளி வர்க்கம் எத்தகையது, மற்றும் இந்த இருத்தலுக்கு ஏற்ப வரலாற்று ரீதியில் எதைச் செய்யும்படி அது நிர்ப்பந்திக்கப்படும் என்பதைப் பற்றிய பிரச்சினை

---

* மார்க்ஸ், எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 1, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1983, பக்கம் 209.

யாகும். அதன் நோக்கமும் வரலாற்று நடவடிக்கையும் அதன் சொந்த வாழ்க்கை நிலைமையிலும் இன்றைய முதலாளி வர்க்க சமூகத்தின் மொத்த அமைப்பிலும் கண்ணுக்குத் தெரியும் படி, மாற்றவியலாதபடி முன்குறித்துக் காட்டப்படுகின்றன.''*

பாட்டாளி வர்க்கம் முதிர்ச்சியடைவது, ''தன்னிலை வர்க்கம்'' என்பதிலிருந்து ''தனக்குரிய வர்க்கமாக'' மாற்றமடைவது—அது சோஷலிசத்துக்காகப் புறவய ரீதியில் ''பாடுபடுவது'' மட்டுமின்றி தன் வரலாற்றுக் கடமையை உணர்வு பூர்வமாக நிறைவேற்றுகிறது—அதன் போராட்டத்தை மென்மேலும் வெற்றிகரமாக்குகிறது, உழைக்கும் மக்களை அமைப்பு ரீதியாகத் திரட்டுபவன், அவர்களின் தலைவன் என்ற பாத்திரத்தை நிறைவேற்ற உதவுகிறது.

பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுக் கடமையைப் பற்றி 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மார்க்ஸ், எங்கெல்ஸ் செய்த முடிவு முதலாளித்துவ சமூகம் மற்றும் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் பிற்கால வளர்ச்சியில் நிரூபிக்கப்பட்டது. முதலாளித்துவம் வளர்ச்சி அடைந்த பொழுது அளவுரீதியில், அதாவது எண்ணிக்கையில் மற்றும் குணரீதியில் (இந்த வளர்ச்சி எப்பொழுதுமே நேர்கோடாக ஏற்படவில்லை, எல்லா இடங்களிலும் ஏற்படவுமில்லை) வளர்ச்சி

* Karl Marx and Frederick Engels, "The Holy Family" in Marx, Engels, *Collected Works,* Vol. 4, Progress Publishers, Moscow, 1975, p. 37.

யடைந்த ஒரே வர்க்கம் பாட்டாளி வர்க்கமே. அதாவது அது ''தனக்குரிய வர்க்கமாக'' வரலாற்றை உருவாக்குகின்ற உணர்வு பூர்வமான அகப்பொருளாக மாறியது. லெனின் பாட்டாளி வர்க்கத்தை முதலாளி வர்க்கத்தைத் தூக்கியெறிவதற்கு ''வாழ்க்கையின் பொருளாதார நிலைமைகளால் தயாரிக்கப்படுகின்ற'' வர்க்கம் என்று கூறினார். ''இந்தப் பணியைச் செய்து முடிப்பதற்குரிய சாத்தியப்பாடும் சக்தியும் அதற்கு அளிக்கப்படுகின்றன. முதலாளி வர்க்கம் விவசாயிகளையும் எல்லா குட்டி முதலாளித்துவப் பகுதிகளையும் சிதைத்துச் சின்னா பின்னமாக்குகிறது; ஆனால் அது பாட்டாளி வர்க்கத்தை ஒரு சேர இணைத்து ஒன்றுபடுத்துகிறது, நிறுவன வழியில் ஒழுங்கமையச் செய்கிறது. பாட்டாளி வர்க்கம் மட்டும்தான்—பெருவீதப் பொருளுற்பத்தியில் அது ஆற்றும் பொருளாதாரப் பாத்திரம் காரணமாய்—உழைப்பாளர்களும் சுரண்டப்படுவோருமான மக்கள் எல்லோருக்கும் தலைவனாக வல்லது. ஒடுக்கப்பட்ட உழைப்பாளி மக்கள் அனைவரையும் முதலாளி வர்க்கம் சுரண்டி ஒடுக்கி நசுக்கிய போதிலும், பாட்டாளி வர்க்கத்தினரைக் காட்டிலும் குறைவாக அல்ல, பல சந்தர்ப்பங்களில் அதிகமாகவே சுரண்டி ஒடுக்கி நசுக்கிய போதிலும், இவர்கள் தமது விடுதலைக்காக **சுயேச்சையாய்ப்** போராடும் வல்லமை இல்லாதவர்கள்.''*

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 6, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1980, பக்கம் 42.

மார்க்சும் எங்கெல்சும் லெனினும் ஒருபோதும் பாட்டாளி வர்க்கத்தை இலட்சிய பூர்வமான தாக உயர்வுபடுத்திக் கூறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுவது அவசியம். முதலாளி வர்க்கத்தின் ஒடுக்குமுறையும் ஈவிரக்கமற்ற சுரண்டலும் சித்தாந்த மாய்மாலமும் பாட்டாளி வர்க்கத்திடம் முத்திரையைப் பதித்திருக்கின்றன என்பதை அவர்கள் நன்றாக அறிந்திருந்தார்கள். பாட்டாளி வர்க்கம் வாழ்கின்ற நிலைமைகள் புரட்சிகரமான தத்துவத்தைத் தயாரிப்பதற்கு அதற்கு வாய்ப்பளிப்பதில்லை. இதைப் புரட்சிகரமான தத்துவாசிரியர்கள் தொழிலாளி வர்க்கத்தின் அணிகளுக்குள் வெளியிலிருந்து நுழைக்க வேண்டும். கலாசார, விஞ்ஞான சாதனைகளை அனுபவிக்க முடியாமல் பாட்டாளி வர்க்கம் தடுக்கப்பட்டிருக்கிறது; அதன் விளைவாக அது கலாசார, கல்வித் தரத்தில் முதலாளி வர்க்கத்துக்குப் பின்தங்கியிருக்கிறது. சமூகத் தலைமையிலிருந்து பாட்டாளி வர்க்கம் ஒதுக்கப்பட்டிருக்கிறது; ஆகவே பல அடுக்கான சமூக அமைப்புகளை நிர்வாகம் செய்கின்ற அனுபவம் அதற்கு இல்லை; ஆனால் முதலாளி வர்க்கத்துக்கு அந்த அனுபவம் இருக்கிறது. எனவே பாட்டாளி வர்க்கம் கடுமையாகப் பாடுபட்டு புரட்சிகரத் தத்துவத்தையும் கலாசாரத்தையும் சமூகத்துக்குத் தலைமை தாங்குகின்ற நுட்பத்தையும் தன்வயப்படுத்த வேண்டும், தன்னுடைய வரலாற்றுக் கடமையைப் பூர்த்தி செய்வதற்குத் தன்னைத் தயாரித்துக் கொள்ள வேண்டும், பல வருடங்கள் பாடுபட்டால்தான்

இத்தகுதிகளைப் பெற முடியும்.

ஆனால் பாட்டாளி வர்க்கம் சமூகத்தில் தன்னுடைய நிலையின் காரணமாக—இதுவே முக்கியமான கூறு ஆகும்—சமூகத்தை வழி நடத்துவதற்கும் புரட்சிகரப் பெருந்திரளினரது தலைவன் என்ற பாத்திரத்தை வகிப்பதற்கும், அதாவது கடைசியாகப் பார்க்கும் பொழுது மனித குலத்தை மூலதனத்தின் நுகத்தடியிலிருந்து விடுவிப்பதற்கும் தன்னைத் ''தயாரித்துக் கொள்கின்ற'' திறமையைப் பெற்றிருக்கிறது.

ஆகவே சோஷலிஸ்ட் புரட்சி என்பது மக்கள் புரட்சி. அதில் பாட்டாளி வர்க்கம் தலைமைச் சக்தியாக, புரட்சியின் சமூக அடிப்படையை அமைக்கின்ற மற்ற சக்திகளுக்குத் தலைவனாக இருக்கின்ற சமூக சக்தியாக இருக்கிறது. ஏகாதிபத்திய சகாப்தத்தில், சோஷலிஸ்ட் புரட்சிக்கு அவசியமான பொருளாயத முன்நிபந்தனைகள் முதலாளித்துவ அமைப்பு முழுவதிலும் முதிர்ச்சி அடைந்திருக்கின்ற பொழுது, ஜனநாயகத்துக்காக நடைபெறுகின்ற போராட்டம் சோஷலிசத்துக்காக நடைபெறுகின்ற போராட்டத்துடன் பின்னிப் பிணைந்திருக்கின்ற பொழுது பாட்டாளி வர்க்கம் தலைமைச் சக்தி என்ற பாத்திரத்தை சோஷலிஸ்ட் புரட்சிக் கட்டத்தில் மட்டுமல்லாமல் அதற்கு முந்திய முதலாளித்துவ-ஜனநாயகக் கட்டத்திலும் வகிக்க முடியும் என்பதை லெனின் சுட்டிக்காட்டினார்.

புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் நேச சக்தி

எது? மார்க்சும் எங்கெல்சும் **விவசாயிகளை** அத்தகைய நேச சக்தியாகக் கருதினார்கள். விவசாயிகளுடன் கூட்டணி அமைத்து விட்டால் பாட்டாளி வர்க்கப் புரட்சி ''கூட்டிசையாக மாறும், இல்லையென்றால் எல்லா விவசாய நாடுகளிலும் அதன் தனிப் பாட்டு கடைசிப் பாட்டாகவே இருக்கும்''* என்று மார்க்ஸ் பொருத்தமாகக் கூறினார்.

பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையில் புரட்சிகரமான கூட்டணி அமைக்கின்ற கருத்து லெனினால் தத்துவரீதியில் விரித்துரைக்கப்பட்டது. விவசாயிகள் மக்கள் தொகையில் பெரும்பான்மையாக அல்லது கணிசமான பகுதியாக இருக்கின்ற ருஷ்யா மற்றும் இதர நாடுகளில் இக்கூட்டணியை சோஷலிஸ்ட் புரட்சியின் வெற்றிக்கு உத்தரவாதமாக லெனின் கருதினார். விவசாயிகளின் சமூக வகைவேறுபாட்டைக் கவனத்தில் எடுத்துக்கொண்ட லெனின் புரட்சியின் சில கட்டங்களில் பாட்டாளி வர்க்கத்தை விவசாயிகள் அனைவரும் அல்லது குறைந்தபட்சம் அவர்களில் முக்கியமான பகுதியினர் பின்பற்றுவார்கள், மற்ற கட்டங்களில் சில பகுதியினர் (முதலாவதாக, மிகவும் ஏழ்மையான பகுதியினர்) பின்பற்றுவார்கள் என்று லெனின் கூறினார். மார்க்சைப் போலவே லெனினும் வர்க்கக் கூட்டணிகளைப் பற்றிக்

* கா. மார்க்ஸ், **லூயீ போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர்**, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1983, பக்கம் 206.

கண்டிப்பான ஆணைகளை அல்லது வரையறுப்பு களைக் கூறவில்லை, வரப்போகின்ற புரட்சிகள் புதிய, தனித்தன்மை கொண்ட பலவற்றைக் கொடுக்க முடியும் என்று அவர் கருதினார். எனவே அவர் எதிர்காலத்தைப் பொறுத்த மட்டில் தன்னைக் கட்டுப்படுத்தாதது மட்டு மல்ல, அடுத்த தலைமுறைகளில் வரப்போகின்ற புரட்சிகரத் தத்துவாசிரியர்களையும் கட்டுப் படுத்தவில்லை.

புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் நேச சக்திகளில் விவசாயிகளுடன் நகரக் குட்டி முத லாளி வர்க்கமும் அலுவலக ஊழியர்களும் அறிவு ஜீவிகளில் சில பகுதியினரும் — இவர்கள் பாட் டாளி வர்க்கத்தின் நிலையை ஆதரிக்கிறார்கள் அல்லது தங்களுடைய சொந்த நிலைகளில் நின்று பொது விரோதிக்கு எதிரான போராட் டத்தில் பாட்டாளி வர்க்கத்துக்கு உதவி செய் கிறார்கள் — சேர்கின்றனர் என்பதை 19ம் நூற் றாண்டின் வர்க்கப் போராட்டங்கள் எடுத்துக் காட்டின.

முதலாளித்துவ-சீர்திருத்தவாத மற்றும் இடது தீவிரவாதத் தத்துவாசிரியர்கள் சமீபத்திய பத்தாண்டுகளில் அரசு-ஏகபோக முதலாளித் துவ வளர்ச்சி மற்றும் விஞ்ஞான-தொழில்நுட்ப வியல் புரட்சியின் வளர்ச்சி ஆகியவற்றினால் முதலாளித்துவ சமூகத்தின் சமூகக் கட்டமைப் பில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள், முதலாளி வர்க்கம் பின்பற்றுகின்ற சமூகக் கொள்கை, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்

திருப்பது ஆகியவற்றைப் பயன்படுத்தி பாட்டாளி வர்க்கம் இப்பொழுது முதலாளி வர்க்க மதிப்புத் தகுதிகளைப் பகிர்ந்து கொள்கிறது, அது முதலாளித்துவ அமைப்புக்குள் ''இழுக்கப் பட்டுவிட்டது'', அதன் முந்திய புரட்சிகரப் பாத்திரத்தை, புரட்சிக்குத் தலைமையேற்கும் தகுதியை இழந்து விட்டது என்று கூறுகிறார்கள். தலைமைப் பாத்திரத்தை இளைஞர்களும் (பிரதானமாக மாணவர்கள்) அறிவுஜீவிகளுமே வகிக்க முடியும் என்று 1960க்களிலும் 1970க்களிலும் இடது தீவிரவாதத் தத்துவாசிரியர்கள் கூறினார்கள்.

உலக யுத்தத்துக்குப் பிந்திய காலகட்டத்தில் வெளிப்படையாக இருந்த சில நிகழ்வுகள் மற்றும் போக்குகளை, குறிப்பாக முதலாளித்துவ நாடுகளில் உழைக்கும் மக்களின் பொருளாயதத் தரம் உயர்ந்திருப்பதைத் தனிமுதலாகக் கருதுவதன் அடிப்படையில் இவ்வாறு வாதிடப்பட்டது. வாழ்க்கைத் தர உயர்வு (இதை கம்யூனிஸ்டுகள் மறுக்கவில்லை) தொழிலாளி வர்க்கத்தின் சில பகுதியினர் மத்தியில் சீர்திருத்தவாத பிரமைகளை ஏற்படுத்தியது. இவற்றை முதலாளி வர்க்கம் மட்டுமின்றி சில சமயங்களில் தொழிற்சங்கத் தலைமையும் தூண்டி விட்டன. மேலும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் புரட்சியின் விளைவாகத் தொழிலாளி வர்க்க அணிகள் விரிவடைந்திருக்கின்றன, கூலித் தொழிலாளர்களில் புதிய ரகத்தினர் ஏற்பட்டுள்ளனர். தொழிலாளி வர்க்கம் தற்பொழுது அதிகமான அடுக்குநிலையைக் கொண்டு, உள்ளமைப்பில்

ஒரே சீராக இல்லாததாகி விட்டது. அதன் தனித்தனிப் பிரிவுகள் வெவ்வேறு கருத்துக் களைக் கொண்டிருக்கின்றன, சமூக முனைப்பில் வெவ்வேறு தன்மைகளைக் கொண்டிருக்கின்றன.

அப்படியானால் தொழிலாளி வர்க்கம் அதன் தேவைகளில் முதலாளி வர்க்கத்துக்குச் சமமாகி விட்டது, அது மொத்தமும் முதலாளி வர்க்கத் தன்மையை அடைந்து விட்டது என்பது இதன் அர்த்தமா? முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான உறவுகள் தமது முரணியல் தன்மையை இழந்து விட்டதாக அர்த்தமா? நிச்சயமாக இல்லை. பாட்டாளி வர்க்கம் எப்பொழுதுமே ஒரே சீராக இருந்த தில்லை. ''பாட்டாளி வர்க்கத்தாருக்கும் அரை குறைப் பாட்டாளி வர்க்கத்தாருக்கும்... இடைப் பட்ட ஏராளமான பல்வேறு வகையோராலும் 'தூய்மையான' பாட்டாளி வர்க்கம் சூழப்பட் டிராவிடில்... பாட்டாளி வர்க்கமே கூட அதிக வளர்ச்சி பெற்ற பகுதியாகவும் அவ்வளவாக வளர்ச்சி பெறாத பகுதியாகவும் பிரிக்கப்பட் டிராவிடில், பிரதேசம், தொழில், சில நேரங் களில் மதத்தின் அடிப்படையிலும், பிற வழி களிலும் அது பிரிக்கப்பட்டிராவிடில்... முத லாளித்துவம் முதலாளித்துவமாக இராது...''[*]

இன்று இந்த வேறுபாடு அதிகரித்திருக்கிறது. ஏனென்றால் விவசாயத் தொழிலாளர்கள் (பிர

---

[*] வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதி களில், தொகுதி 10, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1981, பக்கம் 273.

தானமாக, நடுத்தர வளர்ச்சி அல்லது குறை வான வளர்ச்சியடைந்த நாடுகளில்), அலுவலக ஊழியர்கள், பொறியியலாளர்கள், தொழில் நுட்ப நிபுணர்கள் மற்றும் சமூக விஞ்ஞானி களில் ஒரு பகுதியினர்—இவர்கள் சமூகக் கடந்த காலத்துடன் மனோபாவத்திலும் உளவியலிலும் இன்னும் முறித்துக் கொள்ளாதவர்கள்—தொழி லாளி வர்க்கத்துடன் சேருகிறார்கள். இப்பகுதி யினர் உடனே பாட்டாளி வர்க்க உணர்வைப் பெற்று விடுவதில்லை, எல்லாப் பிரச்சினை களிலும் முரணில்லாத பாட்டாளி வர்க்க நிலை யைப் பின்பற்றுவதில்லை. அவர்கள் பாட்டாளி வர்க்க சித்தாந்தத்தை ஏற்றுக்கொள்வதற்கும் தொழிலாளி வர்க்கத்தின் கருப் பகுதியைச் சுற்றித் திரளுவதற்கும் காலமும் வர்க்கப் போராட்ட அனுபவமும் வேண்டியிருக்கின்றன. அக்கருப் பகுதி முன்போலவே, இப்பொழுதும் தொழில்துறைப் பாட்டாளி வர்க்கமே; முத லாளித்துவ சமூகத்திற்குள் அதன் நிலை கொள் கையளவில் மாறவில்லை. முன் போலவே மொத்தத் தொழிலாளி வர்க்கமும் (உடைமை யாளர் என்ற அர்த்தத்தில்) உற்பத்திச் சாதனங் களை, உழைப்பின் பலனைப் பெறாமலிருக்கிறது, உற்பத்தி நிகழ்வுப் போக்கை நிர்வகிப்பதிலிருந் தும் சமூகத்தின் அரசியல் விசைகளை இயக்கு வதிலிருந்தும் தடுக்கப்பட்டிருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், அது சுரண் டப்படுகின்ற, ஒடுக்கப்படுகின்ற, கீழ்ப்படுத் தப்படுகின்ற வர்க்கமாக இருக்கிறது. ஆனால் பல உதாரணங்களில் (குறைந்த பட்சம் சமா

தான காலத்தில்) ஒடுக்குமுறையும் கீழ்ப்படுத்தலும் சுரண்டலும் அதிகமாக வெளித்தெரிவதில்லை, அவை ஓரளவுக்கு ''மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன''. முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலுள்ள உறவுகளில் எப்பொழுதுமே இருக்கின்ற உள்-எதிர்ப்பும் முரண்பாடும் நீடிக்கின்றன, சமூகத்தைப் புரட்சிகரமான முறையில் மாற்றியமைப்பதற்குப் பாடுபடும்படி அவை பாட்டாளி வர்க்கத்தைத் தூண்டுகின்றன என்பவை இதன் பொருளாகும்.

முன்போலவே, முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளி வர்க்கம் நேச சக்திகள் இல்லாமல் முதலாளி வர்க்கத்தை முறியடிக்க முடியாது. மக்கள் தொகையில் விவசாயிகள் கணிசமாக இருக்கின்ற நாடுகளில் அவர்கள் பாட்டாளி வர்க்கத்தின் நேச சக்தியாக இருக்கிறார்கள். மேலும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் நகரக் குட்டி முதலாளி வர்க்கம், அலுவலக ஊழியர்கள், அறிவுஜீவிகள், அதாவது ''மத்தியதர வர்க்கத்தினர்'' என்று வழக்கமாகச் சொல்லப்படுகின்ற சக்திகள் ஜனநாயகம் மற்றும் சோஷலிசத்துக்காகப் பாட்டாளி வர்க்கம் நடத்துகின்ற போராட்டத்தில் முக்கியமான பாத்திரத்தை வகிக்கக் கூடும்.

''வரவிருக்கும் எல்லாச் சமுதாயப் புரட்சிகளிலும் குட்டி முதலாளி வர்க்கம் ஒன்றிணைந்த ஒரு பகுதியாக அமைந்திருக்கும்''* என்று

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 1, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1983, பக்கம் 278.

மார்க்ஸ் எழுதினார். குட்டி முதலாளி வர்க்கம் பங்கெடுக்காத, அதே சமயத்தில் முதலாளித்துவ சமூகத்தில் தான் வகிக்கின்ற இடைநிலையான சமூக நிலைமையிலிருந்து தோன்றுகின்ற தன்னுடைய இரட்டைத் தன்மையை அது அம்பலப்படுத்தாத சோஷலிஸ்ட் புரட்சி ஒன்று கூட இல்லை என்பது உண்மையே.

குட்டி முதலாளி உழைப்பாளியாகவும் உடைமையாளராகவும் முதலாளியாகவும் ''மக்களின் பிரதிநிதியாகவும்'' இருக்கிறார். அவர் ''மேலே வந்து விடுவதற்கு'', அதாவது முதலாளியாக மாறுவதற்கு அல்லது குறைந்த பட்சம் சிறு உடைமையாளர் என்ற முறையில் தன்னுடைய அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்வதற்குப் பாடுபடுகிறார்; ஆனால் பெருந் தொழில் அவரைத் தொடர்ச்சியாக நசுக்குகிறது, அகற்றுகிறது, அவரைப் பாட்டாளியாக்குகிறது, அல்லது பலவந்தமாகத் தன்னுடைய ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருகிறது. பெருந் தொழில் குட்டி முதலாளி வர்க்கத்தை முற்றிலும் அகற்ற முடியாது என்பது உண்மையே; மேலும் லாபகரமாக இல்லாத சில உற்பத்தித் துறைகளுக்கும் சேவைகளுக்கும் குட்டி முதலாளி வர்க்கம் அதற்கு அவசியமாக இருக்கிறது. அது சிறு தொழில்முனைவரின் நிரந்தரமான புனருற்பத்தியை ஓரளவுக்கு ஊக்குவிக்கிறது, அவரை ஏகபோக மூலதனத்தின் மீது நம்பிக்கை வைக்கும்படி செய்கிறது. ஆனால் சிறு உடைமையாளரை மரபுவழிப்பட்ட துறைகளிலிருந்து வெளியேற்றுதல் (மற்றும் நசுக்குதல்)—நடுத்தர

மான வளர்ச்சியைக் கொண்ட நாடுகளில் இது குறிப்பிடத்தக்க வேகத்தோடு வெளிப்படுகிறது— அவருடைய சுதந்திரத் தொழில் துறையைக் குறுக்குதல், அவர் பெருந் தொழிலைச் சார்ந் திருப்பதை அதிகப்படுத்துதல் மற்றும் ஒப்பீட் டளவில் அவருடைய வாழ்க்கை நிலைமைகளை மோசமாக்குதல் என்ற போக்கு தெளிவாகப் புலப்படுகிறது. இப்போக்கின் விளைவாகக் குட்டி முதலாளி வர்க்கம் எதிர்காலத்தில் நம் பிக்கை இழக்கிறது, அதன் அணிகள் மத்தியில் கவலை அதிகரிக்கிறது. குட்டி முதலாளி இந்த நிலைமையிலிருந்து தப்புவதற்குத் தான் இன் னும் வகித்துக் கொண்டிருக்கின்ற நிலைகளைப் பாதுகாக்கும் ஜீவ மரணப் போராட்டத்தில் ஈடுபடுகிறார்—இது பெரும்பான்மையும் அவரை வலதுசாரித் திசைக்குத் தள்ளுகிறது, பிற் போக்கு சக்திகள் இதைப் பயன்படுத்திக் கொள் கின்றன—அல்லது சமூகத்தைத் தீவிரமாக மாற்றியமைக்கப் பாடுபடுகிறார்—இது அவரை அராஜகவாதியாக மாற்றக்கூடும். எனினும் அவர் தீவிரமான சமூக மாற்றத்துக்குப் பாடுபடு வது ஏகபோகங்களையும் ஏகாதிபத்தியத்தையும் (ஏகாதிபத்தியத்தை நேரடியாகச் சார்ந்திருக் கின்ற நாடுகளில், உதாரணமாக லத்தீன் அமெ ரிக்க நாடுகளில்) எதிர்த்துப் போராடுவதற்கு, சமூகத்தை ஜனநாயகப்படுத்துவதற்கு, பின்னர் சோஷலிஸ்ட் மாற்றங்களை அமுல் நடத்து வதற்குக் கூட அவருடன் கூட்டணி வகுப்பதற்குப் புறவய முன்நிபந்தனை என்று கருதலாம்.

முதலாளித்துவ சமூகத்தில் முதலாளி வர்க்கத்

துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடை நிலையை வகிக்கின்ற மற்ற ''மத்தியதர வர்க்கத்தினரின்'' (பிரதானமாக பாட்டாளி வர்க்கத்தை அல்லது முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்திராத அலுவலக ஊழியர்களின் பிரிவுகள்) நிலை தெளிவின்றியும் பாதுகாப்பில்லாமலும் இருக்கிறது. குட்டி முதலாளி வர்க்கத்தைப் போலவே இவர்களும் இரண்டு வர்க்கங்களுக்கு இடையில் ஊசலாடுகிறார்கள்; ஆனால் அவர் களுடைய புறவய நிலை அவர்களைப் பாட்டாளி வர்க்கத்தின் தரப்புக்கு அதிகமாகத் தள்ளு கிறது, அதன் நேச சக்தியாகச் செய்கிறது.

நம் கால முதலாளித்துவ சமூகத்தில் அறிவு ஜீவிகளின் நிலையும் பாத்திரமும் தனிக் கவனத் துக்கு உரியவை. அண்மைக் காலம் வரை அவர் கள் ஒப்பீட்டளவில் சிறிய பகுதியாகவே இருந் தார்கள், உபரி மதிப்பு உற்பத்தி முறைக்குள் மொத்தமாக இழுக்கப்பட்டுவிடவில்லை. அறிவு ஜீவி உண்மையில் மூலதனத்தை நம்பியிருப்பதை மறைப்பதற்கு இது உதவியது, அவர் தன்னை சுதந்திரமான படைப்பாளியாக, ''சந்தடிக்கு'' அப்பால் இருக்கின்ற ''கட்டுப்பாடில்லாத மனித ராகக்'' கருதுவதை சாத்தியமாக்கியது. அறிவு ஜீவிகள் மரபுவழிப்பட்ட கட்டுப்பாடுகளை மீறிப் பாட்டாளி வர்க்கத்தின் தரப்புக்கு எப்பொழு துமே வருவதுண்டு என்றாலும் அவர்களில் பெரும்பான்மையினர் இன்னும் முதலாளி வர்க்கத் தரப்பிலேயே இழுக்கப்பட்டனர். முதலாளித் துவ சமூகத்தில் அறிவுஜீவிகளின் நிலை சமீப வருடங்களில் மாற்றமடைந்திருக்கிறது; உயர்ந்த

தகுதிகளைக் கொண்ட நிபுணர்கள் தேவையி னால் அவர்களுடைய எண்ணிக்கை கணிசமாக அதிகரித்திருக்கிறது; ஆனால் அவர்களில் பலர் கூலி உழைப்பாளிகளாக மாறியிருப்பதே முக்கிய மான மாற்றமாகும். சிலர் பாட்டாளி வர்க்க அணிகளில் சேர்ந்து விட்டார்கள், மற்றவர்கள் முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத் துக்கும் இடைநிலையில் இருக்கிறார்கள். இவர் களுடைய நிலை குட்டி முதலாளி வர்க்கம் மற்றும் அலுவலக ஊழியர்களின் நிலையைப் போன்றதே என்பதை 1960க்களிலும் 1970க்களி லும் நடைபெற்ற சம்பவங்கள் நிரூபித்தன. அப்பொழுது அறிவுஜீவிகளில் ஒரு பகுதியினர் குட்டி முதலாளி வர்க்கத்துடன் சேர்ந்து ஏக போக எதிர்ப்பு, ஜனநாயகக் கோரிக்கைகளுக் காக முன்வந்தார்கள்; தாங்கள் முதலாளி வர்க்கம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டிய சமூக சக்தி என்பதை அறிவித்தார்கள்.

அரசியல் போராட்டத்தில் மாணவர்களும் சுறுசுறுப்பான பாத்திரத்தை வகிக்கிறார்கள். சற்று முந்திய காலம் வரை அவர்கள் ஒப்பீட் டளவில் மக்கள் தொகையில் சிறிய, சலுகை பெற்ற பகுதியாக இருந்தார்கள், அவர் களுடைய எதிர்காலம் பாதுகாப்பாக இருந்தது. மொத்தத்தில் அவர்கள் தொழிலாளி வர்க்கத் தினரிடமிருந்து ஒதுங்கி நின்றார்கள். ஆனால் முதலாளித்துவ சமூகத்தில் அறிவுஜீவிகளின் நிலையில் ஏற்படுகின்ற மாற்றம் தவிர்க்க முடியாத விதத்தில் மாணவர்களுடைய நிலை யிலும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அவர்

களுடைய எண்ணிக்கை அதிகரிக்கிறது, ஜன நாயகக் கூறு அதிகமான அழுத்தத்துடன் வெளிப் படுகிறது, எதிர்கால வாய்ப்புகள் மேலும் குறை கின்றன. அவர்களில் பலர் இப்பொழுது உழைக் கின்ற அறிவுஜீவிகளின்—அவர்களுடைய வாழ்க் கைத் தரம் தொழிலாளி வர்க்கத்தின் வாழ்க் கைத் தரத்தைப் போல இருக்கிறது—பகுதி களில் சேரும்படி ''விதிக்கப்பட்டிருக்கிறார்கள்''.

1863இல் சோஷலிஸ்ட் மாணவர்களின் உலக காங்கிரசுக்கு எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதி னார்: ''மாணவர்கள் மத்தியிலிருந்துதான் அறிவுப் பாட்டாளி வர்க்கம் தோன்றப் போகிறது, வரப்போகின்ற புரட்சியில் தங்க ளுடைய சகோதரர்களான உடல் உழைப்பாளி களுடன் தோளோடு தோள் சேர்ந்து, அவர் களுடைய அணிகளில் நின்று அது கணிசமான பாத்திரத்தை வகிக்கப் போகிறது என்ற உண் மையைப் பற்றிய உணர்வை உங்கள் முயற்சி கள் மாணவர்களிடம் ஏற்படுத்தட்டும்.''* எங் கெல்ஸ் மாணவர்களின் (எதிர்கால அறிவுஜீவி களின்) புரட்சிகரமான பாத்திரத்தை அறிவின்—அறிவுஜீவிகள் தானே அதைப் பரப்புகிறார்கள்—முக்கியத்துவத்துடன் இணைத்து உழைப்பின் விடுதலைக்கும் புரட்சி வெற்றியடைவதற்கு முன்நிபந்தனை என்ற முறையில் கலாசாரத் தைத் தன்வயமாக்குவதற்கும் உள்ள பிரிக்க

---

* Friedrich Engels, "[An den Internationalen Kongress sozialistischer Studenten]". In Marx/Engels, *Werke*, Bd. 22, S. 415.

முடியாத இணைப்பை வலியுறுத்தினார். ''கடந்த கால முதலாளி வர்க்கப் புரட்சிகள் எதிர்கால அரசியல் தலைவர்களை உருவாக்குகின்ற மிகச் சிறந்த மூலப்பொருள் என்ற முறையில் பல் கலைக்கழகங்களிலிருந்து வழக்குரைஞர்களை மட்டுமே கோரின; தொழிலாளி வர்க்கத்தின் விடு தலை அதனுடன் சேர்ந்து டாக்டர்கள், பொறி யியலாளர்கள், இரசாயன நிபுணர்கள், வேளாண் மையியல் நிபுணர்கள் மற்றும் இதர நிபுணர் களைக் கோருகிறது; ஏனென்றால் அரசியல் இயந்திரத்தை நிர்வகிப்பது மட்டுமல்லாமல் மொத்த சமூக உற்பத்தியை நிர்வகிப்பதும் இங்கே சம்பந்தப்பட்டிருக்கிறது.''*

மாணவர்கள் புரட்சிகர இயக்கத்தில் சேருவது (அவர்கள் ஒரு சுதந்திரமான சமூக வர்க்கமாக ஒருபோதும் இருக்கவில்லை, அவர்கள் வெவ்வேறு சமூக வர்க்கங்கள் மற்றும் பிரிவுகளிலிருந்து வருகிறார்கள்) எளிமையான விஷயமல்ல என்பது உண்மையே. மாணவர்களின் வேறுபாடான தன்மை மட்டும் இதற்குக் காரணமல்ல, அவர் களுடைய உணர்வுக்கும் இருத்தலுக்கும் இடை யிலுள்ள இடைவெளியும் இதற்குக் காரணம். தொழிலாளர்களும் மாணவர்களைப் பற்றி சந்தேகப்படுகிறார்கள், கூலியடிமைத்தனம் என்ற கசப்பான ரொட்டியைச் சாப்பிடாத ''செல்லக் குழந்தைகள்'' என்று அவர்களை நினைக்கிறார் கள். மாணவர்கள் கூலி உழைப்பாளிகளாக மாறியிருந்த போதிலும் அவர்கள் இன்னும்

---

* *Ibid.*, p. 415.



8–518

பாட்டாளி வர்க்க உணர்வைத் தன்வயமாக்கிக் கொள்ளவில்லை. தீவிரமான சமூக மாற்றங்களை (அவர்களுடைய சொந்த நலன்களுக்காக) நிறைவேற்றுகின்ற தகுதி வாய்ந்த சக்தியாகிய தொழிலாளி வர்க்கத்துடன் அவர்கள் இணைப்புகளை ஏற்படுத்திக் கொள்கின்ற பொழுது, தம்முடைய சொந்த சமூக-அரசியல் அனுபவத்தைத் திரட்டுகின்ற நிகழ்வுப் போக்கில் மாணவர்களில் ஒரு பகுதியினர் ஜனநாயக மற்றும் சோஷலிச மாற்றங்களுக்கான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் நேச சக்தியாக மாறுகிறார்கள்.

நகரங்களிலும் கிராமப் பகுதிகளிலும் உள்ள குட்டி முதலாளி வர்க்கப் பகுதியினரைப் புரட்சியின் தரப்புக்குக் கொண்டுவருகின்ற பிரச்சினை இராணுவத்தின் நிலையுடன் நெருக்கமாக சம்பந்தப்பட்டிருக்கிறது. இராணுவத்தை அரசியல் மற்றும் வர்க்கப் போராட்டத்திலிருந்து ஒதுக்கி வைக்க முடியாது என்பதை வரலாற்று அனுபவம் எடுத்துக்காட்டுகிறது. சமூகத்தின் பிரதானமான சக்திகளுக்கு இடையில் ஏற்படும் மோதல் இராணுவத்தின் மீதும் தாக்கத்தைக் கொண்டிருக்கிறது. அதற்கு நெருக்கமான குழு உணர்ச்சி இருந்தாலும் சமூக மற்றும் அரசியல் அடிப்படையில் அது ஒரே சீரானதல்ல; புரட்சிகரப் போக்குகள் அதன் அணிகளிலும் ஊடுருவுகின்றன.

இராணுவத்தில் ஒரு பகுதியைப் புரட்சியின் தரப்புக்கு இழுப்பது மென்மேலும் அவசரமாகி விட்டது. ஏனென்றால் பல நாடுகளில் இராணு

வம் முக்கியமான சமூக மற்றும் அரசியல் பாத்திரத்தை வகிக்கிறது, பெரும்பான்மையாக சுதந்திரமான அரசியல் சக்தியாக (சந்தர்ப்பங்களைப் பொறுத்து புரட்சிகரமாக அல்லது எதிர்ப்புரட்சிகரமாக இருக்கலாம்) இயங்குவதற்கு முயற்சி செய்கிறது. இராணுவம் சமூக சுதந்திரத்துக்கும் அரசியல் தலைமைக்கும் உரிமை கொண்டாடுவது எப்பொழுதுமே ஆதாரமற்றது என்று கூற முடியாது. ஏனென்றால் பல நாடுகளில், குறிப்பாக, குறைவான வளர்ச்சியடைந்த நாடுகளில் இராணுவம் அதன் ஒடுக்கும் சக்தியில் (இது இயற்கையானதே) மட்டுமல்லாமல், அதன் ஸ்தாபனம், எங்கும் செல்லுந்தன்மை, கல்வி மற்றும் நவீன விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அறிவு (இராணுவத்தின் அதிகாரிகள் பிரிவுக்கு இது அதிகமான அளவுக்கு உண்மையாகும்) ஆகியவற்றிலும் மற்ற அமைப்புகளையும் சமூகப் பிரிவுகளையும் இது விஞ்சி நிற்கிறது. ஆகவே ஒரு நாட்டின் வளர்ச்சியில் நெருக்கடியான தருணத்தில் புரட்சிகர சக்திகளுக்கு அல்லது எதிர்ப்புரட்சிச் சக்திகளுக்குத் தீர்மானகரமான பலத்தைத் தரக் கூடிய சுயேச்சையான சக்தியாக இராணுவம் பெரும்பாலும் முன்வருகிறது.

இராணுவத்தினர் மத்தியில் கருத்துக்களைப் பரப்புவதில் போதிய கவனமில்லாதிருப்பது அல்லது புரட்சிகர சக்திகளுக்கும் எதிர்ப்புரட்சிச் சக்திகளுக்கும் மோதல் ஏற்படுகின்ற தருணத்தில் இராணுவம் ''அரசியலமைப்புச் சட்டத்துக்கு விசுவாசமாக'' இருக்கும், அது நடு

நிலையை வகிக்கும் என்று நம்புவது புரட்சிகர இயக்கத்துக்குத் தீவிரமான ஆபத்தை ஏற்படுத்தும். புரட்சிகர நிகழ்வுப் போக்கில் இராணுவம் ஒற்றைப் பாளக்கல்லாக இருப்பதில்லை என்பதை வரலாறு எடுத்துக்காட்டியிருக்கிறது. படைவீரர்கள் மத்தியில் மட்டுமல்லாமல் அதிகாரிகள் பிரிவிலும் பிளவு ஏற்படுகிறது. எனவே இராணுவத்தினரிடம் பரவியுள்ள போக்குகளையும் மனோபாவங்களையும் பற்றி உரிய நேரத்தில் ஆராய்வதும் கம்யூனிஸ்டுகளின் நிலையைப் பற்றிப் படைவீரர்கள் மற்றும் அதிகாரிகள் மத்தியில் கருத்து விளக்கப் பிரச்சாரம் செய்வதும் அதன் மூலம் நாட்டை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை ஜனநாயக ரீதியில் தீர்ப்பதை ஆதரிக்கின்ற பகுதியை புரட்சியின் தரப்புக்கு இழுத்துக் கொள்வதும் அவசியமாகும்.

புரட்சிகர சக்திகளின் அரசியல் கூட்டணியின் ஸ்தூலமான கட்டமைப்பும் வடிவமும் காலம் மற்றும் இடத்தின் நிலைமைகளால், குறிப்பாக, புரட்சியின் கட்டத்தினால் நிர்ணயிக்கப்படுகின்றன. எனினும் புரட்சிகர சக்திகளின் நடவடிக்கை வெற்றியடைவதற்கு மூன்று நிபந்தனைகள் அவசியமானவை: 1) அவை மார்க்சிய-லெனினியக் கட்சியின் தலைமையிலுள்ள தொழிலாளி வர்க்கத்தினால் தலைமை தாங்கப்பட வேண்டும்; 2) உழைக்கும் மக்களின் பாட்டாளி வர்க்கம் அல்லாத பகுதியின் பெரும்பான்மையினருடன் கூட்டணி இருக்க வேண்டும்; 3) உலகப் புரட்சிகர இயக்கத்துடன் கூட்டணி இருக்க வேண்டும்.

## 10. பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர முன்னணிப்படை

புரட்சியின் இயக்கு சக்தி, தலைமையான சக்தி என்ற முறையில் தொழிலாளி வர்க்கத்தைப் பற்றிப் பேசுகின்ற பொழுது அதன் புரட்சிகர முன்னணிப்படையாகிய மார்க்சிய-லெனினியக் கட்சியைப் பற்றி நாம் எழுத வேண்டும். ''பாட்டாளி வர்க்கம் அந்தத் தீர்மானகரமான தினத்தன்று வெற்றியடைவதற்குப் போதிய வலிமையைக் கொண்டிருக்க வேண்டுமென்றால் அது மற்ற எல்லாவற்றிலிருந்தும் தனித்திருக்கின்ற, அவற்றுக்கு எதிரான தனிக் கட்சியை, வர்க்க உணர்வைக் கொண்ட கட்சியை அமைத்துக் கொள்ள வேண்டும்; மார்க்சும் நானும் 1847இலிருந்தே இதை வலியுறுத்தி வந்திருக்கிறோம்''* என்று எங்கெல்ஸ் 1889இல் எழுதினார்.

சர்வதேசத் தொழிலாளி வர்க்கம் பெற்ற அரசியல் அனுபவத்தையும் புதிய வரலாற்று நிலைமைகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டு லெனின் கட்சியைப் பற்றிய மார்க்சிய போதனையை விரித்துக் கூறினார். ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் தலைவர் தனக்கு முன்பிருந்த விஞ்ஞான சோஷலிசத்தின் மூலவர்களைப் போலவே தொழிலாளி வர்க்கத்தின்

---

* "Engels to Gerson Trier in Copenhagen. London, December 18, 1889." In Marx, Engels, *Selected Correspondence,* p. 386.

புரட்சிகரமான கட்சியை கட்டமைப்பு, சமூக அடிப்படை, செயல்கள், செயல்திட்ட இலக்குகள், கடமைகள் ஆகியவற்றில் கொள்கையளவில் முதலாளி வர்க்கக் கட்சிகளிலிருந்து வேறுபடுகின்ற ஒரு ''விசேஷமான'' அமைப்பாகக் கண்டார். கட்சியைக் கட்டுவதில் சந்தர்ப்பவாதக் கொள்கையை லெனின் உறுதியாக நிராகரித்தார். அக்கொள்கை ''...தொழிலாளர் கட்சியின் உறுப்பினர்களை உயர்ந்த சம்பளம் பெறும் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளாய்ச் செயல்படுவதற்கு—வெகுஜனங்களுடன் தொடர்பு இழந்து, முதலாளித்துவத்தில் எப்படியோ ஓரளவு 'நல்லபடியாகவே' இருந்து, எச்சில் துண்டுக்காகத் தமது பிறப்புரிமையையே விற்கும், அதாவது முதலாளி வர்க்கத்தை எதிர்த்து மக்களது புரட்சிகரத் தலைவர்களாய்த் தாம் ஆற்ற வேண்டிய பாத்திரத்தைத் துறந்து விடும் இத்தகைய பிரதிநிதிகளாய்ச் செயல்படுவதற்கு—பயிற்றுவிக்கிறது.''*

இங்கே ஒரு விஷயத்தை முதலில் குறிப்பிட்டாக வேண்டும். மார்க்சிய-லெனினியக் கட்சிக்கும் முதலாளி வர்க்க, சந்தர்ப்பவாதக் கட்சிகளுக்கும் இடையில் கொள்கையளவில் வேறுபாடு இருந்தாலும் மார்க்சிய-லெனினியக் கட்சி செயல்முறையில் நெகிழ்ச்சியைக் கடைப்பிடிக்கக் கூடாது, புரட்சியின் நலன்களுக்காக

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 6, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1980, பக்கங்கள் 43—44.

மற்ற கட்சிகளுடன் தற்காலிகக் கூட்டணிகளை அமைக்கக் கூடாது, சில பிரச்சினைகளில் அவற்றை ஆதரிக்கக் கூடாது என்பது இதன் அர்த்தமல்ல. மேலே குறிப்பிடப்பட்ட கடிதத்தில் எங்கெல்ஸ் மேலும் எழுதினார்: ''மற்ற கட்சிகளுடன் செய்யப்படுகின்ற எவ்விதமான மற்றும் ஒவ்வொரு ஒத்துழைப்பையும்—மிகவும் தற்காலிகமானவற்றைக் கூட—நீங்கள் கொள்கையளவில் நிராகரிக்கிறீர்கள். குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் அது அதிகச் சாதகமானதாகவோ அல்லது குறைந்த பட்சம் குறைவான பாதகத்துடனோ இருக்குமானால் இந்த வழியைத் துறக்காமலிருக்கின்ற அளவுக்குப் போதுமான புரட்சிக்காரன் நான்.''* தொழிலாளி வர்க்கக் கட்சியின் ''விசேஷமான'' தன்மையை வலியுறுத்தி அவர் மேலும் கூறினார்: ''இக்கட்சி சில சமயங்களில் தன்னுடைய நோக்கங்களுக்காக மற்ற கட்சிகளை உபயோகிக்கக் கூடாது என்பது இதன் அர்த்தமல்ல. மற்ற கட்சிகளின் நடவடிக்கைகள் பாட்டாளி வர்க்கத்துக்கு நேரடியாகச் சாதகமாகவோ அல்லது பொருளாதார வளர்ச்சி அல்லது அரசியல் சுதந்திரத்தைப் பொறுத்த மட்டில் முற்போக்காகவோ இருக்குமானால் அவற்றைத் தற்காலிகமாக ஆதரிக்கக் கூடாது என்பதும் இதன் அர்த்தமல்ல.''**

---

* "Engels to Gerson Trier in Copenhagen. London, December 18, 1889." In Marx, Engels, *Selected Correspondence,* p. 386.

** *Ibid.,* p. 387.

மார்க்சியக் கட்சி முரணில்லாத செயல்திட்டத்தை நெகிழ்ச்சியான செயல்முறையுடன் பின்பற்றுவது தொழிலாளி வர்க்கம் மற்றும் எல்லா புரட்சிகர சக்திகளின் முன்னணிப்படை என்ற அதன் செயல்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அவசியம் என்பதைப் புரட்சிகர நடைமுறை நிரூபிக்கிறது. இச்செயல்கள் யாவை? அவற்றை லெனின் சுருக்கமாகக் கூறுகிறார்: ''மார்க்சியமானது தொழிலாளர் கட்சிக்குப் போதமளிப்பதன் மூலம் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப்படைக்குப் போதமளிக்கிறது. ஆட்சியதிகாரம் ஏற்று அனைத்து மக்களுக்கும் தலைமை தாங்கி சோஷலிசத்துக்கு அழைத்துச் செல்ல, புதிய அமைப்பை நெறிப்படுத்தி ஒழுங்கமைக்க, உழைப்பாளர்களும் சுரண்டப்படுவோருமான மக்கள் அனைவரும் முதலாளி வர்க்கம் இல்லாமலும் முதலாளி வர்க்கத்தை எதிர்த்தும் தமது சமுதாய வாழ்வினை ஒழுங்கமைத்துக் கொள்வதில் அவர்களுக்குப் போதகனாகவும் வழிகாட்டியாகவும் தலைவனாகவும் செயலாற்ற வல்லமை படைத்த இந்த முன்னணிப்படைக்கு அது போதமளிக்கிறது.''*

பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவத்தைத் தாக்குவதற்கும் அதிகாரத்தைக் கைப்பற்றுகின்ற போராட்டத்தை அமைத்துக் கொள்வதற்கும் புரட்சியின் தலைமையகமாகக் கட்சி

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 6, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1980, பக்கம் 43.

செயல்படுகிறது. ஆனால் புரட்சிகரமான பெருந் திரளினரது தலைமையை எடுத்துக்கொள்வதற்கு முன்னர் கட்சி அவர்களைப் புரட்சிகர நடவடிக் கைக்கு ஒவ்வொரு காலடியாகத் தயாரிக்கிறது; தொழிலாளி வர்க்கம் மற்றும் அதன் நேச சக்திகளின் அணிகளுக்குப் புரட்சிகரத் தத்து வத்தைப் புகட்டுகிறது, தொழிலாளர்களை ஒற்றுமைப்படுத்தி மார்க்சிய-லெனினியக் கோட் பாடுகளின் உணர்ச்சியில் அவர்களைப் பயிற்று விக்கிறது.

பெருந்திரளான மக்களிடம், குறிப்பாக தொழி லாளர்கள் மத்தியில் கட்சியின் அமைப்பு ரீதி யான, கல்வி சார்ந்த மற்றும் தத்துவ-அறிவு வளர்ச்சிப் பணி புரட்சிகர இலட்சியத்துக்கு எப்பொழுதுமே மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. இன்று அது விசேஷமான முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கிறது. ஏனென் றால் சமீபப் பத்தாண்டுகளில் உலக சோஷலி சத்தின் வளர்ச்சி மற்றும் உலக முழுவதிலும் தொழிலாளி வர்க்க நிலைகள் பலமடைவதைக் கண்ட முதலாளி வர்க்கம் தொழிலாளி வர்க்கத் தைக் ''குழப்பி'' அதனிடம் ''திருப்தியுணர்வை'' ஏற்படுத்துவதற்கு, அதாவது ஒத்துப்போகின்ற, புரட்சி எதிர்ப்பு உணர்ச்சியில் அவர்களைப் பயிற்றுவிப்பதற்குத் தன்னுடைய சித்தாந்த நடவடிக்கைகளை (குறிப்பாக, அரசின் மூலம்) பேரளவில் அதிகப்படுத்தியிருக்கிறது. இந்த நடவடிக்கைகளின் விளைவை நாம் மிகைப் படுத்தக் கூடாது, ஆனால் அவற்றைப் புறக்கணிப் பதும் கூடாது. ஏனென்றால் உழைக்கும் மக்

களின் உணர்வை மழுங்கடிக்கின்ற வன்மையான தொழில்நுட்பச் சாதனங்கள் ஆளும் வர்க்கத்திடம் இருக்கின்றன; பத்திரிகை, வானொலி, சினிமா, டெலிவிஷன் போன்ற பொது மக்கள் தகவல், பொழுது போக்குக் கருவிகளும் அதனிடம் இருக்கின்றன. இத்தகைய நிலைமையில் முதலாளித்துவ நாடுகளில் முதலாளி வர்க்கப் பிரச்சாரத்துக்கு உறுதியாக பதிலளிப்பதற்கு, சித்தாந்தப் போராட்டத் துறையில் முதலாளி வர்க்கத்தை எதிர்ப்பதற்கு, தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர உணர்வின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு, தன் உண்மையான நிலையைப் புரிந்து கொள்வதற்கும் போராட்டத்தில் பெற்ற அனுபவத்தை ஆராய்ந்து முறைப்படுத்துவதற்கும் உதவி செய்வதற்கு தொழிலாளி வர்க்கக் கட்சிதான் ஒரே கேந்திரமாக இருக்கிறது.

முதலாளி வர்க்கம் தொழிலாளி வர்க்கத்தைப் பிளவுபடுத்துவதற்கு, அதன் பிரிவுகளில் சிலவற்றை மற்ற பிரிவுகளுக்கு எதிராக நிறுத்துவதற்கு முயற்சி செய்கிறது; அதற்காக உழைக்கும் மக்களிடம் அது விதைத்திருக்கின்ற மத, இன, தேசியத் தப்பெண்ணங்களைப் பயன்படுத்துகிறது. முதலாளி வர்க்க அரசியல்வாதிகள் கடந்த காலத்தைப் போலவே இப்பொழுதும் ''பிரித்தாளுகின்ற'' கொள்கையை உபயோகிக்கிறார்கள். இக்கொள்கை பலனளிக்காமற் செய்யவும் சுரண்டலிலிருந்து விடுதலை என்ற முக்கியமான பொதுநலன் அடிப்படையில் தொழிலாளி வர்க்கத்தைத் திரட்டவும்

தொழிலாளி வர்க்கக் கட்சி பாடுபடுகிறது. ஒற்றுமையும் ஒத்திசைவும் சிறந்த ஸ்தாபன முமே தொழிலாளி வர்க்கத்துக்கு வெற்றி தேடித் தர முடியும்; ஆகவே ஒற்றுமைக்கான போராட்டம் மார்க்சிய-லெனினியக் கட்சியின் நடவடிக்கையில் முக்கியமான திசைவழியாக இருக்கிறது.

சோஷலிஸ்ட் புரட்சியில் கட்சியின் கடமை களைப் பற்றிய பிரச்சினை குறித்து 1918ம் வருடத்தின் வசந்த காலத்தில் லெனின் பின் வருமாறு எழுதினார்: ''வருங்காலக் கட்சி ஒவ்வொன்றும் தனது வேலைத்திட்டமும் செயல் தந்திரமும் பிழையற்றவை என்பதில் பெரும் பாலான மக்களுக்கு திடநம்பிக்கை அளிப்பது தான் அக்கட்சிக்குரிய முதலாவது பணியாகும். ... இப்போது இந்தப் பணி பிரதானமாய் நிறை வேற்றப்பட்டுவிட்டது, ... ஆயினும் இப்பணி எவ்வகையிலும் பூரணமாய் நிறைவேற்றப்பட்டு விடவில்லை என்பது மெய்தான் (எக்காலத் திலும் இது பூரணமாய் நிறைவேற்றப்படுதல் சாத்தியமன்று).

''...அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்று வதும் சுரண்டுவோரது எதிர்ப்பை நசுக்கு வதும்தான் நமது கட்சியை எதிர்நோக்கிய இரண்டாவது பணி. இந்தப் பணியும் எவ்வகை யிலும் பூரணமாய் நிறைவேற்றப்பட்டு விட வில்லை, ... ஆயினும் சுரண்டுவோரது எதிர்ப்பை நசுக்குவதென்னும் பணி, ... பிரதானமாய் நிறைவேற்றி முடிக்கப் பெற்றுள்ளது.

''...இப்போது மூன்றாவது பணி ஒன்று,

அதாவது ருஷ்யாவின் நிர்வாகத்தை ஒழுங்க மைத்திடும் பணி, உடனடிப் பணியாக முன் னிலைக்கு வந்து கொண்டிருக்கிறது. தற்போ தைய நிலைமையின் தனி இயல்பாய் அமைந் திடும் ஒரு பணி இது.''*

மார்க்சிய-லெனினியக் கட்சியை எதிர்நோக்கு கின்ற கடமைகளின் தன்மையும் அவற்றின் முன்னுரிமையும் புரட்சியின் கட்டங்கள் மற்றும் நிறைவேற்ற வேண்டிய நோக்கங்களுக்குத் தகுந் தவாறு மாறுகின்றன. தொழிலாளி வர்க்க முன்னணிப்படையின் செயல்முறையைப் பற்றிய பொது விதி இது.

கட்சியின் செயல்முறை மற்றும் வளர்ச்சி அளவுகள் மார்க்சிய-லெனினியக் கோட்பாடு களுக்கும் சோஷலிசத்தின் உணர்ச்சிக்கும் பொருந் தியிருந்தால் மட்டுமே கட்சி புரட்சியில் அதன் முன்னணிப் பாத்திரத்தை நிறைவேற்ற முடியும். ''வெகுஜனங்கள் வர்க்கங்களாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள்... வர்க்கங்கள் அர சியல் கட்சிகளால் தலைமை தாங்கப் பெற்று வழிகாட்டப்படுகின்றன; பொதுவாக அரசியல் கட்சிகள் பொறுப்பு மிக்க பதவிகளுக்குத் தேர்ந் தெடுக்கப்பட்டு தலைவர்கள் என்றழைக்கப் படும் அதிகாரமும் செல்வாக்கும் படைத்த, அனுபவம் வாய்ந்த உறுப்பினர்களாகிய ஓரளவு நிலையான குழுக்களால் நிர்வகிக்கப்படுகின்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதி களில், தொகுதி 8, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1981, பக்கங்கள் 54 – 55.

றன — இவை எல்லோர்க்கும் தெரிந்தவையே''* என்று லெனின் எழுதினார்.

தொழிலாளி வர்க்கம் மற்றும் எல்லா புரட்சி கர சக்திகளின் உண்மையான முன்னணிப் படை முதலாளி வர்க்கக் கட்சிகளிலிருந்து — மற்றவை தவிர பின்வரும் அம்சத்தில் வேறுபடு கின்றன: பெருந்திரளான மக்கள் — வர்க்கங் கள் — கட்சி — தலைவர்கள் என்ற இந்தச் சங்கிலி அமைப்பில் முறிவு ஏற்படுவதில்லை, இந்தக் கண்ணிகள் அனைத்துக்கும் இடையில் இணைப்பு இருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல் வதென்றால் தொழிலாளி வர்க்கம் உழைக்கும் மக்களின் இதர பிரிவுகளிலிருந்தும் மொத்தமாக மக்களிடமிருந்தும் — அதன் அங்ககப் பகுதியே தொழிலாளி வர்க்கம் — பிரிந்து விடுவதில்லை; கட்சி தொழிலாளி வர்க்கத்திடமிருந்து பிரிந்து விடுவதில்லை; தலைவர்கள் கட்சியின் அணி களிடமிருந்து பிரிவதில்லை, அவற்றைக் கீழ்ப் படுத்துவதற்கு அல்லது எதிர்ப்பதற்கு முயற்சி செய்வதில்லை.

தலைசிறந்த நபர்கள், தொழிலாளி வர்க்கத் தின் தலைவர்கள் புரட்சியில் மாபெரும் பாத் திரத்தை வகிக்க முடியும் என்பதை மார்க்சிய வாதிகள் அங்கீகரிக்கிறார்கள். இது பல உதார ணங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது, எல்லா வற்றுக்கும் முதலாவதாக லெனினுடைய பாத் திரத்தினால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. தொழி

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதி களில், தொகுதி 10, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1981, பக்கம் 217.

லாளி வர்க்கம், கம்யூனிஸ்டுகள், தாங்கள் தேர்ந்தெடுத்த தலைவர்களை ஆதரிக்கிறார்கள், அவர்களைப் பின்பற்றுகிறார்கள். ஆனால் அவர்கள் தனிமனித வழிபாட்டை உறுதியாக நிராகரிக்கிறார்கள். 1960ம் வருட கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கட்சிகளின் சர்வதேசக் கூட்டத்தின் ஆவணங்கள் சுட்டிக் காட்டுவதைப் போல அது மார்க்சிய-லெனினியக் கொள்கைகளை மறுக்கிறது, உலக கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கும் உலக சோஷலிசத்துக்கும் தீங்கு விளைவிக்கிறது.

கட்சிக் கட்டுப்பாடு (அது இல்லாத தொழிலாளர் கட்சி இருக்க முடியாது) உள்கட்சி ஜனநாயகத்தில் சிறிதும் குறுக்கிடுவதில்லை; ஆனால் ஒரு அர்த்தத்தில் அதை உத்தரவாதம் செய்கிறது; கட்சியினால் ஆராயப்பட்டு முடிவு செய்யப்படுகின்ற பிரச்சினைகளில் எல்லா கம்யூனிஸ்டுகளும் (அவர்கள் பெரும்பான்மையினரது முடிவுகளுக்குக் கட்டுப்பட வேண்டும்) சுறுசுறுப்பாகப் பங்கெடுப்பதற்கும் சுதந்திரமாக விவாதிப்பதற்கும் உரிமையைத் தருகிறது.

## 11. ஜனநாயகத்துக்கான போராட்டத்திலிருந்து சோஷலிஸ்ட் புரட்சி முடிய

சோஷலிஸ்ட் புரட்சிக்கு முன்னால் முதலாளித்துவப் புரட்சி நடைபெறுவது வரலாற்றின் தர்க்கவியலாகும். முதலாளித்துவப் புரட்சி முதலாளித்துவ வளர்ச்சிக்கும் அதன் மூலம்

கம்யூனிஸ்ட் சமூகத்தின் பொருளாயத முன் நிபந்தனைகளின் உருவாக்கத்துக்கும் பாதை அமைக்கிறது. இங்கே பல கேள்விகள் எழுகின் றன: இப்புரட்சிகளுக்கு இடையிலுள்ள காலம் எவ்வளவு? அது எப்பொழுதும் ஒரே மாதிரி யாக இருக்குமா? வரலாற்று நிகழ்வுப் போக்கில் அது மாற்றமடைகிறதா, அப்படியானால் எவ் வளவு?

வரலாற்றுச் சம்பவங்களை மிகவும் ஆழமான முறையில் ஆராய்ந்து முடிவுகளைச் செய்த மார்க்சும் எங்கெல்சும் ஒரு சமூக-பொருளா தார அமைப்பு **ஏற்படுவதும்** அது மற்றொன் றாக வளர்ச்சியடைவதும், குறிப்பாக, முதலாளித் துவம் சோஷலிசமாக (கம்யூனிசத்தின் முதல் கட்டமாக) வளர்ச்சியடைவதும் மொத்த வர லாற்று சகாப்தத்தை உள்ளடக்கியிருப்பதைத் தமது நூல்களில் எடுத்துக்காட்டினார்கள். **மனிதகுலம்** அதைத் தாவிக் கடக்க முடியாது அல் லது குறைக்க முடியாது; முதலாளித்துவப் புரட் சிக்கும் சோஷலிசப் புரட்சிக்கும் இடையில் எவ்வளவு காலம் கழிய வேண்டியிருக்கும் என்பதை யாராலும் சொல்ல முடியாது. வர லாற்றுச் சித்தத்தின் விளைவாக ஒரு குறிப் பிட்ட நாடு மற்ற நாடுகளுக்குப் பின்தங்கி இன்னும் முதலாளித்துவத்தை அடையவில்லை என்றால் அது சோஷலிஸ்ட் புரட்சிக்கு முன் னேறுவதற்கு முன்னால்—அதற்குப் பாதை யைத் தயாரிப்பதற்காக—ஏதாவதொரு வடி வத்தில் ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்ற வேண்டும். மார்க்ஸ், எங்கெல்சின் பிரபலமான

தொடர்ச்சியான புரட்சி என்ற ஆய்வுரையில் இம் முடிவு பிரதிபலிக்கப்பட்டது. ஜனநாயகப் புரட்சி யில் பங்கெடுக்கின்ற தொழிலாளர்கள் பாதி வழியில் நின்றுவிடாமல், ''அநேகமாக எல்லா உடைமை வர்க்கங்களும் தமது ஆதிக்க நிலை யிலிருந்து அதற்றப்படுகின்ற வரை, பாட்டாளி வர்க்கம் அரசு அதிகாரத்தை வென்றெடுக் கின்ற வரை''* போராட்டத்தைத் தொடர் கின்றனர் என்ற அர்த்தத்தில் அது தொடர்ச்சி யான புரட்சியாகும்.

இந்த அர்த்தத்தில் 17 அல்லது 18ம் நூற் றாண்டுகளில் முதலாளித்துவப் புரட்சி நடை பெற்ற நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது முத லாளித்துவப் புரட்சிக்கும் சோஷலிஸ்ட் புரட் சிக்கும் இடையிலுள்ள இடைக்காலம் குறைவு என்பது வெளிப்படையாகும். உலக முதலாளித் துவ அமைப்பின் தனித்தனிக் ''கண்ணிகளில்'' இந்த இடைக்காலம் குறைந்திருப்பதற்கு இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளாக முதலாளித் துவ வளர்ச்சிப் பாதையில் வந்த நாடுகள் இந்த அமைப்புக்கு உயர்ந்த, பொதுவான முதிர்ச்சியைக் கொடுத்திருக்கின்றன, சோஷ லிஸ்ட் மாற்றங்களுக்கு அதை மொத்தமாகத் ''தயாரித்திருக்கின்றன'' என்பதே துல்லிய மான காரணமாகும்.

மார்க்சின் பாரம்பரியத்தின் அடிப்படையில்

---

* Karl Marx and Frederick Engels, "Address of the Central Authority to the League. March 1850." In Karl Marx, Frederick Engels, *Collected Works,* Vol. 10, p. 281.

லெனின் ஏகாதிபத்திய சகாப்தத்தில் புரட்சிகர இயக்கத்தின் அனுபவத்தைத் தொகுத்துக் கூறி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி சோஷலிஸ்ட் புரட்சியாக மாற்றமடைகின்ற தத்துவத்தை விரித்துக் கூறினார். முதலாளித்துவப் புரட்சி நடைபெறாத நாடுகளில் ஏகாதிபத்தியத்தின் கீழும் முதலாளித்துவ-ஜனநாயக மாற்றங்கள் மிகவும் அவசியமாக இருக்கின்றன. முதலாளித்துவ ஜனநாயகத்துக்காக நடைபெறுகின்ற போராட்டம் பாட்டாளி வர்க்கத்துக்கு சோஷலிசத்துக்கான போராட்டப் ''பள்ளியாக'' இருக்கிறது. ''வரலாற்று ரீதியான வர்க்கம் என்ற முறையில் பாட்டாளி வர்க்கம் மிகவும் முரணில்லாத, உறுதியான புரட்சிகர ஜனநாயகத்தின் உணர்ச்சியில் பயிற்றுவிக்கப்படுவதால் அதற்குத் தயாராக இருந்தாலொழிய அது முதலாளி வர்க்கத்தை முறியடிப்பது முற்றிலும் நினைக்க முடியாதது.''*

ஜனநாயகத்துக்கான போராட்டம் சோஷலிசப் பாதையில் குறுக்கே நிற்கின்ற முதலாளித்துவத்துக்கு முந்திய உறவுகளையும் அமைப்புகளையும் ஒழிப்பதற்கு இட்டுச் செல்கிறது, ஆகவே சோஷலிசத்தை நிர்மாணிப்பதை எளிதாக்குகிறது, ஏனென்றால் சோஷலிஸ்ட் ஜனநாயகம் முதலாளித்துவ ஜனநாயகத்தை வெறுமளவில் கைவிடுவதில்லை; அது அதை மாற்றி

---

* V. I. Lenin "The Revolutionary Proletariat and the Right of Nations to Self-Determination", *Collected Works,* Vol. 21, pp. 408—409.

அமைக்கிறது; புதிய, உயர்ந்த ரக ஜனநாயகத்தைப் படைக்கிறது. ''ஜனநாயகம் இல்லாமல் சோஷலிசம் கிடையாது, ஏனென்றால் (1) பாட்டாளி வர்க்கம் ஜனநாயகத்துக்கான போராட்டத்தின் மூலம் தன்னைத் தயாரித்துக் கொள்ளாமல் சோஷலிஸ்ட் புரட்சியை நிறைவேற்ற முடியாது; (2) வெற்றியடைந்த சோஷலிசம் முழு ஜனநாயகத்தை அமுல் நடத்தாமல் தன்னுடைய வெற்றியை உறுதிப்படுத்த முடியாது, அரசு உலர்ந்து உதிர்கின்ற கட்டத்துக்கு மனிதகுலத்தைக் கொண்டுவர முடியாது''* என்று லெனின் கூறினார்.

அவசியமான புறவய மற்றும் அகவய நிலைமைகள் இருக்குமானால் ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றியதும் உடனடியாக சோஷலிஸ்ட் புரட்சிக்குத் தயாரிப்பதற்குப் புதிய சகாப்தம் பாட்டாளி வர்க்கத்துக்கு உதவுகிறது என்று லெனின் வலியுறுத்தினார். ''ஜனநாயகப் புரட்சியிலிருந்து நாம் துல்லியமாக நம்முடைய பலத்தைக் கொண்டு, வர்க்க உணர்வு கொண்ட, ஸ்தாபன ரீதியான பாட்டாளி வர்க்கத்தின் பலத்தைக் கொண்டு உடனே சோஷலிஸ்ட் புரட்சிக்குச் செல்லத் தொடங்குவோம். நாம் தொடர்ச்சியான புரட்சிக்காக நிற்கிறோம். நாம் நடுவழியில் நிற்கப் போவதில்லை.''**

---

* V. I. Lenin "A Caricature of Marxism and Imperialist Economism", *Collected Works,* Vol. 23, p. 74.

** V. I. Lenin, "Social Democracy's Attitude towards the Peasant Movement", *Collected Works,* Vol. 9, pp. 236—237.

இச்செயல்திட்டத்தில் இரண்டு புரட்சிகளும் ஒன்றோடொன்று ''மோதிக்கொள்வது'' மட்டு மல்லாமல் ''பின்னிப் பிணைந்து'' ஒன்றோ டொன்று இணைந்து ஒற்றைப் புரட்சிகர நிகழ் வுப் போக்கின் இரண்டு கட்டமாக இருக்கும்.

முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி சோஷ லிஸ்ட் புரட்சியாக வளர்ச்சியடைகின்ற சாத் தியம் குறித்து லெனின் செய்த முடிவு அநேக மாக ஒரு நீண்ட ''இடைக்காலம்''—அது உண் மையில் இரண்டு புரட்சிகளுக்கும் இடையில் ஒரு முறிவாக இருந்தது—அவசியம் என்று இரண் டாவது அகிலத்தின் தத்துவாசிரியர்களும் தலை வர்களும் கொண்டிருந்த கருத்துக்களைப் பொய்ப் பித்தது. லெனினும் கட்சியும் ''தன்விருப்ப வாதம்'' மற்றும் ''அகநிலைவாதத்தைப்'' பின்பற்றுவதாக அவர்கள் குற்றம் சாட்டினார் கள்; நாடு சோஷலிஸ்ட் புரட்சிக்கு ''முதிர்ச்சி யடைகின்ற'' வரையிலும் ''காத்திருக்க'' வேண் டும், அதற்குப் பிறகே அதைத் தொடங்க வேண் டும் என்று கூறினார்கள். அப்படிக் ''காத்திருத் தலை'' அவசியமற்றதாகச் செய்த வரலாற்று நிலைமையை இரண்டாவது அகிலத்தின் தலை வர்கள் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. அந்த நிகழ்வை லெனின் கண்டுபிடித்தாரே தவிர அவர் அதைத் தயாரிக்கவில்லை, வர லாற்றின் மீது சுமத்தவில்லை. அதற்கு மாறாக, வரலாறு புரட்சிகர நிகழ்வுப் போக்கின் அகப் பொருள் மீது நடவடிக்கையின் புதிய தர்க் கத்தை, செயல்திட்டத்தின் புதிய ரகத்தைச் ''சுமத்தியது.'' அகப்பொருள் அத்தர்க்கவியலைச்



9*

செவிமடுத்துக் கேட்காமல் இருக்கலாம், பாதிவழியில் நின்றுவிடலாம்; ஆனால் ருஷ்யப் புரட்சியின் போதும், அதன் பிறகு கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்ற புரட்சிகளின் போதும் இருந்த நிலைமைகளில் அது புரட்சியைக் கைவிடுவதற்கு ஒப்பானதாகும். தொடர்ச்சியான புரட்சி அல்லது சோஷலிஸ்ட் புரட்சியே இல்லை என்ற தெளிவான மாற்றுப் பாதையை வரலாறு சுட்டிக்காட்டியது.

முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியிலிருந்து சோஷலிஸ்ட் புரட்சிக்குத் தொடர்ச்சியான முன்னேற்றத்தைச் சாத்தியமாக்குவது எது? **சமூக-பொருளாதாரக் கருத்தினங்களில்** கூறுவதென்றால் சோஷலிஸ்ட் மாற்றங்களுக்கு உலக முதலாளித்துவ அமைப்பின் பொதுவான பொருளாயதத் தயார்நிலையும் குறிப்பிட்ட நாட்டில் சோஷலிசத்துக்கான பொருளாயத முன்நிபந்தனைகள் இருப்பதுமாகும். அத்தகைய முன்நிபந்தனைகள் அதிகமாக வளர்ச்சியடைந்த நாடுகளில் மட்டுமல்லாமல் குறைவாக வளர்ச்சியடைந்த நாடுகளிலும் இருக்க முடியும். ஏனென்றால் ஏகாதிபத்தியத்தின் கீழ் முதலாளித்துவத்துக்கு முந்திய, பூர்விகமான சமூக, பொருளாதார மற்றும் அரசியல் கட்டமைப்புகளும் உறவுகளும் ''நவீனமான'', ''மிகப் புதிய'' கட்டமைப்புகள், உறவுகளுடன் ஒரே நாட்டில் சேர்ந்திருப்பது வழக்கம். **அரசியல் கருத்தினங்களில்** முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி சோஷலிஸ்ட் புரட்சியாக வளர்ச்சியடைவது ஜனநாயகப் புரட்சியில் பாட்டாளி

வர்க்கத்தின் தலைமையினால் சாத்தியமாகிறது. இத்தலைமை—முதலாளித்துவ வளர்ச்சியின் ஏக போகத்துக்கு முந்திய கட்டத்தில் இது கிடையாது—ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றியிருக்கின்ற சமூக சக்திகளின் அரசியல் கூட்டணி சிதறிவிடாமல் தடுத்து அதைத் திருத்தியமைக்கவும் அதன் மூலம் சோஷலிசத்துக்கான போராட்டத்தைத் தொடங்குவதற்குத் தயாராக இருக்கின்ற அரசியல் படையை அமைக்கவும் தொழிலாளி வர்க்கத்துக்கு உதவி செய்கிறது.

முதலாளித்துவப் புரட்சியை, ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் ஏற்கெனவே கடந்துவிட்ட நாடுகளுக்கும் புரட்சிகளின் வளர்ச்சியைப் பற்றிய லெனின் தத்துவம் முக்கியமாக இருக்கிறது. லெனின் அடிக்கடி வலியுறுத்தியதைப் போல, ஏகாதிபத்திய சகாப்தம் சித்தாந்த, தத்துவ, அரசியல் மட்டங்களில் முதலாளித்துவ ஜனநாயகத்தின் வளர்ச்சியை—அது முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியுடனும் எந்த விலையைக் கொடுத்தாவது இந்த சமூக அமைப்பைக் காப்பாற்ற வேண்டும் என்று ஏகபோக முதலாளி வர்க்கம் செய்கின்ற முயற்சிகளுடனும் சம்பந்தப்பட்டிருக்கிறது—பார்க்கிறது; இந்த வளர்ச்சி முதலாளித்துவ ஜனநாயகத்தைக் குறுகலாக்கி, கட்டுப்படுத்தி, சம்பிரதாயமாக்குகின்ற போக்கை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இப்போக்குக்கு மிகத் தீவிரமான, பொதுவில் அபூர்வமாகக் காணப்படக் கூடிய உதாரணம் பாசிசம்; அதன் ''கண்ணியம் நிறைந்த'' இதர வடிவங்களே மிகவும் பரவலாக இருக்கின்றன. இச்சந்

தர்ப்பம் முதலாளித்துவ ஜனநாயகக் கோட்பாடுகளை முரணில்லாமல் அமுல் நடத்த வேண்டும், முதலாளித்துவ உரிமைகளும் சுதந்திரங்களும் நிறைவேற்றப்பட வேண்டும், விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பனவற்றுக்காக உழைக்கும் மக்கள் நடத்துகின்ற போராட்டத்தை தொழிலாளி வர்க்கத்தையும் அதன் நேச சக்திகளையும் சோஷலிசத்துக்குத் தயாரிப்பதற்கு முக்கிய நிபந்தனையாக்குகிறது.

உழைக்கும் மக்களுடைய புரட்சிகர இயக்கம் புரட்சியின் போது அதிகார அமைப்பிற்கும் நிர்வாகத்திற்கும் புதிய வடிவங்களை உருவாக்கும் என்பதை வரலாறு எடுத்துக்காட்டியிருக்கிறது (சோஷலிஸ்ட் புரட்சி வெற்றியடைந்த எல்லா நாடுகளிலும் இப்படி நடைபெற்றிருக்கிறது). ஆனால் ஜனநாயகத்தின் வளர்ச்சியில் உள் தொடர்ச்சி இருப்பதையும் வரலாறு நிருபித்திருக்கிறது. இயக்கவியல் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட பழைய ரகத்தைச் சேர்ந்த ஜனநாயகத்தின் மீது புதிய ரக ஜனநாயகம் தோன்றும் பொழுது வளர்ச்சியின் மட்டம், புதிய ரக ஜனநாயகம் நிறுவப்படுகின்ற வேக விகிதங்கள் பெரும்பாலும் நேரடியாக, வரலாற்று ரீதியில் முந்திய சமூகத்தின் வளர்ச்சி மட்டத்தை, ஜனநாயக மரபுகளை, குறிப்பாக பெருந்திரளான மக்கள், பிரதானமாக, தொழிலாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்திடமிருந்து உழைக்கும் மக்களின் முந்திய தலைமுறையினரால் பலவந்தமாகப் பறிக்கப்பட்ட ஜனநாயக உணர்ச்சியில் எந்த அளவுக்குப் பயிற்றுவிக்கப்

பட்டார்கள் என்பதைப் பொறுத்திருக்கின்றன.

ஆனால் ஜனநாயகத்துக்கான போராட்டம் உழைக்கும் மக்களை சோஷலிசத்துக்காகத் தயாரிப்பதுடன் நின்றுவிடுவதில்லை. உள்நாட்டு, வெளிநாட்டு நிலைமைகள் சாதகமாக இருக்குமானால், இப்போராட்டம் பொது தேசிய நெருக்கடியை ஏற்படுத்தக் கூடும், சோஷலிஸ்ட் புரட்சியாக வளர்ச்சி அடையக் கூடும் என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டோம்.

முதலாளித்துவ ஜனநாயகம் ''ஒடுக்கும்'' தன்மையைக் கொண்டிருக்கிறது என்ற இடது தீவிரவாதக் கருத்தையும் சட்டபூர்வமான போராட்ட முறைகளைக் கைவிட்டுப் புரட்சிகரமான வன்முறையை முற்றிலும் கடைப்பிடிக்க வேண்டும் என்ற இடது தீவிரவாதிகளின் அறைகூவலையும் மார்க்சியவாதிகள் உறுதியாக எதிர்ப்பதற்குக் காரணம் இதுவே. ''ஜனநாயகத்துக்கான போராட்டம் சோஷலிஸ்ட் புரட்சியிலிருந்து பாட்டாளி வர்க்கத்தைத் திசை திருப்பவும் அல்லது அப்புரட்சியை மறைத்து மங்கச் செய்யவும் திறமை வாய்ந்தது என்று கருதுவது அடிப்படைத் தவறாகும்''* என்று லெனின் எச்சரித்தார்.

புரட்சியின் ஜனநாயக மற்றும் சோஷலிஸ்ட் கட்டங்களுக்கு இடையில் இணக்கத்தை ஏற்படுத்துதல், ஜனநாயக மற்றும் சோஷலிஸ்ட்

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, முதற் பாகம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1977, பக்கம் 303.

(சார்புநிலையான முதலாளித்துவ நாடுகளில் ஏகாதிபத்திய எதிர்ப்புக்) கடமைகளை ஒன்றிணைத்தல் ஒவ்வொரு உதாரணத்திலும் பொது ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்று வதிலிருந்து பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தை நிறுவுகின்ற போராட்டத்தைத் தீவிரப்படுத்துவதற்கு உடனடியான மாற்றத்தை முன்னனுமானிக்கவில்லை. புரட்சிகர நிகழ்வுப் போக்கு தொடர்ச்சியானது — சோஷலிஸ்ட் அமைப்பை நிறுவும் பொழுதுதான் அது முழு நிறைவாகிறது—என்பதால் அது அநேகமாக நெடுங்காலத்துக்கு இழுக்கப்படலாம், தற்காலிக மான, புரட்சிகர-ஜனநாயக இடைநிலையான அமைப்புகளை ஏற்படுத்தலாம். அவை ''இன்னும் சோஷலிசம் ஆகிவிடவில்லை ஆனால்... இனி மேலும் முதலாளித்துவமாக நீடிக்கா''[*] என்று லெனின் இவற்றைப் பற்றிக் குறிப்பிட்டார். மார்க்ஸ் முன்னறிவித்ததைப் போன்ற ஒரு நிலைமை ஏற்படலாம்: ''ஒரு பக்கத்தில் சமூகத் தின் இன்றைய பொருளாதார அடிப்படை இன்னும் மாறவில்லை, ஆனால்... மறு பக்கத் தில் பெருந்திரளான உழைக்கும் மக்கள் சமூ கத்தை முடிவாகத் தீவிரமாக மாற்றியமைப்பதை நோக்கமாகக் கொண்ட இடைநிலையான நட வடிக்கைகளை அமுல் நடத்துகின்ற அளவுக்குப்

---

[*] வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதி களில், தொகுதி 5, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1980, பக்கம் 379.

போதுமான பலத்தைத் திரட்டிக்கொண்டிருக்கின்றனர்.''*

புரட்சிகர-ஜனநாயக அரசின் மூலமாக சோஷலிசத்துக்கு மாறுவதற்கு வரலாறு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, மங்கோலிய மக்கள் குடியரசு போன்ற உதாரணங்களைத் தருகிறது. இன்று—முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறுகின்ற வரலாற்றுக் கட்டத்தில்—அத்தகைய வாய்ப்பு குறைவான முதலாளித்துவ வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் (இவை சமீபத்தில்தான் காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை அடைந்தன) நடுத்தர மற்றும் உயர்ந்த வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும்கூட உண்டு.

குறைவான முதலாளித்துவ வளர்ச்சி அடைந்த நாடுகளில், பாட்டாளி வர்க்கம் சமீபத்தில் மட்டுமே உருவாகியிருக்கின்ற நாடுகளில், முதலாளித்துவத்துக்கு முந்திய உறவுகள் பொருளாதாரத்திலும் கலாசாரத்திலும் இன்னும் பலமாக இருக்கின்ற நாடுகளில், சோஷலிசத்துக்கான பொருளாயத முன்நிபந்தனைகள் இப்பொழுதுதான் வளர்ச்சியடைகின்ற நாடுகளில் சோஷலிஸ்ட் திசைவழியைக் கொண்ட புரட்சிகர-ஜனநாயக அரசை நிறுவுவதற்கேற்ற நிலைமைகள் தோன்றத் தொடங்கியிருக்கின்றன. அத்தகைய அரசும் புரட்சிகர-ஜனநாயக சர்வாதிகாரம் என்ற மொத்த அமைப்புமே தேசிய

---

* *The General Council of the First International 1868—1870*, Minutes, Progress Publishers, Moscow, 1974, p. 324.

விடுதலை இயக்கத்தின், ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், புதிய காலனியாதிக்கம் ஆகியவற்றுக்கு எதிராகப் புரட்சிகர-ஜனநாயக சக்திகள் நடத்துகின்ற போராட்டத்தின் விளைவே. புரட்சிகர-ஜனநாயக சர்வாதிகாரம் சோஷலிசத்துக்கு வழி வகுக்கின்ற நடவடிக்கைகளை நிறைவேற்ற முடியும், பிற்காலத்தில் தொழிலாளி வர்க்கத்துக்கு அதிகாரத்தை மாற்றித் தரக் கூடிய நிலைமைகளை உருவாக்க முடியும். இந்த மாற்றம் நடைபெறுமா, எவ்வளவு சீக்கிரமாக நடைபெறும் அல்லது எதிரான இயக்கமும் போக்குகளும் தோன்றுமா — அதாவது புரட்சிகர ஜனநாயகம் சீர்கெட்டுவிடும் அல்லது பிற்போக்கான அல்லது அதிகப் பழமைவாத சக்திகளால் அதிகாரத்திலிருந்து அகற்றப்படும் (இப்படி சில நாடுகளில் நடைபெற்றிருக்கிறது) — என்பவை உள்நாட்டு நிலைமைகளையும் வெளிநாட்டு நிலைமைகளையும், குறிப்பாக, புரட்சிகர ஜனநாயகம் கடைப்பிடிக்கின்ற ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையின் நிலையான மற்றும் முரணில்லாத தன்மையை, அந்தப் பிரதேசத்தில் உலக சக்திகளின் ஸ்தூலமான சமநிலையை, முடிவாக அந்த நாட்டில் முற்போக்கு, ஜனநாயக சக்திகளின் ஒன்றிணைப்பின் அளவைப் பொறுத்திருக்கும்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு, பொதுவான ஜனநாயக மற்றும் சோஷலிஸ்ட் கடமைகள் கலத்தலும் பின்னிப் பிணைதலும் நடுத்தரமான முதலாளித்துவ வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு, குறிப்பாக ஏகாதிபத்தியத்தை, பிரதானமாக

அமெரிக்காவை நேரடியாகச் சார்ந்திருக்கின்ற நாடுகளுக்குக் குறியடையாளமாகும். லத்தீன் அமெரிக்க நாடுகளில் உள்ள நிலைமையை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளின் கம் யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டத்தில் (ஹவானா, 1975) வலியுறுத்தப்பட்டதைப் போல, பெருந் திரளான மக்களுக்கு ஜனநாயகத்துக்கும் அடிப் படையான கட்டமைப்பு மாற்றங்களுக்கும் சோஷலிசத்துக்கு மாறுவதற்கும் நடைபெறு கின்ற போராட்டம் இந்த நாடுகளின் செல்வத் தைச் சுரண்டுவது மட்டுமல்லாமல் அங்குள்ள சிலராட்சிகளையும் சிலராட்சி அரசாங்கங் களையும் ஆதரிக்கின்ற ஏகபோகங்களுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிரான போராட்டத் துடன் பிரிக்க முடியாத விதத்தில் இணைந் திருக்கிறது. இத்தகைய சந்தர்ப்பங்களில் சமூக சக்திகளின் பரந்த கூட்டணியை அடிப்படை யாகக் கொண்டு, புரட்சிகர-ஜனநாயக, ஏகாதி பத்திய எதிர்ப்பு அரசைப் பிரதிநிதித்துவம் செய் கின்ற இடைநிலையான வடிவங்கள் தோன்றக் கூடும். இந்த நாடுகளில் அரசியல் பணியில் ஈடுபட்டுள்ள கம்யூனிஸ்டுகள், குறிப்பாக சால்வ டோர் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி யின் பொதுச் செயலாளரான ஷா. ஹான் டால் ''சர்வாதிகார, பாசிஸ்ட் ஆட்சிமுறை களைக் கொண்ட நாடுகளில் ஜனநாயக அதி காரத்தை நிறுவுவது அநேகமாக முரணில்லாத முதலாளித்துவ-ஜனநாயக ஆட்சிமுறைகள் நிலவு கின்ற நாடுகளில் உள்ள நிகழ்வுப் போக்கிலிருந்து

வேறுபட்டிருக்கிறது''* என்ற கருத்தைக் கூறி யுள்ளார். முதல் உதாரணத்தைக் கொண்ட நாடுகளில் அதிகமாகப் பரந்த அடிப்படையில் போராட்டம் நடைபெறலாம், ஆனால் பாசிச ஆட்சியை அகற்றுவதும் ''அநேகமாக முரணில் லாத, முதலாளித்துவ-ஜனநாயக ஆட்சி முறையை'' நிறுவுவதும் — இது பின்னர் சோஷ லிசத்துக்கு மாறுகின்ற வடிவங்களுக்கான போராட்டத்துக்குத் தொடக்க நிலையாக மாறும் — அதன் உடனடியான நோக்கம். ஹான் டால் மேலும் கூறுகிறார்: ''இடைநிலையான, சமூகம் தீவிரமாக மாற்றியமைக்கப்படுகின்ற இந்தக் காலகட்டத்தில் இதற்கடுத்த வளர்ச்சி கள் புரட்சிகர சக்திகள் மேற்கொள்ள வேண் டிய பல கடமைகளைப் பெரிய அளவுக்குப் பொறுத்திருக்கும்: இராணுவத்தினரை வென் றெடுத்தல் அல்லது நடுநிலைமையாக்குதல், ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளின் ஐக்கிய முன்னணியை நீடித்துக் கொண்டு செல்லுதல், ஜனநாயக அதிகாரத்தின் சாதனைகளை மேலும் வலுப்படுத்துதல், விரிவுபடுத்துதல், அதை முற் போக்கான அதிக வளர்ச்சியடைந்த ஜனநாய கமாகப் பரிணமிக்கும்படி செய்தல் ஆகிய அர சியல் கடமைகளும். அத்தகைய புதிய ஜன நாயக ஆட்சிமுறை முதலாளித்துவச் சுரண்டல் அமைப்பின் பொருளாதார அடிப்படையை முற்றிலும் அகற்றாவிட்டாலும் எதிர்ப்புரட்சி

---

* *World Marxist Review,* Vol. 21, No. 5, May 1978, p. 13.

வன்முறையை எதிர்ப்பதற்கு, அரசியல் மேற் கட்டுமானத்தில் சீர்திருத்தங்களைச் செய்வதற்கு, அரசாங்கத்திலிருந்து சிலராட்சியையும் ஏகாதிபத்திய ஆதரவு கோஷ்டிகளையும் அகற்றுவதற்கு, சோஷலிசத்துக்குப் பாதை அமைப்பதற்கு வலிமையான, உண்மையான கருவிகளைப் படிப்படியாக உழைக்கும் மக்களுக்குக் கொடுக்கும்.''*

நடுத்தர வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் இடைநிலையான ஜனநாயக வடிவங்களின் வளர்ச்சியின் வேக அளவுகளும் தன்மையும் புரட்சிகர-ஜனநாயக சக்திகளின் சர்வாதிகாரத்துக்குள் தொழிலாளி வர்க்கம் மெய்யாகவே வகிக்கின்ற பாத்திரத்தையும் சமூகத்தின் வளர்ச்சியடைந்த சக்திகளைத் தன்னைச் சுற்றிலும் திரட்டுவதற்கும் சோஷலிஸ்ட் மாற்றங்களை அமுல் நடத்துகின்ற போராட்டத்துக்குத் தலைமை தாங்குவதற்கும் அதன் திறமையையும் பெருமளவில் பொறுத்திருக்கும்.

சில கம்யூனிஸ்ட் கட்சிகளின் (உதாரணமாக பிரான்ஸ் மற்றும் டென்மார்க்) கொள்கை ஆவணங்களில் கூறப்பட்டிருப்பதைப் போல, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் ''முற்போக்கான'' அல்லது ''ஏகபோக எதிர்ப்பு'' ஜனநாயகத்துக்குரிய நிலைமைகள் அங்கே நிலவினால், ஆட்சியதிகாரத்தின் இடைநிலையான வடிவங்களை நிறுவ முடியும். ''சோஷலிசத்தை நோக்கி முடிவான மாற்றம் ஏற்படுவதற்கு

* *Ibid.*, p. 14.

முன்னர், பூர்வாங்க நிகழ்வுப் போக்கில் ஏகபோக எதிர்ப்பு ஜனநாயகத்தின் திசையில் மாற்றங்கள் ஏற்படக் கூடும் என்று நாங்கள் அனுமானிக்கிறோம். இக்கட்டத்தில் ('இன்னும் சோஷலிசம் அல்லாத கட்டம்' என்று செயல்திட்டம் இதைக் குறிப்பிடுகிறது) மக்கள் இன்னும் உற்பத்திச் சாதனங்களுக்கு உடைமையாளர்களாக வில்லை, ஆனால் பொருளாதாரத்தில் சில முக்கியமான பிரிவுகள் 'ஜனநாயக தேசியமயமாக்கலுக்கு' உட்படுத்தப்பட்டிருக்கின்றன. பொருளாதார வாழ்க்கையிலும் உற்பத்தியிலும் ஓரளவுக்குப் பெரிய தனியார்துறை இன்னும் இருக்கிறது, ஆனால் அது அரசியல் ரீதியில் வரையறுக்கப்பட்ட 'நிர்வாகத்தில் உழைப்பாளிகள் பங்கெடுக்கும் சுற்றுவட்டத்திற்குள்' இயங்குகிறது. பொருளாதாரத்தின் கேந்திரமான பிரிவுகள் தேசியமயமாக்கப்பட்ட பிறகு அவற்றை அரசியல் ரீதியில் கட்டுப்படுத்துதல் சாத்தியமாகிவிடும்; ஏகபோக எதிர்ப்பு ஜனநாயகத்தின் அரசியல் அதிகாரம் ஜனநாயக மக்கள் அதிகாரமாக மாறும் என்று நாம் அனுமானிப்பதால் சோஷலிசத்துக்கு இறுதி மாற்றத்தைச் செயலாக்குவதற்கு முன்பாகக் கூட ஜனநாயக, திட்டமிட்ட பொருளாதார நிர்வாகத்தின் முக்கியமான கூறுகளை வளர்ப்பது சாத்தியமாகிறது''* என்று டென்மார்க்கின் கம்யூனிஸ்டுகளின் சார்பில் இப் நீல்ஸென் கூறினார்.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில்

---

* *Ibid.*, p. 16.

இடைநிலையான வடிவங்களைப் பற்றிய இக் கருத்துக்கள் பெருமளவுக்குக் கற்பனையே, நடைமுறை அனுபவம் இவற்றில் சில திருத் தங்களைச் செய்து சோஷலிசத்துக்கு மாற்றத் தைப் பற்றி இன்னும் மெய்யான மாதிரிப் படி வத்தை உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்த வடிவங்கள் எத்தகைய பிரத் யேகமான தன்மையைப் பெற்ற போதிலும் கடைசியாகப் பார்க்கும் பொழுது, அவை முத லாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு குண ரீதியான பாய்ச்சல் என்ற முறையில் **சோஷலிஸ்ட் புரட்சியை** நிறைவேற்றுகின்ற அவசியத்தை ''ரத்துச் செய்யவில்லை''. ''ஏகபோக எதிர்ப்பு ஜனநாயகம்'' என்ற சுற்றுவட்டத்துக்குள் தொழிலாளி வர்க்கமும் அதன் கட்சியும் செய்கின்ற பூர்வாங்க வேலை இக்குணரீதியான பாய்ச்சலை மிகவும் சுலபமாக்குவதும் சாத்தி யமே. இடைநிலையான வடிவங்கள் **பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை** நிறுவுகின்ற அவசி யத்தை ஒழிக்கவில்லை. இங்கும் சோஷலிச நிர்மாணம் ''ஏகபோக எதிர்ப்பு ஜனநாயகத்தி னால்'' மிகவும் விரைவுபடுத்தப்படக் கூடும், இந்த சர்வாதிகாரத்தின் கால அளவு குறைக் கப்பட்டு, அதன் வர்க்க வன்முறையின் அளவு சுருக்கப்பட்டு அதன் வடிவங்கள் நயப்படுத்தப் படலாம்.

ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான போராட் டம் சோஷலிஸ்ட் புரட்சியை நிறைவேற்றி, சோஷலிஸ்ட் சமூகத்தை நிர்மாணிக்கின்ற தொழிலாளி வர்க்கத்தின் பிரதான இலட்சி

யத்தை நிழலடிப்புச் செய்யக் கூடாது. ''ஜன நாயகத்துக்கான போராட்டத்தையும் சோஷ லிஸ்ட் புரட்சிக்கான போராட்டத்தையும்—முதலாவதை இரண்டாவதற்குக் கீழ்ப்படுத்துவதன் மூலம்—எப்படி இணைப்பதென்று ஒருவர் அறிந்திருக்க வேண்டும். மொத்தக் கஷ்டமுமே, மொத்த சாராம்சமுமே இதில் அடங்கியிருக் கிறது... பிரதான நோக்கத்தை (சோஷலிஸ்ட் புரட்சி) மறந்து விடாதீர்கள்; அதை முதலில் வைக்க வேண்டும்... எல்லா ஜனநாயகக் கோரிக்கைகளையும் அதற்குக் கீழ்ப்படுத்தி, அதனுடன் அவற்றை ஒருங்கிணைத்து வைக்க வேண்டும்...''* என்று லெனின் எழுதி னார்.

கம்யூனிஸ்ட் இயக்கத்திற்குள் முதலாளி வர்க்க சீர்திருத்தவாதத்தையும் வலது சந்தர்ப்பவாதத் தையும் எதிர்த்து முரணில்லாத போராட்டத்தை மார்க்சியவாதிகள் நடத்திக் கொண்டிருக்கிறார் கள். ஆனால் அவர்கள் புரட்சிக்கு எதிராக சீர்திருத்தத்தையோ அல்லது சீர்திருத்தத்துக்கு எதிராகப் புரட்சியையோ வைப்பதில்லை. சீர் திருத்தமும் புரட்சியும் ஒன்றுக்கொன்று வேறு தான், ''ஆனால் இந்த மாறுபாடு தனிமுத லான ஒன்றல்ல, இப்பிரிவினை உறுதியான ஒன்றல்ல, அது உயிரோடிருப்பது, மாறிக் கொண்டிருப்பது, ஒவ்வொரு குறிப்பிட்ட இனத் திலும் அதை வரையறுக்கத் தெரிந்திருக்க

* V. I. Lenin, "To Inessa Armand", *Collected Works,* Vol. 35, p. 267.

வேண்டும்.''* சீர்திருத்தங்களில் பல ரகங்கள் இருக்கின்றன என்பதை எப்பொழுதும் நினைவிலிறுத்த வேண்டும். முதலாளி வர்க்கம் சில சீர்திருத்தங்களைப் பாட்டாளி வர்க்கம் மற்றும் இதர உழைக்கும் வர்க்கங்கள் மீது திணிக்கிறது, அது அதனுடைய பலவீனத்துக்குச் சான்றாகும். இப்படிப்பட்ட சீர்திருத்தங்கள் புரட்சிகர உத்வேகத்தை மட்டுப்படுத்துகின்றன, புரட்சியை ஒத்தி வைக்கின்றன. ஆனால் வேறுவிதமான சீர்திருத்தங்களும் இருக்கின்றன. அதிகாரத்தை இன்னும் கைப்பற்ற முடியாத, ஆனால் ஏற்கெனவே தன்னுடைய பலத்தை உணர்ந்துவிட்ட பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தின் மீது இச்சீர்திருத்தங்களைத் திணிக்கின்றது. இத்தகைய சீர்திருத்தங்கள் பாட்டாளி வர்க்கம் புதிதாக வென்றிருக்கும் நிலைகளை வலுப்படுத்துகின்றன, புதிய சண்டைகளுக்குக் களத்தைத் தயாரிக்கின்றன.

முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கம் போராடுகின்ற ஸ்தூலமான சீர்திருத்தங்கள், ஜனநாயகத்துக்கான போராட்டத்தின் ஸ்தூலமான திசைவழிகள் அந்த நாட்டில் இருக்கின்ற பிரத்யேகமான நிலைமைகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. எனினும் முதலாளித்துவ நாடுகளில் உள்ள எல்லா கம்யூனிஸ்ட் கட்சிகளும் சில அடிப்படையான கோரிக்கைகளை முன்வைக்கின்றன. அவை பின்வருமாறு:

---

* V. I. Lenin, "Apropos of an Anniversary", *Collected Works*, Vol. 17, p. 116.

—சமாதானக் கொள்கை, வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட அரசுகளுடன் சமாதான சகவாழ்வுக் கொள்கையைக் கடைப்பிடித்தல் மற்றும் ஐரோப்பாவில் கூட்டுப் பாதுகாப்பையும் பதட்ட நிலைத் தணிவையும் ஆதரித்தல்;

—பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் மற்றும் அரசு-ஏகபோக ஸ்தாபனங்களின் தலையீடுகளை எதிர்த்து தேசிய அரசுரிமை மற்றும் தேசிய நலன்களைப் பாதுகாத்தல்; பொருளாதாரத்தின் முக்கிய துறைகளை நாட்டுடைமையாக்கி பெருந்திரளான மக்கள் மற்றும் உழைக்கும் மக்களின் வெகுஜன ஸ்தாபனங்களின் ஜனநாயக நிர்வாகத்துக்கு உட்படுத்துதல்;

—ஏகபோக மூலதனத்துக்கு எதிராக உழைக்கும் மக்களின் நலன்களுக்கு ஆதரவாகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஜனநாயகத் திட்டமிடுதலை அமுலாக்குதல்;

—கிராமங்களிலுள்ள உழைக்கும் மக்களின் நலன்களுக்கு ஆதரவாகத் தீவிரமான விவசாய சீர்திருத்தங்களைச் செய்தல்;

—மக்கள் நலம், கல்வி, சமூகப் பாதுகாப்பு இதர துறைகளில் சீர்திருத்தங்களைச் செய்தல்;

—புறச்சூழல் பாதுகாப்புக்குத் தேவையான நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்;

—சமூக வாழ்க்கையின் எல்லா மட்டங்களிலும்—தனி நிறுவனத்திலிருந்து தேசிய மட்டம் வரை—எல்லாத் துறைகளிலும் உழைக்கும் மக்கள் மற்றும் அவர்களுடைய வெகுஜன ஸ்தாபனங்களின் பங்கை அதிகப்படுத்துதல்;

—தனிநபர் மற்றும் பொது மக்களுடைய ஜனநாயக உரிமைகளையும் சுதந்திரங்களையும் விரிவுபடுத்துதல்; தொழிலாளர் மற்றும் ஜனநாயக இயக்கங்களுக்கு எதிரான ஒடுக்குமுறைச் சட்டங்களை ரத்துச் செய்தல்.

இச்சீர்திருத்தங்களுக்காக நடைபெறுகின்ற போராட்டம் முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் நிலைகளை வலுப்படுத்துகிறது, பெருந்திரளான மக்களிடையில் அதன் செல்வாக்கை உயர்த்துகிறது, நாடு முழுவதும் அதன் பெருமையை உயர்த்துகிறது; இவற்றின் மூலம் சோஷலிஸ்ட் சமூகத்தின் முன்நிபந்தனைகளை ஊக்குவிக்கிறது. மறு பக்கத்தில், ஜனநாயகத்துக்காக உழைக்கும் மக்களின் போராட்டத்துக்கு முதலாளி வர்க்கத்தின் எதிர்ப்பு—அது எப்பொழுதும் இப்போராட்டத்தை எதிர்க்கும்—சீர்திருத்தவாத பிரமைகளில் சிக்கியிருக்கின்ற, புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படை சோஷலிசத்துக்காக நடத்தும் போராட்டத்தின் பால் அதிஜாக்கிரதையான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கின்ற உழைக்கும் மக்களுக்கு நல்லதொரு பயிற்சியாக அமையும்.

## 12. அதிகாரத்தைப் பெறுவதற்கு சமாதான வழிமுறையும் சமாதானமல்லாத வழிமுறையும்

எந்தப் புரட்சியிலும் ''கேந்திரமான'', ''அடிப்படையான'', ''பிரதானமான'' பிரச்சினை அரசியல் (அரசு) அதிகாரத்தைப் பற்றியதே

என்று மார்க்ஸ், எங்கெல்ஸ் மற்றும் லெனின் அடிக்கடி வலியுறுத்தினார்கள். ''ஒவ்வொரு புரட்சியிலும் உயிர்நிலையான பிரச்சினை ஐய மின்றி அரசு அதிகாரம் பற்றிய பிரச்சினையே ஆகும்... புரட்சியின் வளர்ச்சியிலும், அதன் அயல்துறை மற்றும் உள்துறைக் கொள்கையிலு மான **எல்லாவற்றையும்** நிர்ணயம் செய்யும் உயிர்நிலையான பிரச்சினையாகும்''* என்றார் லெனின். அரசியல் (அரசு) அதிகாரம் புரட்சி கரமான மாற்றங்களை அமுலாக்குவதற்கு உதவுகின்ற நெம்புகோலாகும். தொழிலாளி வர்க்கம் தன்னுடைய ஆதிக்கத்தை நிரந்தர மாக்குவதற்குப் பாடுபடவில்லை. முதலாளி வர்க்கத்துக்கும் அதற்கும் உள்ள வேறுபாடு இது. ஆனால் அதிகாரத்தைத் தன் கைகளில் எடுத்துக்கொள்வதன் மூலம் அல்லது மார்க்ஸ் கூறியதைப் போல தன்னுடைய சர்வாதி காரத்தை நிறுவுவதன் மூலம் பாட்டாளி வர்க்கம் சமூகத்தை, அது மக்கள் அனைவரி டமும் அதிகாரத்தை ஒப்படைக்கின்ற வளர்ச்சிக் கட்டத்துக்கு இட்டுச் செல்ல முடியும், பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் மிகையாகிவிடும் என்பதை வரலாற்றின் இயக்கவியல் நமக்கு போதிக்கிறது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பற்றி யும், அதன் பணிகளையும் கால அளவு

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதி களில், தொகுதி 5, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1980, பக்கம் 389.

களையும் பற்றிப் பின்னர் எழுதுவோம். இப்பொழுது மற்ற முக்கியமான கேள்விகளை எடுத்துக்கொள்வோம்: இந்த சர்வாதிகாரத்தை நிறுவுவது எப்படி? பொது தேசிய நெருக்கடியின் போது சோஷலிஸ்ட் புரட்சியை நிறைவேற்றி அதிகாரத்தைக் கைப்பற்றுவது எப்படி?

மார்க்சிய-லெனினியத்தின் மூலவர்கள் இக்கேள்விகளுக்கு முன்னரே தயாரிக்கப்பட்ட பதில்களை ஒருபோதும் தரவில்லை, பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுகின்ற எந்த வழியையும் எந்த வடிவத்தையும் தனிமுதலாக்கவில்லை. ''வடிவ விவகாரங்களைப் பற்றி, புரட்சியை ஏற்படுத்துவதற்குரிய வழிவகைகளைப் பற்றி, மார்க்ஸ் தம்மையோ, சோஷலிசப் புரட்சியின் எதிர்காலத் தலைவர்களையோ, கட்டுப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. பெரும் எண்ணிக்கையில் புதிய பிரச்சினைகள் எழும் என்றும் புரட்சியின் போக்கிலே மொத்த நிலைமையே மாறும் என்றும் நிலைமை தீவிரமாகவும் புரட்சியின் போக்கிலே அடிக்கடியும் மாறும் என்றும் மார்க்ஸ் நன்றாகப் புரிந்து கொண்டிருந்தார்''* என்று லெனின் வற்புறுத்தினார். இப்பிரச்சினையில் லெனினும் இதே போன்ற கருத்தைக் கொண்டிருந்தார். சோஷலிஸ்ட் புரட்சியின் தலைவர் என்ற முறையில் லெனின் புரட்சியின் வழிகளையும் முறை

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 8, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1981, பக்கங்கள் 153 — 154.

களையும் பற்றிய பிரச்சினையில் செயல்திட்ட மற்றும் செயல்முறை நெகிழ்ச்சிக்கு உதாரண மாக இருந்தார்.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு இரண்டு வழிமுறைகளை வரலாற்றில் காண்கிறோம்: **சமாதான** வழிமுறை (ஆயுதங்களைப் பெரிய அளவில் பயன்படுத்தாதிருப்பது), **சமாதானமல் லாத** வழிமுறை (ஆயுதங்களைப் பயன்படுத்து வது). இரண்டாவது வழிமுறை பல்வேறு வடிவங்களை அடைய முடியும். அவற்றில் **ஆயுத மேந்திய எழுச்சி, உள்நாட்டு யுத்தம், கொரில்லா யுத்தம்** முதலியவை மிகவும் அதிகமாக உப யோகிக்கப்படுவனவாகும். புரட்சி இந்த வடிவங் களில் ஒன்றின் சுற்றுவட்டத்துக்குள் நடைபெற லாம் அல்லது அவற்றின் எல்லைகளைக் கடந்து ஒன்று மற்றொன்றாக மாறலாம் அல்லது பின்னிப் பிணைந்திருக்கலாம் (உதாரணம், ஆயுதமேந்திய எழுச்சி உள்நாட்டு யுத்தமாக வளர்ச்சி அடையலாம்).

தொழிலாளி வர்க்கமும் அதன் கட்சியும் அதிகாரத்தைக் கைப்பற்றப் போகின்ற வழியைத் துல்லியமாக முன்னறிவிக்க இயலாது. ஆனால் அவை புறவய நிலைமையை வழிகாட்டியாகக் கொண்டு சமாதானமல்லாத புரட்சிகர வழியைப் பின்பற்றினால், லெனின் அடிக்கடி எச்சரிக்கை செய்திருப்பதற்கு ஏற்ப, தம்மையும் பெருந்திர ளான மக்களையும் ஆயுதந்தாங்கிய நடவடிக் கைக்குத் தயாரிக்க வேண்டும், இதை இராணுவ ரீதியில் மட்டுமல்லாமல் ஸ்தாபன மற்றும் அரசியல் ரீதியிலும் செய்ய வேண்டும். புரட்சி

கர எழுச்சியைப் பற்றி மார்க்சிய அணுகு முறையின் பிரத்யேகக் கூறுகளை வலியுறுத்து கின்ற பொழுது லெனின் பின்வருமாறு எழு தினார்: ''புரட்சிகரமான எழுச்சி வெற்றிக்கு வழிவகுக்க வேண்டுமானால் அது சதியாலோ சனை மீதோ மற்றும் ஒரு கட்சியினையோ நம்பிச் சார்ந்திருக்கக் கூடாது, மாறாக முன் னேற்றமான வர்க்கத்தின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். இதுவே முதல் நிபந்தனை. புரட்சி கரமான எழுச்சி மக்களின் புரட்சிகரமான கிளர்ச்சி யைச் சார்ந்திருக்க வேண்டும். இது இரண்டா வது நிபந்தனை. புரட்சிகரமான எழுச்சி வளர்ந்து வரும் புரட்சியின் வரலாற்றின் திரும்பு முனை யைச் சார்ந்திருக்க வேண்டும்; அப்பொழுது மக்களின் முன்னேற்றமான அணிகளின் செயல் பாடு அதன் உச்சத்தில் இருக்கும், எதிரியின் அணிகளிலும் புரட்சியின் பலவீனமான அரை-மனது மற்றும் உறுதியற்ற நண்பர்களின் அணிகளி லும் ஊசலாட்டங்கள் ஆகவலுவாக இருக்கும். இது மூன்றாவது நிபந்தனை. புரட்சிகரமான எழுச்சி பற்றிய பிரச்சினையை எழுப்புவதற் கான இந்த மூன்று நிபந்தனைகளும் மார்க் சியத்தை பிளான்கிவாதத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன.''*

உழைக்கும் மக்களின் ஆயுதந்தாங்கிய நட வடிக்கை வெற்றியடைவதற்கு அவசியமான

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதி களில், தொகுதி 6, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1980, பக்கம் 194.

நிப்ந்தனைகளைப் பற்றி லெனின் வகுத்த முடிவுகளை 1960க்களிலும் 1970க்களிலும் நடைபெற்ற சம்பவங்கள் முழுமையாக நிரூபித்திருக்கின்றன. கம்யூனிஸ்ட் இயக்கத்திலிருந்த ''இடது'' சீர்திருத்தவாதிகளும் பெருந்திரளான மக்களுடைய ஜனநாயக இயக்கங்களிலிருந்த ''இடது'' அதிதீவிரவாதிகளும் இந்த நிபந்தனைகள் இல்லாதிருக்கும் பொழுது, இருக்கின்ற அமைப்புக்கு எதிராக ஆயுதமேந்திய போராட்டத்தில் மக்களை ஈடுபடுத்துவதற்குச் செய்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தன. குறிப்பாக, இந்தோனேஷியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மாபெரும் இழப்புகள் ஏற்பட்டன.

புறவய நிலைமைகள் இருப்பதும் தயாரிப்பு வேலை நடைபெற்றிருப்பதும் கூட ஆயுதந் தாங்கிய நடவடிக்கையின் வெற்றிக்கு உத்தரவாதமளிக்காது என்று லெனின் கூறினார். இன்னும் அதிகமானவை வேண்டும்: உதாரணமாக, செயல்முறை மற்றும் செயல்திட்டக் கலை, அவசர காலத்தில் போராட்டத்தின் வடிவங்களில் உடனடியான மாற்றங்களைச் செய்கின்ற திறமை, இதரவை. ''போரைப் போலவே அந்த அளவுக்கு முழுமையாகப் புரட்சிகரமான எழுச்சியும் ஒரு கலையாகும்'' என்ற மார்க்சின் பிரபலமான கருத்தை லெனின் மேற்கோள் காட்டிய பிறகு பின்வருமாறு எழுதினார்: ''இந்தக் கலையின் முக்கியமான விதிகள் என்ற முறையில் மார்க்ஸ் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டார்:

1) புரட்சிகரமான எழுச்சியுடன் என்றுமே

விளையாட வேண்டாம், ஆனால் அதைத் துவங்கும் போது நீங்கள் கடைசி வரையில் செல்ல வேண்டும் என்பதை உறுதியாக உணர்ந்திருக்க வேண்டும்.

2) தீர்மானகரமான முனையில், தீர்மானகரமான தருணத்தில் மாபெரும் வலுமிக்க சக்திகளை ஒருமுனைப்படுத்த வேண்டும். இல்லையேல், மேலும் நல்ல ஆயத்தங்களும் ஒழுங்குத்திரட்சியும் கொண்ட எதிரி கலகக்காரர்களை அழித்து விடுவார்.

3) புரட்சிகரமான எழுச்சி தொடங்கி விட்டது என்றால் நீங்கள் மிகப் பெரிய உறுதியுடன் செயலாற்ற வேண்டும். தவறாமல் எல்லா வழிகளிலும் எதிர்த்தாக்குதலை மேற்கொள்ள வேண்டும். 'தற்காப்புப் போக்கு ஆயுதமேந்திய எழுச்சி அனைத்தின் மரணமாகும்.'

4) நீங்கள் எதிரி மீது திடீர்த்தாக்குதல் தொடுக்க முயல வேண்டும், அவனது படைபலம் சிதறிக் கிடக்கும் தருணத்தைப் பற்றிக் கொள்ள வேண்டும்.

5) எவ்வளவு சிறியதாக இருப்பினும் சரி நாள்தோறுமான வெற்றிகளுக்காக (ஒரு நகரம் சம்பந்தப்பட்டதாக இருக்குமானால் மணிக்கு மணி என்று சொல்லலாம்) நீங்கள் பாடுபட வேண்டும். 'தார்மிக மேநிலையை' எப்பாடு பட்டும் நீடித்து வைத்திருக்க வேண்டும்.''*

வரலாறு, குறிப்பாக ஐரோப்பிய சோஷலிஸ்ட் நாடுகளின் அனுபவம் சமாதான வழி

* அதே நூல், பக்கங்கள் 316—317.

யில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குப் பலவித மான வடிவங்களுக்கும் முறைகளுக்கும் உதார ணங்களைக் கொடுத்திருக்கிறது. அவற்றில் கட்சி அல்லது உழைக்கும் மக்களுடைய கட்சி களின் கூட்டணி தேர்தல்களில் பெற்ற வெற்றி யும் ''கீழ் வர்க்கத்தினரின்'' பெருந்திரளான நடவடிக்கைகளும் மக்களுடைய ஸ்தாபனங் களுக்கு, அதாவது சோவியத்துகளுக்கு அதி காரத்தை மாற்றிக் கொடுப்பதில் முடிவடைதல் அடங்கும்.

மேலே கூறிய இரண்டு வழிமுறைகளில் ஒன்று கூட கறாராகப் பார்க்கும் பொழுது குறிப்பாக, சம்பந்தப்பட்ட நாடு பெரிய பிரதேசத்தைக் கொண்டிருந்தால் அல்லது புரட்சிகர நிகழ்வுப் போக்கு அதிகாரத்தைக் கைப்பற்றுகின்ற கட் டத்தில் மிகவும் அதிகமான அளவுக்கு நீண்டு போய் விடுமானால் ''கலப்பற்ற'' முறையில் வெளிப்படுவதில்லை. சமாதான வழியின் சுற்று வட்டத்துக்குள்ளாகவே ஆயுதமேந்திய போராட் டங்கள் (அநேகமாகக் குறுகியவை, ஸ்தல மட் டத்தில் நடைபெறுபவை) நடைபெறலாம்; சமாதானமல்லாத வழிமுறையில் ஆயுதமேந்திய போராட்டத்தில் தற்காலிகமான அல்லது ஸ்தல அளவில் ''இடைநிறுத்தங்கள்''—உள்நாட்டு யுத் தங்களின் போது நடைபெறுவதைப் போல— நடைபெறலாம்.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு சமாதான வழி, சமாதானமல்லாத வழி என்ற இரண்டு வழிகளில் உழைக்கும் மக்கள் எந்த வழியைத் தேந்தெடுப்பார்கள் என்பது ஒவ்வொரு உதார

ணத்திலும் அவர்களுடைய சித்தத்தையோ அல்லது அவர்களுடைய முன்னணிப்படையின் சித்தத்தையோ சார்ந்திருக்கவில்லை, புறவய நிலைமைகளையே சார்ந்திருக்கிறது.

மார்க்சைப் போல லெனினும் ''தொழிலாளி வர்க்கம் **சமாதான வழியில்** அதிகாரத்தைக் கைப் பற்றுவதை விரும்பித் தேர்ந்தெடுக்கும் என்பது மெய்யே''* என்று அடிக்கடி சுட்டிக்காட்டினார். ஆனால் கடைசியாகப் பார்க்கும் பொழுது புரட்சிகர நடைமுறையில் ஒவ்வொன்றுமே வர்க்க சக்திகளின் உண்மையான சமநிலையினால் நிர்ணயிக்கப்படுகிறது: சம்பந்தப்பட்ட நாட்டின் ''நிறுவனங்கள், பழக்க வழக்கங்கள் மற்றும் மரபுகள்'',°° ''மேல் வர்க்கத்தினர்'' தம்முடைய அதிகாரத்தைத் தற்காத்துக் கொள் வதற்குத் தயாராக இருக்கும் நிலை மற்றும் ''கீழ் வர்க்கத்தினர்'' அதிகாரத்தைக் கைப் பற்றப் போராடுவதற்குத் தயாராக இருக்

---

* V. I. Lenin, "A Retrograde Trend in Russian Social-Democracy", *Collected Works,* Vol. 4, p. 276.

°° ''ஆனால் இந்த நோக்கம் (புரட்சியில் வெற்றியடைதல்— ஆசிரியர்) ஒரே விதமான வழிமுறைகளால் சாதிக்கப் படும் என்று நாம் ஒருபோதும் கூறவில்லை என்று மார்க்ஸ் 'ஹேக் காங்கிரசைப் பற்றித்' தமது சொற்பொழிவில் சொன்னார்.

பல்வேறு நாடுகளின் நிறுவனங்கள், பழக்க வழக்கங்கள் மற்றும் மரபுகளுக்கு நாம் ஈடு செய்ய வேண்டும் என்பதை நாங்கள் அறிவோம்.'' (Karl Marx, "The Hague Congress", in Karl Marx and Frederick Engels *Selected Works,* in three volumes, Vol. 2, Progress Publishers, Moscow, 1976, pp. 292—293).

கும் நிலை, கடைசியாக, முதலாளித்துவ அரசின் கோட்டைகளின் மீது ''படையெடுப்பதற்கு'' உரிய தருணத்தைச் சரியாகத் தேர்ந்தெடுத்தல் ஆகியன இவற்றில் அடங்கும்.

தம் காலத்திலிருந்த நிலைமைகளில் பாட்டாளி வர்க்கம் அநேகமாக ஆயுத பலத்தின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றும் என்று மார்க்சும் எங்கெல்சும் கருதினார்கள்; ஆனால் அவர்கள் சமாதான வழிமுறைகளை விலக்கி விடவில்லை, குறிப்பாக, அமெரிக்கா மற்றும் பிரிட்டனில் ஆயுதமேந்திய போராட்டத்தின் மூலமாக மட்டுமே நசுக்கப்படக் கூடிய, பலமான ஒடுக்குமுறை இயந்திரம் இன்னும் ஏற்படவில்லை என்பதால் இந்த நாடுகளில் சமாதான வழிகள் சாத்தியம் என்று கருதினார்கள்.* லெனின் இதே கருத்தைக் கொண்டிருந்தார்; ருஷ்யாவிலும் இதர நாடுகளிலும் சோஷலிஸ்ட் புரட்சி சமாதான வழியில் அல்லது சமாதானமல்லாத வழியில் வளர்ச்சியடைய முடியும், ஆனால் அக்காலத்திலிருந்த நிலைமைகளில் சமாதான வழிக்கு மிகக் குறைவான

---

* நாம் ஏற்கெனவே மேற்கோள் காட்டிய ''ஹேக் காங்கிரசைப் பற்றி'' என்ற சொற்பொழிவில் மார்க்ஸ் பின்வருமாறு கூறினார்: ''உழைக்கும் மக்கள் தம்முடைய இலட்சியங்களை சமாதான வழிமுறைகளில் அடையக் கூடிய அமெரிக்கா, பிரிட்டனைப் போன்ற நாடுகள்—உங்களுடைய நிறுவனங்களைப் பற்றி எனக்கு இன்னும் சிறப்பாகத் தெரியுமானால் ஹாலந்தையும் நான் சேர்த்துக் கொள்வேன்—இருக்கின்றன என்பதை நாங்கள் மறுக்கவில்லை.'' (*Ibid.*, p. 293).

சாத்தியமே இருப்பதாக அனுமானித்தார்.

புரட்சி வளர்ச்சியடைகின்ற பொழுது அதிகாரத்துக்குப் போராடுகின்ற வடிவங்களை மாற்றுவது சாத்தியம், எனவே சந்தர்ப்பங்களைப் பொறுத்து பல்வேறு வழிமுறைகளையும் உபயோகிப்பதற்குத் தயாராக இருப்பது அவசியம் என்பதை மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் அங்கீகரித்தார்கள். பாட்டாளி வர்க்கம் சமாதான வழியில் அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு தேசிய மற்றும் சர்வதேச முதலாளி வர்க்கத்தின் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருக்கும்; உள்நாட்டு யுத்தம் ஏற்படலாம். மறு பக்கத்தில், அது ஆயுதமேந்திய போராட்டத்தின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றினால், முதலாளி வர்க்கத்தின் எதிர்ப்பை நசுக்கி விட முடியும், புரட்சியின் பிந்திய கட்டங்களில் நாடு தழுவிய அளவில் ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படாது.

புரட்சிகர முன்னணிப்படை சக்திகளின் ஸ்தூலமான சமநிலையைக் கணக்கிலெடுத்துக் கொள்வதும் ‘‘படையெடுப்பதற்கு’’ தக்க தருணத்தைத் தேர்ந்தெடுப்பதும் சமாதான வழியிலிருந்து சமாதானமல்லாத வழிக்கு வேகமாக மாறுவதும் அல்லது இதன் மறுதலையும் புரட்சியின் பிந்திய வளர்ச்சிக்கு மாபெரும் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றன. இக்கலைக்கு மூலச்சிறப்பான உதாரணமாக லெனின் விளங்குவதை 1917 அக்டோபர் ஆவணங்களில், குறிப்பாக அவர் 1917 அக்டோபர் 1 (14)ந் தேதியன்று மத்தியக் கமிட்டி, மாஸ்கோ, பெத்

ரோகிராத் கமிட்டிகள் மற்றும் பெத்ரோகிராத், மாஸ்கோ சோவியத்துக்களின் போல்ஷிவிக் உறுப்பினர்களுக்கு எழுதிய கடிதத்தில் காண முடியும். ''சோவியத்துகளின் காங்கிரசுக்காகக் காத்து நிற்பதற்கு போல்ஷிவிக்குகளுக்கு உரிமையில்லை. அவர்கள் உடனே ஆட்சி அதிகாரத்தைக் கைப் பற்ற வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் அவர்கள் உலகப் புரட்சியைப் பாதுகாப்பார்கள்... ருஷ்யப் புரட்சியையும்... போர்முனையில் நூறாயிரக்கணக்கான மக்களின் உயிர்களையும் பாதுகாப்பார்கள்...

''புரட்சிகர எழுச்சி இன்றி ஆட்சி அதிகாரத்தை அடைய முடியாது என்றால், நாம் உடனே புரட்சிகர எழுச்சியை நாட வேண்டும். இப்போது உடனடியாக புரட்சிகர எழுச்சி இன்றி ஆட்சி அதிகாரத்தை அடைவது சாத்தியம். உதாரணமாக, மாஸ்கோ சோவியத் உடனே நேரடியாக ஆட்சி அதிகாரத்தை மேற்கொண்டு (பெத்ரோகிராத் சோவியத்துடன் சேர்ந்து) தன்னையே அரசாங்கமாகப் பிரகடனம் செய்து கொள்ளுமானால் இது சாத்தியம். மாஸ்கோவில் வெற்றி உத்தரவாதம் செய்யப்படும், போராட வேண்டிய தேவை இல்லை. பெத்ரோகிராத் காத்திருக்க முடியும். அரசாங்கம் தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்வதற்கு எதையும் செய்ய முடியாது; அது நிச்சயமாகச் சரணாகதியடையும்...

''வெற்றி திண்ணம், இது இரத்தம் சிந்தாத வெற்றி ஆவதற்கு ஒன்றுக்குப் பத்து வாய்ப்பு

கள் உள்ளன''* என்று லெனின் எழுதினார்.

ஆனால் ஒரு வாரத்துக்குப் பிறகு 1917 அக்டோபர் 8(21)ந் தேதியன்று லெனின் வேறு விதமாக வாதிடுகிறார்: ''...சோவியத்துகளுக்கு இப்போது ஆட்சி அதிகாரத்தை மாற்றி வழங்குவது என்பது ஆயுதமேந்திய எழுச்சி என்றே பொருள்படும் என்பதே ஆகும்.''** லெனின் அதே தினத்தில் வடக்குப் பிரதேச சோவியத்துகள் காங்கிரசில் கலந்து கொள்கின்ற போல்ஷிவிக் தோழர்களுக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு எழுதினார்: ''மெய்யாகவே தாமதம் பேரிடரார்ந்தது.

'''எல்லா ஆட்சி அதிகாரமும் சோவியத்துகளுக்கே' என்ற கோஷம் புரட்சிப் போராட்டக் கோஷமாகும்.' ''***

பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப் பற்றுகின்ற வடிவம்—அது சமாதானமாகவோ அல்லது சமாதானமல்லாததாகவோ எப்படி இருந்தாலும்—புரட்சிகரமான வன்முறையே. மார்க்சும் எங்கெல்சும் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில் எழுதியதைப் போல ''இருக்கின்ற சமூக அமைப்பை பலாத்காரமாகத் தூக்கியெறிவதன் மூலமாக மட்டுமே'' தொழிலாளி வர்க்கம் தன்னுடைய விடுதலையை அடைய முடியும். இந்த முடிவு எவ்வளவு சரியானது என்பதை

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 6, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1980, பக்கங்கள் 313, 314.

** அதே நூல், பக்கம் 316.

*** அதே நூல், பக்கம் 327.

வரலாறு பல தடவைகள் நிரூபித்திருக்கிறது, இன்றும் கூட இது உண்மையாகவே இருக்கிறது.

சமூகப் புரட்சி என்பது வன்முறை என்று மார்க்சியவாதிகள் கருதுவதற்குக் காரணம் வன்முறை மீது அல்லது ''சட்ட மீறல்'' மீது அவர்கள் கொண்டிருக்கும் பாசம் என்று வலது சந்தர்ப்பவாதிகள் அவர்கள் மீது அடிக்கடி குற்றம் சாட்டுகிறார்கள். இது உண்மையல்ல. அதற்கு மாறாக, அவர்கள்—புரட்சிகரமான தொழிலாளி வர்க்கம் முழுவதையும் போலவே—வன்முறையை, குறிப்பாக இரத்தப் பெருக்கைத் தவிர்க்கவே விரும்புகிறார்கள். அவர்கள் புரட்சியை வன்முறை என்று கருதுகிறார்கள் என்றால் சோஷலிஸ்ட் புரட்சி உள்பட சமூகப் புரட்சிகளின் மொத்த வரலாறும் ஆளும் வர்க்கம் ஒருபோதும், எங்கும், எந்த சந்தர்ப்பங்களிலும் தன் அதிகாரத்தைத் தானாகவே ஒப்படைத்ததில்லை என்று எடுத்துக்காட்டுகிறது. அதைச் செய்ய வைப்பது, வன்முறையின் மூலம் அதனிடமிருந்து அதிகாரத்தைப் பறிப்பது எப்பொழுதுமே அவசியமாக இருந்திருக்கிறது. குறிப்பிட்ட தருணத்தில் அது பலவீனமாக இருந்தால் புரட்சிகர வன்முறையின் அளவு குறைவாக இருக்கும். ஆனால் முதலாளி வர்க்கத்திடமிருந்து பாட்டாளி வர்க்கத்துக்கு அதிகார மாற்றம் வர்க்கப் போராட்டம், வன்முறை, ஒடுக்குமுறை இல்லாமல் நடைபெற்றதாக ஒரு உதாரணம் கூடக் கிடையாது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், முதலாளி வர்க்

கம் புரட்சிகர மாற்றங்களை எதிர்க்காமலிருந்ததாக, புதிய சமூக அமைப்பைத் தானாகவே அங்கீகரித்ததாக ஒரு உதாரணம் கூட வரலாற்றில் இன்னும் கிடையாது. மேலும் தொழிலாளி வர்க்கம் மற்றும் புரட்சிகர சக்திகளுக்கு எதிராகத் தடுப்பு வன்முறையை (ஆயுதமேந்திய வன்முறை உள்பட) பேரளவில் உபயோகித்து சட்டத்தையும் ஒழுங்குமுறையையும் முதலில் மீறுவது முதலாளி வர்க்கமே. முதலாளி வர்க்கம் பெரும்பாலும் சட்டத்தை மீறியே தொழிலாளி வர்க்கத் தலைவர்களையும் அரசியல் ஸ்தாபனங்களையும் ஒடுக்குகிறது. சோஷலிஸ்ட் புரட்சி இயக்கத்தின் அடிப்படையாக இருக்கின்ற சக்திகளுக்கு எதிராக ஆளும் வர்க்கம் பயன்படுத்துகின்ற வன்முறைகள் மொத்த அமைப்பாக இருக்கிறது என்று தொகுத்துக் கூறலாம். இது உண்மையில் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர வன்முறையை எதிர்வன்முறையாக—அது வன்முறையின் அவசியமான எல்லைகளுக்கு அப்பால் போகாதிருக்கின்ற பொழுது—மாற்றுகிறது. ''ஆயுதங்களையும் அதிகாரக் கருவிகளையும் வைத்திருக்கின்ற கொடியவர்களுக்கு எதிராக பலாத்காரத்தை உபயோகிக்கா விட்டால் மக்கள் கொடியவர்களிடமிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள முடியாது''* என்று லெனின் கூறினார்.

புரட்சிகளுக்கு இடையில் வித்தியாசம் என்ன

* V. I. Lenin, "The Victory of the Cadets and the Tasks of the Workers' Party", *Collected Works,* Vol. 10, p. 245.

வென்றால், சில புரட்சிகள் வன்முறையின் மூலம் வெற்றி அடைகின்றன; சில வன்முறை இல்லாமல் வெற்றி அடைகின்றன என்பதல்ல; ஆனால் சில வற்றில் சமாதான (ஆயுதமில்லாத) முறைகளின் மூலம், மற்றவைகளில் சமாதானமல்லாத முறை களின் மூலம் வன்முறை அமுலாக்கப்படும் என் பதாகும். இரண்டாவது முக்கியமான வித்தியா சம், இரண்டு முறைகளிலும் வன்முறையின் **அளவு**, அதன் பரிமாணம் ஸ்தூலமான நிலைமையைப் பொறுத்து மாறுகிறது என்பதாகும். கோட் பாட்டளவில், முதலாளி வர்க்கத்துக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கம் உபயோகிக்கின்ற வன் முறையின் அளவு புரட்சிகர மாற்றங்களுக்கு முதலாளி வர்க்கத்தின் எதிர்ப்பின் அளவினால் நிர்ணயிக்கப்படுகிறது. பல நூற்றாண்டுகளாக சுரண்டல்காரர்களின் கொடுமைகளுக்கு ஆளாகி யிருக்கின்ற உழைக்கும் மக்களின் ஆவேசம் சில இடங்களில், குறைந்த காலத்துக்கு எல்லை மீறிவிடலாம். அது எந்தப் புரட்சியிலும் நடை பெறக் கூடியதே. ஆனால் இந்த அத்துமீறல் கள் புரட்சிகர வன்முறையின் பொது அளவை யும் வடிவத்தையும் நிர்ணயிப்பதில்லை. தூக்கி யெறியப்பட்ட வர்க்கங்களின் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகள், புரட்சிக்கு அவர்களுடைய எதிர்ப்பு, புரட்சிகர சக்திகளுக்கு எதிராக அவர் களுடைய வன்முறை அவற்றை நிர்ணயிக்கின் றன.

முதலாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்தைக் கைவிடும்படி **நிர்ப்பந்திக்கப்படுகின்ற** சந்தர்ப்பம் தோன்ற முடியும் என்பதை லெனின் கோட்

பாட்டளவில் அங்கீகரித்தார்: ''தனிப்பட்ட உதாரணங்களில், விதிவிலக்கு என்ற முறையில், உதாரணமாக, ஒரு பெரிய நாட்டில் சமூகப் புரட்சி நிறைவேற்றப்பட்ட பிறகு அதற்குப் பக்கத்திலுள்ள ஏதாவதொரு சிறிய நாட்டில் முதலாளி வர்க்கம்—இனிமேல் எதிர்ப்பதில் பய னில்லை என்று அது புரிந்து கொண்டால், அது தன் தோலைக் காப்பாற்றிக் கொள்ள விரும் பினால்—ஆட்சியதிகாரத்தை சமாதான முறை யில் ஒப்படைப்பது சாத்தியமே.''* முதலாளி வர்க்கம் இப்படி ''விவேகத்துடன்'' நடந்து கொண்டால் பாட்டாளி வர்க்கம் அதிகாரத் தைக் கைப்பற்றுவதற்கு ஆயுதங்களைப் பயன் படுத்த வேண்டிய அவசியம் இருக்காது. மேலும் அது சமாதான வடிவங்களிலும் வன்முறையின் அளவைக் கணிசமாகக் குறைக்கும்; ஆனால் இங்கும் கூட புரட்சியைப் பாதுகாப்பதற்காக முதலாளி வர்க்கத்தின் நடவடிக்கைகளையும் வாய்ப்புகளையும் கட்டுப்படுத்துவதை, அதன் செல்வாக்கின் அளவைக் குறைப்பதை, அதை நிராயுத பாணியாக்குவதை இதரவற்றை நோக் கமாகக் கொண்ட நடவடிக்கைகளைப் பாட்டாளி வர்க்கம் அநேகமாகச் செய்ய வேண்டியிருக்கும்.

புரட்சி வெற்றி பெறுகின்ற இரண்டு வழி களுமே இன்றைய நிலைமையில் முக்கியத்துவத் தைக் கொண்டிருக்கின்றன. உலக சோஷலிஸ்ட் அமைப்பு வளர்ச்சி அடைகின்ற பொழுது,

---

* V. I. Lenin, "A Caricature of Marxism and Imperialist Economism", *Collected Works,* Vol. 23, p. 69.



11*

சர்வதேச அரங்கத்தில் சக்திகளின் சமநிலை சோஷலிசத்துக்கும் ஜனநாயகத்துக்கும் சாதக மாக ஓங்குகின்ற பொழுது, பாட்டாளி வர்க்கம் குறைவான அளவில் மட்டுமே பலாத்காரத்தைப் பயன்படுத்தி, சமாதான வழியில் அதிகாரத் தைக் கைப்பற்றுகின்ற நிலைமை தோன்றக் கூடிய வாய்ப்பு அதிகரிக்கிறது. ''ஒரு பெரிய நாட்டில் சமூகப் புரட்சி நிறைவேற்றப்பட்ட பிறகு அதற்குப் பக்கத்திலுள்ள ஏதாவதொரு சிறிய நாட்டில்''* அதிகாரம் சமாதான வழி யில் தொழிலாளி வர்க்கத்துக்குக் கிடைக்கும் என்பது லெனின் காலத்தைக் காட்டிலும் இன்று அதிகச் சாத்தியமாக இருக்கிறது.

சமாதான வழியில் பாட்டாளி வர்க்கத்துக்கு அதிகாரத்தை மாற்றிக் கொடுப்பதில் நாடாளு மன்றம் மிகவும் உதவியாக இருக்கும். தேர்தல் களில் தொழிலாளி வர்க்கக் கட்சி மாபெரும் ஆதரவைப் பெற்று அந்தக் கட்சி அல்லது இடது சாரி சக்திகளின் கூட்டணி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறுவது அந்த மன் றத்தை மக்கள் அதிகாரத்தின் உறுப்பாக, ஜனநாயக மற்றும் சோஷலிஸ்ட் மாற்றங்களை அமுல் செய்கின்ற கருவியாக மாற்றும். முனைப் பான ஜனநாயக மரபுகள், சிறப்பாக நாடாளு மன்ற மரபுகளைக் கொண்ட நாடுகளில், தொழி லாளி வர்க்கம் நாடாளுமன்றத்திற்கு உள் ளேயும் நாடாளுமன்றத்திற்கு வெளியிலும்

* V. I. Lenin, "A Caricature of Marxism and Imperialist Economism", *Collected Works,* Vol. 23, p. 69.

நீண்ட போராட்ட அனுபவத்தைக் கொண் டிருக்கின்ற நாடுகளில், தொழிலாளர்கள் மற்றும் உழைக்கும் மக்களின் இதர பிரிவுகள் மத்தியில் தொழிலாளி வர்க்கக் கட்சிக்குப் பரந்த ஆதரவு இருக்கின்ற நாடுகளில் இது குறிப்பிடத்தக்க அளவுக்கு சாத்தியம். முதலாளி வர்க்கத்தையும் அதன் கட்சிகளையும் அம்பலப்படுத்துவதற்கு, தொழிலாளி வர்க்கத்தைச் சுற்றி உழைக்கும் மக்களைத் திரட்டுவதற்கு, முதலாளி வர்க்கம், பிற்போக்குக் கட்சிகள் மற்றும் கூட்டணி களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்து வதற்கு நாடாளுமன்றத்தை உபயோகிக்க முடி யும்; சமூக-அரசியல் வாழ்க்கையின் மற்ற துறை களுக்கும் அது உபயோகமாக இருக்க முடி யும்.

நாடாளுமன்ற உதவியுடன் புரட்சியை நிறை வேற்றினாலும் புரட்சிகரக் கடமைகளின் மொத்தத் தொகுதியையும் அதன் மூலம், அதா வது நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் நாடா ளுமன்றம் அல்லாத வடிவங்களிலும் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரமான போராட்டம் இல்லாமல் முற்றிலும் நாடாளுமன்ற நடவடிக் கைகளின் மூலம் நிறைவேற்ற முடியாது என் பதை நினைவிலிறுத்த வேண்டும்.

பாட்டாளி வர்க்கம் நாடாளுமன்றத்தை உபயோகிப்பது முதலாளி வர்க்கத்துக்கு எதி ராகப் புரட்சிகர வன்முறையை உபயோகிப் பதையோ அல்லது முதலாளித்துவ அரசு இயந்திரத்தை நொறுக்குவதையோ விலக்க வில்லை. முதலாளி வர்க்கம் பொருளாதாரத்

தில் கேந்திரமான நிலைகளை வைத்துக் கொண்டிருக்கின்ற வரை, அரசு இயந்திரம் மற்றும் அதன் ஒடுக்குமுறைக் கருவிகள் முதலாளி வர்க்கத்திடம் இருக்கின்ற வரை, நவீன செய்தி-காட்சிச் சாதனங்களை (டெலிவிஷன், வானொலி மற்றும் பத்திரிகைகள்) உபயோகித்துப் பெருந்திரளான மக்களுடைய உணர்வை மாற்றுவதற்கு அது கையாளுகின்ற வரை, எந்த நாடாளுமன்றமும், ஆகப் புரட்சிகரமான நாடாளுமன்றம் கூட—அது எப்படிப்பட்ட சட்டங்களை நிறைவேற்றினாலும் அல்லது அதன் சுவர்களுக்குள் எவ்வளவு புரட்சிகரமான உரைகள் நிகழ்த்தப்பட்டாலும்—தீவிரமான சமூக மாற்றங்களை உண்மையில் அமுல் நடத்த முடியாது. நாடாளுமன்றத்துக்கு வெளியில் நடைபெறுகின்ற மக்களின் புரட்சிகரமான போராட்டத்துடன் இணைந்து முதலாளி வர்க்கம் மற்றும் அனைத்து எதிர்ப்புரட்சி சக்திகளின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தி, சமூகத்தின் மொத்த அரசியல் அமைப்பையும் புனரமைப்புச் செய்வதன் மூலமே நாடாளுமன்றம் சோஷலிஸ்ட் புரட்சியை நிறைவேற்றுவதிலும் புதிய சமூகத்தை நிர்மாணிப்பதிலும் முக்கியமான பங்காற்ற முடியும்.

சமாதான வழியில், குறிப்பாக நாடாளுமன்றத்தின் உதவியுடன் புரட்சியை நிறைவேற்றுகின்ற பொழுது, அவசர காலங்களில் சமாதானமல்லாத போராட்ட வழிமுறைகளுக்கு வேகமாக மாறுவதற்கும் முதலாளி வர்க்கம் மற்றும் அதன் கூட்டாளிகள் சட்டவிரோத

மான முறைகளை உபயோகித்து எதிரிகள் திடீர்ப்புரட்சிகளைச் செய்ய முற்படும் பொழுது அவற்றுக்கு எதிராக ஆயுதங்களைப் பயன்படுத்து வதற்கும் பாட்டாளி வர்க்கம் தயாராக இருக்க வேண்டும். இந்த ஆபத்து முற்றிலும் உண்மை என்பதை சிலியில் நடைபெற்ற சம்பவங்கள் எடுத்துக்காட்டியிருக்கின்றன. அங்கே சமாதான வழியில் நடைபெற்ற புரட்சிகர நிகழ்வுப் போக்கை பிற்போக்கு சக்திகள் வன்முறையை உபயோகித்துத் தடுத்தன.

சுருக்கமாகச் சொல்வதென்றால், பாட்டாளி வர்க்கம் குறைவான அளவில் வன்முறையை உபயோகித்து சமாதான வழியில் அதிகாரத் தைக் கைப்பற்றுவதற்கு இன்று உண்மையான வாய்ப்பு இருக்கிறது; ஆனால் பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு சமாதானமல்லாத வழியும் முக்கியமானதாக இருக்கிறது. முதலாளி வர்க்கத்தின் சர்வதேசத் தொடர்புகளின் வளர்ச்சியும் ஏகாதிபத்தியத் தின் ஆக்கிரமிப்புக் கொள்கைகளும் (எதிர்ப் புரட்சியை ஏற்றுமதி செய்வது உள்பட)— புரட்சிகர சக்திகளை அது எதிர்ப்பது முற்றிலும் வீணானது என்றாலும்—முதலாளி வர்க்கத்தின் ''விவேகத்தில்'' பெரிய அளவுக்குக் குறுக்கிடு கின்றன; புரட்சிகர சக்திகளை ஆயுதங்களை உபயோகித்து எதிர்க்கும்படி முதலாளி வர்க்கத் தைத் தூண்டுகின்றன; அதன் விளைவாகப் புரட்சிகர சக்திகள் முதலாளி வர்க்கத்துக்கு எதிராக ஆயுதமேந்திப் போராட வேண்டியிருக் கிறது. ''ஒரு பெரிய நாட்டில் சமூகப் புரட்சி

நிறைவேற்றப்பட்ட பிறகு அதற்குப் பக்கத்திலுள்ள ஏதாவதொரு சிறிய நாட்டில்'' இத்தகைய நிலைமை ஏற்படுவது கூட சாத்தியமே. சிலி நாட்டின் அனுபவம் புரட்சியை நிறைவேற்றுவதற்கு சமாதான வழிமுறைகளின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்துவதன் ஆபத்தைத் தொழிலாளி வர்க்கத்துக்கு எடுத்துக் காட்டியது; ஆனால் அது சமாதான வழியை ஒழித்து விடவில்லை.

ஒரு நாட்டிலுள்ள கம்யூனிஸ்டுகளும் புரட்சிகரத் தொழிலாளி வர்க்கமும் அந்த நாட்டிலுள்ள நிலைமையைப் பற்றிய ஸ்தூலமான பகுப்பாய்வின் அடிப்படையில் சோஷலிசத்துக்கான போராட்டத்தின் வாய்ப்புகளையும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு சாத்தியமான வழிமுறைகளையும் நிர்ணயிக்கிறார்கள். சமாதான வழி அல்லது சமாதானமல்லாத வழி— இந்த இரண்டில் ஏதாவதொன்றைப் பின்பற்றுவதற்கு ஒரு சந்தர்ப்பம் இருப்பதை அவர்கள் கணக்கிலெடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் ஒரு குறிப்பிட்ட தருணத்தில் எந்த வழி அதிகச் சாத்தியமானதாகத் தோன்றினாலும், எந்த நேரத்திலும் நிலைமை மாறலாம், அடுத்த வழிக்கு மாற வேண்டிய அவசியம் ஏற்படலாம் என்பதை அவர்கள் நினைவிலிறுத்த வேண்டும். சம்பவங்கள் எதிர்பாராத விதத்தில் மாறுவதற்கு அவர்கள் எப்பொழுதுமே தயாராக இருக்க வேண்டும்.

## 13. சோஷலிஸ்ட் புரட்சியும் முதலாளித்துவ அரசும்

''ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் விடுதலை பலாத்காரப் புரட்சியின்றி சாத்தியமில்லை என்பதோடு ஆளும் வர்க்கத்தினால் தோற்றுவிக்கப்பட்ட அரசு அதிகார இயந்திரத்தை **அழித்திடாமல்** அது சாத்தியமில்லை''* என்று லெனின் எழுதினார். இந்த இயந்திரத்தை அழிப்பது சோஷலிஸ்ட் புரட்சியின் பிந்திய வளர்ச்சிக்கும் முடிவான வெற்றிக்கும் முக்கியமான கடமையாகவும் நிபந்தனையாகவும் இருக்கிறது. மார்க்சும் எங்கெல்சும் இம்முடிவுக்கு வந்தார்கள்; லெனின் இதைப் புதிய நிலைமைகளில் விரித்துரைத்தார். இம்முடிவு சோஷலிஸ்ட் புரட்சித் தத்துவத்துக்கும் செய்முறைக்கும் தலைசிறந்த முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. இதை சோஷலிஸ்ட் புரட்சியின் **விதி** என்றே கருதலாம்; இதை மீறுவது மிகவும் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும்.

முதலாளித்துவ அரசு இயந்திரத்தை ''அழிப்பது'', ''நொறுக்குவது'' ஏன் அவசியம்? தொழிலாளி வர்க்கத்துக்கு அரசு தேவை; குறைந்த பட்சம் அது உலர்ந்து உதிர்வதற்கு அவசியமான நிலைமைகள் உருவாக்கப்படுகின்ற வரை அரசு தேவை; அதனால் முதலாளித்துவப்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 6, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1980, பக்கம் 17.

புரட்சிகள் செய்ததைப் போல தொழிலாளி வர்க்கம் அதை ''அப்படியே'' ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது, தன்னுடைய சொந்த நோக்கங்களுக்கு ஏன் உபயோகித்துக் கொள்ளக் கூடாது? முதலாளித்துவ அரசு பாட்டாளி வர்க்கம் சந்திக்கின்ற கடமைகளை நிறைவேற்று வதற்கு உருவாக்கப்படவில்லை என்பதே காரணம். இந்த அரசு—அதன் சாராம்சத்திலும் செயல்களிலும்—சோஷலிஸ்ட் புரட்சி, தொழி லாளி வர்க்கம் மற்றும் சோஷலிசத்துக்கு எதி ராகவே இருக்கிறது. ''வர்க்கப் பகைமைகள் இணக்கம் காண முடியாதவை ஆனதன் விளைவும் வெளியீடுமே அரசு. எங்கே, எப்பொழுது, எந்த அளவுக்கு வர்க்கப் பகைமைகள் புற நிலைக் காரணங்களால் இணக்கம் காண முடியா தவை ஆகின்றனவோ அங்கே, அப்பொழுது, அரசு உதித்தெழுகிறது... மார்க்சின் கருத்துப்படி வர்க்க ஆதிக்கத்துக்கான ஓர் உறுப்பே, ஒரு வர்க்கம் பிறிதொன்றை ஒடுக்குவதற்கான ஓர் உறுப்பே அரசு; வர்க்கங்களுக்கு இடையிலான மோதலை மட்டுப்படுத்துவதன் வாயிலாய் இந்த ஒடுக்குமுறையைச் சட்ட முறையாக்கி, நிரந்தரமாக்கிடும் 'ஒழுங்கை' நிறுவுவதே அரசு.''°

தொழிலாளி வர்க்கம் மற்றும் உழைக்கும் மக்கள் அனைவரையும் ஒடுக்கி, நசுக்குகின்ற உறுப்பு சோஷலிஸ்ட் புரட்சியினால் அழித்து, அகற்றப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தத்

° அதே நூல், பக்கங்கள் 14—15.

தேவையில்லை. ஆனால் துல்லியமாக எப்பகுதியை அழித்து அகற்ற வேண்டும்? இதை எப்படிச் செய்ய வேண்டும்? முதலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் சாராம்சத்தில் மாற்றமின்றி இருக்கும் பொழுது பல்வேறு வடிவங்களை அடைய முடியும், பல்வேறு சாதனங்களின் மூலம் நிறைவேற முடியும் மற்றும் முதலாளித் துவ அரசை நொறுக்க வேண்டும் என்று மார்க் சியம் கூறுவதற்கும் முதலாளித்துவ சமூகத்தில் இருக்கின்ற எல்லா நிறுவனங்களையும் அமைப்பு களையும் தரைமட்டமாக்க வேண்டும் என்று அராஜகவாதிகளும் ''இடது'' புரட்சிக்காரர் கள் கூறுவதற்கும் எவ்விதத்திலும் சம்பந்த மில்லை என்ற உண்மைகளைச் சிறப்பாகச் சிந்திக்கும் பொழுது இவை சுலபமான கேள்வி கள் அல்ல.

அரசு என்பது ''பொது அதிகாரம்'', அதாவது சமூகத்துடன் முற்றொருமையாக இல்லாமல் அதற்கு மேலே நின்று கொண்டு தன் ஒடுக்குமுறைச் செயல்களை நிறைவேற்றுகின்ற ''சக்தி'' என்ற கருத்தை லெனின் ஸ்தூலப்படுத்தினார். ''இந்தப் பொது அதிகாரம் ஒவ்வொரு அரசிலும் இருந்து வருகிறது. இது ஆயுதமேந்திய ஆட்களை மட்டுமின்றி, பொருளாயதத் துணைச் சாதனங்களையும் சிறைக் கூடங்களையும் எல்லா வகையான பலாத்கார ஏற்பாடுகளையும் கொண்டதாகும்''* என்று எங்கெல்ஸ் எழுதியதை அவர் மேற்கோள் காட்

* அதே நூல், பக்கம் 18.

டினார். எங்கெல்ஸ் ''ஆயுதமேந்திய ஆட்கள்'' என்று எழுதிய பொழுது ''தானாகவே இயங்கும் மக்களது ஆயுதமேந்திய ஒழுங்கமைப்பைக்'' குறிக்கவில்லை; அவர் ''சமுதாயத்துக்கு மேலே நின்று... ஆயுதமேந்திய ஆட்களைக் கொண்ட தனிவகைப் படைகளை (போலீஸ் மற்றும் நிரந்தர இராணுவம்)...''[°] குறிப்பிடுவதாக லெனின் வலியுறுத்தினார். இந்த ''ஆயுதமேந்திய ஆட்களைக் கொண்ட படைகளுடன்'' அதிகாரிகளைக் கொண்ட மாபெரும் படையும், அதாவது அரசு அதிகார வர்க்கமும் சேர்ந்து கொள்கிறது—இதுவும் ஆளும் வர்க்கத்துக்கே சேவை செய்கிறது—தொழிலாளி வர்க்கத்தைப் பொறுத்த வரை ஒடுக்குமுறை, முடுக்கும் நடவடிக்கைகளைப் பிரத்யேகமான வடிவத்தில் நிறைவேற்றுகிறது. இந்த இராணுவ-அதிகார வர்க்க இயந்திரத்தையே பாட்டாளி வர்க்கம் முதலில் அழிக்க வேண்டும்.

முதலாளித்துவ அரசு இயந்திரத்தை அழிக்கின்ற முதல் அனுபவத்தை மார்க்ஸ் பாரிஸ் கம்யூன் நடவடிக்கைகளை ஆராய்ந்த பொழுது **பிரான்சில் உள்நாட்டுப் போர்** என்ற நூலில் வர்ணித்தார். ''...மத்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக நீடிப்பதற்கு பதில் போலீசுத் துறையின் அரசியல் குணாம்சங்கள் உடனடியாக அகற்றப்பட்டன, அது கம்யூனுக்குப் பொறுப்பான, எந்த நேரத்திலும் திருப்பி அழைக்கப்படக் கூடிய பிரதிநிதியாக மாற்றப்

---

° அதே நூல், பக்கம் 19.

பட்டது... நிர்வாகத்தின் மற்ற எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்த அதிகாரிகளும் இப்படியே மாற்றப்பட்டார்கள்...

''பழைய அரசாங்கத்தின் அடக்குமுறைச் சக்திகளான நிரந்தர இராணுவத்தையும் போலீசையும் அகற்றிய பிறகு ஒடுக்குமுறையின் ஆன்மிக சக்தியான 'மதகுரு அதிகாரத்தை' நொறுக்குவதில் கம்யூன் அதிகமான அக்கறை காட்டியது...

''நீதித்துறை அதிகாரிகளின்... போலியான சுதந்திரம்... நீக்கப்பட்டது... மற்ற அரசு அலுவலர்களைப் போலவே மாஜிஸ்டிரேட்டுகளும் நீதிபதிகளும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள், பொறுப்பாக இருப்பார்கள், திருப்பியழைக்கப்படுவார்கள்...''* பாரிஸ் கம்யூனார்டுகள் இவ்விதத்தில் நிலைமையின் நிர்வாகத்தை மேற்கொண்ட பிறகு ஆன்மிக நிர்ப்பந்தத்தையும் ஒடுக்குமுறையையும் நிர்வகித்த போலீஸ், இராணுவம் மற்றும் அரசு அதிகாரிகளிடமிருந்து உண்மையான அரசியல் அதிகாரத்தைப் பறித்து பழைய அதிகார அமைப்புகளுக்குப் பதிலாகப் புதிய அமைப்புகளை ஏற்படுத்தினார்கள்; அவை தொழிலாளி வர்க்கத்தின் சித்தம் மற்றும் நலன்களைப் பிரதிபலித்தன.

பின்னர் நடைபெற்ற புரட்சிகள் தமக்குரிய வேறுபாடுகளைக் கொண்டிருந்த போதிலும் இராணுவ-அதிகார வர்க்க இயந்திரத்தின்

---

* K. Marx and F. Engels, *On the Paris Commune,* Progress Publishers, Moscow, 1971, pp. 71, 72.

பிரதிநிதிகளின் அதிகாரத்தை நீக்கி, அவர்களை நிராயுதபாணியாக்கி போலீஸ், இராணுவம் மற்றும் அரசு நிறுவனங்களைத் தீவிரமான முறையில் புத்தமைப்புச் செய்யும் அவசியத்தையும் அரசு அதிகாரத்தின் முந்திய பிரதிநிதிகளுடைய செல்வாக்குப் பாதைகளை அடைத்து சர்வதேச முதலாளி வர்க்கத்துடன் அவர்களுடைய தொடர்புகளைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியத்தையும் முற்றிலும் நிரூபித்தன.

முதலாளி வர்க்கம் தன்னுடைய சர்வாதிகாரத்தை அரசின் மூலமாக மட்டுமல்லாமல் நிறுவனங்கள், ஏஜன்சிகள் என்ற கிளைகளைக் கொண்ட அமைப்பின்—அரசைக் கருவாகக் கொண்ட முதலாளி வர்க்கத்தின் சர்வாதிகார அமைப்பின்—மூலமாக அமுலாக்குகிறது. இந்த அமைப்பில் அரசுடன் பல்வேறு விதமான ஏகபோகக் கூட்டணிகளும் சங்கங்களும் இருக்கின்றன. இவை லட்சக்கணக்கான இழைகளால் அரசுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன; ஒரு பக்கத்தில் இவை அரசின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளின் மீது தாக்கம் செலுத்துகின்றன, மறு பக்கத்தில் தாமே இக்கொள்கைகளின் கருவிகளாகவும் இருக்கின்றன. அது முதலாளித்துவ அரசியல் கட்சிகளையும் கடைசியாக ஒடுக்குமுறை-பயங்கரவாதக் கூட்டணிகளையும் ஸ்தாபனங்களையும்—இவை போலீஸ் மற்றும் இதர நிர்வாகப் பிரிவுகளுடன் இரகசியத் தொடர்பு வைத்திருக்கின்றன — உள்ளடக்கியிருக்கிறது.

ஏகபோக முதலாளித்துவத்துக்கு முன்னரும்

ஆளும் வர்க்கத்தின் அரசாங்கமல்லாத ஸ்தாபனங்கள் இருந்தன; ஆனால் அந்தக் கட்டத்தில் அரசுடன் அல்லது இராணுவ-அதிகார வர்க்க இயந்திரத்துடன் அவற்றின் இணைப்புகள் ஆளும் வர்க்கத்தின் சர்வாதிகார அமைப்பை உருவாக்கக் கூடிய அளவுக்கு மிகவும் எண்ணற்றவையாகவோ, நெருக்கமாகவோ இருக்கவில்லை. முதலாளித்துவ அரசின் நிலைகள் பலமடைகின்ற பொழுது, அதன் செயல்துறைகள் விரிவடைகின்ற பொழுது, அதன் பாத்திரம் அதிகரிக்கும் பொழுது இந்த அமைப்பு உருவாக்கப்படுகிறது. இங்கே அந்த அரசு மட்டும் வளர்ச்சியடையவில்லை; அதைச் சுற்றி மொத்த அமைப்புமே எழுகிறது, அரசு தன் ஒடுக்குமுறைச் செயல்களை நிறைவேற்றுவதற்கு உதவியளிப்பதுடன் அவற்றில் சிலவற்றைத் தானே எடுத்துக்கொள்கிறது. ஆளும் வர்க்கத்தின் அரசாங்கமல்லாத ஸ்தாபனங்கள் மற்றும் ஆளும் வர்க்கத்தினால் நிதியளிக்கப்பட்டு, முற்போக்கு சக்திகளை எதிர்த்துப் போராடுவதற்கு அதனால் உபயோகிக்கப்படுகின்ற விசேஷ ரக ஸ்தாபனங்களின் எண்ணிக்கை பெருகியிருப்பதும் செல்வாக்கு ஓங்கியிருப்பதும் நவீன முதலாளித்துவ சமூகத்தின் அரசியல் அமைப்பின் குறியடையாளமாகும்.

புரட்சிகர மற்றும் தேசிய விடுதலை இயக்கத்தை ஒடுக்குகின்ற வேலையை அரசினால் செய்ய முடியவில்லை என்பதை இந்த நிகழ்வுப் போக்கு நிரூபிக்கிறது. முதலாளி வர்க்கம் தானே நிறைவேற்றிய சட்டங்களின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டு,

பிரதிநிதிகளின் அதிகாரத்தை நீக்கி, அவர்களை நிராயுதபாணியாக்கி போலீஸ், இராணுவம் மற்றும் அரசு நிறுவனங்களைத் தீவிரமான முறையில் புத்தமைப்புச் செய்யும் அவசியத்தையும் அரசு அதிகாரத்தின் முந்திய பிரதிநிதிகளுடைய செல்வாக்குப் பாதைகளை அடைத்து சர்வதேச முதலாளி வர்க்கத்துடன் அவர்களுடைய தொடர்புகளைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியத்தையும் முற்றிலும் நிரூபித்தன.

முதலாளி வர்க்கம் தன்னுடைய சர்வாதிகாரத்தை அரசின் மூலமாக மட்டுமல்லாமல் நிறுவனங்கள், ஏஜன்சிகள் என்ற கிளைகளைக் கொண்ட அமைப்பின்—அரசைக் கருவாகக் கொண்ட முதலாளி வர்க்கத்தின் சர்வாதிகார அமைப்பின்—மூலமாக அமுலாக்குகிறது. இந்த அமைப்பில் அரசுடன் பல்வேறு விதமான ஏகபோகக் கூட்டணிகளும் சங்கங்களும் இருக்கின்றன. இவை லட்சக்கணக்கான இழைகளால் அரசுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன; ஒரு பக்கத்தில் இவை அரசின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளின் மீது தாக்கம் செலுத்துகின்றன, மறு பக்கத்தில் தாமே இக்கொள்கைகளின் கருவிகளாகவும் இருக்கின்றன. அது முதலாளித்துவ அரசியல் கட்சிகளையும் கடைசியாக ஒடுக்குமுறை-பயங்கரவாதக் கூட்டணிகளையும் ஸ்தாபனங்களையும்—இவை போலீஸ் மற்றும் இதர நிர்வாகப் பிரிவுகளுடன் இரகசியத் தொடர்பு வைத்திருக்கின்றன — உள்ளடக்கியிருக்கிறது.

ஏகபோக முதலாளித்துவத்துக்கு முன்னரும்

ஆளும் வர்க்கத்தின் அரசாங்கமல்லாத ஸ்தாபனங்கள் இருந்தன; ஆனால் அந்தக் கட்டத்தில் அரசுடன் அல்லது இராணுவ-அதிகார வர்க்க இயந்திரத்துடன் அவற்றின் இணைப்புகள் ஆளும் வர்க்கத்தின் சர்வாதிகார அமைப்பை உருவாக்கக் கூடிய அளவுக்கு மிகவும் எண்ணற்றவையாகவோ, நெருக்கமாகவோ இருக்கவில்லை. முதலாளித்துவ அரசின் நிலைகள் பலமடைகின்ற பொழுது, அதன் செயல்துறைகள் விரிவடைகின்ற பொழுது, அதன் பாத்திரம் அதிகரிக்கும் பொழுது இந்த அமைப்பு உருவாக்கப்படுகிறது. இங்கே அந்த அரசு மட்டும் வளர்ச்சியடையவில்லை; அதைச் சுற்றி மொத்த அமைப்புமே எழுகிறது, அரசு தன் ஒடுக்குமுறைச் செயல்களை நிறைவேற்றுவதற்கு உதவியளிப்பதுடன் அவற்றில் சிலவற்றைத் தானே எடுத்துக்கொள்கிறது. ஆளும் வர்க்கத்தின் அரசாங்கமல்லாத ஸ்தாபனங்கள் மற்றும் ஆளும் வர்க்கத்தினால் நிதியளிக்கப்பட்டு, முற்போக்கு சக்திகளை எதிர்த்துப் போராடுவதற்கு அதனால் உபயோகிக்கப்படுகின்ற விசேஷ ரக ஸ்தாபனங்களின் எண்ணிக்கை பெருகியிருப்பதும் செல்வாக்கு ஓங்கியிருப்பதும் நவீன முதலாளித்துவ சமூகத்தின் அரசியல் அமைப்பின் குறியடையாளமாகும்.

புரட்சிகர மற்றும் தேசிய விடுதலை இயக்கத்தை ஒடுக்குகின்ற வேலையை அரசினால் செய்ய முடியவில்லை என்பதை இந்த நிகழ்வுப் போக்கு நிரூபிக்கிறது. முதலாளி வர்க்கம் தானே நிறைவேற்றிய சட்டங்களின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டு,

பெரும்பாலும் அவற்றை ரத்துச் செய்ய முடியாமல் சட்டத்துக்குப் **புறம்பான** ஸ்தாபனங்களை ஏற்படுத்துகிறது, அவை உண்மையில் ஒடுக்குமுறை உறுப்புகளின் செயல்களை நிறைவேற்றுகின்றன. முதலாளி வர்க்கத்தின் அரசாங்கமல்லாத ஸ்தாபனங்கள் முன்னெப் போதுமில்லாத அளவுக்கு வளர்ச்சியடைவதன் மூலம் முதலாளி வர்க்க சர்வாதிகார அமைப்பு விரிவடைவதை இது மிகச் சிறப்பாக விளக்குகிறது. இந்த ஸ்தாபனங்கள் எண்ணிக்கையில் அதிகரித்திருப்பதும் அவற்றின் நடவடிக்கை தீவிரமடைந்திருப்பதும் ஏகபோக அதிகாரம் மற்றும் அரசு அதிகாரத்தின் இணைப்பில் முக்கியமான பங்காற்றுகின்றன.

ஆகவே ஆளும் வர்க்கத்தின் **சர்வாதிகாரம்** என்ற மொத்த **அமைப்பை** —அதன் உட்கருவே அரசு— **ஒழிக்க வேண்டிய** அவசியம் அரசு மற்றும் புரட்சியைப் பற்றிய மார்க்சிய-லெனினிய போதனையிலிருந்து பிறக்கின்ற முக்கியமான தத்துவ மற்றும் செய்முறை முடிவாகும். முதலாளி வர்க்கம் தன்னுடைய சர்வாதிகாரத்தை அரசின் உதவியினால் மட்டும் நிறைவேற்றவில்லை என்பது தெளிவாகிவிட்ட இன்றைய சமயத்தில் பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுகின்ற கட்டத்திலும் அதன் சர்வாதிகாரத்தின் முதல் கட்டத்திலும் அரசாங்க உறுப்புகளின் எதிர்ப்புக்கு மட்டுமல்லாமல் இன்னும் அதிகமான பல ஸ்தாபனங்களின் எதிர்ப்புக்கும் அது ஈடு கொடுக்க வேண்டியிருக்கும். ஆகவே **முதலாளி வர்க்க சர்வாதிகாரத்தின்** மொத்த

அமைப்பையும் அழிப்பது சோஷலிஸ்ட் புரட்சிக்கு அவசியமான நிபந்தனையாகிறது.

எந்த நாடுகளில் பழைய அரசு இயந்திரம் மற்றும் ஆளும் வர்க்க சர்வாதிகாரத்தின் மொத்த அமைப்பையும் அழிப்பது முரண்பாடான முறையில், அதிகக் கால நீட்டிப்புடன் நடைபெறுகிறதோ, பழைய இராணுவ-அதிகார வர்க்கப் பொறியமைவின் பிரதிநிதிகள் சமூகத்தில் தம்முடைய நிலைகளைத் தக்க வைத்துக் கொள்கிறார்களோ அங்கே பழைய அமைப்பை மறுபடியும் ஏற்படுத்துகின்ற தீவிரமான ஆபத்து—பாசிஸ்ட் ரகத்தைச் சேர்ந்த சர்வாதிகாரம் தோன்றும் ஆபத்துக் கூட—அநேகமாக ஏற்படுகிறது என்பதை இருபதாம் நூற்றாண்டில் நடைபெற்ற புரட்சிகளின் அனுபவம் காட்டுகிறது. ஹங்கேரிய சோஷலிஸ்ட் தொழிலாளர்கள் கட்சியின் மத்திய கமிட்டியின் முதல் செயலாளர் ஜானஸ் காதர் பின்வருமாறு கூறினார்: ‘‘ஒப்புநோக்கில் சமாதான வழியில் சோஷலிஸ்ட் புரட்சி வெற்றியடைந்தது ஹங்கேரிய முதலாளி வர்க்கத்துக்குச் சாதகமாக இருந்தது; ஏனென்றால் உடைமை பறித்தலின் மூலம் அதன் அதிகாரத்தின் பொருளாதார அடிப்படை ஒழிக்கப்பட்டிருந்தாலும் அது தன்னுடைய அணிகளில் கணிசமான பகுதியையும் சுறுசுறுப்பான அரசியல் பாத்திரத்தையும் இன்னும் வைத்துக் கொண்டிருந்தது. வளர்ச்சியின் விசேஷத் தன்மை காரணமாக நாங்கள் 1945க்குப் பிறகு உடனே முதலாளி வர்க்க அரசு இயந்திரத்தை — போலீசுத் துறை மற்றும் இராணுவத்தைத் தவிர —

ஒழிக்கவில்லை, அதைப் படிப்படியாக மாற்றிக் கொண்டிருந்தோம் என்ற உண்மை அதற்குப் பேருதவியாக இருந்தது. முதலாளி வர்க்கம் நெடுங்காலம் வரையிலும் கூட அரசு நிர்வாகத்தின் மீது கணிசமான செல்வாக்கைக் கொண்டிருந்தது, பொருளாதார மற்றும் கலாசார விஷயங்களில் முடிவெடுப்பதிலும் பங்கெடுத்தது.

''அதனால்தான் முதலாளி வர்க்கம் 1956 அக்டோபர் 24க்குப் பிறகு பல நாட்கள் வரையிலும்—ஓரளவுக்கு செயலுரத்துடன்—தன் அணிகளைத் திரட்டி சுறுசுறுப்பான அரசியல் சக்தியாக வர முடிந்தது.''[°]

முதலாளி வர்க்கம் தன்னுடைய ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கு மற்றும் தொழிலாளி வர்க்கத்துக்கும் அதன் நேச சக்திகளுக்கும் எதிராக உபயோகிக்கின்ற அடக்குமுறை மற்றும் ஒடுக்குமுறை இயந்திரத்தை அழிப்பது சோஷலிஸ்ட் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமை. எனினும் முதலாளித்துவ சமூகத்தில் நிறுவப்பட்டிருக்கின்ற, முதலாளி வர்க்கத்தினால் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ உபயோகிக்கப்படுகின்ற எல்லா ஸ்தாபனங்களையும் நிறுவனங்களையும் அழிக்க வேண்டும் என்பதோ உயர் மட்டத்திலும் சாதாரண நிலையிலும் இருக்கின்ற அரசு ஊழியர்கள் மீது பாட்டாளி வர்க்க அதிகாரம் ஒரே மாதிரியான நடவடிக்

---

° ஜானஸ் காதர், **தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளும் சொற்பொழிவுகளும்**, மாஸ்கோ, 1960, பக்கம் 52 (ருஷ்ய மொழியில்).

கைகளை எடுக்க வேண்டும் என்பதோ அர்த்தமல்ல. சோஷலிஸ்ட் புரட்சியின் முற்பொழுதில், 1917 செப்டெம்பர் – அக்டோபரில் லெனின் பின்வருமாறு எழுதினார்: ''பிரதானமாக 'அடக்குமுறைக்' கருவியாக இருக்கின்ற நிரந்தரமான இராணுவம், போலீஸ் படை, அதிகார வர்க்கம் ஆகியவற்றோடு தற்கால அரசுக்கு மற்றொரு கருவியும் இருந்து வருகிறது. வங்கிகளுடனும் சிண்டிக்கேட்டுகளுடனும் அதற்கு மிக நெருங்கிய தொடர்பு உண்டு. ஒரு வகையில் கூறுவதானால், பிரம்மாண்டமான அளவில் கணக்குக் குறிக்கின்ற வேலையையும் பதிவு வேலையையும் அது செய்து வருகிறது. இக்கருவியைத் தகர்க்க வேண்டாம், தகர்க்கக் கூடாது. அதை முதலாளிகளின் ஆதிக்கத்திலிருந்து பிடுங்கிக் கொள்ள வேண்டும். முதலாளிகளையும் அவர்களின் செல்வாக்கையும் அதனிடமிருந்து **கத்தரித்துவிட** வேண்டும், **வெட்டித்தள்ள** வேண்டும், **துண்டித்** **தெறிய** வேண்டும். பாட்டாளி வர்க்க சோவியத்துகளுக்கு அதைக் கீழ்ப்படுத்தி வைக்க வேண்டும். அதனை முன்னிலும் விரிவாக, எல்லாவற்றையும் தழுவியதாக, நாடு முழுவதிலும் பரவியதாகச் செய்ய வேண்டும்...

''முதலாளித்துவம் கணக்கு வைப்பதற்கு வங்கிகள், சிண்டிக்கேட்டுகள், தபால் இலாகா, உபயோகிப்போர் சங்கங்கள், அலுவலக ஊழியர்களின் சங்கங்கள் போன்ற **கருவிகளை** ஆக்கித் தந்துள்ளது...

''இந்த 'அரசாங்க இயந்திரத்தை' (முத



12*

லாளித்துவ அமைப்பின் கீழ் முழுமையாக அரசாங்க இயந்திரமாய் இல்லாத, ஆனால் நம்மிடம், சோஷலிசத்தின் கீழ் அவ்வாறான இயந்திரமாக ஆகப்போவதை) நாம் ஒரேயடி யில், ஒரே அரசாங்க உத்தரவு மூலம் 'ஏற்றுக் கொள்ளவும்', 'இயக்கிச் செல்லவும்' முடியும். ஏனெனில் கணக்கு விவரக் குறிப்பு, கட்டுப் பாடு, பதிவு செய்தல், கணக்குப் பரிசோதனை, கணக்கெடுத்தல் ஆகிய வேலைகளைச் சிப்பந்தி கள்தான் செய்து வருகின்றனர். அவர்களில் பெரும்பான்மையோர் பாட்டாளி அல்லது அரைப்பாட்டாளி நிலையில்தான் இருக்கிறார் கள்.''* ''மேலதிகாரிகளைப் பொறுத்த வரை யில் அவர்கள் மிகச் சிலரே ஆவர்; ஆனால் முதலாளிகளின் பக்கமே சாய்பவர்கள். ஆகவே முதலாளிகளைப் போலவே அவர்கள் மீதும் 'கடுமையான' நடவடிக்கைகளை எடுக்க வேண் டும். முதலாளிகளைப் போலவே அவர்களும் எதிர்ப்புக் காட்டுவார்கள், அவர்களின் எதிர்ப்பை உடைத்தெறிய வேண்டும்''** என்று லெனின் மேலும் வலியுறுத்தினார். எனினும் அரசு ஊழி யர்களின் முக்கியமான பகுதியை '''அரசாங்கச் சிப்பந்திகளாக மாற்றுவது' (முதலாளித்துவமும் நிதி முதலாளித்துவமும் நமக்காக இவ்விஷயத் தில் பூர்வாங்க வேலைகளைச் செய்து வைத்

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 6, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1980, பக்கங்கள் 259 – 260.

** அதே நூல், பக்கம் 261.

துள்ள காரணத்தால்) நடைமுறை நிர்வாக ரீதியில் சாத்தியம், அரசியல் ரீதியிலும் இது சாத்தியம்; ஆனால் ஒரு நிபந்தனை: சோவியத்து களின் மேற்பார்வையும் கண்காணிப்பும் இருந்து வர வேண்டும்.''*

சோஷலிஸ்ட் புரட்சி நடைபெற்றிருக்கின்ற நாடுகளில் பெரும்பான்மையானவை இவ்வழியைப் பின்பற்றியுள்ளன. இன்றும் இது பின்பற்றப்படும் தகுதியுடையதே. ஏனென்றால் முதலாளித்துவ அரசு உயர்ந்த தொழில்நுட்ப மட்டத்தில் இன்று நிறைவேற்றுகின்ற நிர்வாகச் செயல்கள் நடைமுறையில் கூலி ஊழியர்களால் தான் அமுலாக்கப்படுகின்றன. அவர்கள் மொத்தத்தில் தொழிலாளி வர்க்கத்தை ஒட்டி வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே சோஷலிஸ்ட் புரட்சி நிறைவேறிய பிறகு புதிய நிர்வாகம் அவர்களை உபயோகித்துக் கொள்ள முடியும்.

## 14. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் சோஷலிஸ்ட் ஜனநாயகமும்

புரட்சியின் முக்கியமான பிரச்சினை ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதாகும். பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தைத் தூக்கியெறிந்து, அதன் சர்வாதிகாரத்தை ஒழித்துவிட்டுப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற புதிய ஆட்சியதிகாரத்தை நிறுவி அப்பிரச்சினையைத்

* அதே நூல், பக்கம் 261.

தீர்க்கிறது. ''முதலாளித்துவ சமுதாயத்துக்கும் கம்யூனிச சமுதாயத்துக்கும் இடையில் ஒன்று மற்றொன்றாய்ப் புரட்சிகர மாற்றமடையும் கட்டம் உள்ளது. இதற்கு இணையாய் அரசியல் இடைக்கால கட்டமும் ஒன்று உள்ளது. இந்த இடைக்காலத்தில் அரசு பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரச் சர்வாதிகாரமாகவே அன்றி வேறு எதுவாகவும் இருக்க முடியாது''* என்று மார்க்ஸ் எழுதினார்.

சோஷலிஸ்ட் புரட்சிகளின் வரலாறு மார்க்சின் முன்னறிவிப்பை நிரூபித்திருக்கிறது. முற்றிலும் ஒரே மாதிரியான இரண்டு புரட்சிகள் இருக்க முடியாது என்பதைப் போல முற்றிலும் ஒரே மாதிரியான இரண்டு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரங்களும் இருக்க முடியாது என்பதையும் அது விளக்கியிருக்கிறது. அத்தகைய சர்வாதிகாரத்தின் ஒவ்வொரு ஸ்தூலமான வடிவமும் அதற்குரிய, தனித்தன்மையான கூறுகளைக் கொண்டிருக்கிறது. அக்கூறுகளின் மீது அந்த சகாப்தத்தின் ஒப்புவமையில்லாத முத்திரை பொறிக்கப்பட்டிருக்கும். அவை மற்ற நாடுகளிலும் சகாப்தங்களிலும் இல்லாதிருக்கும்; எனினும் சர்வாதிகாரத்தின் இந்த வடிவங்கள் அனைத்தும் சில பொதுக் கூறுகளைக் கொண்டிருக்கின்றன; அவை அரசியல் அதிகாரத்தின் பிரத்யேகமான, வரலாற்று ரகம் என்ற முறை

---

* Karl Marx "Marginal Notes to the Programme of the German Workers' Party". In K. Marx and F. Engels, *Selected Works,* in three volumes, Vol. 3, Progress Publishers, Moscow, 1976, p. 26.

யில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் சாராம்சத்தை வெளியிடுகின்றன.

இந்த சாராம்சத்தை அறிவதற்கு ஒருவர் முதலில் அதன் செயல்களை, அதாவது பாட்டாளி வர்க்க அரசின் நடவடிக்கையின் முக்கியமான திசைவழிகளை ஆராய வேண்டும். இவை சோஷலிஸ்ட் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு வெளிப்படுகின்றன. இவற்றில் வர்க்க சர்வாதி காரம் பொருண்மையாக்கப்படுகிறது. "சுரண்டலாளர்களுடைய எதிர்ப்பை நசுக்குவதற்கும் சோஷலிசப் பொருளாதாரத்தை 'ஒழுங்கமைப்பதில்' மாபெரும் திரள்களான மக்களுக்கு—விவசாயிகளும், குட்டி முதலாளி வர்க்கத்தினரும், அரைப் பாட்டாளி வர்க்கத்தினருமானோருக்கு — தலைமை தாங்குவதற்கும்..."° பாட்டாளி வர்க்கத்துக்கு அரசு அதிகாரம் அவசியமாக இருக்கிறது என்று லெனின் கூறினார். லெனின் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் நடவடிக்கைகளின் இரண்டு பிரதான திசைவழிகளை, இரண்டு அம்சங்களை—சுரண்டல்காரர்களின் எதிர்ப்பை நசுக்குதல் மற்றும் சோஷலிஸ்ட் நிர்மாணத்தை அமைத்தல்—தெளிவாகச் சுட்டிக்காட்டினார். அக்டோபர் புரட்சிக்குப் பிறகு ருஷ்யாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் முதல் அனுபவத்தைப் பொதுமைப்படுத்துகின்ற பொழு

---

° வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 6, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1980, பக்கம் 43.

தும் லெனின் இந்த இரண்டு அம்சங்களைப் பற்றிக் கூறினார்:

''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்கிற லத்தீன், விஞ்ஞான, வரலாற்று-தத்துவவியல் தொடரை எளிய மொழியில் பெயர்த்திடுவோமாயின் பின்வருவதே அதன் பொருள்:

''குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தால் மட்டும்தான், அதாவது நகரத் தொழிலாளர்கள், பொதுவில் ஆலை தொழில்துறைத் தொழிலாளர்கள் ஆகியோரால் மட்டும் தான், மூலதனத்தின் ஒடுக்குமுறையை வீழ்த்துவதற்கான போராட்டத்திலும், நடைமுறையில் இதை வீழ்த்துவதை நடத்திச் செல்வதிலும், வெற்றியைப் பாதுகாப்பதற்கும் உறுதி பெறச் செய்வதற்குமான போராட்டத்திலும், புதிய சோஷலிச சமூக அமைப்பை உருவாக்கும் பணியிலும், வர்க்கங்களை அறவே ஒழிப்பதற்கான போராட்டம் அனைத்திலும் உழைப்பாளரும் சுரண்டப்படுவோருமான மக்களின் பெருந்திரள் முழுவதுக்கும் தலைமை தாங்க முடிகிறது.'''*

லெனினியத்தை விமர்சிப்பவர்கள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கண்டனம் செய்கிறார்கள். அதன் அடக்குமுறை அம்சத்தை வலியுறுத்தி, சில உதாரணங்களில் செய்யப்பட்ட தவறுகளையும் ''அத்து மீறல்களையும்'' மிகைப்படுத்திக் கூறிப் பொது மக்களை பய

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 9, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1982, பக்கம் 311.

முறுத்துகிறார்கள். அவர்களைத் தொழிலாளி வர்க்கத்துக்கும் மார்க்சியக் கட்சிக்கும் எதிராக நிறுத்துவதற்கு முயல்கிறார்கள்.

பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தின் மீது தன்னுடைய சர்வாதிகாரத்தை ஸ்தூல மான நிலைமைகளினால் நிர்ணயிக்கப்படுகின்ற பல்வேறு வடிவங்களில் நிறைவேற்றுகிறது. ''அந்தந்தப் புரட்சிகர வர்க்கமும் கண்டிருக்கும் வளர்ச்சியின் நிலையாலும், மற்றும் உதாரண மாக, நீண்டதொரு பிற்போக்குப் போர் விட்டுச் சென்றிருப்பவற்றையும் முதலாளி வர்க்கத் தினரும் குட்டி முதலாளிப் பகுதியோரும் காட் டும் எதிர்ப்பின் வடிவங்களையும் போன்ற விசேஷ சூழ்நிலைமைகளாலும் இந்த பலவந் தத்தின் வடிவம் நிர்ணயிக்கப்படுகிறது.''*

முதலாளி வர்க்கம் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடுமானால் (உள் நாட்டு யுத்தம், இராணுவத் தலையீடு, ஆயுத மேந்திய கலகம், இதரவை) பாட்டாளி வர்க்க அரசு ஆயுதமேந்திய ஒடுக்குமுறையின் வடிவத் தில் முதலாளி வர்க்கத்துக்கு எதிராக வன் முறையை உபயோகிக்கும். பாட்டாளி வர்க்கப் பொருளாதார, அரசியல் நிர்ப்பந்தத்தின் மூலம் முதலாளி வர்க்கத்தின் மீது தன்னுடைய சித்தத் தைத் திணிப்பதும் சாத்தியமே. சந்தர்ப்பங் களைப் பொறுத்து சோஷலிஸ்ட் அரசு ''செல்

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதி களில், தொகுதி 8, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1981, பக்கம் 99.

வந்தர்களுக்குக் கட்டாய உழைப்புச் சேவையை அமுலாக்குதல்,''* முதலாளி வர்க்கத்தின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் கட்டுப் படுத்துதல் (உதாரணமாக, முதலாளி வர்க்கத் தினரது வாக்களிக்கின்ற உரிமையையும் அர சாங்க அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படு கின்ற உரிமையையும் ரத்துச் செய்தல்), சட்ட விரோதமான நடவடிக்கைகளுக்காகச் சிறை யிலடைத்தல் கூட, முதலிய ஒடுக்குமுறை வடி வங்களை உபயோகிக்கிறது. பாட்டாளி வர்க்க அரசு தண்டனை மற்றும் ஒடுக்குமுறை ஸ்தா பனங்களை உபயோகித்து சோஷலிஸ்ட் மாற்றங் களில் குறுக்கிட்டு அரசின் சட்டங்களை மீறு கின்ற மற்ற வர்க்கங்கள் மற்றும் சமூகத்தின் இதர பிரிவுகளின் பிரதிநிதிகளுக்கு எதிராக சர்வாதிகாரத்தை அமுல் நடத்துகிறது.

''பகைவனை எதிர்த்துப் போராடுவதற்கான நமது முறைகளைச் சூழ்நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப எப்படி மாற்றிக் கொள் வதென்று நாம் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும்''** என்று லெனின் எச்சரிக்கை செய்தார். இந்த எச்சரிக்கை மிகவும் முக் கியமானதாகும், ஏனென்றால் எதிர்ப்புரட்சிக் கலகத்துக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கம் ஆயுதங்களை உபயோகிக்க வேண்டாம் என்பது புரட்சிக்கு எவ்வளவு ஆபத்தானதோ அதே அளவுக்கு, முதலாளி வர்க்கத்தின் உரிமைகளை

---

* அதே நூல், பக்கம் 73.

** அதே நூல், பக்கம் 64.

யும் சுதந்திரங்களையும் கட்டுப்படுத்துவது மட்டுமே அவசியமாக இருக்கின்ற நேரத்தில் ஆயுதமேந்திய வன்முறையை வலியுறுத்துவதும் ஆபத்தாகும். மூலதனம் ''இராணுவ பலத்தினால்'' எதிர்க்கும் பொழுது அதை ''ராணுவ வழியிலே அல்லாமல் வேறு எவ்விதத்திலும் முறியடிக்க முடியாது.''* ஆனால் அந்த எதிர்ப்பு முறியடிக்கப்பட்டவுடன் தூக்கியெறியப்பட்ட வர்க்கங்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகின்ற மற்ற வழிகள் முன்னால் வருகின்றன.

சரியான தருணத்தில் வன்முறையின் ஒரு வடிவத்திலிருந்து மற்றொரு வடிவத்துக்கு மாற முடிவது மட்டுமே அவசியமானதல்ல. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வன்முறையின் **துல்லியமான அளவை** நிர்ணயிக்க முடிவதும், அந்த அளவுக்கு மேல் போகாதிருப்பதும் கூட அவசியமே. இல்லையென்றால் புரட்சியின் எதிரிகளை நோக்கிச் செலுத்தப்பட்ட அடிகள் பாட்டாளி வர்க்கத்தையும் அதன் நேச சக்திகளையுமே தாக்கிவிடும். லெனினால் எப்பொழுதுமே கண்டிக்கப்பட்ட திரோத்ஸ்கிவாத அத்துமீறல்கள் இதை நிரூபிக்கின்றன.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் இறுதி நோக்கம் சோஷலிச சமூகத்தை ஏற்படுத்துவதே. அதன் முக்கியமான பணி முதலாளி வர்க்கம் மற்றும் அதன் நேச சக்திகளை ஒடுக்குவதல்ல; இவற்றின் எதிர்ப்பு புரட்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் நொறுக்கப்படுகிறது.

---

* அதே நூல், பக்கம் 63.

சோஷலிஸ்ட் நிர்மாணத்தை அமைப்பதும், அதிகாரத்தைக் கைப்பற்றுவதிலிருந்து சோஷ லிசத்தை நிர்மாணிக்கின்ற மொத்தக் கட்டம் முழுவதிலும் ''உழைக்கின்ற, சுரண்டப்படு கின்ற மக்கள் அனைவருக்கும்'' அரசியல் ரீதி யில் தலைமை தாங்குவதே அதன் முக்கியமான பணி. இத்தலைமை பல்வேறு பொறியமைவு களின் உதவியுடன் நிறைவேற்றப்படுகிறது, மனமாற்றம், பலவந்தம் ஆகிய இரண்டுமே உபயோகிக்கப்படுகின்றன; ஆனால் மொத்தத் தில் காலப்போக்கில் தொழிலாளி வர்க்கத்தை மென்மேலும் ஒட்டி வருகின்ற நேச சக்திகளின் தலைமையாக இது இருக்கிறது. எனவே பல வந்தம் படிப்படியாகக் குறைகிறது.

''ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் பிரச் சினைக்குப் பாட்டாளி வர்க்கம் தீர்வு கண்டு விட்ட பிறகு, உடைமை பறிப்போரை உடைமை நீக்கம் செய்து அவர்களது எதிர்ப்பை நசுக்கும் பணி பிரதானமாய் எந்த அளவுக்கு செய்து முடிக்கப்பட்டுள்ளதோ அதற்கு ஏற்ப, முதலாளித் துவத்தை விட மேலான ஒரு சமூக அமைப்பி னைத் தோற்றுவிக்கும் அடிப்படைப் பணி... இன்றியமையாதவாறு முன்னணிக்கு வருகிறது''* என்று லெனின் கூறினார்.

''ஒரு மேன்மையான சமூக அமைப்பு'', அதாவது சோஷலிசம் உழைப்பின் புதிய அமைப்பையும் முதலாளித்துவத்தைக் காட் டிலும் அதிகமான உழைப்பின் உற்பத்தித்

---

* அதே நூல், பக்கங்கள் 79—80.

திறனையும் கொண்டிருக்க வேண்டும் என்று லெனின் கருதினார். ஆகவே "...உழைப்பாளி மக்களது கட்டுப்பாட்டையும் அவர்களது தேர்ச்சித் திறனையும் உழைப்பின் பயன் திறனையும் வேகத்தையும் அதன் சிறந்த ஒழுங்கமைப்பையும் உயர்த்துவதில்"* முயற்சிகள் குவிக்கப்பட வேண்டுமென்று ருஷ்யப் புரட்சியின் தலைவர் பிடிவாதமாக வற்புறுத்தினார். முதல் உலக யுத்தத்துக்குப் பிறகு புரட்சிகர ருஷ்யா சீர் குலைந்திருந்த சமயத்தில் இக்கடமைகளை நிறை வேற்றுவதற்குப் பாட்டாளி வர்க்கமும் மக்கள் அனைவரும் மாபெரும் முயற்சிகளும் தியாகங் களும் செய்ய வேண்டியிருந்தது. பொருளா தார ரீதியில் வளர்ச்சியடைந்த நாடுகளில் உற்பத்தி சக்திகள் அழிக்கப்படவில்லை என் றால் அங்கே இக்கடமைகளை நிறைவேற்று வதற்குக் குறைவான முயற்சிகளும் தியாகங் களும் போதியவையாக இருக்கும். ஆனால் சோஷலிஸ்ட் நிர்மாணக் காலகட்டத்தில் வர்க்கப் போராட்டம் நடைபெற்றுக் கொண் டிருக்கின்ற பொழுது "...புதிய ஒழுங்கமைப்பு உறவுமுறைகளுக்குரிய அளவு கடந்த சிக்கலும் நுண்ணயமும் வாய்ந்த அமைப்பினை நிறுவும் நேர்நிலையான அல்லது ஆக்க வழிப்பட்ட வேலைதான்"** பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தின் முக்கியமான, அடிப்படையான கடமையாக எப்பொழுதும் இருக்கும்.

"மக்கள் பெருந்திரளினரது கல்வி மற்றும்

---

* அதே நூல், பக்கம் 81.

** அதே நூல், பக்கம் 53.

கலாசார நிலையை உயர்த்துவது''* இன்னும் கடுஞ்சிக்கலான, அதிக மென்மையான கடமையாகும். அதை நிறைவேற்றாமல் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்த முடியாது, சமூக நிர்வாகத்தில் விஞ்ஞான முறைகளைப் புகுத்த முடியாது, ஒரு புதிய ரகத்தைச் சேர்ந்த மனிதனை, சோஷலிஸ்ட் சமூகத்தின் குடிமகனான மனிதனை உருவாக்க முடியாது. போதுமான அளவுக்கு உயர்ந்த கலாசார, கல்வித் தரத்தைக் கொண்ட நாடுகளில் இக்கடமையை நிறைவேற்றுவது சுலபம் என்பது உண்மையே. எனினும் பாட்டாளி வர்க்கம் அக்கடமையிலிருந்து முற்றிலும் ஒதுங்க முடியாது; ஏனென்றால் சோஷலிஸ்ட் நிர்மாணத்துக்கு உற்பத்தி உறவுகளையும் பொருளாதாரத்தையும் மாற்றியமைப்பதுடன் கலாசாரத்தை மாற்றியமைப்பதும், பாட்டாளி வர்க்கம் உள்பட உழைக்கும் மக்களின் சமூக உணர்வையும் கல்வியையும் மறு அமைப்புச் செய்வதும் அவசியமாக இருக்கின்றன. இந்தப் பணியை திடீர்த்தாக்குதலின் மூலம் ஒரேயடியாக நிறைவேற்றி விட முடியாது, அதற்குத் திட்டமிட்ட, கருத்துத் திட்பமுடைய முயற்சிகள் அவசியமாக இருக்கின்றன.

பாட்டாளி வர்க்கம் தன்னுடைய சர்வாதிகாரத்தை அமுலாக்குகின்ற பொழுது அது தன் சொந்த நலன்களை மட்டுமல்லாமல் உழைக்கும் மக்களின் பாட்டாளி வர்க்கமல்லாத எண்ணற்ற பிரிவினரின் – சில சமயங்களில் மூல

---

* அதே நூல், பக்கம் 81.

தனம் பாட்டாளி வர்க்கத்தைக் காட்டிலும் இவர்களை அதிகமாக ஒடுக்குகிறது — அடிப் படையான நலன்களில் சிலவற்றையும் வெளியிடு கிறது, பாதுகாக்கிறது. இவர்களிடம் ஊசலாட் டங்கள், தயக்கங்கள், தப்பெண்ணங்கள், இரட் டைத் தன்மை இருந்த போதிலும் இப்பிரிவு களின் பிரதிநிதிகளில் கணிசமான பகுதியினர் சோஷலிஸ்ட் மாற்றங்களை அமுல் நடத்து வதில் அக்கறை கொண்டிருக்கின்றனர்; ஆகவே அவர்கள் பாட்டாளி வர்க்கத்தின் நேச சக்தி யாக வர முடியும். ''உழைக்கும் மக்களின் முன்னணிப் படையாகிய பாட்டாளி வர்க்கத் துக்கும் உழைக்கும் மக்களின் பாட்டாளி வர்க் கம் அல்லாத எண்ணற்ற பிரிவினருக்கும் (குட்டி முதலாளி வர்க்கம், சிறு உடைமையாளர்கள், விவசாயிகள், அறிவுஜீவிகள், இதரர்கள்) அல்லது இப்பிரிவினரில் பெரும்பான்மையினருக்கும் இடை யில் வர்க்கக் கூட்டணியின், மூலதனத்துக்கு எதிரான கூட்டணியின், மூலதனத்தை முற்றி லும் அகற்றுவதை, முதலாளி வர்க்கத்தின் எதிர்ப்பையும் மீண்டும் அதிகாரத்தைப் பெறு வதற்கு அது செய்யும் முயற்சிகளையும் அடி யோடு நசுக்குவதை நோக்கமாகக் கொண்ட கூட்டணியின், முடிவாக சோஷலிசத்தை நிறுவு கின்ற, வலுப்படுத்துகின்ற கூட்டணியின் பிரத்யேகமான வடிவமே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்.''* இக்கூட்டணி பாட்டாளி

* V. I. Lenin, "Foreword to the Published Speech 'Deception of the People with Slogans of Freedom and Equality'", *Collected Works,* Vol. 29, p. 381.

வர்க்கம் அல்லாத பிரிவுகளின் பிரதிநிதிகளைப் பாட்டாளி வர்க்கம் மாற்ற, ''திருத்தியமைக்க'', அவர்களுடைய உடைமை வெறியை ''மட்டுப் படுத்த'' அல்லது குறைக்க, சமூக உறவுகளின் புதிய அமைப்பில் அவர்களைச் சேர்த்துக் கொண்டு, புதிய உலகக் கண்ணோட்டத்தை அவர்கள் பெறுவதற்கு உதவி செய்கிறது. இக் கூட்டணி பாட்டாளி வர்க்கத்தின் பலத்தைப் பெருக்குகிறது, உழைக்கும் மக்களின் பிரதான பகுதியினரை முதலாளி வர்க்கத்திடமிருந்து ''துண்டிக்கிறது''.

பாட்டாளி வர்க்கம் தன் சர்வாதிகாரத்தை அமுலாக்குகின்ற காலகட்டத்தில் அதன் நேச சக்திகளை முடிவாக நிர்ணயம் செய்ய இயலாது. நேச சக்திகளின் கூட்டணியின் ஸ்தூல மான கட்டமைப்பு முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையில் சக்தி களின் சமநிலை, பெருந்திரளான மக்களிடை யில் பாட்டாளி வர்க்கத்தின் செல்வாக்கு மற்றும் இதர பல நிபந்தனைகளைப் பொறுத் திருக்கின்றது. இத்தகைய கூட்டணியின் அடிப் படைகளை விரிவுபடுத்துவதற்கு 1917-18ம் வருடங்களில் ருஷ்யாவில் இருந்ததைக் காட் டிலும் அல்லது ஐரோப்பிய மக்கள் ஜனநாயக நாடுகளில் இருந்ததைக் காட்டிலும் கூட மிகவும் சாதகமான வாய்ப்புகள் இன்று கொள்கை யளவில் இருக்கின்றன. இன்று பாட்டாளி வர்க்கத்தின் கடமை உழைக்கும் மக்களின் பாட்டாளி வர்க்கம் அல்லாத பிரிவுகளுடன் தன் கூட்டணியை விரிவாக்கி வலுப்படுத்து

வதுடன் இயலுமானால் முதலாளி வர்க்கத்தின் ஏகபோக ஒடுக்குமுறையினால் பாதிக்கப்படுகின்ற சில பகுதியினரை சோஷலிஸ்ட் நிர்மாணத்துக்குள் இழுப்பதாகும். ஆனால் பாட்டாளி வர்க்கம் தன்னுடைய வர்க்கக் கோட்பாடுகளைக் கைவிடாமல் அல்லது தலைமைப் பாத்திரத்தை இழந்து விடாமல்—அதற்கு மாறாக அதை பலப்படுத்திக் கொண்டு—இதைச் செய்ய வேண்டும்.

சோஷலிஸ்ட் புரட்சியில் ஆளும் வர்க்கத்தின் சர்வாதிகார அமைப்பை அழிக்கின்ற பொழுது தொழிலாளி வர்க்கம் அதன் இடத்தில் அரசை மையமாகக் கொண்ட பாட்டாளி வர்க்க சர்வாதிகார அமைப்பை ஏற்படுத்துகிறது. இந்த அமைப்பு மார்க்சிய-லெனினியக் கட்சி, தொழிற் சங்கங்கள், உழைக்கும் மக்களின் மற்ற அரசாங்கமல்லாத ஸ்தாபனங்களையும் கொண்டிருக்கும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஸ்தூலமான **வடிவம்** நாட்டுக்கு நாடு வேறுபடலாம்.

''முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய இடைக்காலம் பலதரப்பட்ட அரசியல் வடிவங்களையும் மிகவும் ஏராளமாகத் தோன்றுமாறு செய்யும், ஆனால் சாராம்சம் தவிர்க்க முடியாதபடி ஒன்றாகவே இருக்கும்: **பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரமாகவே** இருக்கும்''* என்று லெனின் அனு

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 6, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1980, பக்கம் 57.

மானித்தார். வரலாறு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் புதிய வடிவத்தை, மக்கள் ஜனநாயகத்தை உருவாக்கி இந்த முன்னறிவிப்பை நிரூபித்திருக்கிறது. எதிர்காலப் புரட்சிகள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் பல புதிய வடிவங்களையும் இந்த சர்வாதிகாரத்தின் அமைப்பிலும் செய்முறையிலும் (உதாரணமாக, முதலாளி வர்க்க சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகின்ற அளவு மற்றும் வடிவங்கள்; இயங்குகின்ற அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை; பாட்டாளி வர்க்கமல்லாத பகுதியினருடன் பாட்டாளி வர்க்கத்தின் கூட்டணியின் வடிவங்கள்; அரசியல் வாழ்க்கையை அமைப்பதிலும் ஒழுங்குபடுத்துவதிலும் நாடாளுமன்றம் மற்றும் இதர மரபு வழிப்பட்ட அமைப்புகளை உபயோகித்தல்) வேறுபடுகின்ற, ஆனால் அதன் சாராம்சத்தை வெளிப்படுத்துகின்ற முறைகளையும் அநேகமாகத் தோற்றுவிக்கும்.

அக்டோபர் புரட்சியின் முற்பொழுதில் லெனின் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசைப் பற்றிப் பேசும் பொழுது, அது "ஒரு **புதிய வழியில்** சர்வாதிகாரமாக அமைவதான (முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராக)" மட்டுமல்லாமல் "...ஒரு **புதிய வழியில்** ஜனநாயகமான (பாட்டாளி வர்க்கத்துக்கும் பொதுவில் சொத்தில்லாதோருக்கும்)"° அரசாக இருக்க வேண்டும் என்றார். முதலாளி வர்க்கத்தைப் பொறுத்த மட்டில் துல்லியமாக சர்வாதிகாரமே, துல்லிய

° அதே நூல், அதே பக்கம்.

மாக உடைமை பறித்தோரை உடைமை பறிப்பதும் அவர்களுடைய சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதுமே சோஷலிஸ்ட் அரசு உழைக்கும் மக்களின் பரந்த பகுதியினருக்கு ஜனநாயகத்தை அமுலாக்குவதை சாத்தியமாக்குகிறது.

இப்''புதிய வழி'' ஜனநாயகம் எப்படி வெளிப்படுகிறது? முதலாவதாக, இதற்கு முன்பு உரிமைகள் இல்லாமல் அல்லது சம்பிரதாயமான உரிமைகளை மட்டுமே பெற்றிருந்த மக்கள் தொகையில் அதிகப் பெரும்பான்மையினர் இப்பொழுது தங்கள் நலன்களை வெளியிடுகின்ற மக்களின் அதிகார உறுப்புகளை அமைப்பதிலும் அவற்றின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதிலும் பங்கெடுப்பதற்கு வாய்ப்பை அடைகிறார்கள். லெனின் இதைப் பின்வரும் விதத்தில் விளக்கினார்: ''இன்று ஸ்தூலமாகச் செயல்படுத்தப்பட்டு வரும் வடிவில் சோவியத், அதாவது **பாட்டாளி வர்க்க** ஜனநாயகத்தின் சோஷலிசத் தன்மை, முதலில் உழைப்போரும் ஒடுக்கப்பட்டோருமான மக்களே தேர்ந்தெடுக்கும் உரிமையுள்ளோராக இருப்பதிலும் முதலாளி வர்க்கத்தினர் விலக்கப்பட்டுள்ளதிலும் காணக்கிடக்கிறது. இரண்டாவதாக, தேர்தல்களின் எல்லா அதிகாரவர்க்க முறைமைகளும் தடை வரம்புகளும் ஒழிக்கப்பட்டிருப்பதிலும், மக்கள் தாமே தேர்தல்களின் கிரமத்தையும் காலத்தையும் நிர்ணயித்துக் கொள்வதிலும், தேர்ந்தெடுக்கப்பட்டவர் எவரையும் திருப்பியழைக்கப் பூரண உரிமையுடையோராக இருப்பதிலும் அது காணக்கிடக்கிறது. மூன்றாவ

தாக, உழைப்பாளி மக்களின் முன்னணிப் படையின், அதாவது பெருவீதத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பாட்டாளி வர்க்கத்தின் சிறந்த வெகுஜன ஒழுங்கமைப்பு உருவாக்கப்படுவதில் அது காணக்கிடக்கிறது. இந்த வெகுஜன ஒழுங் கமைப்பு பாட்டாளி வர்க்கம் சுரண்டப்படு வோரான பெருந்திரளான மக்களுக்குத் தலைமை தாங்கி அழைத்துக் செல்லவும், சுயேச்சையான அரசியல் செயற்பாட்டில் அவர்களை ஈடுபடும் படி ஈர்க்கவும், அவர்களுடைய சொந்த அனுப வத்தின் வாயிலாகவே அரசியல் வழியில் அவர் களுக்குப் போதமளிக்கவும் வகை செய்கிறது. மக்கள் அனைவரும் நிர்வாகக் கலையைக் கற்க வும் நிர்வகிக்கத் தொடங்கவும் இவ்வாறு முதன்முதலாக முற்படுகிறார்கள்.

இவைதாம் இப்பொழுது ருஷ்யாவில் செயல் படுத்தப்படும் ஜனநாயகத்தின் தலையாய சிறப் பியல்புகள். இந்த ஜனநாயகம் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்ததாகும், முதலாளித்துவ வழியில் ஜனநாய கம் திரித்துப் புரட்டப்படுவதிலிருந்து முறித்துக் கொள்வதாகும்; சோஷலிச ஜனநாயகத்துக்கும்... மாறிச் செல்வதற்குரிய கட்டமாகும்.°

புதிய ஜனநாயகத்தின் மற்றொரு அம்சத் தையும் லெனின் வலியுறுத்துகிறார். சோஷ லிஸ்ட் புரட்சி உழைக்கும் மக்கள் தம்முடைய சித்தங்களையும் நலன்களையும் சோவியத்துக் களின் மூலமாக வெளியிடுகின்ற வாய்ப்பைக்

---

° வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதி களில், தொகுதி 8, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1981, பக்கங்கள் 105 – 106.

கொடுத்ததுடன் நிற்கவில்லை. ''உழைப்போரும் ஒடுக்கப்படுவோருமான மக்கள் புதிய சமுதாயத்தைக் கட்டியமைத்திடும் சுயேச்சைப் பணியில் செயல் முனைப்போடு பங்கு கொள்வதற்கு வாய்ப்பு''* அளித்திருக்கிறது, அதாவது வெவ்வேறு வடிவங்களை—இவை வரலாற்று நிலைமைகளுக்குத் தகுந்தவாறு மாறுபடும், இவை தேசிய மரபுகளையும் சோஷலிஸ்ட் புரட்சி போய்க் கொண்டிருக்கும் கட்டத்தையும் பொறுத்திருக்கும்—உபயோகித்து புதிய சமூக உறவுகளையும் மதிப்பீடுகளையும் உருவாக்குவதில் நேரடியாகப் பங்கெடுக்கின்ற வாய்ப்பை அளித்திருக்கிறது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இனிமேல் அவசியமில்லை என்று சில சமயங்களில் வாதிடப்படுகிறது. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளி வர்க்கம் மக்கள் தொகையில் பெரும்பான்மையாக இருக்கிறது, நடுத்தர முதலாளித்துவ வளர்ச்சியடைந்த நாடுகளில் அது கணிசமான பகுதியாக இருக்கிறது; ஆகவே சமூகத்தின் சோஷலிஸ்ட் மாற்றத்தை ஒட்டிய எல்லாப் பிரச்சினைகளையும் தொழிலாளி வர்க்கம் வன்முறை இல்லாமல், பலாத்காரம் இல்லாமல், அதாவது **சர்வாதிகாரம்** இல்லாமல் இப்பொழுது தீர்க்க முடியும் என்று கூறப்படுகிறது. மறு பக்கத்தில், இந்த நாடுகளில் ஏற்பட்டிருக்கின்ற சமூக-கட்டமைப்பு மாற்றங்களினால் தொழிலாளி வர்க்கத்தின் தலைமை, **பாட்டாளி**

---

* அதே நூல், பக்கம் 53.

வர்க்க சர்வாதிகாரம் இனிமேல் அவசியமில்லை என்றும் கூறப்படுகிறது.

மேற்கூறிய மற்றும் இவை போன்ற கருத்துக் கள் உணர்வு பூர்வமாக மார்க்சியத்துக்கு எதிரா னவை அல்ல என்று கருதினாலும், இவை முத லாளி வர்க்கம் மற்றும் பாட்டாளி வர்க்கத்தின் சாத்தியங்களைக் குறைத்தும் உழைக்கும் மக் களின் பாட்டாளி வர்க்கம் அல்லாத பகுதியி னரின் அரசியல் பாத்திரத்தை மிகைப்படுத்தி யும் மதிப்பீடு செய்வதன் விளைவே. பாட்டாளி வர்க்கத்தின் எண்ணிக்கை அதிகரித்திருப்பத னால் முதலாளி வர்க்கம் போராட்டம் இல் லாமல் ஆட்சியதிகாரத்தை ஒப்படைக்கும், தனக்கு அழிவை ஏற்படுத்துகின்ற சோஷலிஸ்ட் மாற்றங்களை விருப்ப பூர்வமாக ஏற்றுக்கொள் ளும் என்று கருதுவது, அதாவது புதிய ஆட்சியதி காரம், புதிய சோஷலிஸ்ட் அரசு வன்முறை (குறைந்த அளவில், நயமான வடிவத்தில் கூட) இல்லாமல் சமாளிக்க முடியும் என்று கருதுவது அரசியல் வெகுளித்தனமாகும். மேலும் அது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஆதார மாகக் கொண்டதன் மூலம் வெற்றி பெற்ற சோஷலிஸ்ட் புரட்சிகள் மற்றும், குறிப்பாக அதன் பாத்திரத்தைக் குறைத்து மதிப்பிட் டதனால் தோல்வியடைந்த சோஷலிஸ்ட் புரட்சி கள் ஆகியவற்றின் அனுபவத்தைப் புறக்கணிப் பதாகும்.

எனினும் புரட்சிகர சர்வாதிகாரம் அவசியமே என்று வலியுறுத்துகின்ற பொழுது நவீன உற்பத்தி யில் மிகவும் அமைப்பு ரீதியாக்கப்பட்ட, வலுப்

படுத்தப்பட்ட, கட்டுப்பாட்டில் பயிற்றுவிக்கப் பட்ட, சோஷலிஸ்ட் மாற்றங்களில் மிக அதிக மான அக்கறை கொண்ட வர்க்கம் மட்டுமே அந்த சர்வாதிகாரத்தை—அதன் கடமைகளின் பல்வகைத் தன்மை அனைத்தையும்—அமுலாக்க முடியும். முதலாளித்துவ சமூகக் கட்டமைப் பில் எவ்வளவு மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் அத்தகைய வர்க்கம் தொழிலாளி வர்க்கமே, பிரதானமாக, அதன் கருவாகிய பெருந்தொழில் துறைப் பாட்டாளி வர்க்கமே. பாட்டாளி வர்க்கம் ''ஒன்று மட்டுமே (எண்ணிக்கையில் அது போதுமானதாகவும் போதிய வர்க்க உணர்வு படைத்ததாகவும் கட்டுப்பாடு வாய்ந்ததாகவும் இருக்குமாயின்), உழைப்போரும் சுரண்டப்படு வோருமாகிய மக்களில் **பெரும்பான்மையோரை** (மேலும் எளிய முறையிலும் ஜனரஞ்சகமாக வும் சொல்வதெனில் ஏழையெளியோரில் **பெரும்பான்மையோரை)** தன் தரப்புக்குக் கவர்ந்து இழுத்துக் கொள்ளவும், சுரண்டுவோர் எல்லோரையும் மற்றும் சிதைவுக் கூறுகள் யாவற்றையும் அறவே அடக்குவதற்குப் போது மான காலத்துக்கு ஆட்சியதிகாரத்தை இழக் காமல் வைத்துக் கொள்ளவும் வல்லதாய் இருக் கின்றது''* என்று லெனின் 1918இல் எழுதி னார். அதற்குப் பிறகு ஏராளமான மாற்றங் கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் உழைக் கும் மக்களில் பெரும்பான்மையினரைத் திரட்டக் கூடிய, மூலதனத்துக்கு எதிராக நெடிய,

---

* அதே நூல், பக்கம் 93.

உறுதியான போராட்டத்துக்குத் தலைமை யேற்கக் கூடிய வர்க்கமாகத் தொழிலாளி வர்க்கம் மட்டுமே இருக்கிறது. ''ஏனெனில், இந்த ஆற்றல் தானாகவே வந்துவிடும் ஒன் றல்ல, வரலாற்று வழியில் வளர்ந்து வருவதா கும், பெரும் அளவு முதலாளித்துவப் பொருளுற் பத்தியின் பொருளாயத நிலைமைகளிலிருந்து **மட்டுமே** வளர்வதாகும். முதலாளித்துவத்தி லிருந்து சோஷலிசத்துக்குச் செல்லும் பாதையின் தொடக்கத்தில் இந்த ஆற்றலைப் பெற்றிருப் பது பாட்டாளி வர்க்கம் **மட்டுமேதான்**.''* சோஷலிஸ்ட் சமூகத்தின் நிர்மாணத்துக்கு வழி காட்டுகின்ற திறமை, மற்ற எத்திறமையை யும் போலவே வளர்க்கப்பட்டு முழுமையாக் கப்பட வேண்டும்; அதற்குத் தொழிலாளர் களுடைய புரட்சிகரக் கட்சி குறிப்பிட்ட அள வுக்கு முதிர்ச்சியும் அனுபவமும் அதிகமான பணியும் கொண்டிருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுவது அவசியமல்ல (மார்க்சைப் போல லெனினும் இதை அடிக்கடி வலியுறுத்தினார்).

தொழிலாளி வர்க்கம் சோஷலிஸ்ட் சமூகத் தில் தன்னுடைய அதிகாரத்தை நிரந்தரப்படுத்த முயல்வதில்லை. அதன் சர்வாதிகாரம் வரலாற்று ரீதியில் குறுகிய காலத் தன்மையதே. பாட் டாளி வர்க்க சர்வாதிகாரம் எதாக வளர்ச்சி யுறுகிறது, இந்த வளர்ச்சிக்கு அவசியமான

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதி களில், தொகுதி 9, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1982, பக்கம் 313.

நிலைமைகள் யாவை என்பனவற்றை (வரலாற்று நடைமுறையைத் தொகுத்துக் கூறிய பிறகே முடிவுகளை வகுத்துத் தந்த மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் மரபுக்கேற்ப) நாம் இப்பொழுது கூற முடியும்.

வளர்ச்சியடைந்த சோஷலிஸ்ட் சமூகத்தை நிர்மாணிக்கின்ற பொழுது பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசு **அனைத்து மக்களின்** அரசாக மாற்றமடைகிறது. இந்த அரசு **அனைத்து மக்களின்** நலன்களை வெளியிடுகிறது. ஒரு சமூக வர்க்கத்தை அல்லது மற்றொன்றை ஒடுக்குகின்ற கருவியாக இனியும் இருப்பதில்லை. அது தண்டிக்கின்ற சில செயல்களை இன்னும் நிறைவேற்றுகிறது, ஆனால் சமூக வர்க்கங்களுக்கு எதிராக அல்ல, சட்டத்தை மீறுகின்ற தனிநபர்களுக்கு எதிராகவே. எனினும் சோஷலிஸ்ட் அரசு தன்னுடைய வர்க்கத் தன்மையைக் கைவிடுவதில்லை. ஏனென்றால் வளர்ச்சியடைந்த சோஷலிஸ்ட் சமூகத்தில் தொழிலாளி வர்க்க நடவடிக்கைகளின் நலன்களும் இலட்சியங்களும் அனைத்து மக்களுக்கும் உரித்தாகின்றன; கம்யூனிசம் இறுதி வெற்றியடைகின்ற வரை தொழிலாளி வர்க்கம் தொடர்ந்து சமூகத்துக்குத் தலைமை தாங்குகிறது.

## 15. சோஷலிஸ்ட் புரட்சியும் உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கும்

சோஷலிஸ்ட் புரட்சியை மார்க்சும் எங்கெல்சும் உலக முதலாளித்துவத்தின் வளர்ச்சி பொரு

ளாயத ரீதியில் தயாரிக்கின்ற உலக நிகழ்வுப் போக்காகவே கண்டனர்; அது எல்லா முதலாளித் துவ நாடுகளையும் உள்ளடக்கியது (பின்னர் முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்தை இன்னும் அடைந்திராத நாடுகளும் சேர்த்துக் கொள்ளப் பட்டன); அது உலகந்தழுவிய அளவில் சோஷ லிசத்தின் (கம்யூனிசத்தின்) வெற்றியில் முடி வடையும். தம் காலத்திய வரலாற்று நிலைமை களை அடிப்படையாகக் கொண்டு சோஷலிஸ்ட் புரட்சி வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடு களில் அநேகமாக ஒரே சமயத்தில் நடைபெறக் கூடும் என்று அவர்கள் கூறினார்கள்; ஏனென் றால் இந்த நாடுகளில் புரட்சியின் புறவய மற்றும் அகவய நிலைமைகள் அநேகமாக ஒரே சமயத்தில் முதிர்ச்சி அடைந்தன; பல நாடுகளில் ஒரே சமயத்தில் வெற்றியடைவதன் மூலமாக மட்டுமே பாட்டாளி வர்க்கம் ஆட்சியதிகாரத் தைத் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

முதலாளித்துவ வளர்ச்சியின் சமமற்ற தன்மை ஏகாதிபத்தியக் கட்டத்தில் அதிகரிப்பது புரட்சி கர நிகழ்வுப் போக்கில் தன் சொந்தத் "திருத் தங்களையும்" செய்கிறது. புரட்சிகர நிகழ்வுப் போக்கு முன்மாதிரியே உலகந்தழுவிய தன்மை யைக் கொண்டிருக்கிறது. ஆனால் சோஷலிசத் தின் பொருளாயத முன்நிபந்தனைகள் உருவா வது, முடிவாகப் பார்க்கும் பொழுது சோஷ லிஸ்ட் புரட்சியின் புறவய மற்றும் அகவய நிலைமைகள் முதிர்ச்சியடைதல் ஏகாதிபத்திய சகாப்தத்தில் தனிப்பட்ட நாடுகளில் சமமற்ற முறையில் ஏற்படுகிறது. உலக முதலாளித்துவம்

என்ற பல்தொகுதியான அமைப்பில் தளர்ந்த பிணைப்புகள் அல்லது ''பலவீனமான கண்ணிகள்'' தோன்றுகின்றன; இவற்றை நொறுக்குவது ஒப்பீட்டளவில் எளிதான காரியமே. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், முதலில் சோஷலிஸ்ட் புரட்சி சில நாடுகளில் அல்லது தனியொரு நாட்டில் வெற்றியடைவது, முதலாளித்துவ வளர்ச்சியின் சமமற்ற தன்மையைப் போலவே, இப்பொழுது சாத்தியமாக, இயற்கையாக இருக்கிறது என்று லெனின் எடுத்துக் காட்டினார்.

உலக முதலாளித்துவ அமைப்பு என்ற சங்கிலியை (''கண்ணிகளை'') நொறுக்குகின்ற நிகழ்வுப் போக்கு என்ற முறையில் சோஷலிஸ்ட் புரட்சி ''தொடர் வரிசையான'' தன்மையை அடைகிறது; அது எல்லா நாடுகளில் அல்லது பெரும்பான்மையான நாடுகளில் ஒரே சமயத்தில் நடைபெறுவதில்லை, ஆனால் முதலில் சில நாடுகளிலும் (அல்லது நாடுகளின் தொகுதியிலும்) அதன் பிறகு மற்ற நாடுகளிலும் அடுத்தடுத்து நடைபெறுகிறது. ஒரு புரட்சியிலிருந்து மற்றொரு புரட்சி கால இடைவெளியினால் பிரிக்கப்பட்டிருந்தாலும் உலக வரலாற்றுப் பரிமாணத்தில் இவை அற்பமானவையே.

உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் முக்கியமான விளைவு நம் சகாப்தத்தின் தலைமையான, முக்கியமான சக்தியான **உலக சோஷலிஸ்ட் அமைப்பின்** தோற்றமே. அது அரசுகளின் **அமைப்பு;** குணரீதியில் ஒரே மாதிரியான (சோஷலிஸ்ட்) சமூக உறவுகளை அடிப்படையாகக்

கொண்டு உள்ளிணைப்புகளால் ஒன்றுசேர்ந் துள்ள குடும்பம்.

ருஷ்யாவில் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சி வெற்றி பெற்றதும் சோவியத் யூனியன் அமைந் ததும் உலக சோஷலிஸ்ட் அமைப்பின் உருவாக் கத்தைத் தொடங்கி வைத்தன. அது உலக முதலாளித்துவ அமைப்பை எதிரிடுகிறது, வர லாற்றுப் போக்கில் அதை விஞ்சி மேம்படுகிறது. உலகத்தின் முதல் சோஷலிஸ்ட் நாடு நம் காலப் புரட்சிகர சக்திகளுக்குத் தொடர்ந்து தலைமை தாங்குகிறது; ஏனென்றால் அது உயர்வான பொருளாயத வளத்தைக் கொண் டிருக்கிறது, சோஷலிஸ்ட் மற்றும் கம்யூனிஸ்ட் நிர்மாணத் துறையில் வளமான அனுபவத்தைத் திரட்டியிருக்கிறது, பொருளாதாரம், அரசியல் துறைகளிலும் சமூக, கலாசார வளர்ச்சியிலும் அது ஒளி வீசும் வழிகாட்டியாக இருக்கிறது.

ஐரோப்பா, ஆசியா மற்றும் லத்தீன அமெ ரிக்காவைச் சேர்ந்த நாடுகளில் வெற்றியடைந்த சோஷலிஸ்ட் புரட்சிகள் செயல்முறையிலும் வளர்ச்சியிலும் பொதுவான சட்டங்களைப் பின்பற்றுகின்ற சோஷலிஸ்ட் அரசுகளின் அமைப்பை உருவாக்கியிருக்கின்றன. அந்த அமைப்பு சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் பலத்தின் பொருளாயத வடிவமாக இருக்கிறது.

உலகப் பாட்டாளி வர்க்கமும் அதன் நேச சக்திகளும் பின்பற்றிய உணர்வு பூர்வமான கொள்கைகள் மற்றும் கருத்துத் திட்டமுடைய முயற்சிகளின் விளைவாக இந்த அமைப்பு உருவாகியிருக்கிறது; எனினும் இது இயற்கை-

வரலாற்று நிகழ்வுப் போக்கின் விளைவு; இந்த நிகழ்வுப் போக்கு பரிணாமத்தின் புறவயமான விதிகளுக்கு உட்பட்டது, அதற்குரிய பொருளாயத நிலைமைகள் இருந்தால் மட்டுமே நடைபெறக் கூடியது என்பதை வலியுறுத்துவது அவசியம். ஏதாவதொரு நாட்டில் வெற்றியடைந்திருக்கின்ற பாட்டாளி வர்க்கம் மற்றொரு நாட்டின் மீது சோஷலிசத்தைத் திணிப்பதில்லை, சோஷலிஸ்ட் புரட்சியை ''ஏற்றுமதி'' செய்வதில்லை.

ஆனால் கம்யூனிஸ்டுகள் எதிர்ப்புரட்சியை ''ஏற்றுமதி'' செய்வதையும் எதிர்க்கிறார்கள் (இதை எல்லோரும் கேட்கக் கூடிய முறையில் உரக்கக் கூறுவோம்), அதாவது ஏகாதிபத்தியமும் பிற்போக்கு சக்திகளும் புரட்சியின் கழுத்தை நெறிப்பதற்கு, புரட்சிகரமான வெற்றியடைந்த மக்களை அவர்களுடைய சித்தத்துக்கு மாறாகப் ''பழைய வழியில்'' வாழ்க்கை நடத்தும்படி செய்வதற்கு, உலக சோஷலிஸ்ட் அமைப்பு வளர்ச்சியடையாமல் தடுப்பதற்குச் செய்கின்ற முயற்சிகளை எதிர்க்கிறார்கள்.

தனியொரு நாட்டில் சோஷலிசத்தை நிறுவுவதும் சோஷலிஸ்ட் அமைப்பை ஏற்படுத்துவதும் உலகப் பாட்டாளி வர்க்கத்துக்கும் உலக முதலாளி வர்க்கத்துக்கும் இடையில் தீவிரமான போராட்டத்தின் பின்னணியில் நடைபெறுகின்றன. இப்போராட்டம் பொருளாதார, அரசியல், கலாசார மற்றும் சித்தாந்தத் துறைகளில் நடைபெறுகிறது; உலக சோஷலிஸ்ட் அமைப்பு வளர்ச்சியடைகின்ற பொழுது

இப்போராட்டம் அநேகமாகத் தொடர்ந்து நடைபெறும்.

சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் சோஷலிஸ்ட் சர்வதேசியக் கோட்பாடுகளை, அதாவது சகோதர பூர்வமான ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவி என்னும் உறவுகளை அடிப்படையாகக் கொண்ட **புதிய ரகத்தைச் சேர்ந்த சர்வதேச உறவுகள்** தோன்றியிருக்கின்றன. அவை இந்த அமைப்புக்கு ஒரு **குடும்பத்தின்** தன்மையைக் கொடுக்கின்றன. சில நாடுகள் சோஷலிஸ்ட் குடும்பத்திலிருந்து பிரிந்து போகின்ற, சோஷலிஸ்ட் சர்வதேசியக் கோட்பாடுகளுக்கு துரோகம் செய்து உலக ஏகாதிபத்தியத்துடன் உறவுகளை வலுப்படுத்துகின்ற கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்றன. இக்கொள்கைகள் உலக சோஷலிசத்துக்குத் தீங்கிழைப்பதுடன் இந்த நாடுகளைச் சேர்ந்த மக்களினங்களுக்கும் ஆபத்தாக இருக்கின்றன.

உலக சோஷலிஸ்ட் அமைப்பு ''அகலத்தில்'', ''அளவு ரீதியாக'', அதாவது மென்மேலும் புதிய நாடுகளில் சோஷலிஸ்ட் புரட்சிகள் வெற்றியடைவதன் விளைவாக, அவை புறவய ரீதியில் உலக சோஷலிஸ்ட் குடும்பத்தில் சேர்ந்து கொள்வதன் மூலம் வளர்ச்சியடைகின்றது. அது மட்டுமல்லாமல், சோஷலிஸ்ட் நாடுகளுக்கு **உள்ளே** மற்றும் அவற்றுக்கு **இடையில்** சமூக உறவுகள் முதிர்ச்சியடைவதன் விளைவாக ''ஆழத்தில்'', ''குண ரீதியான'' வளர்ச்சியை அடைகின்றது. சோஷலிசம் கட்டிறுக்கமான உருவரைச் சட்டமல்ல, ''தொடர்ச்சியாக உருகிக் கொண்டும்

மாறிக் கொண்டும் இருக்கின்றதாக அதைக் கருத வேண்டும்''* என்று எங்கெல்ஸ் கூறினார். ''மனித குலத்தைப் புரந்தருள்கின்ற, முன்னரே தயாரிக்கப்பட்ட அமைப்பு என்று சோஷலிசத்தைக் கருதக் கூடாது''** என்று லெனின் வலியுறுத்தினார். இந்த மதிப்பீடுகள் தனிப்பட்ட நாடுகளுக்கு மட்டுமல்லாமல் மொத்த உலக சோஷலிச அமைப்புக்கும் முற்றிலும் சரியானவையே. தனிப்பட்ட சோஷலிஸ்ட் நாடுகளின் வளர்ச்சிக்கும் உலக சோஷலிஸ்ட் அமைப்பின் முதிர்ச்சிக்கும் இடையில் ஒரு வகையான சார்புநிலை இருக்கிறது.

இன்று சோவியத் யூனியனில் வளர்ச்சியடைந்த சோஷலிஸ்ட் சமூகம் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது, அதாவது புதிய சமூக அமைப்பின் சமூக மற்றும் வரலாற்று சாராம்சத்தை இயன்ற வரை முழு அளவில் வெளியிடுகின்ற சமூக வளர்ச்சிக் கட்டத்தை சோவியத் யூனியன் அடைந்து விட்டது. சோஷலிஸ்ட் குடும்பத்தைச் சேர்ந்த சில நாடுகள் முதிர்ச்சியடைந்த சோஷலிசத்தை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே உலக சோஷலிஸ்ட் அமைப்பை மேலும் குண ரீதியாக வளர்ப்பதற்கு — சோஷலிஸ்ட் நாடுகளுக்கு இடையில் உறவுகளை மேலும் செழுமைப்படுத்துதல், மேலும் நெருக்

* "Engels to Otto von Boenigh in Breslau". In Karl Marx and Frederick Engels, *Selected Works,* in three volumes, Vol. 3, p. 485.

** V. I. Lenin, "Conversation", *Collected Works,* Vol. 19, p. 46.

கமான ஒருங்கிணைப்பு, ஒற்றுமையை வலுப் படுத்துதல் — புறவய முன்நிபந்தனைகள் படைக் கப்பட்டிருக்கின்றன. இம்முன்நிபந்தனைகள் ஈடேற்றமடைவதற்கு எல்லா சோஷலிஸ்ட் நாடு களும் உணர்வு பூர்வமாக, கருத்துத்திட்பத்துடன் கடுமுயற்சிகளைச் செய்ய வேண்டும், தமக் கிடையில் உள்ள முரண்பாடுகளை நீக்க வேண்டும்.

சோஷலிசம் சமூக முரண்பாடுகளை ஒழிப்ப தில்லை, அவற்றின் தன்மையைத்தான் மாற்று கிறது என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். ''பகைமையும் முரண்பாடும் ஒரே விஷயமல்ல, பகைமை மறைந்து விடும், முரண்பாடு சோஷ லிசத்தின் கீழ் இருக்கும்''* என்று லெனின் சுட்டிக்காட்டினார். உலக சோஷலிஸ்ட் அமைப் பின் தோற்றம் மற்றும் வளர்ச்சியின் வரலாறு லெனின் வகுத்த முடிவு எவ்வளவு சரியானது என்பதை நிரூபித்திருக்கிறது. ''வெற்றிகளும் வள வாய்ப்புகளும் கொண்ட இன்றைய சோஷ லிஸ்ட் உலகம் — அதன் அனைத்துப் பிரச்சினை களுடன் — இன்னும் இளமையான, வளர்கின்ற சமூக உயிரியாகத்தான் இருக்கிறது. அங்கே எல்லாமே முடிவு செய்யப்பட்டுவிடவில்லை, அதிகமானவை முந்திய வரலாற்று சகாப்தங் களின் முத்திரைகளை இன்னும் தாங்கியிருக் கின்றன. சோஷலிச உலகம் வேகமாக முன் னேறிக் கொண்டிருக்கிறது, தொடர்ச்சியாக அபிவிருத்தியடைந்து கொண்டிருக்கிறது. அதன்

---

* *Lenin Miscellany XI*, p. 357.

வளர்ச்சி இயற்கையாகவே புதியனவற்றுக்கும் பழையனவற்றுக்கும் இடையில் போராட்டத்தின் மூலம், உள் முரண்பாடுகளைத். தீர்ப்பதன் மூலம் நடைபெறுகிறது''* என்று சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது காங்கிரசில் (1971) சுட்டிக் காட்டப்பட்டது.

மேற்கூறிய முடிவு உலக சோஷலிசத்தை வலுப்படுத்துகின்ற பிரச்சினையை அணுகுவதற்கு ஒரு திறவுகோலைத் தருகிறது. ஏகாதிபத்தியம் தனிப்பட்ட சோஷலிஸ்ட் நாடுகளிலும் உலக சோஷலிஸ்ட் அமைப்பின் சுற்றுவட்டத்துக்கு உள்ளேயும் இருக்கின்ற முரண்பாடுகளை உபயோகித்து லாபமடைவதற்கும் அவற்றைத் தூண்டி விடுவதற்கும் முயற்சிக்கிறது. கம்யூனிஸ்டுகளும் சோஷலிசத்தின் ஆதரவாளர்கள் அனைவரும் இத்தகைய முயற்சிகளை எதிர்ப்பது இயற்கையே. ஆனால் அவர்கள் இருக்கின்ற முரண்பாடுகளை மூடி மறைப்பதில்லை (ஏனென்றால் அது புறவய ரீதியில் சோஷலிசத்துக்கு எதிராகச் செயல்படும்). அவர்கள் இருக்கின்ற முரண்பாடுகளின் அடிப்படைக் காரணங்களைத் தேடுகிறார்கள், அவற்றை நீக்குவதற்கு உசிதமான வழிகளைக் கண்டு பிடிக்கிறார்கள், அதன் மூலம் சோஷலிசத்தின் நிலைகளை வலுப்படுத்துகிறார்கள்.

உலக சோஷலிஸ்ட் அமைப்பு முதலாளி வர்க்

---

* *24th Congress of the Communist Party of the Soviet Union, March 30—April 9, 1971. Documents,* Novosti Press Agency Publishing House, Moscow, 1971, pp. 18—19.

கத்துக்கு எதிராக சர்வதேசத் தொழிலாளி வர்க்கப் போராட்டத்தின் விளைவு, உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் ''உற்பத்திப் பொருள்''. அது இந்த நிகழ்வுப் போக்கின் முன்னேற்றத்தின் மீது சக்திவாய்ந்த தாக்கத் தைச் செலுத்துகிறது.

நம் காலத்திய புரட்சிகர நிகழ்வுப் போக்கின் மீது உலக சோஷலிஸ்ட் அமைப்பின் தாக்கம் என்ன? இத்தாக்கம் இரண்டு வழிகளில்— **நேரடியான** மற்றும் **மறைமுகமான** வழிகளில் வெளிப்படுகிறது. நேரடியான வழி புரட்சிகர மாற்றப் பாதையில் அடியெடுத்து வைத்திருக் கின்ற விடுதலை இயக்கங்களுக்கும் நாடுகளுக்கும் (பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாடு களுக்கு ஏற்ப) **உதவி கொடுப்பதாகும்.** இந்த உதவி, சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தவாறு, பொரு ளாதார, தொழில்நுட்ப, விஞ்ஞான மற்றும் அவசியமானால் இராணுவத் துறைகளில் கொடுக் கப்படுகிறது. அது அளவிலும் வடிவத்திலும் அதிகமாக வேறுபடுவதும் உண்டு: இலவச நிதியுதவி, தொழில்நுட்ப உதவி, தேசியப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கு நிபுணர்களைப் பயிற்றுவித்தல், தார்மிக மற்றும் அரசியல் ஆதரவு, இதரவை. சோஷலிஸ்ட் நாடுகள் முதலாளித்துவ நாடுகளிலும் வளர்முக நாடுகளிலும் இருக்கின்ற கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர்கள் கட்சிகளுக்கும் மொத்த உலக கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கும் சகோதர உதவி யளிக்கின்றன.

உலக சோஷலிஸ்ட் அமைப்பு புரட்சிகர

நிகழ்வுப் போக்கின் மீது கொண்டிருக்கின்ற மறைமுகமான தாக்கத்தின் வடிவங்கள் அதிகமானவை, வெவ்வேறு விதமானவை. முதலாவதாக, இத்தாக்கம் **சோஷலிஸ்ட் அமைப்பு** என்ற ஒன்று **இருப்பதனால்** ஏற்படுகிறது. அது ஏகாதிபத்தியத்தை எதிரிடுகிறது; அதன் அடிப்படையை அரித்தழிக்கிறது; அதை பலவீனப்படுத்துகிறது; ஆகவே விடுதலை இயக்கம் உலக ரீதியாக வளர்ச்சியடைவதற்கு அதிகச் சாதகமான நிலைமைகளைத் தோற்றுவிக்கிறது. சோவியத் யூனியனும் இதர சோஷலிஸ்ட் நாடுகளும் இல்லையென்றால் ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க அமைப்பு இவ்வளவு வேகமாகத் தகர்ந்திருக்க முடியாது என்று கூறுவது மிகையானதல்ல. சோஷலிஸ்ட் நாடுகள் எப்பொழுதுமே தேசிய விடுதலை இயக்கத்துக்கு நேரடியான பொருளாயத உதவி கொடுத்து காலனியாதிக்கத்துக்கு எதிராக உறுதியான கொள்கையைக் கடைப்பிடித்தது மட்டும் இதற்குக் காரணமல்ல; உலக சோஷலிஸ்ட் அமைப்பு என்ற அமைப்பு இருப்பது சர்வதேச அரங்கத்தில் சக்திகளின் சமநிலையைத் தீவிரமாக மாற்றியிருப்பதும் காரணமாகும். அந்த அரங்கத்தில் சோஷலிசம் குண ரீதியாக ஒரு புதிய வடிவத்தில், அதாவது சோஷலிஸ்ட் அரசுகளின் உலக அமைப்பாகத் தோன்றியது. சோஷலிசத்தின் சர்வதேசத் தன்மையின் பொருளாயத வெளிப்பாடு சக்திகளின் புதிய சமநிலையை ஏற்படுத்தியது, தேசிய விடுதலை இயக்கம் மாபெரும் பரிமாணத்தையும் வலிமையையும் அடையக்

கூடிய புறவய நிலைமைகளை உருவாக்கியது; 1950க்களின் நடுப்பகுதிக்குள் அடிமைப்பட்டிருந்த ஆசிய மக்களினங்களில் அதிகப் பெரும்பான்மையினர் காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றனர்.

ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்கம் தகர்ந்து சிதறியதில், அப்பொழுது தோன்றிக் கொண்டிருந்த உலக சோஷலிஸ்ட் அமைப்பு வகித்த புரட்சிகரமான தாக்கத்தின் ஆக முக்கியமான அம்சங்களில் இது ஒன்றாகும். உலக சோஷலிஸ்ட் அமைப்பு வளர்ச்சியுற்று வலிமையடைகின்ற பொழுது இத்தாக்கம் மென்மேலும் அதிகரித்துக் கொண்டு செல்கிறது.

உலகத்தின் மீது சோஷலிசத்தின் தாக்கத்தைப் பகுப்பாய்வு செய்த லெனின் ''செல்வாக்கு மற்றும் உதாரணத்தின்'' சக்தியைச் சுட்டிக்காட்டினார். நேரடியாகவோ, மறைமுகமாகவோ இத்தாக்கம் பொருளாயத ரீதியில் (''வலிமை'') அல்லது சித்தாந்த ரீதியில் (உதாரணம்) இருக்கும் என்றார். முதல் ரகத்தில்—சோஷலிசம் விடுதலை இயக்கங்களுக்குத் தருகின்ற உதவியின் விளைவாக ஏற்பட்டாலும் அல்லது ஏகாதிபத்தியத்தை எதிரிடுகின்ற சக்தியாக சோஷலிஸ்ட் நாடுகள் இருக்கின்ற உண்மையினால் ஏற்பட்டாலும்—ஏதாவதொரு நாட்டிலும் சர்வதேச அரங்கத்திலும் சக்திகளின் சமநிலையிலும் போக்குகளிலும் மெய்யான, ''உணரத்தக்க'' மாற்றங்கள் ஏற்படுகின்றன. இரண்டாவது ரகத்தில் சோஷலிசத்தின் கீழ் நிறைவேற்றப்படுகின்ற மாற்றங்களின் ''உதார

ணம்'' சித்தாந்த ரீதியான தாக்கத்தை ஏற்படுத்து கின்றது; ஒடுக்குமுறை மற்றும் பிற்போக்கு சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் பெருந் திரளான மக்களுக்கு எழுச்சியூட்டுவதில் பெரும் பங்கு வகிக்கின்றது, சமூக உறவுகளின் புதிய அமைப்பை தத்ரூபமான முறையில் விளக்கு கின்றது. எனினும் சித்தாந்தத் தாக்கத்தைப் பொருளாயதத் தாக்கத்திலிருந்து பிரித்துப் பார்க்க வேண்டும். ஏனென்றால் அது உலகத்தை மாற்றியமைப்பதில்லை, மக்களின் உணர்வின் மீது மட்டுமே தாக்கம் செலுத்துகிறது. இந்த அர்த் தத்தில் அது பொருளாயதத் தாக்கத்துக்கு உதவியாகவே இருக்கிறது. பொருளாயதத் தாக்கம் உலக சோஷலிஸ்ட் அமைப்பு எஞ்சிய உலகத்தின் மீது கொண்டிருக்கின்ற தாக்கத்தை நிர்ணயிக்கின்ற சக்தியாக இருக்கிறது.

நம் காலத்திய புரட்சிகர நிகழ்வுப் போக்கு ஜனநாயக மற்றும் தேசிய விடுதலைப் புரட்சிகளை உள்ளடக்கியிருக்கிறது. அவை சோஷலிஸ்ட் உறவுகளை நிறுவுவதற்கு நேரடியாக இட்டுச் செல்லவில்லை; ஆனால், முதலாவதாக, சாத கமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிலை மைகள் இருக்கும் பொழுது அவை சோஷலிஸ்ட் புரட்சியாக வளர்ச்சி அடைய முடியும்; இரண் டாவதாக, அத்தகைய வளர்ச்சி ஏற்படவில்லை என்றாலும் மனித குலம் முதலாளித்துவத் திலிருந்து சோஷலிசத்துக்கு முன்னேறுகின்ற நவீன சகாப்தத்தின் தன்மை ஜனநாயக மற் றும் தேசிய விடுதலை இயக்கங்களின் குணாம் சத்தின் மீது தன்னுடைய முத்திரையைப்

பொறிக்கிறது. இந்தப் புரட்சிகள் ஏகபோகங்களின் ஆட்சியைத் தகர்ப்பதால் அவை புறவயமாக ஏகாதிபத்தியத்தின் நிலைகளை பலவீனப்படுத்துகின்றன, உலகத்தில் சோஷலிஸ்ட் சக்திகளும் போக்குகளும் வளர்ச்சியடைவதற்குரிய சாதகமான நிலைமைகளை உருவாக்குகின்றன.

நாம் இதற்கு முந்திய அத்தியாயங்களில் நம் காலத்திய ஜனநாயகப் புரட்சியைப் பற்றியும் அதை சோஷலிஸ்ட் புரட்சியாக வளர்க்கின்ற நிலைமைகளைப் பற்றியும் ஏற்கெனவே எழுதியிருக்கின்றோம். இப்பொழுது நாம் ஒரே ஒரு முக்கியமான சந்தர்ப்பத்தை மட்டுமே வலியுறுத்தப் போகிறோம். வெவ்வேறு மட்டத்தில் முதலாளித்துவ வளர்ச்சியையும் வெவ்வேறு வரலாறுகள், தேசிய மரபுகள், வளர்ச்சி வாய்ப்புகள் ஆகியவற்றையும் கொண்டிருக்கின்ற நாடுகளில் ஜனநாயகப் புரட்சிகள் வெவ்வேறு வடிவங்களை அடையக் கூடும், ஸ்தூலமான வெவ்வேறு நோக்கங்களைப் பின்பற்றக் கூடும். ஆனால் அவற்றின் தனித்தன்மைகள் எப்படியிருந்தாலும், அவை முரணில்லாத வகையில் ஏகாதிபத்திய எதிர்ப்பைக் கொண்டிருந்தால், மக்கள் மத்தியில் விரிவான ஆதரவைப் பெற்றிருந்தால், ஜனநாயக மற்றும் சோஷலிச சக்திகளின் கூட்டணியை ஆதாரமாகக் கொண்டிருந்தால் மட்டுமே அவை ஆழமான சமூக மாற்றங்களைக் கொண்டு வர முடியும். இம்மாற்றங்களை அமுலாக்குவதில் கம்யூனிஸ்டுகள் தீவிரமாகப் பங்கெடுப்பதைத் தடுப்

பதை ஜனநாயக மற்றும் சோஷலிச சக்திகளின் கூட்டணி இயலாததாக்குகிறது.

தேசிய **விடுதலைப் புரட்சிகள்** விசேஷமாகக் குறிப்பிடப்பட வேண்டியவையாகும். அவை காலனி மற்றும் சார்புநிலை நாடுகளில் தேசிய விடுதலை இயக்கத்தின் சுற்றுவட்டத்திற்குள் நடைபெறுகின்றன; உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் பிரிக்க முடியாத பகுதியாக இருக்கின்றன.

முதலாளித்துவக் காலனியாட்சி வேரூன்றிய தருணத்திலிருந்தே தேசிய சுதந்திரத்துக்கு மக்களுடைய போராட்டமும் தொடங்கி விட்டது. ஆனால் அது 20ம் நூற்றாண்டில் குறிப்பிடத்தக்க அளவுக்குப் பரந்த வீச்சைப் பெற்றது. 1917இல் ருஷ்யாவில் அக்டோபர் புரட்சி வெற்றி பெற்றதும் உலகம் இரண்டு அமைப்புகளாகப் பிரிந்ததும் தேசிய விடுதலைப் போராட்டத்தை மிகவும் தீவிரப்படுத்தின. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி அதே சமயத்தில் ஏகாதிபத்திய காலனியாதிக்க அமைப்பின் நெருக்கடியாகவும் இருந்தது; முடிவில் அந்த அமைப்பு தகர்ந்து ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் புதிய, அரசுரிமை கொண்ட நாடுகள் தோன்றின. சோவியத் யூனியனும் இதர சோஷலிஸ்ட் நாடுகளும் தேசிய விடுதலை இயக்கங்களுக்குக் கொடுத்த நேரடியான உதவியும் அவற்றின் பொதுவான ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கைகளும் இவ்வெற்றியை அடைவதில் பெரும் பங்கு வகித்தன.

தேசிய விடுதலைப் புரட்சிகள் தேசிய ஒடுக்கு

முறையை, பிரதானமாக அரசியல் ஒடுக்கு முறையை ஒழிப்பதையும் தேசிய அரசுரிமையின் அடிப்படையில் சமூக வாழ்க்கையைத் தீவிர மான முறையில் புனரமைப்பதையும் நோக்க மாகக் கொண்டிருக்கின்றன. இக்கடமைகளை தேசிய ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி நிறை வேற்றுகிறது. இந்த முன்னணியில் தொழிலாளி வர்க்கத்துடன், விவசாயிகள், நகரக் குட்டி முதலாளி வர்க்கம் மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு நிலைகளைப் பின்பற்றுகின்ற தேசிய முதலாளி வர்க்கத்தின் குறிப்பிட்ட பகுதியும் இடம் பெற்றிருக்கின்றன.

நவீன தேசிய விடுதலைப் புரட்சி காலனியா திக்கத்தை ஒழித்து தேசிய அரசுரிமையை அறி வித்த பிறகு செய்ய வேண்டிய கடமைகள் யாவை? இதற்கு பதில், அந்த நாட்டின் வளர்ச்சி நிலை, முந்திய காலனியாதிக்க நாட்டுடன் அதன் உறவுகளின் தன்மை, உலக முதலாளித் துவப் பொருளாதார அமைப்பில் அது வகிக் கின்ற இடம், இதரவற்றைப் பெருமளவில் பொறுத்திருக்கிறது. எனினும் விடுதலை யடைந்த பெரும்பான்மையான நாடுகளில் பொதுக் கடமைகள் ஒரே மாதிரியாகவே இருக் கின்றன என்பதைக் கடந்த இருபதாண்டுகளின் அனுபவம் நிரூபித்திருக்கிறது. பொருளாதாரத் துறையில் — சமூக உற்பத்தி சக்திகளை அபி விருத்தி செய்தல் மற்றும் தொழில்நுட்ப- விஞ்ஞான நிபுணர்களைப் பயிற்றுவித்தல்; அரசியல் துறையில் — சர்வதேச அரங்கத்தில் நாட்டின் நலன்களைப் பாதுகாப்பதற்குரிய

புதிய அமைப்புகளை உள்நாட்டில் ஏற்படுத்து தல், குடிமக்களைப் பொது வாழ்க்கையில் ஈடுபடுத்தி அரசுரிமை பெற்ற இளம் அரசு சந்திக்கின்ற கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவர்களைத் திரட்டுதல்; கலாசாரத் துறை யில்—கல்லாமையை அகற்றுதல், உலக கலாசார சாதனைகளை நன்கறிதல், தேசிய சுய உணர்வை வளர்த்தல்.

தேசிய விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த சில தத்துவாசிரியர்கள் ''மனோ ரீதியான விடு தலை'' என்று சொல்லப்படுவதை அதிகமாக வலியுறுத்துகிறார்கள். அதன் விளைவாக புது ரகத்தைச் சேர்ந்த மனிதன், ''தனக்குள்ளே யிருக்கும் அடிமையைக் கொன்று விட்ட'' சுதந்திரமான குடிமகன், சில சமயங்களில் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் பிரதிநிதி களிடம் வேரூன்றியுள்ள தாழ்வு மனப்பான் மையை அகற்றி, ஆகச் சிறந்த தேசிய கலாசார மரபுகளைத் தன்வயமாக்கிக் கொண்ட குடி மகன் படைக்கப்படுகிறான் என்று அவர்கள் கருதுகிறார்கள். இது ஒரு சிக்கலான பிரச் சினை என்பது உண்மையே; பொருளாதாரம், அரசியல், கலாசாரம் ஆகிய துறைகளைச் சேர்ந்த கடமைகளிலிருந்து இதைத் தனியே பிரித்துச் செய்ய முடியாது. ஏனென்றால் அவற்றுடன் ஒப்பிடும் பொழுது இது துணைப் பிரச்சினையே. சுதந்திரமான சமூகத்தை உருவாக்குகின்ற பொழுதுதான் மனிதன் சுதந்திரமான பிறவியா கிறான். சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறை இல் லாத சமூகத்தை நிர்மாணித்த பிறகுதான்



15—518

புதிய ரகத்தைச் சேர்ந்த மனிதன் உருவாக முடியும். எனினும் இந்தப் பிரச்சினையை மிகைப்படுத்தக் கூடாது அல்லது தனிமுதலாக்க வும் கூடாது. ஏனென்றால் அது ''திரிபான இனவெறிக்கு'', தேசியத் தப்பெண்ணங்களுக்கு இட்டுச் செல்லும். இவை இனவெறியையும் ஆதிக்க வெறியையும் போல அதே அளவுக்கு சுதந்திர இலட்சியத்துக்கு ஆபத்தானவையே.

தேசிய விடுதலைப் புரட்சியின் முதல் கட்டத் தில் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் **பொதுவான ஜனநாயகத் தன்மையைக்** கொண் டிருப்பதும் புரட்சிகள் **தேசிய-ஜனநாயகத்** தன் மையைக் கொண்டிருப்பதும் தெளிவாகும். ஏனென்றால் அவை உழைக்கும் மக்களின் நலன் களுக்காக மட்டுமல்லாமல் குட்டி மற்றும் நடுத்தர முதலாளி வர்க்கத்தின் கணிசமான பகுதியினருடைய நலன்களுக்காகவும் நிறை வேற்றப்படுகின்றன. தேசிய-ஜனநாயகப் புரட்சி நிறைவேறுகின்ற கட்டத்தில் நாட்டுக்கு முன் னால் வெவ்வேறு வரலாற்றுப் பாதைகள் தோன்றக் கூடும், அவற்றில் ஏதாவதொரு பாதையை அந்த நாடு தேர்ந்தெடுக்கக் கூடும்.

சந்தர்ப்பங்கள் சாதகமாக இல்லையென்றால் (அதாவது பிற்போக்குவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்திருக்கின்ற முதலாளி வர்க்க வலது அணிக்குச் சாதகமான முறையில் சக்திகளின் சமநிலையில் மாற்றம், உலக ஏகாதிபத்திய நிர்ப்பந்தம் அதிகரித்தல், இதரவை) அரசியல் சுதந்திரத்தைப் பெற்ற நாடு **முதலாளித்துவப் பாதையைப்** பின்பற்றும். இது ஜனநாயகக்

கடமைகளை நிறைவேற்றுவதைத் தவிர்க்க முடியாத விதத்தில் பாதிக்கும். அவை வழக்கமாகச் சுருக்கப்படுகின்றன; சம்பிரதாயமான முறையில் நிறைவேற்றப்படுகின்றன அல்லது உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளின் பட்டியலிலிருந்து அகற்றப்படுகின்றன. அதற்கு மாறாக, ஜனநாயகக் கடமைகளை முரணில்லாமலும் முறைப்படியாகவும் நிறைவேற்றுகின்ற கொள்கை இயற்கையாகவே நாட்டை **முதலாளித்துவமல்லாத பாதைக்கு** இட்டுச் செல்கிறது, புரட்சிகர ஜனநாயகம் உள்நாட்டுக் கொள்கையிலும் வெளிநாட்டுக் கொள்கையிலும் **சோஷலிஸ்ட் திசையமைவைத்** தேர்ந்தெடுக்கத் தூண்டுகிறது. இது சோஷலிஸ்ட் மாற்றங்களைத் தயாரிக்கின்ற, அமுலாக்குகின்ற பாதை; தொழிலாளி வர்க்கம், உழைக்கும் விவசாயிகள் மற்றும் அத்தகைய மாற்றங்களைக் கொண்டு வருவதில் தீவிரமாகப் பங்கெடுக்கக் கூடிய உள்நாட்டுச் சக்திகள் அனைத்தையும் கொண்ட கூட்டணியை பலப்படுத்துகின்ற பாதை; அந்த இளம் அரசு சமூகப் புரட்சியை நிறைவேற்றுவதற்கு அவசியமான உதவியையும் ஆதரவையும் கொடுக்கத் தயாராக இருக்கின்ற சோஷலிஸ்ட் நாடுகளுடன் ஒத்துழைக்கின்ற பாதை.

விடுதலையடைந்த சில நாடுகள் சோஷலிஸ்ட் திசையமைவுப் பாதையைத் தேர்ந்தெடுத்திருப்பது நம் காலத்திய புரட்சிகர நிகழ்வுப் போக்கின் முக்கியமான அம்சத்தை நிரூபிக்கிறது: ''உலகப் புரட்சியில் இனி நடைபெறப் போகின்ற

புதிய ரகத்தைச் சேர்ந்த மனிதன் உருவாக முடியும். எனினும் இந்தப் பிரச்சினையை மிகைப்படுத்தக் கூடாது அல்லது தனிமுதலாக்க வும் கூடாது. ஏனென்றால் அது ''திரிபான இனவெறிக்கு'', தேசியத் தப்பெண்ணங்களுக்கு இட்டுச் செல்லும். இவை இனவெறியையும் ஆதிக்க வெறியையும் போல அதே அளவுக்கு சுதந்திர இலட்சியத்துக்கு ஆபத்தானவையே.

தேசிய விடுதலைப் புரட்சியின் முதல் கட்டத் தில் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் பொதுவான ஜனநாயகத் தன்மையைக் கொண் டிருப்பதும் புரட்சிகள் தேசிய-ஜனநாயகத் தன் மையைக் கொண்டிருப்பதும் தெளிவாகும். ஏனென்றால் அவை உழைக்கும் மக்களின் நலன் களுக்காக மட்டுமல்லாமல் குட்டி மற்றும் நடுத்தர முதலாளி வர்க்கத்தின் கணிசமான பகுதியினருடைய நலன்களுக்காகவும் நிறை வேற்றப்படுகின்றன. தேசிய-ஜனநாயகப் புரட்சி நிறைவேறுகின்ற கட்டத்தில் நாட்டுக்கு முன் னால் வெவ்வேறு வரலாற்றுப் பாதைகள் தோன்றக் கூடும், அவற்றில் ஏதாவதொரு பாதையை அந்த நாடு தேர்ந்தெடுக்கக் கூடும்.

சந்தர்ப்பங்கள் சாதகமாக இல்லையென்றால் (அதாவது பிற்போக்குவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்திருக்கின்ற முதலாளி வர்க்க வலது அணிக்குச் சாதகமான முறையில் சக்திகளின் சமநிலையில் மாற்றம், உலக ஏகாதிபத்திய நிர்ப்பந்தம் அதிகரித்தல், இதரவை) அரசியல் சுதந்திரத்தைப் பெற்ற நாடு முதலாளித்துவப் பாதையைப் பின்பற்றும். இது ஜனநாயகக்

கடமைகளை நிறைவேற்றுவதைத் தவிர்க்க முடியாத விதத்தில் பாதிக்கும். அவை வழக்கமாகச் சுருக்கப்படுகின்றன; சம்பிரதாயமான முறையில் நிறைவேற்றப்படுகின்றன அல்லது உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளின் பட்டியலிலிருந்து அகற்றப்படுகின்றன. அதற்கு மாறாக, ஜனநாயகக் கடமைகளை முரணில்லாமலும் முறைப்படியாகவும் நிறைவேற்றுகின்ற கொள்கை இயற்கையாகவே நாட்டை **முதலாளித்துவமல்லாத பாதைக்கு** இட்டுச் செல்கிறது, புரட்சிகர ஜனநாயகம் உள்நாட்டுக் கொள்கையிலும் வெளிநாட்டுக் கொள்கையிலும் **சோஷலிஸ்ட் திசையமைவைத்** தேர்ந்தெடுக்கத் தூண்டுகிறது. இது சோஷலிஸ்ட் மாற்றங்களைத் தயாரிக்கின்ற, அமுலாக்குகின்ற பாதை; தொழிலாளி வர்க்கம், உழைக்கும் விவசாயிகள் மற்றும் அத்தகைய மாற்றங்களைக் கொண்டு வருவதில் தீவிரமாகப் பங்கெடுக்கக் கூடிய உள்நாட்டுச் சக்திகள் அனைத்தையும் கொண்ட கூட்டணியை பலப்படுத்துகின்ற பாதை; அந்த இளம் அரசு சமூகப் புரட்சியை நிறைவேற்றுவதற்கு அவசியமான உதவியையும் ஆதரவையும் கொடுக்கத் தயாராக இருக்கின்ற சோஷலிஸ்ட் நாடுகளுடன் ஒத்துழைக்கின்ற பாதை.

விடுதலையடைந்த சில நாடுகள் சோஷலிஸ்ட் திசையமைவுப் பாதையைத் தேர்ந்தெடுத்திருப்பது நம் காலத்திய புரட்சிகர நிகழ்வுப் போக்கின் முக்கியமான அம்சத்தை நிரூபிக்கிறது: ''உலகப் புரட்சியில் இனி நடைபெறப் போகின்ற

தீர்மானகரமான சண்டைகளில் உலக மக்கள் தொகையில் பெரும்பான்மையினர் தொடக்கத்தில் தேசிய விடுதலையை நோக்கிச் சென்று, பிறகு முதலாளித்துவத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிராகத் திரும்புவார்கள். இது நாம் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் மிக அதிகமான அளவுக்குப் புரட்சிகரமான பாத்திரத்தை ஒரு வேளை வகிக்கும்''* என்று லெனின் கூறினார்.

தேசிய-ஜனநாயகப் புரட்சி சோஷலிஸ்ட் புரட்சியாக வளர்ச்சியடைய முடியும் என்று நாம் கூறுவது ஏன்? இன்றைய சகாப்தத்தில் வளர்முக நாடுகளுக்குப் பல ஜீவாதாரமான பிரச்சினைகள் இருக்கின்றன. பொருளாதார, விஞ்ஞான-தொழில்நுட்ப மற்றும் கலாசாரப் பின்தங்கிய நிலையை வேகமாக அகற்றுதல், மக்களின் பிரதான பகுதியினருடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குரிய பொருளாதார மற்றும் அரசியல் அமைப்புகளை உருவாக்குதல் (பெரும்பான்மையினர் ஏழ்மையில் வசிக்கும் பொழுது சிறுபான்மையினர் சுகபோக வாழ்க்கை நடத்துவதற்காக அல்ல), சமூகத்தை ஒன்றுபடுத்துதல் (பல தேசிய-இன சிறுபான்மையினர் வசிக்கின்ற நாடுகளுக்கு இது மிகவும் அவசியம்), தேசியப் பாதுகாப்பு அமைப்பை ஏற்படுத்துதல், தேசிய அரசுரிமையைப் பாதுகாப்பதற்கு நாட்டின் தகுதியைப் பெருக்குதல்

* V. I. Lenin, "Third Congress of the Communist International. June 22—July 12, 1921", *Collected Works*, Vol. 32, p. 482.

ஆகியன இத்தகைய பிரச்சினைகளாகும். இவற்றைத் தீர்ப்பதில் சோஷலிஸ்ட் மாற்றங்கள் மெய்யாகவே உதவி செய்கின்றன என்பது பிரதானமாக இந்த வளர்ச்சியை நிர்ணயிக்கிறது.

முதலாளித்துவப் பாதையைப் பின்பற்றுவதன் மூலம் இப்பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. ஏனென்றால் இவற்றைத் தீர்ப்பது ஏகாதிபத்தியத்தின் நலன்களுக்கு எதிரானதாகும். தலைமையான முதலாளித்துவ நாடுகள் சில சமயங்களில் விடுதலையடைந்த நாடுகளுக்கு உதவி செய்கின்றன என்பது உண்மையே; ஆனால் அது ''இலவசமான'' உதவி என்று அறிவிக்கப்பட்டாலும் அக்கறையற்ற உதவியல்ல. மேற்கு நாடுகளின் உதவிக்குப் பின்னால் பெரும்பாலும் தனியார் மூலதனத்தின் பொருளாதார நலன்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இருக்கின்றன, அல்லது அந்த ஏகாதிபத்திய அரசுகளின் அரசியல் மற்றும் இராணுவ நலன்கள் இருக்கின்றன. எனவே சுதந்திரமான வளர்ச்சியைத் தொடங்கியுள்ள இளம் அரசு சர்வதேச மூலதனத்தின் பிடியில் சிக்கிக் கொள்கிறது, மறுபடியும் பொருளாதாரக் கொள்ளையடித்தலுக்கும் ஏகாதிபத்திய உத்தரவுகளுக்கும் ஆளாகிறது.

தேசிய விடுதலைப் புரட்சிகள் உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கில் முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன. எனினும் 1970க்களில் இடது தீவிரவாத சித்தாந்திகள் உலகப் புரட்சியின் தலைவிதியை இன்று ''மூன்றாவது உலகம்'' நிர்ணயித்துக் கொண்டிருக்கிறது

என்று ஆரவாரமாகப் பேசியதைப் போல அதை மிகைப்படுத்தக் கூடாது. இப்படிப் பேசுவது தேசிய விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த சில நபர்களுக்கு மகிழ்ச்சியைத் தரலாம், ஆனால் அது உண்மைக்குப் புறம்பானது, புரட்சிகர சக்திகளைத் திசை திருப்பிவிடக் கூடியது. ஒரு நாட்டை எடுத்துக்கொண்டால், தொழிலாளி வர்க்கம் புரட்சியில் தலைமைப் பாத்திரத்தை வகிக்கிறது; உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கை எடுத்துக்கொண்டால், **சர்வதேசத் தொழிலாளி வர்க்கம்** தலைமைப் பாத்திரத்தை வகிக்கிறது. உலக சோஷலிஸ்ட் அமைப்பும் முதலாளித்துவ மற்றும் வளர்முக நாடுகளில் உள்ள தொழிலாளி வர்க்கமும் அதைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன.

ஒரு நாட்டின் பாட்டாளி வர்க்கத்தைப் போலவே சர்வதேசத் தொழிலாளி வர்க்கமும் புரட்சிகர சக்திகள் அனைத்தையும் திரட்டி ஜனநாயக மற்றும் சோஷலிச மாற்றங்களுக்கான போராட்டத்தில் அவற்றை ஈடுபடுத்துகிறது. சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப்படை **சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கமாகும்.** மார்க்சிய-லெனினியம் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வதேசியக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒன்றுபட்டிருக்கின்ற, பொது விரோதிக்கு எதிராகவும் பொது இலட்சியங்களுக்கு ஆதரவாகவும் ஒன்று சேர்ந்து போராடுகின்ற சுதந்திரமான சுய உரிமை கொண்ட கம்யூனிஸ்ட் கட்சிகளின் போர்க்குண மிக்க கூட்டணியே அது. தேசிய மற்றும் சமூக

விடுதலைக்கு, சோஷலிஸ்ட் மற்றும் கம்யூனிஸ்ட் சமூகத்தை நிர்மாணிப்பதற்குப் போராடுகின்ற புரட்சிவீரர்களின் முதல் வரிசையில் கம்யூனிஸ்டு கள் இருக்கிறார்கள். புரட்சிகர அணிகளின் ஒற்றுமையை வலுப்படுத்துவது, தேசிய மற்றும் சர்வதேச நலன்களை ஒன்றுபடுத்துவது, தேசிய வாதம் மற்றும் இனவெறிப் போக்குகளை எதிர்த்துப் போராடுவது தங்களுடைய மிக முக்கியமான கடமை என்று அவர்கள் கருது கிறார்கள். தேசியக் கடமைகளும் சர்வதேசியக் கடமைகளும் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பிரிக்க முடியாத இரண்டு அம்சங்களே. ஒவ்வொரு கம்யூனிஸ்ட் கட்சியும் தொழிலாளி வர்க்கத்தின் தேசிய மற்றும் சர்வதேசிய நலன்களை வெளி யிடுகிறது. மொத்தமாக உலக கம்யூனிஸ்ட் இயக் கத்துக்கும் ஒவ்வொரு கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அவற்றின் பொதுச் சித்தாந்தம், பிரதான இலட்சியங்கள் மற்றும் கடமைகள், எல்லா கம்யூனிஸ்ட் கட்சிகளின் போர்க்குண மிக்க ஒருமைப்பாடு மற்றும் பரஸ்பர ஆதரவு, வெவ் வேறு நாடுகளிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஸ்தூலமான அனுபவத்தின் அடிப்படையில் தத்துவம் மற்றும் புரட்சிகர நடைமுறையைப் பற்றிய அடிப்படையான பிரச்சினைகளைக் கூட்டாக விரித்துரைத்தல் ஆகியவை வலிமை யின் தோற்றுவாயாக இருக்கின்றன.

உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் வளர்ச்சி தனித்தனி நாடுகளில் வர்க்க சக்திகளின் சம நிலையை மட்டும் சார்ந்திருக்கவில்லை; இரண்டு உலக அமைப்புகளுக்கும் இடையில் சக்திகளின்

சமநிலையையும் அவற்றுக்கு இடையிலான உறவுகளின் தன்மையையும் சார்ந்திருக்கிறது. சோவியத் யூனியனும் சோஷலிஸ்ட் குடும்பத்தைச் சேர்ந்த மற்ற நாடுகளும்—சமாதானத்தை நேசிக்கின்ற அனைத்து சக்திகளின் ஆதரவுடன்—வெவ்வேறு சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுக்கிடையில் சமாதான சகவாழ்வுக்காகவும் பதட்ட நிலைத் தணிவை ஊக்குவிப்பதற்காகவும் ஒரு புதிய உலக யுத்தம் ஏற்படாமல் தடுப்பதற்காகவும் போராடிக் கொண்டிருக்கின்றன. சமாதான ஆதரவுக் கொள்கை பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துடன், புரட்சிகர சக்திகளுக்கு ஆதரவுடன் எப்படிப் பொருந்தும்? சில ''இடது'' புரட்சிவாதிகள் கூறுவதைப் போல, இத்தகைய கொள்கை அந்த ஆதரவைக் கைவிடுவதாகாதா என்று சில சமயங்களில் கேட்கப்படுகிறது.

மறு பக்கத்தில் பதட்ட நிலைத் தணிவு உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கில் குறுக்கிடவில்லை என்றால், பிந்தியது சமாதானம் மற்றும் பதட்ட நிலைத் தணிவுக்கு அபாயமேற்படுத்தவில்லையா?

பதட்ட நிலைத் தணிவும் உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கும் முரண்பாடானவை அல்ல, ஒன்றையொன்று விலக்குபவையுமல்ல. சோஷலிஸ்ட் குடும்பத்தைச் சேர்ந்த நாடுகள் தேசிய மற்றும் சமூக விடுதலைக்குப் போராடுகின்ற மக்களினங்களுக்கு முழு ஆதரவு, சமாதானம் மற்றும் பதட்ட நிலைத் தணிவுக்காகப் போராட்டம் என்ற இரு அம்சக் கொள்கையைப் பின்பற்றுகின்றன. இந்த இரண்டு அம்சங்களுக்கு இடையி

லும் முரண்பாடு கிடையாது. புரட்சிகர மாற்றங்கள் ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்காவிலோ அல்லது எங்கே நடைபெற்றாலும் முதலாளித்துவத்துக்கு அவற்றில் சிறிதளவு அக்கறையும் இல்லை; ஆனால் இந்த மாற்றங்கள் அதன் சக்திக்கு அப்பாற்பட்டவை. முதலாளி வர்க்கம் யுத்தங்களை ஆரம்பிப்பதன் மூலம் புரட்சிகர மாற்றங்களைத் தடுக்க முடிந்த காலம் முன்பு இருந்தது. அக்காலம் மறைந்து விட்டது. இன்று ஏகாதிபத்தியவாதிகள் எவ்வளவு ‘‘முரட்டுத் தனமான’’ கொள்கையைப் பின்பற்றினாலும் அவர்களால் உலக சோஷலிசத்தைத் தன் கொள்கையைக் கைவிடும்படிச் செய்ய முடியாது. முதலாளித்துவம் யுத்தத்தினால் கூடத் தான் இழந்த நிலைகளைத் திருப்பிப் பெற முடியாது, அல்லது புரட்சிகர சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் அதன் வெற்றியை உறுதியாக்க முடியாது. சமாதானம் மற்றும் பதட்ட நிலைத் தணிவுக்கு ஆதரவான போராட்டம் **எல்லா நாடுகள் மற்றும் மக்களினங்களின்,** சமாதானம் இல்லையேல் அழிவு என்று கருதுகின்ற நிதான புத்தி உடையவர்களின் நலன்களுடன் அதிகமான அளவுக்குப் பொருந்துகிறது.

## 16. புரட்சியைப் பற்றிய லெனின் தத்துவத்தின் சர்வதேச முக்கியத்துவம்

நான் இம்முடிவுரையில் இரண்டு கருத்துக்களைச் சிறப்பாக வலியுறுத்த விரும்புகிறேன்.

முதலாவதாக, இத்தத்துவம் மாபெரும் சர்வதேச முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது, நவீனப் புரட்சிகர நிகழ்வுப் போக்குக்கு ஜீவாதாரமான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. லெனினியத்தின் எதிரிகள் அல்லது தத்துவ மற்றும் அரசியல் ரீதியில் குறைவான அறிவைக் கொண்டவர்கள் சில சமயங்களில் புரட்சியைப் பற்றிய லெனின் தத்துவத்தை நிராகரிக்கிறார்கள். இத்தத்துவம் விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சிச் சகாப்தத்தில் தன் பொருத்தத்தை இழந்துவிட்டது, புரட்சிகர நிகழ்வுப் போக்கில் சில ''பிரதேசங்களுக்கு'' மட்டுமே அதைக் கையாள முடியும், அது ''புதிய'' புரட்சிகர அனுபவத்தைப் பிரதிபலிக்கவில்லை என்கிறார்கள்.

பெரிய மற்றும் குட்டி முதலாளி வர்க்கத்தின் தத்துவ மற்றும் நடைமுறை உணர்வில் பரவலாக இருக்கின்ற விஞ்ஞான-தொழில்நுட்ப வழிபாடு, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் புரட்சியின் கீழ் தீவிரமான சமூக மாற்றங்களுக்கான அவசியம் மறைந்து விடுகிறது என்ற கருதுகோளைப் பரப்புகிறது (முதலாளி வர்க்க சித்தாந்திகள் இக்கருதுகோளை வளர்க்கிறார்கள்). முற்காலத்தில் சமூகப் புரட்சியினால் சாதிக்கப்பட்ட அனைத்து மாற்றங்களையும் இன்று விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தின் மூலம் நிறைவேற்ற முடியும் என்று சொல்லப்படுகிறது. விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் திட்டவட்டமான சமூகச் சூழலுடன் ''கலந்திருக்கின்றன'', அச்சூழலிலிருந்து அவை

வெளியேற முடியாது, அதன் மீது தம்முடைய வளர்ச்சியின் தர்க்கவியலைத் திணிக்க முடியாது என்பதை இக்கற்பனாவாத அணுகுமுறை கணக்கி லெடுத்துக் கொள்ளவில்லை. விஞ்ஞான-தொழில் நுட்பச் சாதனைகளினால் லாபமடையப் போவது யார், விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத் தின் விளைவாக ஏற்படுகின்ற சமூகச் செல்வம் எந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் பகிர்ந்து கொள்ளப்படும், புதிய அறிவு, கண்டுபிடிப்புகள் எந்த அளவில் சமூகத்தின் உபயோகத்திற்குத் தரப்படும்—இவை அனைத்தும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியலினால், விஞ்ஞானி கள் மற்றும் பொறியியலாளர்களால் நிர்ணயிக் கப்படுவதில்லை, ஆதிக்கமான சமூக உறவுகளின் தன்மையினால் நிர்ணயிக்கப்படுகின்றன. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் முதலாளித் துவ சமூகத்தில் விஞ்ஞானமும் தொழில்நுட்ப வியலும் வளர்ச்சியடைகின்ற பொழுது சோஷ லிசத்தின் பொருளாயத அடிப்படையைத் தயா ரிக்கின்றன (இந்த அர்த்தத்தில் அவை சோஷ லிசத்துக்கு உதவுகின்றன); ஆனால் அவை இருக் கின்ற சமூக உறவுகளின் அமைப்பை மெய்யாக வும் உடனடியாகவும் திருத்தியமைப்பதில்லை. அதாவது, சமூகப் புரட்சியின் வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுவதில்லை. ஆகவே விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சி சமூகப் புரட்சிக்கு பதிலாக இடம் பெற முடியாது, அதை ''ஒழித்து விடவும்'' முடியாது; ஆனால் அது சமூகப் புரட்சியை இன்னும் அவசியமாக்கு கிறது. ஆகவே விஞ்ஞான ரீதியில் நிறுவப்

பட்ட சமூகப் புரட்சியைப் பற்றிய தத்துவம் ஜீவாதாரமாக இருக்கிறது.

தனியொரு நாட்டின் அல்லது பிரதேசத்தின் அனுபவத்தை மட்டும் எடுத்துக்கொண்டு புரட்சி கரத் தத்துவத்தை உருவாக்கினால் அது பொதுவான தன்மையைக் கொண்டிருக்காது என்பதை சொல்லத் தேவையில்லை. மேலும் அது ஒரு ''பிரதேசத்துக்குக்'' கூட செல்லத்தக்க தாக இருக்காது; ஏனென்றால் ஏதாவதொரு நாட்டில் புரட்சிகர நடவடிக்கையின் செயல் திட்டம் மற்றும் செயல்முறை நடவடிக்கையை இன்று உருவாக்குவதற்கு உலகப் புரட்சிகர நிகழ்வுப் போக்கின் பொதுவான, சர்வாம்ச விதிகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண் டும். 1960க்களிலும் 1970க்களிலும் ரெ. டெப்ரே, ஹெ. மார்க்குசே, பி. ஃபானான் மற்றும் பல ''இடது'' தத்துவாசிரியர்களும் சித்தாந்திகளும் புரட்சியைப் பற்றிக் கூறிய ''புதிய'' கருத் தமைப்புகள் வெகுசீக்கிரத்தில் மறைந்து விட் டன.

புரட்சியைப் பற்றிய லெனின் தத்துவம் பல நாடுகளைச் சேர்ந்த மக்களினங்களின் பரந்த புரட்சிகர அனுபவத்தை, சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர அனுபவத் தைப் பற்றி அவருடைய பகுப்பாய்வின் விளை வாகும். இவ்விஷயத்தில் அது மார்க்சின் தத்து வத்தைப் போன்றதே. லெனின் ருஷ்யாவின் அனுபவத்தைக் கொண்டு மட்டுமே தன்னு டைய தத்துவத்தை உருவாக்கினார், பிரெஞ்சு, பிரிட்டிஷ், ஜெர்மன், ஹங்கேரியப் பாட்டாளி

வர்க்கம் நடத்திய புரட்சிகரச் சண்டைகளின் தனித் தன்மைகளை அவர் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை என்று எவரும் கூற முடியாது. தேசிய விடுதலை இயக்கத்தின் சாதனை களை அவர் பார்க்கவில்லை அல்லது அதை எதிரிடுகின்ற பிரச்சினைகளைப் பற்றி அவர் சிந்திக்கவில்லை என்றும் கூற முடியாது. அதற்கு மாறாக லெனின் எப்பொழுதும் புரட்சியை ஒரு உலக நிகழ்வுப் போக்காகக் கருதினார்; தன்னுடைய கடமை ஏதாவதொரு நாட்டில் புரட்சி நடைபெறுவதற்குரிய ''வழிமுறையைச்'' சொல்வதல்ல, புரட்சிகரப் படைகளின் அனு பவங்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து ஏகாதி பத்திய சகாப்தத்தில் புரட்சிகர வளர்ச்சியின் **பொது விதிகளை** வெளிப்படுத்துவதே என்று கண்டார். இந்தப் பொது விதிகள் புரட்சியைப் பற்றிய லெனின் தத்துவத்தில் பிரதிபலிக்கப் பட்டிருப்பதை வரலாறு நிரூபிக்கிறது.

ஒரு ''முழுமையான'' அல்லது ''மூடப்பட்ட'' தத்துவ அமைப்பை, புதிய கருத்துக்கள் நுழைய முடியாத தத்துவ அமைப்பை உருவாக்கியிருப் பதாக லெனினோ அல்லது அவருடைய சீடர் களோ ஒருபோதும் உரிமை பாராட்டவில்லை. புரட்சித் தத்துவம் உள்பட மார்க்சிய-லெனி னியம் ஒரு வாழ்கின்ற, வளர்ச்சியடைகின்ற போதனை என்றே அவர்கள் எப்பொழுதும் கருதினார்கள். வேறு வார்த்தைகளில் சொல்வ தென்றால் புரட்சியைப் பற்றிய லெனின் தத்து வம் **படைப்புத் தன்மையைக்** கொண்டிருக் கிறது. நாம் வலியுறுத்த விரும்பிய இரண்டா

வது கருத்து இதுவே. புரட்சிகர நிகழ்வுப் போக்கில் புதிய அம்சங்களையும் போக்குகளை யும் பிரதிபலிக்கின்ற கருத்துக்களை, மார்க்சி யத்தை செழுமையாக்கி அது செய்முறையில் அமுலாக்கப்படுவதை ஊக்குவிக்கின்ற கருத்துக் களை அது ''ஏற்றுக்கொள்கிறது''. மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளை மறுக்கின்ற, புரட்சியைப் பற்றி லெனினுடைய தத்துவத்தை நிராகரிக்கின்ற கருத்துக்களைப் பற்றி நாம் இங்கே பேசவில்லை; ஏனென்றால் இக்கோட் பாடுகள் தம் செல்தகைமையை இழந்திருக்கக் கூடும் என்பதற்கு எந்த ஆதாரமுமில்லை. புரட்சி கள் மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளைப் பின்பற்றிய பொழுது தோற்கடிக்கப்படவில்லை, ஏதோ காரணங்களுக்காக அவற்றை நிராகரித்த பொழுதே அவை முறியடிக்கப்பட்டன.

புரட்சியைப் பற்றி லெனினுடைய தத்துவம் பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் சக்தி வாய்ந்த தத்துவ மற்றும் செய்முறை ஆயுதமாக இருக் கிறது. பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காரர்கள் பல தலைமுறைகளாகப் போராடி வருகின்ற இலட்சியங்கள் வெற்றியடைய வேண்டுமென் றால் இந்தத் தத்துவத்தை நன்றாகக் கற்க வேண்டும்.